பி.எஸ்.ஸி, (ஊரக வளர்ச்சி) பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம்.

*9017 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் தற்போது போதிக்கப்படும் பி.எஸ்ஸி. (ஊரக வளர்ச்சி பாடம்) பட்டப் படிப்பிற்கு அங்கிகாரம் வேண்டி அரசுக்கு மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) அங்கிகாரம் வழங்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

168—

தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம்.

*9763—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலகுண்டு பிர்கா தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம் இன்னும் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

1993 மார்ச் 30]

சாலையைத் தொடங்குவதற்கு அரசு பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற தருணத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி நபர் மூலம் அத்தகைய தொழிற்சாலையைத் தொடங்க முன்வருவார்களேயானால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயுள்ளம் கொண்ட அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

161—

பி.எஸ்.ஸி, (ஊரக வளர்ச்சி) பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம்.

*9017 திரு. க. வெ. வீ. இ ராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் தற்போது போதிக்கப்படும் பி.எஸ்ஸி. (ஊரக வளர்ச்சி பாடம்) பட்டப் படிப்பிற்கு அங்கீகாரம் வேண்டி அரசுக்கு மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) அங்கிகாரம் வழங்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

168—

தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம்.

*9763—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலகுண்டு பிர்கா தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம் இன்னும் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

[1993 மார்ச் 30

(ஆ) ஆம் எனில் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திட்டப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றல்.

*9258—திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த விளையாட்டு மைதானத்தை ரயில்வே நிலையமாக மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதால் நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த நேப்பியர் பூங்காவின் (மேதின பூங்கா) எதிரில் அமைந்திருந்த விளையாட்டு மைதானம் சென்னை நகர விரைவு இரயில் போக்குவரத்திற்கு தேவைப்பட்டதால் 1987-ல் தென்னக ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சமயத்தில் விளையாட்டு மைதானத்திலிருந்து பளுதூக்கும் மற்றும் விளையாட்டு கருவிகள் அனைத்தும் நேப்பியர் பூங்காவின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் நன்கு உயரமாக வளர்ந்துள்ள அசோகா, அரச மரம் போன்ற நிழல்தரும் மரங்கள் பூங்கா முழுவதும் பரவலாக உள்ளன. இப்பகுதியில் வேறு திறந்த வெளிப்பகுதி இல்லை. இப்பகுதிவாழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்பட்டு வரும் நேப்பியர் பூங்காவினை விளையாட்டு மைதானமாக்க வேண்டிய அவசியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

(ஆ) ஆம் எனில் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திட்டப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றல்.

*9258—திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த விளையாட்டு மைதானத்தை ரயில்வே நிலையமாக மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதால் நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த நேப்பியர் பூங்காவின் (மேதின பூங்கா) எதிரில் அமைந்திருந்த விளையாட்டு மைதானம் சென்னை நகர விரைவு இரயில் போக்குவரத்திற்கு தேவைப்பட்டதால் 1987-ல் தென்னக ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சமயத்தில் விளையாட்டு மைதானத்திலிருந்து பளுதூக்கும் மற்றும் விளையாட்டு கருவிகள் அனைத்தும் நேப்பியர் பூங்காவின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் நன்கு உயரமாக வளர்ந்துள்ள அசோகா, அரச மரம் போன்ற நிழல்தரும் மரங்கள் பூங்கா முழுவதும் பரவலாக உள்ளன. இப்பகுதியில் வேறு திறந்த வெளிப்பகுதி இல்லை. இப்பகுதிவாழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்பட்டு வரும் நேப்பியர் பூங்காவினை விளையாட்டு மைதானமாக்க வேண்டிய அவசியமில்லை.

1993 மார்ச் 30]

173—

செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுதல்.

*10246—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

வாசுதேவநல்லூர் தொகுதி, செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவ நல்லூர் தொகுதி செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாததால் இது பற்றி செயற்குறிப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (1) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. 29-3-1993 அன்று அவையில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உறுப்பினர்களுடைய பாதுகாப்பு பற்றிய பிரச்சினை குறித்து இங்கே பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். எங்களுடைய உறுப்பினர்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறார்கள். அவையிலே சுகந்திரமாகச் செயல்பட முடியாமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஏதோ ஒரு வேண்டுகோள் வைக்கவேண்டும் என்று விரும்புவதாக திரு. ஆர். சிங்காரம் அவர்களும், திரு. பன்னீர்செல்வம் அவர்களும் என்னிடத்திலே வைக்கலாமா. வித்தார்கள். அந்த வேண்டுகோளை நீங்கள் மேற்கொண்டு இந்த நேரத்தில் விவாதத்திற்குச் செல்வது நல்லதல்ல.

1993 மார்ச் 30]

173—

செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுதல்.

*10246—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

வாசுதேவநல்லூர் தொகுதி, செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவ நல்லூர் தொகுதி செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாததால் இது பற்றி செயற்குறிப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (1) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. 29-3-1993 அன்று அவையில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உறுப்பினர்களுடைய பாதுகாப்பு பற்றிய பிரச்சினை குறித்து இங்கே பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். எங்களுடைய உறுப்பினர்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறார்கள். அவையிலே சுதந்திரமாகச் செயல்பட முடியாமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஏதோ ஒரு வேண்டுகோள் வைக்கவேண்டும் என்று விரும்புவதாக திரு. ஆர். சிங்காரம் அவர்களும், திரு. பன்னீர்செல்வம் அவர்களும் என்னிடத்திலே வைக்கப்பட் வித்தார்கள். அந்த வேண்டுகோளை நீங்கள் மேற்கொண்டு இந்த நேரத்தில் விவாதத்திற்குச் செல்வது நல்லதல்ல.

[1993 மார்ச் 30

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏதோ புதிதாக நடைபெற்றது அல்ல. தொடர்ந்து இந்த அவையிலே பலர் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறார்கள். முதல் நாள் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்டார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களிடத்திலே, இருந்து எனக்கு வந்த தகவல், தாங்கள் ஏதோ வேண்டு கோள் வைக்க இருக்கிறீர்கள் என்பதுதான். (குறுக்கீடு). அதற்காக நீங்கள் விவாதத்திற்குப் போவது சரியல்ல (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசக்கூடாது என்றால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. பேச அனுமதித்திருக்கிறேன். உங்களுடைய வேண்டுகோளை மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசவே வேணடாம் வேண்டுகோள் என்று ஒரு லைன் மட்டும் சொன்னால் போதுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேண்டு கோள் வைப்பதாக இருந்தீர்கள். வேண்டுகோளாகத்தான் வைக்க முடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு வேண்டுகோள் என்று சொன்னேன் என்றால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விரிவாக வேறு வேறு பிரச்சினைக்குச் செல்கின்ற காரணத்தினாலே தான் (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தப் பிரச்சினைக்கும் போகவில்லை. சபையிலே நடைபெற்ற சில பிரச்சினைகளை நான் சொல்கிறேன். நேற்றைய தினம் நான் இந்த அவை யிலே இல்லாதபோது நடைபெற்ற பிரச்சினை பற்றிப் பேச வருகிறேன்.

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதன் மீதெல்லாம் இந்த அவையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உங்களுடைய வேண்டுகோளைத் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்த காரணத்தினால் உங்களுடைய வேண்டு கோளைத் தெரிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்து விட்ட பிறகு அவர் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் எனக்குக்கூட எதுவும் சொல்லலாம் (குறுக்கீடு) அவர் என்னிடம் கூட ஒரு வேண்டுகோள் வைக்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் என்கிற முறையிலே கூட இந்த அவையிலே எனக்கு மரியாதை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு முழு மரியாதையும் தந்து வருகின்றோம். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு உரிமை இல்லை என்று சொல்லக்கூடாது. உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும் உண்டு. (குறுக்கீடு) தங்களுக்கு எந்த அளவுக்கு அவையிலே உரிமை இருக்கிறதோ அதே உரிமை அவருக்கும் உண்டு (குறுக்கீடு) எதிர்க்கட்சி தலைவர் என்மீது ஏதாவது குற்றம்சாட்டுவதாக இருந்தால் இந்த நேரத்தை அதற்குப் பயன்படுத்தக்கூடாது. (குறுக்கீடு) என்மீது குற்றச்சாட்டுச் சொல்வதற்கு இந்த நேரத்தைப் பயன் படுத்த வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் என்மீது குற்றச்சாட்டு சொல்கிறீர்கள். அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டு விட்டு பிறகு நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடு) நான் அவருக்குப் பேச அனுமதி அளித்ததற்குப் பிறகு அவர் தெரிவித்ததிலே கூட சம்பந்தம் இல்லாதது என்று கூடச் சொல்லலாம். (குறுக்கீடு).

[1993 மார்ச் 30

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது என்னவென்றால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்ல வந்ததிலேதான் நான் குறுக்கிட்டேன். எனக்குத் தெரிவித்த தகவல் ஏதோ வேண்டுகோள் வைப்ப தாகத் தெரிவிக்கப்பட்டது. நீங்கள் அந்த வேண்டுகோளை வைக்கலாம் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எதிர்க் கட்சித் தலைவரை நீங்கள் பேச அனுமதித்திருக்கிறீர்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் என்ன தேவையோ அதைப் பேசுவது நல்லது, பாதகமில்லை. மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி விஷயம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே முடிவடைந்துவிட்டது. அதைப்பற்றி அவரே சொல்லவில்லை. ஆனால் பண்ருட்டி விஷயங்களைப் பற்றி சொல்லாமல், இப்பொழுது வேண்டுமானால் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதே உறுப்பினர் மீது உரிமை மீறல் தீர்மானம் கொடுக்கப்பட்டது. சஞ்சய் ராமசாமி மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலே தாக்கப் பட்டிருக்கிறார். ராமசுப்பு மிரட்டப்பட்டிருக்கிறார். எங்கள் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறார். நேற்று இந்த அவையில் உங்களுக்கு முன்னாலேயே, உங்களுடைய கண்ணெதிரேயே ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டு இரத்தக் காயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தாக்குதலுக்கு இலக்கானவரை வெளியே அனுப்பியிருக்கிறீர்கள். தாக்குதலுக்கு ஆளானவர் களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வந்தால் அவரை வெளி யேற்றி இருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் தாக்கிய வருக்கு என்ன தண்டனை என்றால் ஒரு வாரம் தாக்கப் பட்டவருக்கு பாதிக்கப்பட்டவருக்கு, அநீதி இழைக்கப்பட்ட வருக்கு நீங்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக் கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறீர் கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பை நான் சொல்லிவிடுகிறேன். பாதிக்கப்பட்டவர்கள் என்று நீங்கள் சொன்ன காரணத்தினால், என்னுடைய தீர்ப்பை நீங்கள் குறிப்பிட்ட காரணத்தினால் நான் சொல்லி விடுகிறேன். நேற்றைய தினம் நடந்த சம்பவம் என்பது ஒரு உறுப்பினர் வரம்பு மீறி நடந்தார் என்பதற்காக உடனடியாக நானும்

1993 மார்ச் 39] [பேரவைத் தலைவர்]

காவலரை விட்டு வெளியேற்றி, பேரவையில் தீர்மானம் நிறை வேற்றி, ஒரு வாரத்திற்கு அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக் கிறார்.

இன்னொரு சம்பவம் என்பது பேரவைத் தலைவரைத் திட்ட மிட்டு அவமானப் படுத்த வேணடும் என்பதற்காக, சுமுகமாகப் பேரவை நடந்து கொண்டிருந்த நேரத்தில் என்னுடைய இருக்கை அருகே வந்து இஷ்டத்துறகு கைநட்டி .. (குறுககடுகள்) பேரவைத் தலைவா மீது எனன வேண்டுமானாலும் பழி சொல்லி(குறுக்கீடுகள்) நீங்கள் கைநீட்டிப் பேசுவது சரியல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். நான் பேசிக்கொண்டிருக்கிறேன் (குறுக்கீடுகள்) நான் பேசிக் கொண்டிருக்கும்போது இதுபோல் கைநீட்டிப் பேசுவது சரி யல்ல. (குறுக்கீடுகள்) முறையில்லாமல் நடப்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) நடந்ததைச் சொல்கிறேன். என்ன வேண்டு மானாலும் பேசலாம் என்கிற அளவுக்கு உறுப்பினர்கள் நடந்து கொண்டபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. பேரவையினுடைய விதிமுறைகளை மீறி, வரம்பு மீறி நடந்துகொண்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. செல்லக் குமார் அவர்கள் என்னிடத்திலே வந்த நேரத்தில் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு முன்னர் வரம்பு மீறி நடந்த உறுப்பினரை நான் வெளி யேற்றிய பிறகு, அவையிலேயிருந்து ஐந்து, ஆறு உறுப்பினர்கள் ஓடுவதும், உறுப்பினரைத் துரத்தித் தாக்குவதும் எப்படி முறை யாகும்? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் எப்படி இருக்க முடியும்? இந்த அவையில் வரம்பு மீறி இருக்கையிலே இருந்து எழுந்து ஓடுவதும், நான் நடவடிக்கை எடுத்து வெளி யேற்றிய உறுப்பினரைத் தாக்க ஓடுவதும்....

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: உங்களிடம் பாது காப்பு கேட்கக் கூடாதா? (Interruptions) you have failed to protect him (Interruptions) I charge you: I charge you You have failed to protect him

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> என்னுடைய உத்திரவை நிறைவேற்ற வந்த காவலர்களை என் கண்ணெதிரிலேயே புரட்சி மணி தாக்குவது எவ்வளவு பெரிய கண்டனத்திற்குரிய செயல். நான் நடவடிக்கை எடுத்ததைத் தவறு என்று நீங்கள் சொல்வது எப்படிச் சரியான வாதமாகும்? (குறுக்கீடுகள்) இந்த இடத்தில் புரட்சிமணி என்னுடைய காவலர்களை கைநீட்டி அடித்ததை திருமதி பொன்னம்மாள் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார் கள். திரு குமரி அனந்தன் அவர்களும் பார்த்துக் கொண்டிருந் தார்கள். இத்தகைய உறுப்பினர்கள் மீது நான் நடவடிக்கை எடுக்காமல் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) காவலரை அடிக்கவில்லை என்று பொன்னம்மாள் சத்தியம் செய்வாரா? (குறுக்கீடுகள்) புரட்சிமணி அடித்தார் என் கண்ணெதிரே அடித்தார். (குறுக்கீடுகள்) உங்கள் வேண்டுகோளை வைக்க

நான் அனுமதித்தேன். அந்த வேண்டுகோளை மீறி நீங்கள் பேசிக் கொண்டிருப்பது சரியில்லை, போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சி (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று இல்லை. நேற்று இங்கே அமர்நது கொண்டிருந்த எல்லோருக்கும் அது தெரியும். செல்லக்குமார் சென்று மாண்புமிகு பேரவைத் தலைவரை கைநீட்டி, அஙகே அவர்கள் செல்ல முடியாது என்று வாதாடிக் கொண்டிருந்ததைத் இங்கே இருந்த அத்தனை பேரும் கண்கூடாகப் பார்த்தார்கள். வாதாடியதோடு மட்டுமல்ல, ஏதோ ஒரு கடிதத்தை எடுத்துச் சென்று வேண்டுமென்றே பேரவைத் தலைவரைத் தாக்குவதைப் போல நடந்தாரா, இல்லையா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்குக் கொடுத்த அந்த அனுமதியின் பேரில் நீங்கள் வேண்டுகோள் ஏதேனும் வைப்பதாக இருந்தால் வையுங்கள் என்று சொன்னேன் (குறுககீடுகள்) நான் எடுத்த நடவடிக்கை தவறு என்று பேசுவதறகு இநத வாய்ப்பை நீங்கள் பயனபடுத்திக் கொள்வது சரியலல. நீங்கள் வேண்டுகோள் ஏதேனும் வைப்பதாக இருநதால் வைக்கலாம்

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் அவை முன்னவர் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார்கள், ஆதாரம் இருந்தால் இப்போதும் நீங்கள் சபாநாயகரிடத்திலே கொடுக்கலாம்; சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கொடுக்கலாம் என்று. எனவே சபாநாயகரிடத்திலே கொடுக்க அவர் வருகிறார் (குறுக்கீடு) அவர் வந்தபோது நீங்கள் அதை வாங்க மறுக்கிறீர்கள். வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்பதில் என்ன தவறு ? எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் முன்பொருமுறை ஒரு ஸ்பீக்கர் இதே போல் சொல்லியிருக்கிறார். அவர் I have neither the eyes to see, nor the ears to hear என்று சொல்லியிருக்கிறார். எதற்காக சபையினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற. (குறுக்கீடு) சபையில் இருக்கிற உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக மன்னனிடத்திலே சொன்னார், எனக்குக் கண் இல்லை, காதில்லை என்று. ஆனால் இங்கே நீங்கள் உறுப்பினரைக் காப்பாற்றத் தவறிவிட்டு நான் பார்க்கவில்லை என்று கூறுகிறீர்கள்.

you have neither the eyes to see nor the ears to hear because you never wanted to protcet the Member. அதனால்தான் அந்த வார்த்தையை இங்கே நீங்கள் உபயோகப்படுத்தி இருக்கிறீர்கள். என்னுடைய சந்தேகம் எல்லாம் நீதிதேவன் சற்று மயங்கி விட்டானோ என்று நான் அஞ்சுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரிவாக விவாதத்திற்குள்ளே செல்கிற காரணத்தால் மேற்கொண்டு இதிலே எதுவும் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் என்னிடத்திலே கேட்டுக் கொண்டதற்கிணங்க எந்த வேண்டுகோளையும் தாங்கள் வைக்கவில்லை. வேறு விவாதத்திற்குச் செல்கிற காரணத்தால் இந்த நேரத்தில் அது வேண்டாம் என்று கருதி அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) வேண்டுகோள் அவர் வைக்கவில்லையே. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் மீது குற்றம் சுமத்துவதற்காக வேண்டுகோள் என்கிற பெயரில் அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறார். (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆஃப் ஆர்டர் திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா.ப. பட்டாபிராமன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இதற்கு முன்னால் நடந்த வரலாறுகளை எல்லாம் பார்க்கிறபோது (குறுக்கீடு) நான் பேச வேண்டாமா?. (குறுக்கீடுகள்) இங்கே உறுப்பினர்கள் 161 பேர் இருக்கிறார்கள். இங்கே இருக்கிற உறுப்பினர்கள் 161 பேர் (குறுக்கீடுகள்) நான் பேசுகிறபோது அவர்கள் பேசக்கூடாது. நான் பேசுகிறபோது அங்கே குறுக்கீடுகள் வருகின்றன. நான் எப்படி என்னுடைய கருத்தைச் சொல்ல முடியும் ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்கிறபோது இங்கே உட்கார்ந்து கொண்டு குரல் எழுப்புகிறபோது (குறுக்கீடு) அதைத் தான் அவர் குறிப்பிடுகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுகோள் என்று தெரிவித்து விட்டு வேண்டுகோளுக்கு அப்பால் சென்ற காரணத்தால் அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புகிறார். அது என்ன வென்று கேட்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். திரு. கா.ப. பட்டாபிராமன்.

திரு. கா.ப. பட்டாபிராமன் : நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பிவிட்டு, பேரவைத் தலைவரும் அனுமதித்த பிறகுதான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இங்கே ஆளும் கட்சி (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அனுமதித்து தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று அவர் சொல்கிறபோது எதிர்க்கட்சித் தலைவர் எழுந்திருப்பதற்கு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடுகள்) இல்லை. அவர், நான் பேரவைத் தலைவர் அனுமதித்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்வதற்கு எழுந்து நீங்கள் ஆட்சேபம் தெரிவித்தால் என்ன அர்த்தம் திரு. கா.ப. பட்டாபிராமன்.

திரு. கா.ப. பட்டாபிராமன் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி, அந்த நிகழ்ச்சி பற்றிய தீர்ப்பினை பேரவைத் தலைவர் நல்கிவிட்ட பிறகும் நேற்றையதின நிகழ்ச்சி பற்றி இன்றைய தினம் இந்த அவையிலே பேச முடியாது என்பது விதிகளிலே இருக்கிறது. அதுமட்டுமல்ல முன்னோடியாக தீர்ப்புகளும் அப்படித்தான் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, நேற்றைய தினம் இந்த அவையிலே இல்லாத ஒரு உறுப்பினர் அதாவது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நேற்றையதினம் நடந்ததாகச் சொல்லப்படுகிற கருத்துக்களை அவர் இங்கே வந்து இன்றைய தினம் பேசுவது முறையல்ல என்பதை எடுத்துச் சொல்லி, இது உரிமை பிரச்சினை, இந்த உரிமைப் பிரச்சினையிலே இவர்கள் நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி இங்கே பேசக்கூடாது என்பதைப் பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் தன்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேற்கொண்டு விவாதத்திற்குள்ளே செல்வது சரியல்ல

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எங்களுடைய உறுப்பினர்கள் அவையிலே இருந்து வெளியேறியதற்குப் பின்னால் இரண்டு உறுப்பினர்கள் இந்தச் சபைத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். சபைத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்வதற்கு நீங்கள் பேரவை விதி 120-ஐ மேற்கோள் காட்டியிருக்கிறீர்கள். விதி 120-லே அதிகபட்சமான தண்டனைதான் பேரவைக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக் கூடாது என்பது. அது ஒரு நாளாக இருக்கலாம் இரண்டு நாளாக இருக்கலாம். அல்லது தொடருக்கு மேற்படாதவாறு இருக்கலாம் என்று தான் இருக்கிறது. அதுதான் தண்டனை என்று கூட சொல்லவில்லை. என்றாலும் கூட காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ற காரணத்தால் அந்தத் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்கோ, பேரவைத் தலைவருடைய நடவடிக்கைக்கோ உள்நோக்கம் கற்பிப்பது என்பது எதிர்க்கட்சித் தலைவர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினையாகவும் அது ஆகும். எனவே நீங்கள் பேச ஆரம்பித்ததிலிருந்து அவைத் தலைவர் மீது உள்நோக்கம் கற்பித்துப் பேசிய அனைத்தும் உங்கள் மீது அவை உரிமைப் பிரச்சினைக்கு உட்பட்டவை ஆகும். (குறுக்கீடுகள்) அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அந்தத் தண்டனை மிக அதிகபட்சமானது. அது மட்டுமல்ல (Interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் தனக்குக் கொடுத்த வாய்ப்பை மிகத் தவறாக பயன்படுத்துகிறார் கண்டனத்திற்குரியது இதைப் போன்ற எதிர்க்கட்சித் தலைவரை நான் பார்த்ததே இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொன்னீர்கள்? என்ன வேண்டுகோள் வைப்பதாகத் தெரிவித்துவிட்டு, எங்கே போய்ப் பேசுகிறீர்கள்? திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் முறைதவறி நடந்து கொள்ள வேண்டாம். திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் முறைதவறி நடந்து கொள்ளவேண்டாம் அதாவது உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை, உங்களுடைய உறுப்பினர்களை பாதுகாக்கத் தவறி அரசியல் ஆக்குவதற்கு நீங்கள் பயன்படுத்த வேண்டாம். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும் உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து கவர்னர் உரையிலேயும் சரி இந்தத் தொடர் கூட்டத்திலேயும் சரி, ஏதேனும் குழப்பம் விளைவிக்கவேண்டும் என்று எங்கோ இருந்து ஏவப்பட்ட ஏவுகணைக்குப் பலியாகி இங்கே நடந்து கொண்டிருக்கிறார்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

இவர் எதிர்க்கட்சித் தலைவரே இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்கு மட்டுமல்ல, தொடர்ந்து முறைகேடாக நடந்து வருகிறார் இவ்வளவு முறைகெட்ட

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவரை இந்தப் பேரவை இதுவரையிலே சந்தித்ததே இல்லை இவ்வளவு முறைகெட்ட எதிர்க்கட்சித் தலைவரையும், அவருக்கு உதவுகிற சில உறுப்பினர்களையும் இந்தப் பேரவை இதுவரையிலே சந்திக்கவேயில்லை. திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் இங்கே தெரிவித்த அத்தனைக் கருத்துக்களும் முறைதவறிய செயல் என்பதை இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் பேரவையில் என்ன பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று கூறினாரோ..... (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டாம். உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டாம் குரல் எழுப்புகிறவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் செய்யும் முறை கேட்டுக்குத் துணைபோகின்ற முறைகேடான உறுப்பினர்கள். அவர்களுடைய வஞ்சக வலைக்குப் பேரவை உறுப்பினர்கள் பலியாகவேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன் (குறுக் கீடுகள்)

மாண்புமிகு அவை முன்னவர்

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பொறுப்பு வாய்ந்த முக்கிய எதிர்க்கட்சியினர் தொடர்ந்து எப்படி நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் நாடே நன்கு கவனித்துக் கொண்டிருக்கிறது: அது ஒவ்வொரு நாளும் வேண்டுமென்றே திட்டமிட்டு அவையிலே விதிமுறை களுக்குப் புறம்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) நியாயத் திற்குப் புறம்பாகவும் ஏதேனும் ஒன்றைச் சொல்லி கூச்சல் எழுப்புவதன் மூலமும் இங்கே கலகம் விளைவிப்பதன் மூல மாகவும் இந்த அவைக்கு ஒரு கேடு பயக்க வேண்டும் என் கின்ற எண்ணத்தினாலேயும் இந்த ஒரு காரணத்தை வைத்தே அவர்களுடைய கட்சி ஆளுகின்ற மத்திய அரசே இந்த ஆட்சி யைக் கலைத்துவிடாதா என்ற எண்ணத்தினுடைய அடிப் படையிலே இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் அல்லாமல், ஒவ்வொரு தடவையும் உண் மைக்குப் புறம்பாகவே ஒவ்வொன்றையும் பேசி பேசி இந்த அவையிலே வீணான சர்ச்சைகளுக்கும் மற்றவைகளுக்கும் இடம் ஏற்படுத்துகிறார்கள். இன்று அவர் பேசுகிறபோது என்று அவர்கள் எடுத்துச் சொன்னது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே ஒரு குறிப்பிட்ட ஒருவர், எந்த ஒரு முறையை வைத்துக் கொண்டு, எந்த ஒரு தீர்ப்பை வைத்துக்கொண்டு அவர் பேசினார் என்று தெரியவில்லை. அது ஒரு இல்லாத, பொல்லாத உண்மைக்குப் புறம்பான ஒரு குற்றச்சாட்டை சாட்டி இருக் கிறார்கள் என்பதை நான் வன்மையாக கண்டிக்கவும் கட மைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எதிர்க்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 மார்ச் 30] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

முற்பகல் 11-15)

ஆனால், ஒரு பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் அப்படி நடந்து கொள்ளுதல் கூடாது. திரு. சுப்பிரமணிய சுவாமி புகார் கவர்னருக்குக் கொடுத்திருக்கிறார். கவர்னருக்கு என்ன புகார் கொடுத்திருக்கிறார் என்று பத்திரிகையில் வந்த செய்தியை தவிர அது என்ன என்று நமக்குத் தெரியாது. ஆனால் கவர்னர், அவர் விதிமுறைப்படி தேர்தல் குழுவுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் குழு என்ன முடிவு எடுக்கப்போகிறது என்பதும் நமக்குத் தெரியாது. ஆக, விதிமுறைப்படி மேதகு ஆளுநர் அவர்கள் தேர்தல் குழுவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்றால் என்ன முடிவு எடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முறைப்படி, விதிமுறைப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றை எடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்க தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல, எந்த ஒரு முடிவும் ஏற்படாத ஒரு சூழ்நிலையில், தானே முடிவு கட்டி, தானே தீர்ப்பளித்துவிட்டு, இந்த அவையை விட்டே வெளியேறிவிட்டார் என பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதை கவர்னர் அனுப்பி வைத்திருக்கிறார். என்ன ஆகும் என்பதைப் பின்னால் பொறுத்திருந்து பார்க்கலாம். அவர்கள் சிலபல அரசியல் சட்ட விதிமுறைகளைக் கடைபிடிக்கிறார்கள் என்றால் அதே அரசியல் சட்டத்தினுடைய விதிமுறைகளைத்தான் கடைபிடிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழு முயற்சியினுடைய அடிப்படையிலே தம்மை சமாளித்து விட முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லக்கூடிய எண்ணத்திலேதான் இந்த அரசும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதன் மூலம்தான் நாட்டுக்கும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல இந்த அவையில் என்ன பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று அவர்கள் அனுமதி கோரி நானும் அனுமதித்தேனோ அந்தப் பிரச்சனைக்கே துளியும் சம்பந்தமில்லாத ஒரு பிரச்சினையையும் கொண்டு வந்து இங்கே பேசி, அவையிலேயிருந்து வெளிநடப்புச் செய்வதற்குரிய ஒரு வாய்ப்பை உண்டாக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவர்

பிரச்சினையை திசைத் திருப்ப முயன்றதை நானும் பேரவையின் சார்பில் பெரிதும் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கண்டனத்தை எதிர்க் கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ** என்று சொல்கிறார்கள். அவரை உட்கார வைத்தது இந்த நாட்டிலே இருக்கின்ற பல்லாயிர, கோடி வாக்காள பெருமக்களின் தீர்ப்பின் அடிப்படையே தவிர மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தயவிலே உட்காரவில்லை என்பதும், நாட்டு மக்களுடைய ஏகோபித்த அன்பு, அரவணைப்பு காரணமாக தான் உட்கார்ந்திருக்கிறார்கள் எனபதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். இதை, ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய ஆதரவைப் பெற்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறபோது, அவர்களைப் பார்த்து ** என்று சொல்கிற தகுதி எதிர்க் கட்சித் தலைவருக்கு இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

அதுமட்டுமல்லாது, அவர் இன்றைக்குச் செய்த காரியம் என்பது எந்த அளவிற்கு திசை திருப்புவதற்கு முயன்ற முயற்சி என்றால், உறுப்பினர்கள் இரண்டு பேரைப் பாதுகாப்பதற்காக இங்கே பேச வருகிறார் என்றுதான் அனுமதித்தேன். உறுப்பினர்களைப் பாதுகாக்கிற உரிமை அந்தந்தக் கட்சித் தலைவர்களுக்கு உண்டு ஆனால் அந்தப் பிரச்சினையையே விட்டு விட்டு, எந்தப் பிரச்சினையை இனிப் பேசினால் உறுப்பினர்களைப் பாதுகாக்கிற பிரச்சினையே வராமல் போகுமோ அந்த அளவுக்குப் பிரச்சினையை திசை திருப்ப முயன்ற அந்த எதிர்க் கட்சித் தலைவரை, அந்த உறுப்பினர்களும், அந்தக் கட்சியினுடைய உறுப்பினர்களும்தான் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது பெரிய விஷயம், உறுப்பினர்களின் பாதுகாப்பு என்று சொன்ன காரணத்தினால் உங்களுடைய வேண்டுகோளைத் தெரிவியுங்கள் என்று நான் கேட்டதற்குப் பிறகு, அந்தப் பிரச்சினைக்குத் துளியும் சம்பந்தம் இல்லாத ஒரு பிரச்சினையை அவர் இங்கே எழுப்ப முயன்றிருப்பது தன்னுடைய உறுப்பினர்களைப் பற்றி, தன்னுடைய உறுப்பினர்களுடைய பாதுகாப்புப் பற்றி துளிகூட கவலை இல்லாத

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அந்தக் கட்சித் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இருக்கிறார் என்பதாக அந்தக் கட்சியினர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி அவர்கள் தெரிவித்த குறிப்பை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமெனத் தெரிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதலிலே முடிவு எடுத்தேன். ஆனால் அவை முன்னவர் அவர்கள் ஒரு பதிலைச் சொல்லி, அது இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட காரணத்தாலே அதை அனுமதிக்கிறேன். ஆனால் தகுதியில்லை என்று கடைசியாகச் சொன்ன அந்தச் சொற்றொடர்கள், அந்த வாக்கியம் முழுவதையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

முற்பகல் 11-20

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன், 2 சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களுடைய உத்தரவுக்குப் புறம்பாக, முறைகேடாக நடந்து கொண்டதை நடவடிக்கை எடுத்தபோது காவலர்களை இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் தாக்கினார்கள். இன்றைக்கு வந்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய பாதுகாப்பு பற்றி பேசுகிறார். காவலர்களைத் தாக்கியது உங்களுடைய முன்னிலையிலேயே நடந்தது. அதற்கு உங்களுடைய நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதோடு நேற்று நடந்த சம்பவங்கள் பற்றி இன்று பத்திரிகையிலே படம் வந்திருக்கிறது. கழுத்தைச் சுற்றி கட்டு, தலையைச் சுற்றி கட்டு. நான் இங்கே போகும் போது பார்த்துக் கொண்டிருந்தேன். ஓர் உறுப்பினர் ஆறுதல் சொல்வது போல் ஒரு படம். இரண்டு பேரும் சிரித்துக் கொண்டே, கை கோர்த்துக் கொண்டு போனதை என் கண்ணாலே பார்த்தேன். ஆகவே நீங்கள் விசேஷ மருத்துவர்கள் 3 பேரை நியமித்து இவர்களுக்கு என்ன காயம் என்பதை கண்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகம் அவர்கள் தெரிவித்தது இரண்டு கருத்துக்கள். ஒன்று, காயம் பற்றிய விஷயம். அவையிலே இருந்த எல்லா உறுப்பினர்களும் பார்த்துக் கொண்டுதான் இருந்தீர்கள், இந்த இடத்திலே நடந்த சம்பவம். அதற்குப் பின்னரும் அந்த உறுப்பினர் இங்கே இருந்து, முறைகேடாக நடந்து கொண்டுதான் இருந்தார், அப்போதும் பார்த்தீர்கள். காயம் இருந்ததை எந்த உறுப்பினரும் கண்ணாலே பார்க்கவில்லை. திரும்பப் போய் கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். காயம் இருந்ததை யாரும்

பார்க்கவில்லை, இங்கே தள்ளினார்கள் என்ற பிரச்சினையைக் கூட உறுப்பினர்கள் பலர் எடுத்துத் தெரிவித்தார்கள். எனவே' காயம், கட்டு என்பதெல்லாம் வெளியிலே பத்திரிகைகளுக்காகச் செய்யும் சப்பைக்கட்டு என்பது உறுதி.

தவிர, எனக்கும் காவலர்கள் இருவர் தங்களைத் தாக்கியதாக ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது என்னுடைய ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால் நிதிநிலை அறிக்கையிலேயும், மானியக் கோரிக்கைகளிலேயும் குறைந்த அளவில் உறுப்பினர்கள் கருத்து சொல்லியிருப்பது இந்தத் தொடரில்தான் இருக்கும். இங்கே அமர்ந்திருக்கும் அத்தனை உறுப்பினர்களுடைய உரிமையும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேள்வி நேரத்தைப் புறக்கணித்துவிட்டு, ஜீரோஹவரில் தங்களுடைய அனுமதியைப் பெற்று இந்த அவையினுடைய முழுமையான நேரத்தை, சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை அவையிலேயே ஏற்படுத்தும் வகையிலே தொடர்ந்து 1 மணி நேரம், அரை மணி நேரம் என்று எடுத்துக்கொள்வதால், எங்களுக்கு வாக்களித்த மக்களுடைய பிரச்சினைகளை நாங்கள் இந்த அவையில் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாமல், எங்களுடைய உரிமை தொடர்ந்து பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலைமை தொடராமல் இருக்க வேண்டுமென்றால் அவைத் தலைவர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு எங்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் அல்லது அந்த உறுப்பினர்கள் இந்த அவையில் நிரந்தரத் தொந்தரவு கொடுக்காத வகையில் அவர்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதுபற்றி அவ்வப்போது என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறேன். தினசரி ஏதாவது பிரச்சினைகளை எழுப்பி, அந்தப் பிரச்சினைகள் காரணமாகப் பேரவையின் நேரத்தை வீணடிப்பதை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் வாடிக்கையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படியேனும் ஒரு பிரச்சினையைக் கிளப்பி, அவையின் நேரத்தை வீணடிப்பது, கட்

சியில் அவர்கள் வெளி நடப்புச் செய்வது, மிச்சம் இருக்கின்ற உறுப்பினர்கள் மதியம் 2 மணிக்கு மேலே, 2 3/4 வரையிலேதான் உருப்படியான விவாதம் செய்ய முடியும் என்கின்ற நிலைமையை அவர்கள் உருவாக்கி வருகிறார்கள் என்பதை நானும் அவ்வப்போது தெரிவித்திருக்கிறேன். தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே. பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சண்முகம் அவர்களை அனுமதித்தது மாதிரி என்னையும் அனுமதிக்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒரு வேண்டுகோள். நேற்று நடைபெற்ற சம்பவங்களை ஒட்டி, பேரவை விதி 120-ன் படி இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் 2 சட்டமன்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சியிலே இருந்து தள்ளி இருக்கிறீர்கள். அதை அரசின் சார்பிலே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடித்தவரைக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி, அடிப்பட்டவரை திரு. செல்லக் குமார் அடிப்பட்ட காரணத்தால் உணர்ச்சி வசப்பட்டு, சட்ட மன்ற உறுப்பினர்கள் சத்தம் போட்டு, அதனால் மற்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. மீண்டும் சட்டமன்றத்திற்கு வர அனுமதித்தால்தான் ஜனநாயக ரீதியாக எதிர்க்கட்சிகள் சட்டமன்றத்தில் முறையாகச் செயல்பட தாங்கள் ஆதரவாக இருக்கிறீர்கள் என்று அந்த உணர்வு அப்போதுதான் ஏற்படும். யார் அடித்தாரோ அவரைத்தான் கூட்டத் தொடர் முழுவதும் நீக்க வேண்டும். இரண்டாவது தடவை அவர் அப்படிச் செய்கிறார்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய வேண்டுகோளை வைத்துவிட்டீர்கள். அடித்த உறுப்பினரை உடனடியாக அவையிலிருந்து வெளியேற்றிவிட்டேன். அவை முன்னவர் அவர்களும் பேரவையின் சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி அவர் ஒருவார காலத்திற்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னதற்குப் பிறகு, பேரவைத் தலைவரிடத்திலே முறைகேடாக நடந்தார்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகு நடந்த சம்பவம் இது. நீங்கள் நேற்றையதினம் அவையில் இல்லை. பேரவையில் அதற்குப் பிறகு முறைகேடாக நடந்துகொண்ட சம்பவத்திற்காக வெளியேற்றப்பட்டு, விதி 120-ன் கீழ் இந்தத் தொடர்

கூட்டம் முழுவதற்கும் வரக்கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறேன். அதை மறுபரிசீலனை செய்யக் கூடிய அளவில் இன்றையதினம் வந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரும் நடந்து கொள்ளாத போது, அதை மறுபரிசீலனை எப்படி செய்வது என்பதைத் தான் நீங்கள் யோசிக்கவேண்டும். எனவே அந்தப் பிரச்சினை பற்றி இப்போது வேண்டாம். அடுத்து கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்ததைப் பற்றி திரு.....(குறுக்கீடு)

திரு. ம. சின்னசாமி: பாயிண்ட ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், சஸ்பெண்ட் செய்யப்பட்டதையும் அந்த உறுப்பினர் வெளியேற்றப்பட்டதையும் சொல்லி இரண்டையும் போட்டு குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லிவிட்டேன். வேண்டாம், உட்காருங்கள்.

3. சிறப்புக் குறிப்பு.

(அ) கோவையில் தி.மு.க. மாநாட்டுப்பந்தல் எரிந்து போனது குறித்தும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், திரு. பரிதி இளம்வழுதியும் நேற்றைய தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். கோவையிலே நடைபெற்ற தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்தது பற்றிய ஒரு பிரச்சினையைக் கொடுத்திருந்தார்கள். திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் அதை 'ஸ்பெஷல் மென்ஷன்' ஆக எழுப்ப வேண்டுமென்ற கோரிக்கையைக் கொடுத்திருந்தார்கள். அதே போல், மாநாட்டு ஊர்வலத்தில் நடைபெற்ற தீவைப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கோவையில் நடைபெற்ற பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. சிங்கை கோவிந்தராஜு' திரு. கே. பி. ராஜு அவர்களும் திரு. வி. பி. சந்திரசேகர், திரு. செல்லசாமி ஆகியோரும் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நேற்றைய தினம் அதற்கு அவகாசம் இல்லையென்று சொல்லி, இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக நான் அறிவித்தேன். இன்றையதினம் திருநாவுக்கரசு அவர்கள் அதைப் பற்றி தானும் ஒரு கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டார் அவர் கொடுத்தது இன்றைய தினம். எனவே நேற்றே, இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக அறிவித்திருந்தேன்.

கூட்டம் முழுவதற்கும் வரக்கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறேன். அதை மறுபரிசீலனை செய்யக் கூடிய அளவில் இன்றையதினம் வந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரும் நடந்து கொள்ளாத போது, அதை மறுபரிசீலனை எப்படி செய்வது என்பதைத் தான் நீங்கள் யோசிக்கவேண்டும். எனவே அந்தப் பிரச்சினை பற்றி இப்போது வேண்டாம். அடுத்து கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்ததைப் பற்றி திரு.....(குறுக்கீடு)

திரு. ம. சின்னசாமி: பாயிண்ட ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், சஸ்பெண்ட் செய்யப்பட்டதையும் அந்த உறுப்பினர் வெளியேற்றப்பட்டதையும் சொல்லி இரண்டையும் போட்டு குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லிவிட்டேன். வேண்டாம், உட்காருங்கள்.

3. சிறப்புக் குறிப்பு.

(அ) கோவையில் தி.மு.க. மாநாட்டுப்பந்தல் எரிந்து போனது குறித்தும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், திரு. பரிதி இளம்வழுதியும் நேற்றைய தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். கோவையிலே நடைபெற்ற தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்தது பற்றிய ஒரு பிரச்சினையைக் கொடுத்திருந்தார்கள். திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் அதை 'ஸ்பெஷல் மென்ஷன்' ஆக எழுப்ப வேண்டுமென்ற கோரிக்கையைக் கொடுத்திருந்தார்கள். அதே போல், மாநாட்டு ஊர்வலத்தில் நடைபெற்ற தீவைப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கோவையில் நடைபெற்ற பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. சிங்கை கோவிந்தராஜு' திரு. கே. பி. ராஜு அவர்களும் திரு. வி. பி. சந்திரசேகர், திரு. செல்லசாமி ஆகியோரும் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நேற்றைய தினம் அதற்கு அவகாசம் இல்லையென்று சொல்லி, இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக நான் அறிவித்தேன். இன்றையதினம் திருநாவுக்கரசு அவர்கள் அதைப் பற்றி தானும் ஒரு கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டார் அவர் கொடுத்தது இன்றைய தினம். எனவே நேற்றே, இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக அறிவித்திருந்தேன்.

1993 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

அந்தப் பிரச்சினை பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி ஆதிக்கம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகம் போர்ப் பிரகடனம் செய்வதற்காக கோவையில் கடந்த 26, 27, 28-3-1993 ஆகிய தேதிகளில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டை சீர்குலைக்கின்ற வகையிலே அங்கே பந்தல் வேலை நடந்துகொண்டிருந்தபோது, 25 ஆம் தேதி சில இந்தி வெறிபிடித்த மதவாத சக்திகள். சதிகார கும்பல், சில விஷமிகளை ஏவி அந்த மாநாட்டுப் பந்தலுக்கு தீ வைத்திருக்கிறது. எங்கள் கட்சிக்காரர்களால் உடனே அங்கே ஒருவர் பிடிக்கப்பட்டு, காவல்துறையிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கிறார். அவர் அயோத்திக்குக் கரசேவைக்குச் சென்றவர் என்றும், பி.ஜே.பி. கட்சியினைச் சேர்ந்தவர் என்றும் தெரிகிறது. மேலும் இந்தச் சதிச் செயலுக்குப் பின்னாலே ஒரு பெரிய சதிகாரக் கும்பலே இருப்பதாகக் கருதுகிறோம். அவர்கள் மீது அரசு முறையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அன்று தீக்குளித்த மொழிப் போர் தியாகிகளை, வறுமையால் செத்துப்போனவர்கள். பைத்தியக்காரர்கள் என்று அன்றைய துரைத்தனத்தார் குறிப்பிட்டதைப்போல, நமது அமைச்சர் அரங்கநாயம் அவர்கள், தி.மு.க.காரர்கள் இன்ஷூரன்ஸ் பணம் பெறுவதற்காக, தாங்களே தங்களுடைய மாநாட்டுக்குத் தீ வைத்துக் கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். இது அழிவுகாலத்தின் ஆணவப் பேச்சு என்பதைத் தவிர வேறு எதையும் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அறிவாலயத்தில் கார்கள், வேன்களுக்கு எல்லாம் தீ வைத்தது எனக்குத் தெரியும். என்னிடம் சொன்னதை நான் அறிக்கையாகச் சொன்னேனே தவிர, நானாகச் சொல்லவில்லை.

திரு. இளம்வழுதி: அது மட்டுமல்ல. அங்கேயிருக்கிற போலீஸ் கமிஷனர், மின் கசிவினால்தான் தீ விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் மின்வாரிய அதிகாரிகள் அந்த நேரத்தில் மின் சப்ளையே செய்யப்படவில்லை. என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அமைச்சர் அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்

திரு. இளம்வழுதி [1993 மார்ச் 30

கிறார். அந்தப் பந்தல் போட்ட தஞ்சை மாவட்டத்துக் காரர்களுக்கும் திருச்சி மாவட்டத்துக்காரர்களுக்கும் ஏற்பட்ட பூசலேதான் தீ விபத்து நடந்திருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார். விசாரணை நடந்ததுகொண்டிருக்கும்போது இப்படியெல்லாம் அமைச்சர் பேசுகிறார். யாரோ தெருவில் போனவர்கள் பேசினால் பரவாயில்லை. ஒரு பொறுப் புள்ள அமைச்சர் பொறுப்புள்ள இடத்திலிருந்து இப்படி பேசினால் அது விஷம சக்திகளை ஊக்குவிப்பதாக ஆகிவிடாத?

முற்பகல் 11-30

எனவேதான், நான் என்ன கேட்கிறேன் என்றால், தமிழ்நாடு கொந்தளித்துப் போய் இருக்கிறது. இந்தி ஆதிக்கத்தை, எதிர்த்து. இந்த நேரத்திலே தமிழ் உணர்வு கொண்டவர் மாநாடு நடத்துகின்றபோது, அதைத் தீவைக்கும் முயற்சியிலே விஷமிகள் ஈடுபடுவது என்றால் அவர்களுக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது? அதுமட்டுமல்ல, இப்படியெல்லாம் நீங்கள் சொல்வதைப்பார்த்து, இந்தப் பிரச்சினையில்** நான் கருது கிறேன். (குறுக்கீடுகள்) எனவே இதுகுறித்து விரிவாக விவாதிக்க** என்று கேட்டுக் கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இதை நீங்கள் கொடுக்க வில்லை. ஸ்பெஷல் மென்ஷனாக நீங்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரலாம் என்று சொல்லி நேற்றையதினம் நீங்கள் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) இந்த நேரத்தில்** என்று நீங்கள் சொல்வதாக இருந்தால் அது பற்றிய முழு விவரத்தை யும் என்னிடத்தில் நீங்கள் கொடுத்து இருக்க வேண்டும். அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் குற்றச் சாட்டாகச் சொல்லக்கூடாது.

திரு. இளம் வழுதி: போலீஸ் கமிஷனர் சொல்லி இருக்கிறார்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்லுங்கள்.

திரு. இளம் வழுதி: அதே நேரத்தில் மின்சார சப்ளை இல்லை. என்று மின்வாரிய அதிகாரிகள் சொல்லி இருக்கிறார் கள். ஆனால் அந்த அதிகாரிகள் தி.மு.க.-வை சேர்ந்தவர் கள் என்று அமைச்சர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) எனவே, **....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இதை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்; **என்பது நீக்கப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

படுகிறது. (குறுக்கீடுகள்) இது பதில் உரையில்தான் வரும் உட்காருங்கள். திரு. பண்ருட்டி இராமச்சந்திரன். (குறுக்கீடுகள்).

திரு. இளம் வழுதி : ஆல் இந்தியா ரேடியோவில் இந்தி திணிக்கப்படுகிறது.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி இப்போது வேண்டாம். நீங்கள் அதை விதி 55-ன் கீழ் கொடுத்து இருக்கிறீர்கள். அது முறைப்படி எடுத்துக்கொள்ளப்படும், அதை இந்த நேரத்தில் கேட்கக் கூடாது. இந்தப் பிரச்சினையை வையுங்கள். (குறுக்கீடுகள்) அதிலே வேண்டாம். (குறுக்கீடுகள்) அது இந்தப் பிரச்சினையில் வேண்டாம். இது ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை எழுப்ப அனுமதித்து பேசிக் கொண்டிருப்பது; ஆகவே அது பற்றி வேண்டாம். பதிலுரையின் போது சொல்வார்கள். (குறுக்கீடு) திரு. சண்முகம், உட்காருங்கள். இந்தப் பிரச்சினையில் வேண்டாம். (குறுக்கீடுகள்) திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளோ அல்லது மற்ற அமைப்புகளோ பெரும் அளவுக்கு மக்களைத் திரட்டி மாநாடுகள் நடத்துகின்றபோது அரசுக்கு அமைதி காக்கின்ற பொறுப்பு உண்டு. முதலாவதாக அண்மையில் கோவையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக இந்தி எதிர்ப்பு மாநாட்டையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சமூக விரோத சக்திகள் கைது செய்யப்பட்டனவா? எத்தகையவர்கள் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் எப்படி மதுரையில் ஆளும் கட்சி மாநில மாநாடு நடத்தியதோ, அந்தநேரத்தில் கைது செய்யப்பட்டது போல, கைது செய்யப்பட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக பாதுகாப்பு நடவடிக்கை அரசாங்கத்தினுடைய கடமையாகும். மிகப் பெருமளவுக்கு கூடுகிறபோது காவல் துறை தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ததா? அண்மையில் சென்னை மாநகரில் பாரதீய ஜனதா கட்சியினுடைய தலைவர் அத்வானி அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெற்றுவிடக் கூடாது என்பதற்காக பெரும் அளவுக்கு காவல்துறை, ஏன் மாநகராட்சியினுடைய காவல் துறை ஆணையாளர், இணை ஆணையாளர் 6 துணை ஆணையாளர்கள் 10,000-க்கும் மேற்பட்ட காவலர்கள் எல்லாம் கலந்து அங்கே அமைதியை நிலை நாட்டினார்கள் என்று நாம் செய்தி பார்த்தோம். கோவையில் காவல் துறை எந்த அளவுக்கு ஈடுபடுத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மூன்றாவதாக தீ பிடித்தவுடன் அங்கிருந்த தொண்டர்கள் தான் தீயை அணைத்தார்கள் என்ற செய்தி வருகிறது. எத்தனை தீயணைப்பு வண்டிகள் அங்கே இருந்தன? அரசின் சார்பிலே தீயணைப்பு வண்டிகள் அந்தப் பணியில் ஈடுபடவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

நான்காவதாக, இத்தகைய சம்பவம் எதிர்பாராமலும் நடந்து இருக்கலாம்; சதிச் செயலினாலும் நடந்து இருக்கலாம். அவற்றை விசாரித்து முளையிலேயே கிள்ளி எரிய வேண்டியது அரசினுடைய கடமை. அவ்வாறு இருக்க அரசியல்வாதிகள் பல்வேறு அறிக்கைகளை விட்டு ஒருபுறம் குழப்புவது இருந்தபோதிலும், ஆட்சியின் சார்பிலே இருக்கின்ற மாநகர காவல்துறை ஆணையாளர் அவர்கள் தானே முன் வந்து அவசரப்பட்டு அதற்கான காரணத்தைக் கற்பிப்பானேன்? ஆகையினால் இவை பற்றியெல்லாம் இன்று நாட்டு மக்களிடத்தில் ஒரு குழப்ப நிலையும் பதட்ட நிலையும் நிலவுவதால் தெளிவான விவரத்தை நன்றாக விசாரித்து அரசின் சார்பில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, சுருக்கமாகச் சொல்ல வேண்டும். எல்லோரும் சொல்லி விட்டார்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவையில் நடைபெற்ற அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டினுடைய பந்தல் எரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி எரிக்கப்பட்டிருக்கிற பந்தல் என்பது ஒரு அரசியல் கட்சி நடத்தக்கூடிய மாநாட்டிற்குப் போடப்பட்டிருக்கிற பந்தலாகும். அரசியல் கட்சிகள் தங்களுடைய கோரிக்கைகளை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்காக இதுபோன்ற மாநாடுகளை தொடர்ந்து நடத்துகின்றன. அப்படி நடத்தப்படுகின்ற அந்த மாநாட்டில் இது போன்ற சம்பவங்கள் நிகழ்வது என்பது ஏதோ இதன் பின்னணியில் உள்ள ஒரு சக்தியை எதிர்க்கட்சிகளுடைய நடவடிக்கைகளை அழிப்பதற்காக இருக்கக்கூடிய சக்தியாக நாங்கள் கருதுகிறோம். எனவே, அப்படிப்பட்ட ஒரு தீய சக்தியை இதுவரையில் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதில் அரசு முயற்சி எடுக்கவில்லை என்பது தான் வருந்தத்தக்கது. இதற்கு ஏதோ வழக்கு பதிவுசெய்தோம் என்பதல்ல-விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கப்பட வேண்டும். எனக்கு முன்னால் பேசிய திரு. பண்ருட்டியார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்படி ஒரு பெரிய பிரம்மாண்டமான, ஒரு இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெறக்கூடிய ஒரு மாநாட்டுக்கு சேதம் விளைவிக்கக்கூடிய, பின் பகுதியில் உள்ள அந்த சக்தியை அரசு அறிந்து முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தொடர்ந்து பல இயக்கங்கள் நடை

1993 மார்ச் 30] [திரு. வே. தம்புசாமி]

பெறுகிறபோது முன்னெச்சரிக்கையாக பலர் கைது செய்யப்படுகிறார்கள். எதிர்க்கட்சிகள் கோரிக்கைகளை வைக்கிறபோது அல்லது ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகிறபோது அரசு முன்னெச்சரிக்கையாக கைது செய்கிறது. ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு மட்டும் அரசு முன்னெச்சரிக்கையாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி பந்தல் எரிந்த பின்னால் கூட இதுவரையில் அந்த கொளுத்தியவர்களை கண்டு பிடிப்பதில் அல்லது அப்படிப்பட்ட தீய சக்திகளை கைது செய்வதில் இதுவரையில் அரசு எந்தவிதமான முன்முயற்சியும் எடுக்காமல் கவனக்குறைவாக இருந்திருக்கிறது என்பது தான். ஆகவே, விரைவான ஒரு நடவடிக்கை எடுப்பதன்மூலம் அவர்கள் கைது செய்யப்பட வேண்டும். விரைவான நீதி விசாரணை நடத்தி, இதற்கு யார் அடிப்படை காரணம் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, உங்கள் கோரிக்கையை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். எல்லோரும் சொல்லிவிட்டார்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-ம் தேதி கோவை மாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துகிறபோது மாலை 3.00 மணியளவில் அந்த பந்தல் எரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 25 ஏக்கரில் போடப்பட்டிருக்கிற அந்தப் பந்தல், ஐந்து லட்சம் மக்கள் அந்த மாநாட்டில் பார்வையாளர்களாக அமரக்கூடிய அந்தப் பந்தல் முழுமையாக எரிந்து நாசமாயிருக்கிறது. சமீபத்தில் நான் பத்திரிகை செய்தி ஒன்றைப் பார்த்தபோது, பம்பாயில் நடந்திருக்கிற குண்டு வெடிப்புகளுக்கு பின்னால் தமிழகத்தில் காவல் துறையினருடைய பந்தோபஸ்துகள் முதலமைச்சரின் உத்தரவின் பேரில், அரசு அலுவலகங்கள், மற்ற பொதுமக்கள் நெருக்கமாக இருக்கிற பகுதிகளுக்கு பாதுகாப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்ற அறிவிப்பு எல்லாம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து பத்திரிகையில் செய்திகள் வந்தன. ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இந்த நாட்டில் ஜனநாயகபூர்வமாக ஒரு மாநாடு நடத்தி, கோரிக்கை வைப்பது என்பது வழக்கமாக இருந்து வருகிறது. இது வெள்ளையர் காலத்திலிருந்து இருப்பது. ஐந்து லட்சம் மக்கள் கூடுகிற அந்த மாபெரும் பந்தலில் இருந்த காவல் துறையினுடைய பந்தோபஸ்து என்பது குறைவு. இரண்டாவது இதுபோன்ற மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்துகிறபோது தொடர்ந்து சமூக விரோதிகள் பின் தொடர்வதும், அதன்மூலமாக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதும், கடைகளை சூறையாடுவதும், பொருள்களை

அள்ளிச் செல்வதும் தொடர்ந்து தமிழகத்தில் நடைபெறுகிற சம்பவங்களாக மாறி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் ஏற்கெனவே ஒரு மதவாத சக்தி அந்த கோயம்புத்தூரில் மாநாட்டை, பேரணியை நடத்தி இருக்கிறார்கள். அப்படி நடத்திய பின்னால் சில சலசலப்புகளும், சில அரசியல் சண்டைகளும் தொடர்ந்து இருந்திருக்கிறது. இப்படியெல்லாம் ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியிருக்கிற அந்த மாநாட்டுக்கு ஏன் முன்னெச்சரிக்கையாக காவல் துறை பந்தோபஸ்து கொடுக்க நம்முடைய அரசு தவறி இருக்கிறது ?

முற்பகல் 11.40

அதே நேரத்தில், அந்த பந்தல் எரிந்த பின்னாலும்கூட, தீயணைப்பு நிலையங்களுடைய வண்டிகள் துரிதமாகப் போய், அந்தத் தீயை அணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வில்லை. அதற்கு மாறாக, காவல்துறையில் இருக்கக்கூடிய பொறுப்பானவர்கள், அந்த மாநகரத்திலே உள்ள அதிகாரிகள் என்ன என்று கண்டு அறியாமல், விசாரணை நடத்தாமல், அது மின்சாரக் கோளாறினால் எரிந்து இருக்கிறது என்று தானாகவே அறிக்கை கொடுக்கிறார்கள் என்று சொன்னால் ஒரு அரசியல் கட்சி போன்று அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று மின்சார வாரியத்தினுடைய அதிகாரிகள் அங்கே மின் இணைப்பே கொடுக்கவில்லை என்று ஒரு தவறான தகவலை....... (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கிடு).

திரு. வ. சத்தியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். திரு. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை அதிகாரிகள் என்று சொன்னால், அவர்கள்தான் புலன் ஆய்வு செய்கின்ற அதிகாரிகள், தல அதிகாரிகள், அவர்கள் வழக்கு பதிவு செய்து, விசாரணை செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அறிக்கை கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அதற்குக் களங்கம் கண்டு, உள்நோக்கம் கண்டு, இங்கே அவர்களை அரசியல்வாதிகள் என்று பேசுவது இந்தச் சபை மரபுக்கு ஏற்றதல்ல. அந்த வழக்கு புலன் விசாரணையில் இருக்கும்போது, வழக்குக்கு உள்ளே சென்று, வழக்கினுடைய புலன் விசாரணையை திசைதிருப்புகின்ற வகையில், அந்தக் கருத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்தக் கருத்துக்களைச் சொல்லக்கூடாது. ஏற்கனவே புலன் விசாரணையில் இருக்கிறது. அதனுடைய விசாரணையை திசை திருப்புகின்ற

1993 மார்ச் 30] [திரு. வ. சத்தியமூர்த்தி]

வகையில், இங்கே கருத்துக்கள் சொல்லப்படும்போது, நீங்கள் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழனிசாமி, நீங்கள், தீ விபத்தைப் பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிவதற்காகத்தான் இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. விதி 55-ன் கீழ் இதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டு, அரசு வைக்கிற அறிக்கையின் மீது ஏதேனும் விளக்கம் கேட்கிற உரிமையைப் பயன்படுத்தி அதைக் கேட்கலாம். இந்த மாதிரி விரிவாகப் பேசிக் கொண்டு இருக்கக் கூடாது. வழக்குக்கு உள்ளே போய்ப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு). இதை விவாதத்திற்கே எடுக்கவில்லை. (குறுக்கீடு). ஜீரோ ஹவரிலே ஸ்பெசல் மென்சனாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். நீங்கள் எழுதிக் கொடுத்ததைப் பாருங்கள். நீங்கள் எழுதிக் கொடுத்ததே, இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று தான் எழுதிக் கொடுத்தீர்கள். (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு விசாரணைக் கமிஷனும் அமைக்கப்படவில்லை. அந்தச் சம்பவங்கள் நடந்தவுடனே, இப்படி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். ஒரு சம்பவம் நடந்த பின்னாலே, உயர்மட்ட காவல்துறை அதிகாரிகள் அந்த இடத்திற்குச் செல்லவில்லை. யாரும் போகவில்லை. தீயணைப்பு வண்டிகள் கூட போகவில்லை. ஆனால், உடனடியாக பத்திரிகை நிருபர்களை அழைத்து, இப்படிப்பட்ட ஸ்டேட்மெண்டை மாநகரக் காவல் துறை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே கூட அனைத்து அரசியல் கட்சிகளும் அதற்கு ஒரு விசாரணை கமிஷன் அமைக்கவேண்டும். விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, எந்த ஒரு அரசியல் கட்சியானாலும் சரி. ஆளும் கட்சி எதிர்க் கட்சியாவதும் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியாக வருவதும் இந்த நாட்டில் சகஜம். ஜனநாயக பூர்வமாக அரசியல் கட்சிகள் வைத்து இருப்பவர்கள், பொதுமக்களுடைய நலன் கருதி, இதுபோன்ற இயக்கங்களை நடத்துகிறபோது, இப்படிப்பட்ட சமூக விரோதிகள் இதுபோன்று செய்தால் நீங்கள் சொல்லக்கூடிய அமைதிப் பூங்காவாக தமிழகம் இருக்காது. அது ஒரு அலங்கோலமான நிலையை உண்டாக்கும். இந்த நாட்டில் உள்ள அமைதியை சீர்குலைக்கிற சக்தியாக அது தலை தூக்கக்கூடிய அளவுக்கு வரும். எனவே, இதில் உடனடியாக அரசு கவனம் செலுத்த

வேண்டும். இதற்கு உரிய விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு. உங்களுடைய கோரிக்கையை மட்டும் வைத்து முடிக்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடுநிலையோடு செயல்பட வேண்டியவர்கள். அரசு அதிகாரிகள் நடுநிலையோடு செயல்பட வேண்டியவர்கள். எதிர்க்கட்சியின் சார்பிலே நடத்தப்படுகிற மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றிற்குப் போதுமான அளவிற்கு சமீப காலங்களில் காவல்துறையினர் பந்தோபஸ்துக்கு வருவதில்லை.

கோவையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நடைபெற்ற மாநாட்டில், ஒரு பெரிய மாநாடு என்கிற போது—போதுமான அளவிற்கு காவல்துறையினர் முன்கூட்டியே அங்கு நிறுத்தப்பட்டு இருந்து, அதுவும் ஏறக்குறைய 20, 25 ஏக்கர் பரப்பளவிலே பெரிய பந்தல் என்கிறபோது, தீயணைப்பு வண்டிகளும் அங்கே நிறுத்தப்பட்டிருந்து, சட்டம் ஒழுங்கை காக்கிற நடுநிலைமையான தன்மையோடு ஏற்கனவே அங்கு நடவடிக்கை எடுத்திருந்தால், இது போன்ற அசம்பாவிதங்களை நிச்சயமாகத் தவிர்த்திருக்க முடியும். எனவே, அந்த மாநாட்டுப் பந்தல் கொளுத்தப்பட்டதும், அதனால் பல இலட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதும், மிகவும் கண்டனத்திற்குரிய காரியமாகும். இந்தச் செயலுக்குப் பின்னாலே, அந்த மாநாட்டிலே ஒன்றிரண்டு பேரைப் பிடித்து அவர்களே கொடுத்ததைத் தவிர, அந்த அசம்பாவிதத்திலே சம்பந்தப்பட்ட சமூக விரோதிகள் அல்லது அதிலே ஈடுபட்ட குற்றவாளிகள் எத்தனை பேர்கள் அரசாலே கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் அரசின் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே, மட்டுமல்ல, பல இடங்களிலே எதிர்க்கட்சிகள் கூட்டம் நடக்கிறபோது, பொதுக்கூட்டங்களில் கூட, கலவரம் நடக்கிறது. நான் கலந்துகொண்ட ராஜபாளையம், தூத்துக்குடி போன்ற இடங்களில் கூட....(குறுக்கீடு)

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா இடங்களிலும் நடந்தது என்று சொல்ல ஆரம்பித்தால், அதற்கெல்லாம் இப்போது உங்களுக்கு விளக்கம் நேரடியாகச்

1993 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

சொல்ல முடியாது. எனவே அது வேண்டாம். நீங்கள் இந்தப் பிரச்சினையில் ஒரு கோரிக்கை எழுப்பியிருக்கிறீர்கள். அதைப்பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொல்வதற்குக் காரணம், இது போன்ற ஒரு சமூக விரோதப் போக்கு வளர்ந்து வருகிறது. அதை அரசாங்கம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். தடுக்க முயற்சிக்க வேண்டுமென் பதற்காகச் சொல்கிறேன். ராஜபாளையம் தூத்துக்குடியிலே மின்சாரம் தடைபட்டு....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதற்கு என்ன காரணம் என்பதெல்லாம் சொன்னால், அதற்கு விளக்கங்கள் சொல்ல குறிஞ்சி தங்கவேல் வந்திருக்கிறார். நீங்கள் இத்தோடு முடித்துக் கொள்ளலாம். நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று. அதற்கு இப்போது உங்களுக்கு விளக்கம் தரப்படும். திரு. சிங்கை கோவிந்தராசு. திரு. திருநாவுக்கரசு முடித்துக் கொண்டார். உட்காருங்கள் போதும். உங்களுடைய உணர்வுகளை சொல்லிவிட்டீர்கள். திரு. சிங்கை கோவிந்தராசு பேசட்டும். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நடைபெற்றது என்பதைக் கண்டறிய இது போன்ற அசம்பாவிதங்கள் இனிமேல் நடைபெறாமல் இருக்க உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஒரு உயர் மட்ட நீதி விசாரணை நடத்தி, அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-3-1993 ஆம் தேதி கோவையிலே நடைபெற்ற தி. மு. க. மாநாட்டிலே பந்தல் தீப்பற்றி எரிந்தது என்று சொல்லி, செய்தி பரவியதற்குப் பின்னாலே, அந்த செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்த, அந்த தி. மு. க. பந்தலிலே பணியாற்றிக் கொண்டிருந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் சுமார் 5,000 பேர் இருக்குமென்று கருதுகிறேன். அவர்கள் அந்தப் பந்தலை விட்டு வெளியேறி வந்து, பந்தலுக்கு அருகாமையிலே இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா

[திரு சிங்கை கோவிந்தராசு] [1993 மார்ச் 30

திராவிட முன்னேற்றக் கழக அலுவலகங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடிக் கம்பங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய படம், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படம், தந்தை பெரியார் அவர்களுடைய படம், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம் ஆகிய படங்களை எல்லாம் அன்று மாலை உடைத்து எறிந்ததற்குப் பின்னாலே மறுநாள் ஊர்வலம் நடைபெறு கிறது. அந்த ஊர்வலம்...... (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். அவர் பேசு வதை நீங்கள் முழுமையாகக் கேட்கவேண்டும். அவர் தெரிவித்திருப்பதற்கு எல்லாம் என்னிடத்திலே புகைப்படம் முதலான ஆதாரங்களைக் கொடுத்துவிட்டு அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் சொன்ன ஒவ்வொன்றுக்கும் என் னிடத்திலே புகைப்படம் கொடுத்திருக்கிறார். எனவே நான் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) உட்கா ருங்கள். நீங்கள் சொன்னதற்கு எல்லாம் கூட ஆதாரம் கொடுக்காமலேயேதான் சொன்னீர்கள். அதையும் நான் அனுமதித்தேன். திரு. சிங்கை கோவிந்தராசு அவர்கள் இப்போது சொல்கின்ற ஒவ்வொன்றுக்கும் என்னிடத்திலே புகைப்படங்கள், ஆதாரங்கள் என்ற வகையிலே கொடுத்து விட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங் கள். இது முறையல்ல. இதிலே நீங்கள் பேசக்கூடாது. அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாநாட்டுச் சம்பவம் நடை பெறுகின்ற தொகுதியைச் சார்ந்தவன் மட்டுமல்ல. அந்த மாநாட்டுப் பந்தலுக்கும் நான் குடியிருக்கின்ற இடத்திற்கும் 2 கிலோமீட்டர் தொலைவு தான் இருக்கும். அந்த நேரத்திலே பொதுமக்கள் பதறியடித்துக்கொண்டு, வரும்போது, பஸ்களை நொறுக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதுவும் தி. மு. க. பேட்ஜைக் குத்திக் கொண்டு பஸ்களை நொறுக்கியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, நான் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு ஏற்கெனவே அனைத்து புகைப்படங்களையும் கொடுத்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தப் பேரவையிலே இருக்கக்கூடிய நமது சட்டமன்ற உறுப்பினர், ஒட்டன்சத்திரத்திலே நடைபெற்ற அந்த வன்முறைச் சம்பவங்களையும் பேரவைத் தலைவ ருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்..

1993 மார்ச் 30] [திரு. சிங்கை கோவிந்தராசு]

முற்பகல் 11.50

ஒட்டன்சத்திரத்திலே, அங்கே இருக்கக்கூடிய தி.மு.க. ஒன்றிய செயலாளர் பரமசிவம் என்று சொல்லப்படுகின்றவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகத்தினுடைய கடைகளை தாக்கி கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய்ச் சேதப்படுத்துகின்ற அளவுக்கு அவர் 50 பேரோடு சேர்ந்து தாக்கிய நிலைமை இரண்டு நாள் ஒட்டன்சத்திரத்திலே மிகப்பெரிய பரபரப்பை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி அந்த சட்டமன்ற உறுப்பினரும், அங்கே இருக்கக் கூடிய காவல்துறையினரும் அமைதிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதே போல இவர்கள் இங்கே பேரறிஞர் அண்ணாவையும், தந்தை பெரியாரையும் சொல்கின்றார்கள். அந்த பேரறிஞர் அண்ணாவுடைய திருவுருவப் படத்தையும், தந்தை பெரியாருடைய திருவுருவப் படத்தையும், புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆர். அவர்களுடைய திருவுருவப் படத்தையும், எங்களுடைய குடும்ப தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருவுருவப் படத்தையும் அடித்து நொறுக்கிய அனைத்து புகைப்படத்தையும் இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. கிட்டத்தட்ட 5 லட்சம் ரூபாய் அளவிலே பொருட் சேதம் ஏற்படுத்தக்கூடிய அந்தச் சூழ்நிலை எப்படி உருவானது என்பதை இந்த மாமன்றம் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காத்தான் இவற்றை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஊர்வலம் புறப்பட்டு வருகிறது. 3 யானைகள் முன்வர அதற்கு முன்னாலே சுமார் 200 அடி தூரத்திற்கு மோட்டார் சைக்கிள்கள் 50 வருகின்றன. அந்த ஊர்வலத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் தொண்டர் படை என்று சொல்லி 50 பேர் அந்த மோட்டார் சைக்கிள்களிலே வருபவர்கள் 200 அடி 150 அடி முன்பாக வந்து அங்கே வழியிலே இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புகளைச் சேர்ந்த கல்வெட்டுக்களை உடைக்கிறார்கள். மிகப்பெரிய குண்டாந்தடிகளையும், அறுவாள்களையும், குத்தீட்டிகளையும் கொண்டு வருகிறார்கள். காவல் துறையினர் அதைத் தடுக்கின்ற நேரத்திலே அவர்களைத் தள்ளிவிட்டு உடைத்த சம்பவங்களை கோவை மக்கள் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அவர்கள்....(குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர் எல்லாவற்றையும் என்க்கு எழுத்து மூலமாக எந்தெந்த இடத்தில் என்னென்ன சேதம் ஏற்பட்டது என்கிற விவரத்தையெல்லாம் கொடுத்துவிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

என்னென்ன சேதம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். எனவே உங்கள் பிரச்சினை என்பது வேறு. அவர் அந்த மாநகரத்திலே தி.மு.க. ஊர்வலத்தின்போது நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள், அதன் காரணமாக பாதிப்புக்கு உள்ளான பொதுமக்களுடைய நிறுவனங்களுடைய சேதம் என்ன என்பதையெல்லாம் கொடுத்துவிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை. இல்லை. அவர் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். அவருக்கு அந்த உரிமை உண்டு. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேசுகின்றபோது உறுப்பினர்கள் எப்படி அமைதியாக இருந்தார்கள். (குறுக்கீடு)

திரு. சிங்கை கோவிந்தராசு: இவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஓட்டி வந்த வாகனங்களுடைய எண் உட்பட உங்களிடத்திலே சமர்ப்பித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: அங்கே 50 மோட்டார் சைக்கிள்கள் வந்தபோது ஒவ்வொரு இடத்திலேயும் இறங்குகிறார்கள். கயிற்றைப் போட்டு, அந்தக் கொடிக் கம்பங்களிலே போட்டு இழுத்து உடைக்கிறார்கள். பொது மக்கள், அந்த இடத்திலே நிற்பவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றபோது அவர்களையும் தாக்குகிறார்கள். காவல் துறையினரையும் தாக்குகிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடிக் கம்பங்களைச் சாய்த்ததோடும், அலுவலகங்களைத் தாக்கியதோடும், தீ வைத்ததோடும் மட்டும் நிற்காமல் அங்கே போடப்பட்ட கோஷங்கள் இந்த நாட்டினுடைய ஒரு முதலமைச்சரைப் பற்றி மிகத் தரக்குறைவான முறையிலே கோஷங்கள் எழுப்பியபோது அங்கேயிருக்கக்கூடிய தாய்மார்கள் வடித்த கண்ணீரை தமிழகம் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தத் தகவலைச் சொல்கின்றேன். அந்த மோட்டார் வாகனங்களுடைய எண்களை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், அந்த மோட்டார் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்று சொல்லப்படுகின்ற இளைஞர் அணி பொறுப்பிலே இருப்பவர். சித்தாமுதூரைச் சேர்ந்தவர். சேதுபதி என்பவர் ஈ.பி.யிலே வேலை செய்துக் கொண்டிருக்கிறார். தி.மு.கவினுடைய வட்டப் பிரதிநிதியாகப் பணியாற்றுகின்றார். அவர்கள் இருவரும்தான் அந்த தொண்டர் படையினை தலைமைத் தாங்கி அழைத்து வந்து அங்கே இருக்கக் கூடிய மன்றங்களை எல்லாம் அடித்து நொறுக்கினார்கள். கிட்டத்தட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 50 கொடிக் கம்பங்கள், 10 கல்வெட்டுக்கள், ஒரு மன்றத்தினை எரித்திருக்கிறார்கள். அதுபோக 4 அலுவலகங்களை அடித்துச்

1993 மார்ச் 30] [திரு. சிங்கை கோவிந்தராசு]

சூறையாடி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்திலே எந்தக் கட்சியினராலும் உருவாக்கப்படக் கூடாது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கனவே இந்த மன்றத்திலே இது குறித்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பொதுச் சொத்துக்களையும், பிற கட்சிகளுடைய சொத்துக்களையும், பொது மக்களுடைய சொத்துக்களையும், அரசுச் சொத்துக்களையும் எந்தக் கட்சி போராட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் என்ற பெயரிலே தாக்கி அழிக்கின்ற நேரத்திலே இந்த சேதத்தை, இந்த நஷ்டயீட்டை அந்தக் கட்சித் தலைவர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்டத்தை இந்த மாமன்றத்தில் எங்கள் குடும்பத் தெய்வம், டாக்டர் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே கோவை மாநகரில் கிட்டத் தட்ட பாதிக்கப்பட்ட 5 லட்சம் ரூபாயும், அதேபோல் ஒட்டன்சத்திரத்திலே இருக்ககூடிய நமது கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய உறவினரின் கடையை தாக்கியதில் ஏற்பட்ட 2 1/2 லட்சம் ரூபாய் நஷ்டயீடும் சேர்த்து 7 1/2 லட்சம் ரூபாய் நஷ்டயீட்டை தி. மு. க. தலைவர் கருணாநிதியிடமிருந்து இந்த மன்றம் பெற்றுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் (குறுக்கீடு) வைத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்கள் தங்கத் தலைவியே, தங்கள் சமுதாயத்தில் தான் நாங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றோம். (குறுக்கீடு)

முற்பகல் 11.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே நிறைவேற்றப் பட்ட சட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லுகிறார், திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: தலைவர் அவர்களே, நாங்கள் புத்தன், ஏசு காந்தி போன்றவர்களைப் பார்த்தது இல்லை. இவர்கள் உருவத்தினை உங்கள் வடிவத்தில் பார்க்கின்றோம். புரட்சித் தலைவியே உங்கள் சுண்டு விரல் அசைத்தால் தமிழகத்தையே பிரளயம் ஆக்குகின்ற சக்தி வாய்ந்த கோடானகோடி தொண்டர்களை வைத்து இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உங்களுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு கோவை மாவட்டத்தில் வாழும் நமது இயக்கத்தினரும், தொண்டர்களும், பொது மக்களும் எரி மலையாய் குமிழ்ந்து, கண்ணீர் மல்க தங்கள் ஆணையை எதிர் பார்த்துக்கொண்டிருக் கிறார்கள். உடைக்கப்பட்ட கழகத்தினுடைய பாசறைகள்

(குறுக்கீடு) நீங்கள் கற்றுத் தருகின்ற நல்லவை களை பயிலுகின்ற தேவாலயங்களாக நாங்கள் வணங்கி வருகிறோம். (குறுக்கீடு) இதுபோன்ற மாநாடு என்ற பெயராலே வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு பாசறைகள் அடித்து நொறுக்கப்பட்டன. வான் நோக்கிப் பறந்த வள்ளல் தந்த அண்ணா கொடிகளை உடைத்த நிலையை இந்த சட்டமன்றத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட் டிருக்கின்றேன். (குறுக்கீடு) அன்புத் தாயே எங்கள் உள்ளம் எல்லாம் பதறி (குறுக்கீடு) தந்தைப் பெரியாருடைய படங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்களுடைய படங்கள், இந்திய திருநாட்டினுடைய தேசியத் தலைவி யாகிய தங்களுடைய திருவுருவப் படங்கள் ஆகியவற்றை உடைத்து எறிந்தபோது எங்கள் உள்ளம் எல்லாம் சுக்கு நூறாக உடைந்தது. எங்களுடைய உணர்ச்சி எரி பிழம் பாய் குமறியது. எங்களுடைய உணர்ச்சிகளை தாங்கள் கண்ணியம் கட்டுப்பாடு கடமை கட்டுப்பாட்டின் சிறையில் வைத்து விட்டீர்கள். கோவை மாவட்ட மக்கள் உள்ள உணர்வுகளைச் சொல்லுவதா? அல்லது இந்தச் செய்தியை நாளை தமிழக மக்கள் பார்த்தற்குப் பின்னால் ஏற்படுகின்ற உணர்வுகளை தி.மு.கழகத்தினரால் தாங்கிக்கொள்ள முடியுமா? அத்தனை தாய்மார்களின் உள்ள உணர்வு களை இங்கே எந்த வார்த்தையில் சொல்லுவது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. சிங்கை கோவிந்தராசு: அப்படிப்பட்ட கோஷங் களை அப்படிப்பட்ட நிலைமைகளை..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, இது எந்த வகையில் சரியானது? பேரவை விதிகளுக்கு மாறாக அவர் எதையும் தெரிவித்துக்கொண்டு இருக்கவில்லை. அவர் உங் களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவருடைய உணர்வு களைச் சொல்லுகிறார். அவருடைய உணர்வுகளைச் சொல்லுவதை நீங்கள் எப்படித் தடுக்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, தயவுசெய்து உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் எழுந்துகொள்ளுவதைப் போல் இங்குள்ள எல்லா உறுப்பினர்களும் எழ வேண்டி வரும். உட்காருங்கள் அவர் முடிக்கட்டும். நான் அவரை அனுமதித்து இருக்கிறேன். அவர் முடிக்கட்டும். (குறுக்கீடு). திரு. சிங்கை கோவிந்தராசு, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: தலைவர் அவர்களே, அங்கே மாநாடு முடிந்து திரும்பிச் செல்கிறபோது தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தூண்டுதலால் அங்கே இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்

1993 மார்ச் 30] [திரு. சிங்கை கோவிந்தராசு]

சேர்ந்த நடராசன் வீட்டை தாக்கியிருக்கிறார்கள். அதே போல் (குறுக்கீடு) என்னுடைய வீட்டுக்கும் பாதுகாப்பு போடப்படவில்லை தாக்குவதாகத் தகவல் கிடைத்த உடன் காவல் துறையினர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் அனைவருடைய வீடுகளுக்கும் பாதுகாப்புப் போடப்பட்டது. இதற்குக் காரணம் தாக்குவதற்காக வெளியூர்களிலிருந்து வந்தவர்களை ஏவி விட்டது இந்த மாநாட்டினுடைய சதிதிட்டத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை எல்லாம் அடிக்கவேண்டும் நொறுக்கவேண்டும் என்று சொல்லி அங்கே கூட்டமே வரவில்லை. (குறுக்கீடு) இவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் சக்தியை இழந்து விட்டார்கள். மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே மாநாட்டைப் போட்டு அந்த மாநாட்டில் மக்கள் வரவில்லை என்று எரிச்சலை எங்கள் மீது காட்டுவதா? எங்கள் இயக்கத்தின் மீது காட்டுவதா? எங்களுடைய உணர்வுகளை இங்கே சொல்லியாகவேண்டும். கருணாநிதி அவர்களுக்குக் கூட்டம் வரவில்லை என்று சொன்னதனால் அதற்கு (குறுக்கீடு) அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கொடி கம்பங்களையும், அந்த அலுவலகங்களையும் உடைப்பது என்பதுஎன்ன நியாயம்எங்களுடையநீதி தேவதையே, எங்களை வாழ வைக்கின்ற தாயே உங்களுடைய சுண்டு விரலை அசைத்துக் காட்டுங்கள் தமிழகத்திலுள்ள மக்களுடைய உணர்வுகளை இங்கே நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். எங்களைக் காப்பாற்றுங்கள் தாயே நீதி வழங்குங்கள் எங்களுக்கு இந்த மாமன்றம் நீதி தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம். (குறுக்கீடு)

நண்பகல் 12.00

திரு இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டம் வரவில்லை என்று அவர் சொல்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொன்னீர்கள். பல இலட்சம் பேர் என்றீர்கள். அவர் கூட்டம் வரவில்லை என்கிறார். (குறுக்கீடு) அது உங்கள் இரண்டு பேர்களுடைய கருத்து (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறபோது பல இலட்சம் என்கிறீர்கள். அவர் கூட்டம் வரவில்லை என்கிறார். இதற்கு என்ன செய்வது? உட்காருங்கள் (குடுறுக்கீடு) இல்லை., உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஏழாவது மாநில மாநாடு மற்றும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு கோவையில் பிள

மேடு, அண்ணா நகரில் அவிநாசி சாலைக்குத் தென்புறம் தனியாருக்குச் சொந்தமான சுமார் 42 ஏக்கர் நிலத்தில் மார்ச் மாதம் 26,27,28 ஆகிய நாட்களில் நடை பெறுவதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வந்தன. கடந்த 20-3-1993 ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை சுமார் 7.15 மணிக்கு மைதானத்தில் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த ஒரு கடையில் எதிர் பாராதவிதமாக சிறு தீ விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த நேரத்தில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தீயணைப்புத் துறையினர் நடவடிக்கையில் ஈடுபட்டு தீயை அணைத்தனர். தகவல் கிடைத்தவுடன் கோவை மாநகர காவல் துறையினர் அவ்விடத்திற்கு விரைந்து விபத்து குறித்து விசாரணை செய்தனர். விசாரணையில் அது மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்ட விபத்து என்று தெரிய வந்தது. இது சம்பந்தமாக மாநாட்டுக் குழு அமைப் பாளரிடமும் மாநாட்டு மின் இணைப்பு ஒப்பந்த தாரரிடமும் இனிமேல் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட இடமளிக்காமல் கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டது. இது சம்பந்தமாக அவர்கள் எவ்விதப் புகாரும் காவல் துறையினரிடம் கொடுக்கவில்லை. மாநாட்டுக் குழுவினர் பந்தலுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு காவல் துறைக்கு விண்ணப் பித்தனர். அன்றுமுதல் தக்க போலீஸ் பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 25.3.1993 பிற்பகல் 3.30 மணிக்கு மாநாட்டு மைதானத்தில் வடக்குக்கோடி மூலையில் அமைந்திருந்த ஒரு இளநீர் கடையில் எதிர்பாரதவிதமாக தீவ்பத்து ஏற்பட்டது. இதை அங்கு காவலில் இருந்த காவலர்களும் தீயணைப்புப் படையினரும் மாநாட்டுப் பணியில் அமர்ந்தப்பட்ட வேலையாட்களும் பந்தலில் காவலுக்கு இருந்த தி.மு.க. தொண்டர் அணியினரும் பார்த்தவுடன் தீ மேலும் பரவாமல் அணைத்தனர். அந்தச் சமயத்தில் மாநாட்டு பந்தலின் நடுப்பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதையும் காவல் துறையினரும் தீயணைப்புத் துறையினரும், அங்கு பணியில் இருந்த வேலையாட் கள் உதவியுடன் அணைத்து விட்டனர். இந்தத் தீ விபத்தில் மாநாட்டு பந்தலில் சுமார் 60 ஆயிரம் சதுர அடி அளவிலான பந்தல் சேதம் அடைந்தது. இது சம்பந்தமாக தி.மு.க. கோவை மாவட்ட துணைச் செயலாளர் திரு. ஆர். டி. மாரியப் பன் கொடுத்த புகாரின் பேரில் பீளமேடு காவல் நிலையம் குற்ற எண். 318/93இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 436-இன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற் கொள்ளப்பட்டது. விசாரணையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிய வந்துள்ளன.

கடந்த 1-3-1993 அன்று தி.மு.க. கோவை மாவட்டச் செயலாளர் திரு. மு. கண்ணப்பன், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளருக்கு மின் இணைப்பு கோரி ஒரு விண்ணப்பம்

செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் பேரில் 20–3–1993 ஆம் தேதி தி.மு.க. மாநில மாநாட்டு பந்தலுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மாநாட்டு பந்தலின் மின் இணைப்பு வேலைகள் தனிப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. எஸ். எஸ். சண்முகத்திடம் ஒப்படைத்துள்ளனர். மாநாட்டு அமைப்புக் குழுவினர் சார்பில் மின் ஆய்வாளருக்கு மின்சார அமைப்புகளை தணிக்கை செய்து சான்றிதழ் வழங்க வேண்டி விண்ணப்பம் செய்யப்பட்டது. அதன்படி கோவை மின் ஆய்வாளர், அசிஸ்டென்ட் எலக்ட்ரிகல் என்ஜினியர், பி.டபுள்யூ.டி. 22–3–1993, 23–3–1993, 25–3–1993 ஆகிய நாட்களில் தணிக்கை செய்து 11 குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி உள்ளார். அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென அமைப்பாளருக்கும் தெரிவித்துள்ளார். அதன் நகல்கள் மின் இணைப்பு ஒப்பந்ததாரருக்கும் செயற்பொறியாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மின் ஆய்வாளர் குறிப்பிட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமலேயே விட்டுவிடப்பட்டன.

பிற்பகல் 12–05

எனவே, அத்தகைய குறைபாடுகள் காரணமாக மின் கசிவு ஏற்பட்டு தீவிபத்து ஏற்பட்டிருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்று மின் ஆய்வாளர் கருத்து தெரிவித்துள்ளார். இந்தத் தீ விபத்து, பகல் சுமார் 3.30 மணிக்கு ஏற்பட்டபொழுது, காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், தி.மு.க. தொண்டர் படையினர் ஆகியோர் மாநாட்டுப் பந்தலில் காவல் பணியில் இருந்துள்ளனர். மேலும், நூற்றுக் கணக்கான பணியாட்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். மேலும், மாநாட்டுப் பந்தலின் முகப்பு, கம்புகளால் அடைக்கப்பட்டும், சுற்றிலும் மதில் போல் தகரத்தால் அடைக்கப்பட்டும், மேற்குப் பக்கம் மட்டும் உள்ளே சென்று வெளியே வர இருபதடி அகலத்தில் ஒரேயொரு வழி விடப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலைகளை எண்ணிப் பார்க்கும்பொழுது மின் ஆய்வாளரின் கருத்து வலுப்பெறுகிறது.

தீ விபத்து ஏற்பட்ட சிறிது நேரத்திற்குப் பிறகு, தி.மு.க.வினர் ரவி என்ற நபரை, இவர்தான் தீ வைத்திருக்கலாம் என்று காவல் துறையினரிடத்தில் ஒப்படைத்தனர். ஆனால், திரு. ஆர். டி. மாரியப்பன், கோவை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் எழுத்து மூலமாகக் கொடுத்த புகாரில் மேலே சொன்ன ரவியின் பெயரையோ, அடையாளத்தையோ சொல்லவில்லை.

மேலும், ரவியைப் பற்றி மேற்கொண்ட விசாரணையில், அவருக்கு வயது 21 என்பதும், அவர் கோவையைச் சேர்ந்த 59, இராஜிவ் நகர், அம்மன் குளத்தில் வசிக்கும் திரு. மணியின் மகன்

என்பதும், மேலும் அவர் பி.ஜே.பி. கட்சியைச் சார்ந்தவர் என்றும், டிசம்பர் மாதம் ஆறாம் தேதி அயோத்தியில் நடந்த கர சேவைக்குச் சென்று வந்தவர் என்ற விவரமும் தெரிய வந்தது.

25—3—1993 அன்று தி.மு.க. மாநாட்டுப் பந்தலில், மதியம் 3.30 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டபோது இந்த ரவி, திருமதி விஜயா என்பவரது வீட்டில், கதவு எண். 138, அம்மன் குளத்தில் தொலைக்காட்சியில் கிரிக்கெட் மேச் பார்த்துக் கொண்டிருந்தார் என்ற விவரமும், அப்பொழுது அவருடன் விஜயாவின் தங்கை கீதாவும் உடன் இருந்த விவரமும், திரு. சற்குணம் என்ற பாதிரியாரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வந்துள்ளது.

தி.மு.க. மாநாட்டுப் பந்தலை, யுனைட்டெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனியில், பாலிசி எண் 170204/326/11/13 911/92-ல் 20-3-1993 ஆம் தேதி முதல் 2-4-1993 ஆம் தேதி வரைக்கான காலத்திற்கு 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுக்கு இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது.

25-3-1993 அன்று மாலை சுமார் 5-30 மணிக்கு, அவினாசி சாலையில் வ.உ.சி. மைதானத்திற்கு எதிர்ப்புறம் அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவில் தீ விபத்து ஏற்பட்டது. இந்தச் சம்பவம் சம்பந்தமாக திரு. என். எஸ். சந்திரசேகரன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், பந்தயச் சாலை பி—4 காவல் நிலையத்தில், குற்ற எண். 630/93-இல் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 435-இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்கள், அலங்கார வளைவிற்கு அருகில் அடுப்பு வைத்து பசை காய்ச்சி விட்டு, கவனக் குறைவாக விட்டு விட்டதால் அந்த அடுப்பிலிருந்து பறந்த நெருப்புப் பொறிகள் அலங்கார வளைவில் பட்டு தீ பிடித்து விட்டதாகத் தெரிய வந்துள்ளது.

காவல் துறை உதவி ஆணையர் ஒருவர் தலைமையில் ஒரு தனிப்படை அமைக்கப்பட்டு இவ்வழக்குகள் தொடர்பாகத் தீவிரப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தருணத்தில் இம்மாமன்றத்திற்கு, கோவையில் தி.மு.க. வினர் நடத்திய மாநாட்டுப் பேரணியில் நடந்த சில சம்பவங்கள் குறித்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மாநாட்டுப் பந்தலில் தீ விபத்து பற்றியும், தி.மு.க. வினரின் வன்முறைச் செயல்கள் பற்றியும் இங்கே பேசினார்கள். மாநாடு தொடங்கும் முன்னரே அவர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தொடங்கி விட்டனர் என்ற செய்திகள் வந்தன.

993 மார்ச் 30] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஒட்டன்சத்திரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. டி. செல்லசாமிக்குச் சொந்தமான அவரது "செவன் ஸ்டார் ஒயின் ஷாப்பை" ஒட்டன்சத்திரம் தி.மு.க. ஒன்றியச் செயலாளர் திரு. பரமசிவம் ஐம்பது தி.மு.க. வினருடன் சென்று, 25-3-1993 அன்று இரவு பூட்டி வைக்கப்பட்டிருந்த கடையைக் கடப்பாறைகொண்டு உடைத்து, திறந்து, உள்ளேயிருந்த குளிர்சாதனப் பெட்டியை உடைத்து நொறுக்கி வெளியில் தூக்கியெறிந்து, கடையிலிருந்த ஐம்பதாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டும், கடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகளையும் அடித்து நொறுக்கிச் சென்றுள்ளனர்.

பிற்பகல் 12-10

மேலும், 25-3-1993 அன்று சேலம் நகரில் 20 தி.மு.க. தொண்டர்கள் அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றில் ஏறிக் கொண்டு, தடத்தை மாற்றி தங்களை கோவைக்கு மாநாடு நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தியதை, ஓட்டுநர் ஏற்க மறுத்ததால், கீழே இறங்கி பேருந்தின் மீது சரமாரியாகக் கற்களை எறிந்து சேதப்படுத்தியுள்ளனர். 26-3-1993 அன்று நடைபெற்ற தி.மு.க. பேரணியின் முன் 50 மோட்டார் சைக்கிளில் தி.மு.க. வினர் சென்று பேரணி செல்லும் வழியிலிருந்த அ.இ.அ.தி.மு.க. கொடிக் கம்பங்களை வீழ்த்தியுள்ளனர். பாப்பநாய்க்கன் பாளையம் அருகில் செங்காடு பாரதியார் சாலையில் அமைந்துள்ள அ.இ.அ.தி.மு.க. மன்ற அலுவலகத்தை அடித்து, உடைத்து, நொறுக்கி, தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர். அவ்வாறே, பீளமேட்டிலுள்ள அண்ணா தொழிற்சங்கப் பேரவைக் கட்டிடத்தையும் சேதப்படுத்தியுள்ளனர். இதுபோன்று நடைபெற்ற பல வன்முறைச் சம்பவங்களையும் இங்கே எடுத்துக் கூறி, பேரவையின் நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. தி.மு.க. மாநாட்டுப் பந்தல் தீ விபத்துக்குள்ளாகியது என்ற செய்தியை அறிந்தவுடன், அவர்களது வன்முறைச் செயல்கள் மேலும் தலைதூக்கின. பல அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அலுவலகங்களும், பெயர்ப் பலகைகளும், கொடிக் கம்பங்களும் அடித்து உடைக்கப்பட்டன. அவர்களது அத்தனைத் தாக்குதல்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே இலக்காகி இருந்திருக்கிறது.

நடந்த சம்பவங்களை எல்லாம் தொகுத்துப் பார்க்கிற போது, இவை திடீரென்று ஏற்பட்டவை அல்ல; திட்டமிட்ட வன்முறைச் செயல்கள் என்பது தெரிய வருகிறது. இத்தனை அராஜகத்தையும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க தொண்டர்கள் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, அமைதியாக இருந்துள்ளனர். ஒரு இடத்தில்கூட, இருதரப்பினரிடையே மோதல் ஏற்படவில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 மார்ச் 30

தி.மு.க.வினர் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது, அவர்களின் கலாச்சாரம் என்பதை அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 15-9-1991 அன்று சென்னையில் நடத்திய முப்பெரும் விழா பேரணியிலும், மதுரையில் 21-12-1991 மற்றும் 22-12-1991 ஆகிய நாட்களில் நடத்திய பவள விழா பேரணியிலும், சென்னையில் 3-2-1993 மாலை, அண்ணா அறிவாலயத்திலிருந்து தொடங்கி, ஆளுநர் மாளிகை வரை, தடா சட்டத்தைக் கண்டித்து நடத்திய ஊர்வலத்திலும் அவர்கள் நடந்து கொண்ட விதத்திலிருந்தும், கட்டவிழ்த்துவிட்ட வன்முறைச் செயல்களிலிருந்தும் நாட்டு மக்கள் நன்கு அறிவர். தி.மு.க.வினரின் பேரணி, மாநாடு என்றாலே அங்கே வன்முறை தாண்டவமாடும் என்ற நிலைதான் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

கோவையில் நடந்து முடிந்த தி.மு.க மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை, மதுரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மாநாட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அதில் ஐம்பதில் ஒரு பங்குகூட கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், இத்தனை அராஜகச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க மதுரை மாநாட்டிற்கு முன்னதாக ஆளுநரைச் சந்தித்து, அ.தி.மு.க. வினருக்குப் பாது காப்பு வேண்டுமென்று மனு கொடுத்தார்கள். ஆனால், ஒரு சிறு அசம்பாவிதம்கூட நடக்காமல், அமைதியாகவும், சிறப்பாகவும், கோலாகலமாகவும் மதுரை மாநாடு நடந்து முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் கலாசாரம் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுங்கட்சியினர்மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை, கோவை தி.மு.க. மாநாட்டுப் பந்தல் தீ விபத்துடன் தொடர்புபடுத்தி சில அரசியல் கட்சித் தலைவர்கள் உண்மைக்குப் புறம்பாக, உள் நோக்கத்துடன் அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். இத்தகைய நாச வேலையில் ஈடுபட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவசியம் சிறிதும் இல்லை. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளருமான திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். அதாவது, தி.மு.க. வினரின் கோவை மாநாட்டிற்குக் கூட்டம் கூடாத நிலையில், அந்தத் தோல்வியை மறைக்கவும், விளம்பரத்திற்காகவும், மக்கள் கவனத்தை திசை திருப்பவும், அவர்களாகவே செய்த காரியமாகக்கூட இருக்கலாம் என்று நாங்களும் குற்றம் சாட்டலாம் என்று தெரிவித்து, ஆனால் நாங்கள் அப்படி கூற முன்வரவில்லை என்றும் கூறியுள்ளார்.

1993 மார்ச் 30] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தி.மு.க. வின் கோவை மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட தீ விபத்திற்காக நான் வருந்துகிறேன்.

பிற்பகல் 12-15

ஆனால் அச்சம்பவத்தை அரசியலாக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்த முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நியதிக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. உண்மையிலேயே அச்சம்பவம் விபத்து அல்ல; விஷமச் செயல் என்று விசாரணையில் தெரிய வந்தால் அந்த நாச வேலைக்குப் பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த அரசு தயங்காது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த வழக்கு கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-க்கு மாற்றப்படு கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-ஆல் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் ஏற்பட்ட தீ விபத்தை மட்டுமல்ல, பேரணியின்போது நடை பெற்ற வன்முறைச் சம்பவங்கள், பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான சொத்துக் களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்த நாச வேலைகள் இத்தனையும் விசாரிக்கப் படும். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனையும் வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,....

(ஆ) கள்ளக்குறிச்சியில் டாக்டர் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை இந்த நேரத்தில் விவாதம் ஆக்க முடியாது. உட்காருங்கள். கள்ளக்குறிச்சி தாலுக்கா அலுவலகம் முன்னர் அம்பேத்கார் சிலை ஒன்று உடைக்கப்பட் டதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று பல்வேறு மாண்பு மிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் (குறுக்கீடு). அதிலே பல உறுப்பினர்கள் இங்கே இல்லை. இருக்கிற உறுப்பினர்கள் திரு. செ. கு. தமிழரசன், திரு. டி. எம். ரங்கராஜன், திரு. ஜெயக்குமார் ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன். திரு. செ. கு. தமிழரசன்.

1993 மார்ச் 30] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தி.மு.க. வின் கோவை மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட தீ விபத்திற்காக நான் வருந்துகிறேன்.

பிற்பகல் 12-15

ஆனால் அச்சம்பவத்தை அரசியலாக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்த முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நியதிக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. உண்மையிலேயே அச்சம்பவம் விபத்து அல்ல; விஷமச் செயல் என்று விசாரணையில் தெரிய வந்தால் அந்த நாச வேலைக்குப் பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த அரசு தயங்காது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த வழக்கு கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-க்கு மாற்றப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-ஆல் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் ஏற்பட்ட தீ விபத்தை மட்டுமல்ல, பேரணியின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள், பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்த நாச வேலைகள் இத்தனையும் விசாரிக்கப்படும். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . .

(ஆ) கள்ளக்குறிச்சியில் டாக்டர் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை இந்த நேரத்தில் விவாதம் ஆக்க முடியாது. உட்காருங்கள். கள்ளக்குறிச்சி தாலூக்கா அலுவலகம் முன்னர் அம்பேத்கார் சிலை ஒன்று உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் (குறுக்கீடு). அதிலே பல உறுப்பினர்கள் இங்கே இல்லை. இருக்கிற உறுப்பினர்கள் திரு. செ. கு. தமிழரசன், திரு. டி. எம். ரங்கராஜன், திரு. ஜெயக்குமார் ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்பு அளித்து, பதிலும் முழுமையாக வழங்கியிருக்கிறபோது வேண்டாம் (குறுக்கீடு) இந்த ஸ்பெஷல் மென்ஷனில் கிடையாது. (குறுக்கீடு) ஸ்பெஷல் மென்ஷனில் திரும்பத் திரும்பப் பேச முடியாது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தந்த வாய்ப்புதான் (குறுக்கீடு) வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசிக் கொண்டே இருந்தால் எப்படி? நான் திரு. தமிழரசனை அழைத்து விட்டேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இன்னொரு உறுப்பினரை நான் கூப்பிட்ட பிறகு நீங்கள் நின்று கொண்டிருப்பது சரியல்ல.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது இந்தியாவின் அரசியல் சட்டத்தை வடித்துக் கொடுத்தவர் பாபா சாஹேப் அம்பேத்கார் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, தயவு செய்து வேண்டாம். நான் அனுமதி அளிக்காமல், உங்களை உட்காருங்கள் என்று சொன்னதற்குப் பிறகும் உங்களுடைய இஷ்டத்திற்கு எழுந்து நின்று கொண்டு பேசுவது முறையல்ல. அது மற்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளைப் பாதிக்குமானால் அவையைச் சுமுகமாக நடத்துவதற்கு வாய்ப்பாக அமையாது. (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். அதற்குப் பதிலும் வந்து விட்டது. அந்த அளவோடு இந்தப் பிரச்சினை முடிகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். அந்த மாதிரி முறையை வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் இதிலே விளக்கம் கேட்க வேண்டுமென்றால் விதி 55-இல் கொடுத்து இருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள். நீங்கள்தானே பதில் கேட்டீர்கள். பதில் கொடுத்து விட்டார்கள். (குறுக்கீடு) உங்களை யாரும் பதில் கேட்கவில்லையே. உட்காருங்கள். உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அவையை நடத்த வேண்டும். மணி 12.15 ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. கா.ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விதியைச் சொல்கிறார். நீங்களும் ஏதாவது விதி இருந்தால் சொல்லுங்கள்.

திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிற போது இன்னொரு உறுப்பினர் அவருடைய பேச்சுக்கு இடையூ சலாகவோ அல்லது அதைத் தடுக்கின்ற முறையிலோ நடந்து கொண்டால் அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று விதி 86 மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே இந்த நிலைமையைப் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைத்தான் சொன் னேன். இன்னொரு உறுப்பினரை அழைத்து அவர் பேசிக் கொண்டிருக்கிறபோது நீங்கள் நின்று கொண்டு பேசுவது, அவரைப் பேசவிடாமல் தடுக்கின்றீர்கள்; அவர் உரிமையைத் தடுக்கின்றீர்கள் என்று வரும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காருங்கள். திரு. செ. கு. தமிழரசன் பேசுங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(அ) கோவையில் தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்து போனது குறித்தும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில் தி.மு.க. கட்சித் தலைவரும், இங்கே அவைக்குள் தி.மு.க. கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரும் வேண்டுமென்றே, தெரிந்தே தவறான தகவல்களைக் கொடுத்து மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தி.மு.க. தலைவர் வெளியிட்ட அறிக்கையிலும் (குறுக்கீடு) இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகின்றபோதும் தி.மு.க. மாநாட்டு பந்தலுக்கு மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை இந்த தீ விபத்து நடந்த நேரத்தில் என்று சொன்னார்கள், ஆனால் இப்பொழுது நான் இங்கே தெரிவித்த தகவலின்படி 1—3—1993–1 ஆம் தேதியே மின் இணைப்பு வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்து, 20 ஆம் தேதியே அந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்தது மட்டுமல்லாமல், 3 நாட்கள் 22, 23, 25 ஆகிய நாட்களில் Assistant Electrical Inspector. P.W.D. அங்கே போய், அங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து, அவர்கள் தணிக்கை செய்து 11 குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் குறைபாடுகளை சரி செய்யவில்லையென்றால் மின் கசிவு ஏற்படும், விபத்து ஏற் படும், சரி செய்யுங்கள் என்று சொல்லியும்கூட அவர்கள் அதை நிவர்த்தி செய்யாமல் விட்டுவிட்டனர். இந்தக் கடிதங்களின் நகல்கள் ஒப்பந்தக்காரருக்கும், செயற்பொறியாளருக்கும் அனுப் பப்பட்டுள்ளது. எனவே, தெரிந்தே தவறான தகவலை கொடுத் துக்கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன சொல்லப் போகிறீர்கள் ?

திரு. இளம்வழுதி : முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், ஆனால் அன்றையதினம் மின்சார சப்பளையே இல்லையென்று அந்த மின் துறை அதிகாரிதான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் முதல் அமைச்சர் அவர்கள் மறுத்தார். உட்காருங்கள் (குறுக்கீடு) அதைத் தான் முதல் அமைச்சர் மறுத்தார். அப்படித்தவறான தகவலைச் சொல்லியிருக்கிறீர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையை அமைதியான முறையில் நடத்துவதற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தருகிறார்களா, விதிமுறைகளுக்கு ஏற்ப இந்தச் சபையை நடத்த வேண்டுமென்று விரும்புகிறாரா? அந்த விதிமுறையை மீறி உறுப்பினர் வேண்டுமென்றே இந்தச் சபையில் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருப்பது சரிதானா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஸ்பெஷல் மென்ஷனில் மேற்கொண்டு விவாதம் வேண்டாம். இதை நீங்கள் தெரிவித்து விளக்கத்தை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் மேற்கொண்டு வேறு ஒரு சந்தர்ப்பத்திலே, வேறு சில விளக்கங்கள் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்) இப்போது வேண்டாம் (குறுக்கீடுகள்). நீங்கள் சொல்வதை மறுக்கக் கூடாதா? (குறுக்கீடு) பரிதி நீங்கள் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள், மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை என்று, அதை மறுக்கக் கூடாதா? அதை முதல் அமைச்சர் ஆதாரப் பூர்வமாக இந்தத் தேதியில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இந்தத் தேதியிலிருந்து மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அவர்களுக்குத் தெரிவித்த சில குறைபாடுகளினால் மின் கசிவு ஏற்படும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு). அவர்கள் பதிலிலே சொல்லாமல் என்ன செய்வது, நீங்கள் சொன்னால் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமா? உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், இதிலே வேண்டாம், (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: உங்கள் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளராக இருக்கிற..(குறுக்கீடு)

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜு, நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு). பரிதி, நீங்கள் உட்காரவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். இன்னொரு உறுப்பினரைத் தடுக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு கொடுத்து இருக்கிறேன் (குறுக்கீடு) உட்காருங்கள். நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி இப்பொழுது பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) ராஜுவும் உட்கார வேண்டும். இளம்வழுதியும் உட்கார வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வினியோகம் செய்யப்பட்டதை பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மகாநாட்டுக்கு மின்சார, இணைப்பு வேண்டுமென்று 1-3-1993 அன்றே கேட்டிருக்கிறார்கள். 20 ஆம் தேதியே மின்சார இணைப்பு தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் (குறுக்கீடு) பரிதி இது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு அதிகாரிகள் போய் அங்கே ஆராய்ந்து பார்த்து, இன்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பொறுப்பான மின்சாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் இந்த அறிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள் யாரேனும் ஒரு பொறுப்பற்ற அதிகாரி அறிக்கை விட்டிருப்பாரேயானால், அவர் மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன். (குறுக்கீடு) அப்படி அறிக்கை வெளியிட்டவரே தி.மு. கழகத்தை சேர்ந்தவராக இருக்கக் கூடும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே வேண்டாம். அவருக்குச் சொன்னதுதான். இதிலே வேண்டாம். தமிழரசன் பேசட்டும். தமிழரசன் முடியுங்கள். இதிலே வேண்டாம். பழனிசாமி. இது, ஸ்பெஷல் மென்ஷன். அவரை உட்காரச் சொல்லுங்கள். பதில் வந்த பிறகு இதிலே வேண்டாம். தமிழரசன் பேசட்டும். (குறுக்கீடுகள்) ஸ்பெஷல் மென்ஷனிலே இது வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தமிழரசன்.

பிற்பகல் 12-25

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இளம்வழுதி இது சரியில்லை. நான் திரு. தமிழரசனைப் பேச அழைத்துக்கொண்டிருக்கிறேன். திரு. பழனிசாமியைக் கூட உட்காரச் சொன்னேன். அவரும் உட்கார்ந்து விட்டார். (குறுக்கீடுகள்.) இது சரியில்லை. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் தெரிவிக்க வேண்டிய கருத்தைத் தெரிவித்து விட்டீர்கள். அதற்கு பதிலும் தெரிவித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி வேண்டாம், இதிலே வேண்டாம். (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது ஒழுங்கு முறையைப்பற்றிச் சொல்கிறீர்களா? சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இன்றைக்கு அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் திரு. பழனிசாமி அவர்களை நீங்கள் அனுமதித்து, இது விவாதமாக வருமேயானால் ஒவ்வொன்றிலும் இவர்கள் கேள்வி கேட்க வேண்டி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. வேறு ஏதாவது ஒழுங்குமுறை பற்றித் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது விவாதம் தொடர்கிற வகையில் கேள்வியைக் கேட்டு, திருப்பி பதிலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதைப்பற்றி அவர் பேசக் கூடாது. (குறுக்கீடு) இதைப்பற்றி அவர் பேசக் கூடாது. சபையினுடைய ஒழுங்குமுறையைப் பற்றி ஏதாவது தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம், இல்லை என்றால் வேண்டாம். திரு. தமிழரசன்.

(ஆ) கள்ளக்குறிச்சியில் டாக்டர் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியிலே அண்ணல் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்ட ஒரு முக்கியமான சம்பவம் குறித்து இந்த

அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அழைத்தீர்கள். நீங்கள் என்னைப் பேச அழைத்த திலிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனி சாமி அவர்களும் தொடர்ந்து என்னைப் பேசவிடாமல், தடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

(திரு. இளம்வழுதி அவையை விட்டு வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. தடை செய்ய மாட்டார்கள். (குறுக்கீடு) அது இல்லை என்று சொல்லி விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி தடை செய்யவில்லை என்று நான் சொல்லி விட்டேனே. நானே சொல்லிவிட்டேன். திரு. பழனிசாமி தடை செய்யவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக் காக நான் சொல்லி விட்டேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி தடை செய்யவில்லை. தடை செய்யவில்லை என்று சொன்ன தற்குப் பிறகு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) உங்களுடைய பாதுகாப்புக்காக நானே வந்திருக்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடாமல் இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் நான் சொல் கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இல்லை என்று நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) திரு. தம்பிசாமி, அமருங்கள். (குறுக்கீடுகள்) அவர் உங்களுக்கு இடையூறும் செய்யவில்லை, தடையும் செய்யவில்லை. எனவே அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு உங்கள் கள்ளக்குறிச்சிப் பிரச்சினையைச் சொல்லுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றிப் பேசவேண் டாம். நீங்கள் உங்கள் கள்ளக்குறிச்சி பற்றிச் சொல்லுங்கள். அந்தப் பிரச்சினைக்குச் செல்லுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா வில் அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்தவர் பாபாசாகிப் அண்ணல் அம்பேத்கார் அவர்கள். 43 ஆண்டுக் காலமாக, உலகத்தாலும், இந்தியாவிலே உள்ள அனைத்துப் பிரிவினராலும் பாராட்டப்பட்டு, புகழப்பட்டுக்கொண்டிருக்கிற, மிகக் குறைந்த அளவில் திருத்தங்கள் செய்யப்பட்ட போற்றுதலுக்குரிய அரசி யல் சட்டத்தை உருவாக்கித் தந்த மிகப் பெரிய அரசியல

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 மார்ச் 30

மேதை, சட்ட மேதை அண்ணல் அம்பேத்கார் அவர்கள். அதுமட்டுமல்ல. இந்தியாவிலே இருக்கிற 22 கோடி ஒடுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராகவும், வணங்குகிற தெய்வமாகவும் போற்றப்பட்டுக் கொண்டிருப்பவர் அண்ணல் அம்பேத்கார் அவர்கள். எனவேதான் நம்முடைய இந்தியப் பாராளுமன்ற வளாகத்தில் வேறு எந்தத் தலைவருக்கும் இல் லாத அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகர் என்று பெயர் பொறித்த ஒரு சிலையை நம்முடைய பாராளுமன்றமே பாராளுமன்ற வளாகத்தில் வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட, ஒப்புயர்வற்ற அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய சிலையை கள்ளக்குறிச்சியிலே சில சமூக விரோதிகள் கடந்த சில தினங் களுக்கு முன்னாலே தாக்கி உடைத்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் அந்தப் பகுதியிலே அபிராமி திரை யரங்கம் என்ற ஒரு திரையரங்கு இருக்கிறது. அந்தத் திரை யரங்கில் இந்தச் சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன்னாலே தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் திரைப்படம் பார்ப்பதற்காகப் போய் இருக்கிறார்கள். அங்கே போய் அவர்கள் இடம் பிடித்து விட்டு வந்த பிறகு சிறிது நேரம் கழித்துப் போகிற போது அந்த இடத்தில் வேறு சிலர் அமர்ந்திருந்ததால் ஒரு வாக்கு வாதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வாக்குவாதத்திற்குப் பிறகு அந்தத் திரையரங்கின் அதிபர், அதாவது அந்தத் திரையரங்கின் உரிமையாளர் அந்த தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்து, நீங்கள் என்ன இந்தத் திரையரங்கையே விலைக்கு வாங்கி விட் டீர்களா, இடம் பிடித்தால் அது உங்களுக்குச் சொந்தமா என்று கேட்டு அந்த அலுவலக அறையிலேயே கட்டிப்போட்டு அடித் திருக்கிறார். இந்தச் செயலைச் செய்தவர் அந்தத் திரை யரங்கின் அதிபர், அந்தத் தொகுதியினுடைய முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கேசவலு என்பவர். இதற்குப் பின்னால் இதோடு விட்டுவிடாமல் இவர்கள் எல்லாம் காவல் நிலையத் திற்குப் போய், எங்களை இந்தத் திரையரங்கிலே கட்டி வைத்து அடித்தார்கள், நடவடிக்கை எடுங்கள் என்று மறுநாள் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் புகார் தந்திருக்கிறார்கள்.

எங்கள் பெயரிலேயா புகார் தந்திருக்கிறீர்கள் என்று கேச வலுவும், அவரோடு பாண்டியனும் ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒரு அணி திரண்டு 2,000 பேருக்கு மேலே அணி திரண்டு போய் பஸ் நிலையத்தில் இருக்கிற அண்ணல் அம்பேத்கார் சிலையை உடைத்து இருக்கிறார்கள். அந்த சிலை சில மாதங்களுக்கு முன்னாலேதான், அவர்களுடைய தோழமைக் கட்சியின் தலைவராக இருந்து கொண்டிருக்கிற வி.பி. சிங் அவர்கள் திறந்து வைத்தது. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் வருகை தந்து, வி. பி. சிங்-கும், பாஸ்வான் அவர்களும் இவர்களுடைய தோழமைக் கட்சித் தலைவராலே திறந்து வைக் கப்பட்ட அந்தச் சிலையை திராவிட முன்னேற்றக் கழக முன் னாள் சட்ட மன்ற உறுப்பினர் கேசவலு, பாண்டியன் ஆகியோ

ருடைய தலைமையிலே 2 ஆயிரம் பேர் போய் சேர்ந்து உடைத்திருக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒரு பதட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. மிகப் பெரிய அச்சம் உருவாகியிருக்கிறது. இதுவரையிலும் அவர்கள் கைது செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் பேரில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அச்சத்தைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 12.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் உள்ள திரையரங்கு ஒன்றில் 12-3-1993 அன்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஜாதி இந்துக்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இடையே தொடர்ந்து பல விரும்பத்தகாத வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இவை குறித்து 12-3-1993 முதல் 17-3-1993 வரை கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் 6 வழக்குகளும், சங்கராபுரம் காவல் நிலையத்தில் 1 வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரை அரங்கில் இடம் பிடிப்பதில் ஏற்பட்ட சிறு தகராறு ஜாதி அடிப்படையில் வன்முறைச் சம்பவங்கள் நிகழக் காரணமாக இருந்துள்ளது. இதன் தொடர் நிகழ்ச்சியாக கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் உள்ள சட்டமேதை அம்பேத்கார் அவர்களின் திரு உருவச் சிலை ஜாதி இந்துக்களால் 13-3-1993 அன்று சேதப்படுத்தப்பட்டது. விருத்தாசலம் கோட்ட ஆட்சித் தலைவர் கள்ளக்குறிச்சி சென்று 15-3-1993 அன்று ஒரு அமைதிக் குழுக் கூட்டம் கூட்டினார். அக்கூட்டத்தில் ஜாதி இந்துக்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஆதி திராவிடர்கள் அதைப் புறக்கணித்தனர். எனவே, மீண்டும் 17-3-1993 அன்று அக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் ஜாதி இந்துக்களின் பிரதிநிதிகள் 42 பேரும், ஆதி திராவிடர்களின் பிரதிநிதியாக ஒருவரும் கலந்து கொண்டனர். ஆதி திராவிடர்களின் பிரதிநிதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அமைதிக் குழுக் கூட்டம் 21-3-1993 அன்று தள்ளி வைக்கப்பட்டது. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்துவதற்காக அக்கூட்டம் 24-3-1993 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. 24-3-1993 அன்று தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைதிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சின்னசேலம் சட்டமன்ற உறுப்பினர், விருத்தாசலம் கோட்ட ஆட்சித் தலைவர், திருக்கோவிலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் பங்கு கொண்டார்கள். இந்த அமைதிக் குழுக் கூட்டத்தில் 12 பேர் ஜாதி இந்துக்கள் தாழ்

பிலும், 11 பேர் ஆதி திராவிடர்கள் தரப்பிலும் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இரு தரப்பின் 23 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிரந்தர அமைதிக் குழு அமைப்பது என்றும், அம்பேத்கார் சிலையை விரைவிலேயே சீர் செய்து வைப்பது என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பொது மக்களின் உதவியுடன் நிவாரணம் வழங்குவது என்றும், சிலை உடைப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர மற்றவர்களை விடுவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், அமைதிக் குழுவின் முடிவுகளை செயல்படுத்த 5 நபர்களைக் கொண்ட சிறப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அமைதிக் குழுக் கூட்டத்தில் இறுதியில் கூட்டத்தில் கலந்து கொண்ட இரு தரப்பினர் அனைத்து பிரதிநிதிகளும் நடந்துவிட்ட கசப்பான நிகழ்ச்சிகளை மறந்துவிட்டு நல்லிணக்கத்துடன் அமைதி காப்போம் என்றும், வருங்காலத்தில் இது போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏதும் நிகழாதவாறு பார்த்துக் கொள்வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். சேதம் அடைந்த சுட்டமேதை அம்பேத்கார் அவர்களின் சிலையும் சரி செய்யப்பட்டு 27–3–1993 அன்று மீண்டும் நிறுவப்பட்டது.

தற்போது இரு தரப்பினர்க்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் முற்றிலுமாக களையப்பட்டுள்ளன. பூரண அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு பிரச்சினையையும் எழுப்ப வேண்டுமென்று மேலூரிலே நடைபெற்ற ஒரு வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். சொன்னவர்கள் அனைவரும் போய் விட்டார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று தயாராகவே இருந்தார்கள். ஆனால் அவர்கள் எழுப்புவதற்கே இயலாத அளவுக்குப் போய் விட்ட காரணத்தால் அப்பிரச்சினை இத்துடன் விட்டுவிடப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன். இருக்கையில் இல்லை. எழுப்பப்படவில்லை என்று கருதப்படுகிறது.

1993 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. எழுப்பப்படவில்லை என்று கருதப்படுகிறது.

5. மானியக் கோரிக்கைகள், 1993-94 விவாதமும், வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிருவாகம்.

(ஆ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

(இ) கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்.

(ஈ) கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிருவாகம்.

(உ) கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு.

(ஊ) கோரிக்கை எண். 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—தொடர்ச்சி.

(எ) கோரிக்கை எண். 43—எழுதுபொருள் அச்சுத்துறை.

(ஏ) கோரிக்கை எண். 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், 29-3-1993 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் பற்றி நடந்த விவாதத்திற்கான பதிலுரையின் தொடர்ச்சி. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நேரத்தைக் கணக்கில் கொண்டு, என்னால் முடிந்த வரையில் மிக மிகக் குறைந்த அளவில் என்னுடைய பதிலைச் சொல்வதற்கு முற்படுகிறேன் நான் நேற்றே சொல்லியபடி, மாண்புமிகு உறுப்பினர்கள் 435 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தாலும், அந்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பெரும்பாலானவைகளுக்கு நான் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளிலேயே பதில்கள் அளிக்கப்பட்டிருப்பதால் அது பற்றி நான் நீட்டிக் கொண்டு போகாமல், எந்த அளவுக்கு இப்போது தேவையோ அந்த அளவுக்குச் சொல்கிற வாய்ப்பைத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 மார்ச் 30

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சங்கங்களை உருவாக்கு கிறபோது, அந்தச் சங்கங்கள் சமுதாயத்திற்குப் பல நல்ல கருத் துக்களைச் சொல்ல வேண்டுமென்பதற்காகவும், பல உதவி களைச் செய்ய வேண்டுமென்பதற்காகவும், பதிவுத் துறையிலே அவைகளை எல்லாம் பதிவு செய்து, பதிவு பெற்ற அத்தாட்சியை வைத்துக் கொண்டு, மத்திய மாநில அரசுகள் மூலமாகவும், பல்வேறு மேல் நாட்டில் இருக்கிற உதவி நிறுவனங்கள் மூலமாக வும் நிதிகளைப் பெற்று நடத்தி வருகிறார்கள். அப்படி நடத்திக் கொண்டு வருகிற போது, அவைகளை நல்ல நோக்கத் தில் நடத்துகிறவர்களும் இருக்கிறார்கள். சில நேரங்களில் அதை யார் ஆரம்பித்தார்களோ, அவர்கள் இல்லாத நிலையில் மற்றவர்கள் வருகிறார்கள். சில நேரங்களில் உறுப்பினர்கள் அதிகமாக வருகிற போது, அந்தச் சங்கங்கள் எந்த நோக்கத் திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதிலிருந்து மாறுகிற போது, அதைக் காப்பாற்றுகிற பொறுப்பு அரசுக்கு வருகிறது. இப்படிப்பட்ட சங்கங்களைப் பொறுத்த வரையில் 1,500 கோடி ரூபாய் அளவுக்கு அவற்றுக்கு இருக்கிறது. அவற்றைக் காப் பாற்றுகிற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்கிற போது, இன்றைக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அவை கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல்இருப்பதால் அதை அரசு ஆராய்ந்து நல்லதொரு முடிவை எடுப்பதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் போல மற்றொன்று சொல்ல வேண்டுமானால் சீட்டுக் கம்பெனிகள். நேரம் அதிகமாக இல்லாவிட்டாலும், சீட்டுக் கம்பெனிகள் பற்றி இங்கே நான் சொல்வதற்குக் கார ணம், அதிலே ஏமாந்த பொது மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். திருவிழாக் காலங்களில், மற்ற நேரங்களில் ஜனங்கள் ஒன்றாகக் கூடும் இடங்களில் எல்லாம் சூதாட்டம் நடைபெறுகிறது. அந்த சூதாட்டத்தில் ஜனங்களை ஏமாற்றுவது போல, சில சீட்டுக் கம்பெனிகள் இருக்கின்றன. சில சீட்டுக் கம்பெனிகள் விளம் பரம் செய்து, இதை எல்லாம் நாங்கள் தருவோம் என்று சொல்லி, மக்களுடைய கவனத்தை ஈர்த்து, பின்னர் மக்களை ஏமாற்றி விட்டு ஓடிவிடுகிறார்கள். இதில் பதிவு பெற்ற சீட்டு கம்பெனி கள், பதிவு பெறாத சீட்டுக் கம்பெனிகள் என்று இருக்கின்றன. பதிவு பெற்ற சீட்டுக் கம்பெனிகளில் ஒவ்வொரு சீட்டுக்கும் முன் தொகையாக அரசு அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்கிறது. அவர்கள் ஏமாற்றினாலும், பணத்தைத் திரும்பக் கொடுக்க முடி கிறது. ஆனால் பதிவு பெறாத சீட்டுக் கம்பெனிகள் நடக்கிற போது, அவை மக்களுடைய கவனத்தை ஈர்த்து, மக்களுக்கு ஆசை காட்டி, விளம்பரம் செய்து, எங்கேயாவது நடைபெற் றால், அங்கே இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகளும், அங்கே இருக்கிற காவல் துறை அதிகாரிகளும் உடனடியாக அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1993 மார்ச் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கடைசியாக நான் சொல்ல வேண்டுமென்றால், இங்கே பல அறிவிப்புகளை நான் சொல்ல வேண்டுமென்று எண்ணினாலும், செய்ய வேண்டிய அறிவிப்புகளை எல்லாம் இங்கே வைத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலேயே சொல்லி இருக்கிறேன். அந்த அறிவிப்புகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துத் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் ஒன்றை நான் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 12-40

இந்தத் துறையைப் பொறுத்த வரையில் ஆவணங்களைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. அப்படி ஆவணங்களைப் பாதுகாக்கின்ற இந்தப் பொறுப்பான துறைக்கு இதுவரையிலும் அலமாரிகள் இல்லை. இரும்பினால் செய்யப்பட்ட அலமாரிகள் கொடுக்கப்படவில்லை. புரட்சித் தலைவியிடம் சொன்னபோது சென்ற ஆண்டு 200 அலமாரிகளும், இந்த ஆண்டு 400 அலமாரிகளும் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். போன தடவை என்னென்ன அறிவிப்புகளை இங்கே செய்தோமோ அந்த அறிவிப்புகளை எல்லாவற்றையும் இன்று செய்து முடித்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு இந்தத் துறையைப் பற்றி இத்தோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

அடுத்த துறை வணிகவரித்துறை. எவ்வளவு முடிந்த அளவுக்கு குறைத்து சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு இதிலே குறைத்துச் சொல்கிறேன். திரு. விஜயராகவன் தலைமையில் ஒரு உச்சமட்ட குழு அதை ஆராய்ந்து அறிக்கை வைத்தார்கள். அந்த அறிக்கையின் பேரில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், முதலமைச்சருடைய அறிவுரையைக் கேட்டு நிதி நிலை அறிக்கையை வைத்தார்கள். அந்த நிதிநிலை அறிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களாலே வரவேற்கப்பட்டிருக்கிறது. எல்லா தரப்பு மக்களும் அதை வரவேற்று இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அதிலே வணிக வரி ஒன்றுதான் தமிழ்நாட்டில் அரசை நடத்துவதற்கு பெரிய பங்கை வகித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட வணிக வரித்துறை இன்றைக்கு வரி விகிதங்களை மாற்றியமைத்ததில் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு உணவுப்பொருள் வியாபாரிகள் சங்கம், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம், திருச்சி மாவட்ட நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கம், கரூர் வியாபாரிகள் சங்கம் இப்படி எல்லா சங்கங்களும் வரவேற்றிருக்கின்றன. அப்படி எல்லா சங்கங்களும் இப்படிப்பட்ட வரி மாற்றங்களை வரவேற்றிருக்கின்றன. ஆனால் எவ்வளவோ வரி விதித்தாலும், குறைத்தாலும் சில சங்கங்கள் சிலவற்றை

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 மார்ச் 30

சொல்கிறபோது, நீங்கள் 8 சதவீதமாக இருந்ததை இன்றைக்கு மூன்று சதவீதமாகக் குறைத்திருக்கிறீர்களே, அது இல்லாமலேயே இருந்தாலும் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கேட்டிருந்தாலும் அவர்களும் வரவேற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு திரு. விஜயராகவன் குழு பரிந்துரையை உங்களிடத்திலே சொல்ல வேண்டும். எல்லா வியாபாரிகளாலும் அது வரவேற்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகவும் வருமானம் வருகிறவர்கள் எல்லாம் வரி செலுத்த வேண்டியதில்லை என்று முன்பு இருந்தாலும், அதிலே பெரும்பாலான பொருள்களுக்கு விதிவிலக்கு இல்லாமல் இருந்தது. முதலமைச்சருடைய ஆலோசனையின் பேரில் ஒரு லட்சம் ரூபாய் வியாபாரம் செய்கிற வியாபாரிகளிடத்தில் பொருள்களை வைத்துக் கொண்டு சில பொருட்களுக்கு வரி விலக்கு, சில பொருட்களுக்கு வரிவிலக்கு இல்லை என்ற வித்தியாசம் இருக்கக்கூடாது என்று அது எந்தப் பொருளானாலும் அதற்கு வரிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆலோசனையின் பேரில், ஒரு லட்சத்திற்குக் குறைவாக அல்லது ஒரு லட்சத்திற்கு வியாபாரம் செய்கிற வியாபாரிகளுக்கும் வரிவிலக்கு என்ற திட்டத்தைக் கொண்டு வருவதால், இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற 60,000 வியாபாரிகள் வரி கொடுக்கிற நிலையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு வரி வீதத்திலே 17 விதமான வரிவிதிப்பு இருந்தது. 1 சதவீதம், 2 சதவீதம், 8 சதவீதம், 10 சதவீதம் என்று 17 வகை இருந்தது. அந்த பதினேழு வகை இருந்ததால் வியாபாரிகள் அதை வைத்துக் கொள்வதிலும் கஷ்டம், அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்வதிலும் கஷ்டம், இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதைக் குறைத்து 9 வரி வீதங்களாக அதை ஆக்கியிருக்கிறோம். 17-ஐ 9 ஆக ஆக்குகிறபோது, லாபமா நஷ்டமா என்றால் என்னைப் பொறுத்தவரைக்கும் சொல்வேன், இதனால் அரசுக்கு இப்போது நஷ்டம் வருகிறது. அரசுக்கு நஷ்டம் வந்தாலும், இதைச் செய்ய வேண்டும் என்பதற்காக இது செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

இங்கே சில வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் இப்படி நீங்கள் வரியைக் குறைக்கிறீர்களே, வரியைக் குறைப்பதனாலே அந்த உணவுப் பொருட்களுக்கு எல்லாம் விலை குறையுமா என்று கேட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக குறையும்,

அத்தியாவசியப் பொருட்கள் வாங்குகிறபோது அது குறையுமா என்றால், இன்றைக்கு ஒரு முனை வரி வந்து இருக்கிறது; ஒருமுனை வரி வந்து இருப்பதனாலே இன்றைக்கு அந்த குறைவு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்

மற்றொன்று எல்லா தொழிற்சங்கங்கள் மட்டுமல்லாமல், தொழில் அதிபர்கள் இன்றைக்கு வரவேற்று இருக்கிறார்கள். அவர்கள் மூலப் பொருட்களை வாங்குகிறபோது அந்தப் பொருட்களுக்கு ஏற்றவாறு 8 சதவீதம், 10 சதவீதம், 15 சதவீதம் வரி கட்ட வேண்டும். எந்த தொழிற்சாலை வேண்டுமானாலும் படிவம் 17-ஐ பயன்படுத்திக் கொள்ளலாம். படிவம் 17-ஐ பயன்படுத்தினால், 3 சதவீதம் வரியை அவர்கள் கட்டினால் போதும் என்பது இன்றைக்கு இருக்கிறது. இது தொழில் அதிபர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய நன்மை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பின் தங்கிய இடங்களில் தொழிற்சாலைகள் வரவேண்டும். சில தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்ய வேண்டும். மூடிய தொழிற்சாலைகளை திறக்க வேண்டும் இப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை தொழில் துறையிலே முன் நிறுத்த வேண்டும் என்பதற்காகவும் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எண்ணியதன் காரணமாக வரியை தள்ளி வைப்பது, அப்படி வரியைத் தள்ளி வைப்பதனாலே அந்த வரியை முதலீடாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் வருகின்றன, மூடிய தொழிற்சாலைகள் திறக்கப்படுகின்றன. விரிவாக்கப்படுகின்றன. அப்படி அவை வருகின்ற போது அதிகப் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது; அதிகப் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதால் அதிகமான பொருள்கள் உற்பத்தியாகின்றன; அதிகமான பொருள்கள் உற்பத்தியாகிறபோது விலை குறைகிறது. இந்த நல்ல எண்ணத்திலே செய்ததினாலே 200 கோடி ரூபாய் இன்றைக்கு தள்ளி வைத்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு 46 பொருட்களுக்கு வரி குறைப்பு செய்து இருக்கிறோம். அப்படி வரியை குறைத்து இருக்கிற 46 பொருட்களிலே பெரும்பாலான பொருட்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்குகின்ற பொருட்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விஜயராகவனுடைய சிபாரிசில் உணவுப் பொருட்களுக்கு அதாவது, நெல், கோதுமை போன்ற பொருட்களுக்கு எல்லாம் வரி விலக்கு இருக்கிறது; அந்த வரி விலக்கை ரத்துச் செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்தார்கள். இதை முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோது, இதற்கெல்லாம் வரி விலக்கு இருக்கட்டும் என்று சொன்னார்கள். அதிலே நமக்கு 68 கோடி ரூபாய் நஷ்டம் வந்து இருக்கிறது. இன்றைக்கு

விஜயராகவன் கமிட்டி சிபாரிசு செய்தும் தள்ளுபடி செய்ததினாலே நமக்குஇவ்வளவு நஷ்டம் வந்து இருக்கிறது என்றாலும் இவைகளையெல்லாம் இந்த அரசு செய்து இருக்கிறது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் சுருக்கமாக விஜயராகவன் கமிட்டியைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல மற்றொன்றை சொல்கிறபோது இன்றைக்கு 200 கோடி அல்லது 300 கோடி வரி வாங்க முடியாமல் நீதிமன்றங்களில் வழக்குகள் இருக்கின்றன. அந்த நீதிமன்றங்களில இருக்கிற வழக்குகளை எல்லாம் துரிதப்படுத்த வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்கள் வந்து இருக்கின்றன. வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி இருந்தாலும், உங்களுக்குச் சொல்கிறபோது, தமிழ்நாடு நில உச்சவரம்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம்—தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம்ஸ் அப்பலேட் ட்ரிபியூனல்—இருப்பதைப் போல, இன்றைக்கு அந்த வழக்குகளுக்கும் ஸ்பெஷல் அப்பலேட் ட்ரிபியூனல் ஒன்று போட இருக்கிறோம்; விரைவிலே வரும். அப்படி வந்தால் எல்லா நீதிமன்றங்களிலும் இருக்கிற அவ்வளவு வழக்குகளும் இந்த அப்பலேட் ட்ரிபியூனலுக்கு வந்தவுடன் அப்போது எந்தக் கஷ்டமும் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பல்வேறு வகைகளில் நாங்கள் சீர்திருத்தம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு எல்லாம் செய்தாலும் இன்றைக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கிறபோதும்—இன்றைக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னால் வருடா வருடம் உணவுப் பொருள்களுடைய விலை ஏறுகிறது. வளர்ச்சி சதவீதம் ஏறுவதற்கு தகுந்தபடி நமக்கு வருவாய் வருகிறது. ஆனால் சென்ற ஆண்டு பண வீக்கம் 12-லிருந்து 15 சதவீதம் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் பணவீக்கம் அதிகரித்துக் கொண்டேபோனது. ஆனால் இந்த ஆண்டு பணவீக்கம் 7 சதவீதம் வந்தது. 7 சதவீதம் வந்து விட்டதே, வரி குறைந்து விட்டதே, அதிலே வருத்தமா என்று நீங்கள் கேட்க வேண்டியதில்லை. ஆனால் பணவீக்கம் குறைவதால் அரசுக்கு வருவாய் வராவிட்டாலும் சமுதாயத்தைப் பொறுத்தவரையிலும், சமுதாய நலம் கருதப்பட வேண்டும். பணவீக்கம் குறைவது நல்லதுதான். இருந்தாலும் அப்படி பணவீக்கம் குறைந்த சந்தர்ப்பத்திலும் இந்த அரசுக்கு எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-50

அதைப்போல பெட்ரோல், டீசல் விற்பனை 7.6 சதவீதம் குறைந்து இருக்கிறது. மது பானங்களுடைய விற்பனையில் 63 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டிய வரி வராமல் இருக்கிறது.

1993 மார்ச் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பின்தங்கிய மாவட்டங்களில் புதியதாக வரி தள்ளிவைப்பதால் இந்த ஆண்டில் பிப்ரவரி மாதம் வரையில் 67.87 கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. அதைப்போல பெரிய தொழிற்சாலை திருச்சியில் பி.எச்.இ.எல். இருக்கிறதே, அதிலேயிருந்து இந்த ஆண்டு வரவேண்டிய பணத்தில் 2.34 கோடி ரூபாய் வராமல் இருக்கிறது. விவசாயிகளுடைய நன்மையைக் கருதி 14 சதவீதம் அவர்கள் வரி செலுத்துவதற்கு பதிலாக 11 சதவீதமாக வரியை குறைத்ததால் இன்றைக்கு நமக்கு வரவேண்டிய வரி அதிலே 20 கோடி ரூபாய் இந்த ஆண்டில் குறைந்து இருக்கிறது. அதைப் போல இந்தியாவில் இருக்கிற இறக்குமதி ஏற்றுமதி கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதால், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன், அதைப்போல மற்ற கார்ப்பரேஷன்களிலிருந்து எல்லாம் வரவேண்டிய வரி 4 கோடி ரூபாய் குறைந்து இருக்கிறது. ரஷ்யாவில் ஏற்பட்ட சில மாற்றங்களால் அங்கே போகவேண்டிய 'டீ' சரியாகப் போகாததால் குன்னூரில் தேயிலை விற்பனையில் 100 கோடி ரூபாய் குறைந்து இருக்கிறது. இப்படி 158.2 கோடி ரூபாய் குறைந்திருக்கிற நிலையில் வருவாய்த் துறையினுடைய அதிகாரிகளுடைய முயற்சியாலும் — அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பார்க்கிறபோது, நீங்கள் சிறப்பாக வணிகவரித் துறையில் வரிகளை வசூல் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பாராட்ட வேண்டும், பாராட்டுகிறேன் என்றெல்லாம் அவர்கள் சொல்வார்கள், அதையெல்லாம் சொல்கிற அந்த உற்சாகத்தை மனதில் வைத்துக் கொண்டு, அதிகாரிகளை எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, கீழே இருக்கிற அடிமட்ட அதிகாரிகளை — மேல்மட்ட அதிகாரிகளை மட்டுமல்ல — கீழ்மட்ட அதிகாரிகளையும் பார்த்து அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்று பார்த்து, நீங்கள் உங்களிடத்தில் எத்தனை வியாபாரிகளுடைய கணக்குகளை பார்க்கிறீர்கள்? அதை எப்படி பார்க்கிறீர்கள்? ஆர்டர் எப்படி போடுகிறீர்கள்? நீங்கள் போடுகிற உத்தரவு ட்ரிபியூனலுக்கு சென்று, அப்பலெட்டுக்கு சென்று ஏன் தோற்றுப் போகிறது? என்று இவைகளை எல்லாம் மீண்டும் மீண்டும் அவர்களை கேட்பதன் பயனாக இன்றைக்கு நான் செய்யமுடிகிறது.

சென்ற ஆண்டு நம்முடைய குறியீடு எவ்வளவு என்றால் 2,400 கோடி ரூபாய். அதையும் மீறி சென்ற ஆண்டு வசூல் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு அதைப்போல குறியீடு— அன்றைக்கு குறியீடு போடுகிற போது நான் முன்பு படித்தேனே பலவிதமான இழப்புகள் எல்லாம் வந்திருக்கின்றன என்று நான் தெரிவித்தேன். அதைப்போல அன்றைக்கு குறியீடு போடுகிற போது சென்ற ஆண்டு மே மாதம் குறியீடு போடப்பட்டது, அன்றைக்கு இருக்கிற பணவீக்கத்திற்கு ஏற்றாற்போல போடப்பட்டிருந்தாலும், 7 சதவீதம் பணவீக்கம் குறைந்திருந்தாலும், இதற்கு பிறகு எவ்வளவு கஷ்டங்கள் வந்திருந்தாலும், நான்

மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். குறியீட்டை விட, 2,080 கோடி என்பதை விட,, அதையும் தாண்டி 3,000 கோடியை நிச்சயமாக இந்த ஆண்டு வசூல் பண்ணிக் கொடுப்போம் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின் பேரில் 17 திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த 17 திட்டங்களில் 15 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப் படாமல் இருப்பதற்குக் காரணம், அவைகள் அரசினுடைய ஆய்வில் உள்ளன. சட்டமுன்வடிவுகள் வர வேண்டியதாக இருக்கிறது. ஆகையினாலே, இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

வரி ஏய்ப்பை நிறுத்துவதற்காகத்தான் எல்லா இடங்களிலும் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இப்போது காவல் துறையினர் இருக்கிறார்கள். காவல் துறை இருந்தாலும், குற்றவாளிகள் இருக்கிறார்கள். ஆகவே குற்றவாளிகள் இருப்பார்கள் என்பதற்காக நம்முடைய காவல் துறையை நீக்குவதில்லை. காவல் துறையை நீக்கி விட்டால், இன்னும் குற்றங்கள் அதிகமாக ஆகிவிடும். அதே போல், சோதனைச் சாவடிகள் இருக்கிறபோது வரி ஏய்ப்பு உள்ளவர்களும், வரி ஏய்ப்பைச் செய்கின்ற வாகனங்களும் போய்க்கொண்டுதான் இருக்கும். இன்றைக்கு சுமாராக ஒரு நாளைக்கு 14 ஆயிரம் லாரிகள் சோதனைச் சாவடிகள் வழியாகப் போகின்றன. சில சோதனைச் சாவடிகளைத் தாண்டியும் போய்க்கொண்டு இருக்கின்றன. இந்த சோதனைச் சாவடிகளைத் தாண்டி போய்க் கொண்டு இருக்கின்றன என்பதை எல்லாம் நான் நம்முடைய முதலமைச்சரிடத்திலே சொன்னேன். நம்மிடத்தில் பறக்கும் படை இருக்கிறது. அந்தப் படை பறக்கும் படை ஆனால் பறப்பதற்கு இறக்கை இல்லாமல் இருக்கிறது. எனவே, அதற்கு இறக்கை வேண்டுமே என்று சொன்னேன். அப்படியானால் இறக்கை வையுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், அதற்கு இறக்கை மட்டும் கொடுத்தால் போதாதது, அவைகள் பறப்பதற்கு உணவு இல்லாமல் பட்டினி கிடக்குமே என்று நான் சொன்னேன், பட்டினி இருப்பதை மாற்ற வேண்டும் என்றால், உணவு கொடுக்க வேண்டும் என்று நான் சொன்னேன். இதையெல்லாம்

சொல்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கேட்டு, இப்படி இருக்கிற பறக்கும் படைக்கு எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதற்காக—ஏன் என்றால், பல இடங்களில் சோதனைச் சாவடிகள் இருந்தாலும், சோதனைச் சாவடிகள் இல்லாத பகுதி களிலே இன்றைக்குச் செல்கிறபோது, அதை கண்டு பிடிப்பதற்கு 29 பறக்கும் படைக்கு புதிய வாகனங்களும், அந்தப் பறக்கும் படைக்கு ஆகாரம் கொடுப்பதற்காக எரி பொருளும் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் நான் குறைத்து ரொம்ப சிக்கனமாக கணக்குப் போடுகிறபோது கூட, குறைந்தது 2 கோடி ரூபாய் அதிகமாக வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு மாற்றங்களினாலும், மத்திய அரசினுடைய சில வரிக் குறைப்பினாலும், அருகாமையில் இருக்கின்ற பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற பகுதிகளில், நாம் எப்படித்தான் கட்டுப்படுத்தினாலும், அங்கே அதன் வழி யாக நமக்கு சில கஷ்டங்கள் வருகின்றன. அங்கே சில சோதனைச் சாவடிகளைப் போட வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்களை கேட்டதற்கு அனுமதி அளித்ததற் காக உண்மையிலே நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன், இதை நான் மகிழ்ச்சியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக 2 கோடி அல்லது 3 கோடி ரூபாய் அதிகமாக வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, நம்முடைய கோயம்புத்தூர் நல்ல வியா பாரம் நடக்கிற இடம். சேலம் நல்ல வியாபாரம் நடக்கிற இடம். திருச்செங்கோடு நல்ல வியாபாரம் நடக்கிற இடம். நாமக்கல் நல்ல வியாபாரம் நடக்கிற இடம். அந்த இடங்களில் சோதனைச் சாவடிகள் இருந்தன, அதை எடுத்து விட்டார்கள். அங்கே சோதனைச் சாவ டிகள் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த சோதனைச் சாவடிகளை போடுவதாலே, குறைந்தது 30 லட்சம் ரூபாய் அதிகமாக வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, சென்னை மாநகர். சென்னை மாநகரத் தின் எல்லைகளில், எல்லாப் பக்கங்களிலும் பாதைகள் வரு கின்றன. எல்லாம் போகின்றன. உங்களுக்கு உதபரணம் சொல்ல வேண்டும் என்றால், ஒரு பெரிய காம்ப வுண்டு இருக்கிறது. அந்த காம்பவுண்டில் 8, 10 வாசற்படிகள் இருக்கின்றன. 6 வாசற்படிகளில் காவலர்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 மார்ச் 30

களைப் போட்டு விட்டு, 3 வாசற் படிகளிலே காவலர்களைப் போடவில்லை என்றால், அது எல்லோருக்கும் தெரிந்து விடும். அங்கே காவலர்கள் இல்லை என்றால், திருடர்கள் உள்ளே நுழைந்துவிடுவார்கள். பிறகு அந்த 8 இடத்திலே போட்டும் பிரயோஜனம் இல்லை. போட்டால் எல்லா இடத்திலும் போட வேண்டும். இல்லையென்றால் போடாமல் இருப்பது நல்லது. இப்படி இருந்தால் போட்டும் பிரயோஜனம் இல்லாமல் போய் விடுகிறது, என்பதை முதலமைச்சரிடத்திலே சொல்லி,—இன்றைக்கு 9 இடங்களிலே சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அந்த 9 இடங்கள் போதாது,—இன்னும் 4 இடங்கள் புதிதாக வேண்டும் என்று கேட்டேன். அந்தச் சோதனைச் சாவடிகள் போட்ட நேரம், காலம் வெவ்வேறு. அப்போது இருந்த சூழ்நிலை வேறு. இன்றைக்குப் புதிய புதிய போக்குவரத்துக்கள் இருக்கின்றன. இந்த 9 சோதனைச் சாவடிகள், இன்னும் புதிதாக 4 சோதனைச் சாவடிகள், இவைகளை மாற்றி அமைப்பதற்கு, இன்றைக்கு இருக்கிற நிலைமைக்கு ஏற்றவாறு, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதை மாற்றி அமைப்பதற்கு அனுமதி கேட்டேன். அனுமதி கொடுத்து இருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன், அங்கே ஆகும் செலவைவிட பல கோடி ரூபாய் அதிகமாக இந்தத் துறைக்கு வரும் என்கிற செய்தியை மகிழ்ச்சியோடு உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி இன்னும் அறிவிப்புகளை நான் செய்து கொண்டே போனால், இன்றைக்கு அதிகமாக நேரம் ஆகிவிடும். ஏறத்தாழ 14,15 அறிவிப்புகள், இன்றைக்கு இந்தத் துறையை பொறுத்தவரையிலும் மக்களுடைய கவனத்திற்கு அதிகமாக வராத துறையாக இருந்தாலும் மக்களுக்கு அதிகமான பணத்தைச் சேகரித்துக் கொடுக்கிற துறையாக இருப்பதால் முதலமைச்சர் அவர்கள் பதில் உரை சொல்கிற போது சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 18 அறிவிப்புகளிலே 3, 4 மட்டும் தான் நான் சொன்னேன். 18 அறிவிப்புகளை இந்தத் துறையை சீரமைப்பதற்காகவும், நல்ல முறையில் செய்வதற்கும் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்காகவும் இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

இன்னொன்று, புதியதாகச் சொல்ல வேண்டுமென்றால் ஓயர்லெஸ் என்ற கம்பியில்லாத் தந்தியை காவல் துறையிலேதான் வைத்திருப்பார்கள். முதல் முதல் தமிழகத்

1993 மார்ச் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

தினுடைய வரலாற்றிலேயே வணிகத் துறைக்கு என்று கம்பியில்லாத் தந்தியை இன்றைக்கு ஒயர்லெஸ் ஒன்றை ஏற்படுத்தி முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அதற்காக அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி கொடுத்திருப்பதனால் இன்றைக்கு 10 வாகனங்களிலே அது பொருத்தப்படுகிறது. நான்கு அதிகாரிகளுடைய வாகனங்களில் பொருத்தப்படுகிறது. தலைமை இடத்தில் கட்டுப்பாட்டு அறையிலே பொருத்தப்படுகிறது. தவறாகச் செல்கின்ற அந்த வாகனங்கள் நிற்கா விட்டால் அந்த ஒயர்லெஸ் மூலமாக இங்கே இருக்கின்ற 10 வாகனங்களுக்கும், 4 அதிகாரிகளுக்கும் அதைத் தெரிவித்து, அதை எங்கே வேண்டுமானாலும் பிடிப்பதற்காக வாய்ப்பு கொடுக்கப்படுவது மட்டுமல்ல. 24 மணி நேரமும் கீழே இருக்கின்ற அதிகாரிகள் மேலேயிருக்கின்ற அதிகாரிகளித்திடத்திலே பேசி, அவர்களிடத்திலேயிருந்து அறிவுரை பெறுவதற்கும், மேலேயிருக்கின்ற அதிகாரிகள் கீழே இருக்கின்ற அதிகாரிகளுக்கு உத்தரவுகளை வழங்குவதற்கும் ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதையெல்லாம் சொல்லி விட்டு அடுத்தது இப்போது நான் வருவாய்த் துறைக்கு வருகிறேன். வருவாய்த் துறை என்பது—பழனிசாமி அவர்கள் சொல்கிறார்கள். நான் இவ்வளவு வைத்திருக்கிறேனே எப்போது முடியும் என்று. நான் இவ்வளவையும் நிச்சயமாக படிக்க மாட்டேன். ஒவ்வொன்றாக ஞாபகம் வைத்துக் கொள்கிறேன். வருவாய்த் துறை என்றால் பெரிய கடல், முன்பெல்லாம் கடல் என்றால் அதற்கு எவ்வளவு ஆழம், எவ்வளவு நீளம், எவ்வளவு உயரம் என்றெல்லாம் தெரியாது. ஆனால் இந்த விஞ்ஞான காலத்தில் கடலினுடைய ஆழமும், நீளமும் நன்றாக தெரியும். அதைப் போல் அந்தக் கடல் பற்றி முழுவதையும் சொல்லாவிட்டாலும் கலங்கரை விளக்கத்தில் காண்பிப்பதைப் போல ஒன்றை உங்களுக்குச் சொல்வேன். இங்கே பேசுகிற போது மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்கிற போது வருவாய்த் துறை என்றால் பழமையான துறை என்று சொன்னார்கள். அது பழமையான துறை என்று சொல்கிற போது எனக்கு ஒன்று ஞாபகம் வந்தது. ஒரு சீமாட்டிக்கு இன்றைக்கு வயது 90. அந்த சீமாட்டிக்கு 20 வயதிலே திருமணம் நடந்தது. 21 வயதிலே குழந்தை பிறந்தது. அந்த சீமாட்டியினுடைய மகன் வெளியே ஊர்ப் பயணம் போய் விட்டு வந்திருக்கிறான். அவனுக்கு இப்போது வயது 70. உங்களுடைய பிள்ளை வந்து விட்டார் என்று சொல்லும் போது அந்த சீமாட்டி சொன்னாள். குழந்தை வந்து விட்டதா

குழந்தை வந்து விட்டதா என்று.. அப்படி வயதானாலும் தன்னுடைய மகன் வருகின்ற போது குழந்தை வந்து விட்டதா என்றுதான் சீமாட்டி சொன்னாள். அது போன்று எத்தனை துறைகளிலிருந்து பிரிந்தாலும், அத்தனை துறைகளுக்கும் இந்தத் துறை அவர்களுக்கெல்லாம் உதவி செய்கிற ஒரு துறையாகத் தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். அதே போன்று அந்த பையனுடைய மனைவியிடம் சென்று உங்களுடைய கணவன் வந்து விட்டார் என்று சொன்ன போது, அந்தக் கிழம் வந்திருக்கிறதா என்று மனைவி சொன்னாளாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் சீமாட்டியைப் பற்றி அந்தச் சீமானும் கிழவி என்று தான் சொல்வார். அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சீமாட்டி அல்ல. சீமாட்டியினுடைய மகன் வருகிற போது அந்த 70 வயது மகன் வருகின்ற போது, குழந்தை வந்து விட்டானா குழந்தை வந்து விட்டானா என்று சொல்வது தாயுள்ளம். எனவே வருவாய்த்துறை என்பது தாயைப் போன்றது. வருவாய் வருவாய் வந்து நலம் பெற்றுச் செல்வாய்' என்பது தான் வருவாய், (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து இந்தத் துறையைப் பற்றி நான் நீண்ட நேரம் நிச்சயமாக சொல்லப் போவது இல்லை. ஆனால் சிலவற்றை முக்கியமாக இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இங்கே சொல்கிற போது பல்வேறு விதமான கருத்துக்கள் இங்கேயும், வெளியேயும் பேசப்படுகிறது. அரசினுடைய புறம்போக்கு இருக்கிறது, பட்டா நிலம் இருக்கிறது. யாரோ ஒருவர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே சொல்கிற போது அதற்கு நேற்று யோசித்து அதற்கு முந்தைய நாள் கணக்கை எடுக்கின்ற போது தமிழகத்தை பொறுத்தவரையிலும், 3,21,18,000 ஏக்கர் அரசு நிலங்கள் இன்றைக்கு இருக்கிறது.

பிற்பகல் 1.05

பட்டா நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்றால் இரண்டு கோடியே, 25 இலட்சத்து சொச்சம். மீதியெல்லாம் புறம்போக்கு. அரசு நிலங்கள் அதிலே எவ்வளவு இருக்கிறது என்று நீங்கள் பார்க்கின்ற போது 95 லட்சம் நிலம் அரசு நிலமாக இருக்கிறது என்பதை

1993 மார்ச் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

உங்களுக்கு சொல்லிக் கொள்கிறேன். அரசு நிலத்தை பொறுத்தவரையில் மொத்த பரப்பில் இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்கள் 8,58,000 இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அதில் ஆட்சேபணை உள்ள ஆக்கிரமிப்பு 6,50,000 ஏக்கர். ஆட்சேபணை இல்லாதவை 2 இலட்சம் ஏக்கர். அதைத்தான் இன்றைக்கு கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஆக்கிரமிப்புதாரர்கள் எவ்வளவு என்றால் 12,50,000 பேர்கள். என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் நீண்ட பட்டியலாக இருப்பதால் ஒன்றிரண்டை மட்டும் உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஆக்கிரமிப்பு செய்தவர்கள் சில பேரை நான் குறிப்பிட வேண்டுமென்றால், கோவை மாவட்டத்தில் ஒருவர் 3.7 சென்ட் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அவர் மத்தை புறம்போக்கை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அதை கொடுக்கக் கூடாது. அவருக்கு சொந்த நிலம் எவ்வளவு இருக்கிறது என்றால் 13 ஏக்கர் இருக்கிறது. இன்னொருவர் ஆறுமுக கவுண்டர் என்பவர் 2.47 சென்ட் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். இவருக்கு பட்டா நிலம் இருக்கிறது. மாட்டு வண்டி இருக்கிறது. இவர் நல்ல வசதி உள்ளவர். இவருக்கு குமாரபாளையம் என்ற கிராமத்தில் 7 ஏக்கர் நிலம் இருக்கிறது. இன்னொருவர் பழனி கவுண்டர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்த இடத்திலே ஒரு வீடு கட்டி அதிலே பருத்தி கொட்டை வைத்திருக்கிறார். இவரது சொந்த ஊரில் 4 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதேபோல சின்னசாமி செட்டியார், இவருக்கு நல்ல வியாபாரம் நடக்கிறது. பெரிய பணக்காரர். இவர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். மாரிமுத்து என்பவர் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் ஓட்டு வீடு கட்டி தவிட்டுக் கடை வைத்திருக்கிறார். இவர் வியாபாரம் செய்கிறார். கோயம்புத்தூரில் இப்படி, அதேபோல சேலம் மாவட்டத்தில் வசதி படைத்தவராக ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால் என். எஸ். பி. ராஜேஷ் என்பவர் ஏற்காட்டில் பல இடங்களில் 254 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அவருக்கு இதற்கு முன்பாகவே 800 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. இன்னொருவர் 185 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார், சாத்தையா, இப்படி பல பேர் சேலத்திலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். சென்னையிலே சீனிவாசன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். நடுக்கரை கிராமத்தில், கோயம்பேடு கிராமத்தில் 52 சென்ட் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பு எவ்வளவு தெரியுமா? 23 இலட்சம். அதே போல இராமசாமி பழனிசாமி போன்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்.

சண்முகா திரையரங்கத்தினுடைய சொந்தக்காரர் 23 சென்ட் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அதனுடைய மதிப்பு 8 இலட்சம். இப்படி ஆக்கிரமிப்பு பட்டியல் நிறைய இருந்தாலும் இந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அரசு கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும். எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இப்படி நான் எல்லா மாவட்டங்களிலும் வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தஞ்சாவூரைப் பற்றி நீங்கள் அவ்வப்போது அமைச்சரைப் பார்த்துக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளவர்கள் கொஞ்சம் நிதானமாகத்தான் ஆக்கிரமிப்பு செய்வதில் ஈடுபடுகிறார்கள். (சிரிப்பு) மற்றொன்று. நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம். நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 1,05,59,037 பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி நான் பலமுறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். இப்போதும் இந்த அவையின் மூலமாக பொதுமக்களுக்குச் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் ஒருவருடைய சொத்து எவ்வளவு என்பதை வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் ஏதாவது தவறுகள் நடந்தால் அதை உடனடியாக திருத்திக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடிதம் மூலமாக எழுதியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் எல்லா அதிகாரிகளும் குறைந்தது ஒவ்வொருவரும் ஒரு 5 கிராமங்களுக்குச் சென்று நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் ஏதாவது தவறுகள் இருந்தால் மனுக்களைப் பெற்று சரி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறேன். போதும், போதாது என்று எல்லா கிராமங்களிலும் தண்டோரா போட்டு— நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் இந்த அரசு என்ன செய்தாலும் அதை திருந்த செய்யவேண்டும். நன்றாக செய்யவேண்டும். முழுமையாக செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் எல்லா கிராமங்களிலும் தண்டோரா போட்டு அப்படி நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் ஏதாவது தவறு இருந் தால் அதை திருத்திக் கொள்ள வேண்டும். அதை சரி செய்து கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இருக் கிறேன்.

பிற்பகல் 1.10

அதேபோல் நத்தம் பட்டா. இன்றைக்கு நத்தம் பட்டா கொடுக்கிறபோது கூட—இங்கே கூட நத்தம் பட்டா யார், யாருக்கோ கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி நத்தம் பட்டா கொடுக்கிற போதே நிலவுடமை மேம் பாட்டுத் திட்டத்தில் சில குறைகள் ஏற்பட்டதை திருத்திக் கொள்ளவேண்டும் என்று இந்த அரசு முயற்சித்ததைப் போல நத்தம் பட்டாவிலும் எந்தவிதமான குறைகளும் ஏற்படக்கூடாது என்பதற்காக அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் இதுவரை யில் இந்த ஆட்சி வந்த பிறகு 16 லட்சம் பேருக்கு நத்தம் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதேபோல் வீட்டு மனைப் பட்டா எவ்வளவு கொடுத் திருக்கிறோம்; நிலப் பட்டா எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்பதெல்லாம் குறிப்பேட்டிலே இருக்கிறது. ஆகவே அதை நான் இங்கே சொல்லாமல் விட்டு விடுகிறேன் என்பதை தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்லுகிறபோது அரசினுடைய நலத் திட்டங்கள் அது பட்டா கொடுத்தாலும் சரி; வேட்டி கொடுத்தாலும் சரி, சேலை கொடுத்தாலும் சரி, அதேபோல் நத்தம் பட்டா கொடுத்தாலும் சரி, அவைகள் எல்லாம் எதுவும் ரகசியம் இல்லை. அதையெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரி வித்து இருக்கிறேன். கடிதம் எழுதியிருக்கிறேன். எந்த எந்த கிராமங்களில் என்ன கொடுத்தாலும் அப்படி கொடுப்பதை நீங்கள் பட்டியல் போட்டு பொது இடத்தில் ஒட்டி விடவேண்டும். அப்படி பொது இடத்தில் ஒட்டி விட்டால் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு. யாருக்காவது தகுதி இல்லாதவர்களுக்கு கொடுத்து விட்டால் அதை திருத்திக் கொள்ள முடியும். இதை சொல் வதற்குக் காரணம் ஏழை எளிய மக்கள் எவ்வளவோ பேர் இருப்பார்கள். அவ்வளவு பேருக்கும் அரசு நலத் திட்டத்தின் மூலம் செய்ய முடியாது. ஆனால் அரசு செய்கிற நலத் திட் டங்கள் தகுதி உடையவர்களுக்கு செய்யாமல் தகுதி இல்லாதவர் களுக்கு கொடுத்துவிட்டால், தகுதி உடையவர் ஒருவர் ஏமாற்றப் படுகிறார்; அவருக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய் விடுகிறது என்பதாலே தகுதி உடையவர்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசு எல்லாவிதமான நடவடிக்கை களையும் எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன். இப்படி நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தை அமல் படுத்திய இந்த அரசு, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரில், முதலமைச்சர் ஆணையின் பேரில் இன் றைக்கு நில உரிமைப் பதிவேடு பட்டா பாஸ் புத்தகம், இன்

றைக்கு எவ்வளவோ வழக்குகள் உச்ச நீதிமன்றம் வரைக்கும் போகிறது. உங்களுக்கு ஒன்றைச் சொல்லவேண்டும் என்றால் இன்றைக்கு ஒருவர் ஒரு வழக்கை நடத்துவார். அந்த வழக்கு முடியாது. அவர் இறந்து விடுவார். பிறகு அவர் மகன் நடத்துவார். பிறகு வயது ஆகிவிடும். நாட்கள் பல ஆகிவிடும். அவர் இறந்து விடுவார். பிறகு பேரன் அந்த வழக்கை நடத்துவான். அதேபோல் வழக்கறிஞரும், வழக்கறிஞர் வழக்கை நடத்துவார்',, அதற்கு பிறகு, அவருடைய பிள்ளை நடத்துவார். பிள்ளைக்குப் பிறகு பேரன் நடத்துவான் ஒரே வழக்கை. அப்படி நீண்ட காலமாக வழக்குகள் நடப்பதாலே கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு எல்லாம், அதுவும் விவசாயிகளுக்கு எல்லாம் கஷ்டம் வரும் என்பதால் இந்த நில உரிமைப் பதிவேடு இன்றைக்கு கொண்டு வர இருக்கிறோம். இதை முதல் கட்டமாக மதுரை, சிதம்பரனார், கோவை, தஞ்சாவூர், திருச்சி, வடஆற்காடு அம்பேத்கார் போன்ற 15 மாவட்டங்களில் இன்றைக்கு கொண்டு வர இருக்கிறோம். அந்த பதிவேட்டில் என்ன என்ன இருக்கும் என்றால் யாருடைய நிலம்? பெயர் என்ன? அதன் விஸ்தீரணம் என்ன? நஞ்சை எவ்வளவு? புஞ்சை எவ்வளவு? வரி எவ்வளவு? உள்ளூர் வரி எவ்வளவு? மேல் வரி எவ்வளவு? எவ்வளவு வில்லங்கம் இருக்கிறது? எவ்வளவு கடன் இருக்கிறது? சொத்தினுடைய மதிப்பு என்ன? இவ்வளவு விவரங்களும் அதிலே இருக்கும். அது மட்டுமல்ல இன்றைக்கு யார் யார் நிலத்தையோ, புறம்போக்கு நிலத்தையெல்லாம் எழுதி வைத்து விடுகிறார்கள். வாங்கி விடுகிறார்கள் என்றெல்லாம் என்னிடத்திலே கணக்கு வந்து இருக்கிறது. அதைக் கண்டுபிடித்துக் கொண்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1-15

அதே போல, எதிர்காலத்தில் பதிவுத் துறைக்குச் சென்றால் இப்படிப்பட்ட பட்டா பாஸ் புத்தகங்களைக் கொண்டு வந்து காண்பித்தால்தான், வாங்குகிறவர்களும் இந்த பட்டா பாஸ் புத்தகத்தை காட்ட வேண்டும்; விற்கிறவர்களும் காண்பிக்க வேண்டும். வாங்குகிறவர்களுக்கு இதிலே சேர்த்து எழுதி வைப்பார்கள். விற்கிறவர்களுக்கு இதிலே கழித்து விடுவார்கள். இப்படி இது சேர்ப்பதற்கும் கழித்துக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் ஒரு நல்ல நிலைமை உருவாவதற்காக இன்றைக்கு நிலவுடமை மேம்பாடு திட்டத்தின் அடுத்தபடியாக நில உரிமை பதிவேட்டை, இன்றைக்கு பட்டா பாஸ் புத்தகம் கொண்டு வந்திருக்கிறோம். இது நல்ல முறையில் அடித்து வைக்கப்பட்டிருக்கிறது. இது பாங்கினுடைய பாஸ் புத்தகம் மாதிரி, இப்போது காண்பிக்கிறேனே, இதுமாதிரி இருக்காது. இதைவிட நன்றாக இருக்கும். இதை நல்ல முறையிலே அடித்து, நான் நேற்றே சொன்ன மாதிரி, அச்சகம் மூலம் அச்சகத்தை நாம் மார்டனை

சேஷன் பண்ணியிருக்கிறோம், புரட்சித்தலைவியின் ஆலோசனையின்பேரில் என்று சொன்னேன்; அதை நன்றாக அடித்துக் கொடுப்போம். பத்து ரூபாய்க்கு கொடுக்கிறோம் என்றால், இதற்கு 25 ரூபாய் செலவாகும். ஆனால் பத்து ரூபாய்க்குக் கொடுக்கிறோம். இது பத்து ஆண்டுகளுக்கு இருக்கும். பத்தாண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்க வரக் கூடாது. அதாவது, பத்தாண்டுகள் முடிந்தபிறகு, இதைப் புதுப்பிக்க கூடாது. இதை ஒன்பதாவது ஆண்டிலேயே புதுப்பித்தால்தான், இதைப் புதுப்பிக்க முடியும். அதை புதுப்பிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலத்தான், வீட்டு மனைப் பட்டா கொடுத்திருக்கிறோம். அதை நீங்கள் குறிப்பிலே பார்த்திருப்பீர்கள். அரசு நல உதவிகளைப் பற்றி [குறுக்கீடு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற விவரங்களே நிறைய இருக்கின்றன; அதிலே, சந்தேகமே வரக்கூடாது. அந்த அளவிற்கு விளக்கமாக சிறு பிள்ளைக்குச் சொல்லுவதுபோல சொல்லியிருக்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீட்டுமனைப் பட்டாவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, சொல்லிவிட்டால். உதவிகரமாக இருக்கும் என்று சொல்லுகிறேன். வருமானம் 6,400 ரூபாய் என்பது 9,000 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது என்று இந்த வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலே சொல்லப்பட்டிருக்கிறது. வருமான அடிப்படையைப் பற்றி சொல்கிறேன். ஏற்கெனவே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் 12,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு எல்லாம் செல்லும் என்று இருக்கிறது. ஆனால் வீட்டுமனைப் பட்டாவுக்கு மட்டும் 6,400 ரூபாயிலிருந்து 9,000 ரூபாய் என்பது பொருந்தாது. அதை 12,000 ரூபாயாக வைக்கலாம்; அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நல உதவிகளை எல்லாம் கொடுக்கிறபோது, எப்படிக் கொடுக்க வேண்டும் என்று நான் முதலிலே சொல்லியிருக்கிறேன். அதேபோல, மற்றொன்று மிக முக்கியம். கிராமங்களிலே சண்டை வந்துவிடுகிறது. சண்டை வருவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போவது இல்லை. யார் பெரியவன், யார் சிறியவன், யார் பெரிய ஜாதி, யார் சின்ன ஜாதி என்றெல்லாம் தேவையில்லாத

சமுதாயப் பிரச்சினைகள். அது கொஞ்சம் கொஞ்சமாக மங்கி வந்தாலும் இன்னும் சில இடங்களிலே இருக்கிறது. சில நேரங்களிலே, கிராமங்களிலே சொல்வார்கள்: நல்ல காரியத்திற்கு செல்லாவிட்டாலும், கெட்ட காரியத்திற்குச் செல்ல வேண்டுமென்று. வாழ்ந்தபோது, வீட்டுக்குச் செல்லாவிட்டாலும், தாழ்ந்தபோது செல்ல வேண்டுமென்று சொல்வார்கள். திருமணத்திற்கு போகாவிட்டாலும்; யாராவது இறந்துவிட்டால் போக வேண்டுமென்று கிராமங்களிலே சொல்வார்கள். அப்படி இருக்கிற கிராமங்களில்கூட மயானப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், பல கிராமங்களிலே மயானம் இல்லாமல் இருக்கிறது. சில கிராமங்களிலே மயானம் இருக்கும் அதற்கு போக பாதை இருக்காது. பாதை இருக்கும், அங்கு மயானம் இருக்காது. நாங்கள் இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறோம். எதிர்காலத்தில் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மயானம் இருக்கிற காரணத்தினாலேயே அங்கே பலர் போக வேண்டும் என்பது போல....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்வதற்கு காரணம் பல அமைச்சர்கள் கூட என்னிடத்திலே சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள்: இந்த மயானப் பிரச்சினைப்பற்றி. எல்லா கிராமங்களிலும் மயானங்கள் இருக்க வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டால், அரசு சார்பிலே மயானம் ஏற்படுத்துவதற்காக அரசு எல்லாவிதமான நடவடிக்கையும் புரட்சித்தலைவியின் அனுமதியைப் பெற்று அதைச் செய்ய இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். [மேசையைத் தட்டும் ஒலி] அதேபோல, மயானத்திற்கு போகின்றபோது விவசாயம் இல்லாத காலங்களில் வயலிலே, குறுக்கே போய்விடுவார்கள். சில நேரங்களிலே விவசாயம் நடக்கும், அதிலே நாற்று நடப்பட்டிருக்கும். நெல் இருக்கும். குறுக்கே போக முடியாது. அப்போது பிணத்தை தூக்கிக்கொண்டு போவதற்கு சங்கடங்கள் எல்லாம் ஏற்படும். அது இல்லாமல் இருப்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

இங்கே ஜாதி சான்றிதழ் பற்றி சொன்னார்கள். ஜாதி சான்றிதழ் என்பது மிக சாதாரணமானது. ஜாதி சான்றிதழை மிகப்பெரிய விஷயமாக சொல்கிறார்கள். அது சாதாரணமானது

இப்பொழுது சாதிச் சான்றிதழ் நிரந்தரமாகக் கொடுக்கப் படுகிறது. சாதிச் சான்று கொடுக்கிறபொழுது, இந்த ஊரில் யார் முன் வகுப்பைச் சேர்ந்தவர்கள், யார் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், யார் மிகப் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று எல்லோருக்குமே தெரியும். இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் தொகுதியில் உள்ள எந்தெந்தக் கிராமம் என்று அந்தக் கிராமத்தின் பெயரைச் சொன்னவுடனேயே, இன்னின்ன சாதிக்காரர்கள் இருக்கிறார்கள் என்று தெரியும். அதைப்போல எல்லோருக்கும் தெரியும். அதைப்போல அதிகாரிகளுக்கும் தெரியும். ஆகவே, சாதிச் சான்று கொடுப்பதிலே எந்தச் சங்கடமும் இல்லை. அன்றைக்கே அன்றைக்கே கொடுத்து விடுவார்கள். ஆனால், கடைசி நேரங்களில் வாங்காமல், பள்ளிக்குச் செல்லுகின்ற நேரத்தில் வாங்காமல், அது நிரந்தரச் சான்று என்பதாலே, முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே இருக்கிற ஒரேயொரு சங்கடம்—ஒரேயொரு சங்கடம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிகிறது. ஆதி திராவிடர்களுக்குக் கொடுப்பதிலும் ஒன்றும் கஷ்டம் இல்லை. ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்—மலை வாசிகளுக்குக் கொடுக்கிறபொழுது சில சங்கடம் வருகிறது. அதற்கு மாத்திரம் காலதாமதம் ஏற்படுகிறது. கொண்டாரெட்டி, காட்டுநாயக்கர்களுக்குக் கொடுப்பதில், ஏன் இதிலே தாமதம் ஏற்படுகிறது என்றால்—இப்படியுள்ள ஜனங்களுக்கு அரசால் கொடுக்கப் படுகின்ற உதவிகள் ஒரு லிமிட்டெட்டாக இருக்கிறது. அது இல்லாத—கொண்டாரெட்டி இல்லாத ஒருவருக்குத் தந்து விட்டால், ஒரு நியாயமான கொண்டாரெட்டிக்குச் சேர வேண்டிய நியாயம், நன்மைகள் வேறு ஒருவருக்குச் சென்று விடுகிறது. நியாயமாக இருக்கிற ஒரு ஷெட்யூல்ட் ட்ரைப்-க்குச் செல்ல வேண்டியது வேறொருவருக்குச் சென்று விடும். அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. செ. கு. தமிழரசன் : தலைவரவர்களே,.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முடித்துக் கொள்ளட்டும், முடித்தவுடன் நீங்கள் கேட்கலாம். இப்பொழுது வேகமாக முடித்து விடுவார்கள். அதனாலே அதற்குப் பிறகு நீங்கள் கேட்கலாம்.

திரு. செ. கு. தமிழரசன் : தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முடித்தவுடனே கேளுங்களேன். அமைச்சர் முடித்து விடட்டும்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : அதேபோல, புயலால், வெள்ளத்தால், இயற்கை இடர்ப்பாடுகளினால் வருகின்ற கஷ்டங்களுக்காக, இப்படிப்பட்ட நேரங்களில் அரசு எவ்வளவோ தள்ளிக் கொடுக்கிறது என்பதைப் போல முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று, இராமநாத புரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், சிதம் பரனார் மாவட்டங்களில் 1,81,80,638 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டத்திற்கும் 23 இலட்சம் ரூபாய் தள்ளு படி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்டத் தீர்வை போடுவதைப் பற்றிப் பலபேர் என்னிடத் திலே வந்து சொல்லுவார்கள். சில சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி வந்து தடை உத்தரவுகளைக் கேட்கிறார்கள். நான் இங்கே, இந்தத் தண்டத் தீர்வை ஏன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நியாயமாக எவ்வளவு தீர்வை என்று இருக் கிறது. அந்தத் தீர்வையை விட ஏன் தண்டத் தீர்வை என்று சொன்னால், ஒரு தடவை தவறு செய்தால், உங்களுக்குத் தெரியும், நீதிமன்றத்தில்கூட முதல் தடவை குற்றம் செய்த வர் என்றால் மன்னித்து விட்டு விடுவார்கள். அதே குற்றத்தை மறுபடியும் செய்தால் கொஞ்சம்—பத்து நாள் போடுவார்கள்; அதே குற்றம் மறுபடியும் என்றால், இரண்டு மாதம் போடு வார்கள். அப்படித் தண்டனையை அதிகரித்துக்கொண்டு போவதைப்போல, தண்டத் தீர்வையையும் அப்படித்தான்— தீர்வை போடுகிறபொழுது மீண்டும் மீண்டும் அதிகமாகத் தவறு செய்தவர்களுக்குத் தண்டத் தீர்வை போடப்படு கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை முறைப்படுத்தியிருக்கிறார்கள். இது ஆயக்கட்டு; இந்தந்த ஆயக்கட்டிலே உள்ளது; இது ஏரிப் பாசனத்தில் உள்ளது; இது கோயிலைச் சேர்ந்தது என்று. அதை மாற்றுகின்ற பொழுது அதற்குத் தண்டத் தீர்வை போட வேண்டியிருக் கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்றை இங்கே சொல்லுகின்றபொழுது, வரியை ஏற்றி விட்டார்கள், வரியை ஏற்றி விட்டார்கள் என்று சொல் கிறார்கள், இன்றைக்கு நிலவரி, தண்ணீர்த் தீர்வை ஏற்றப் படவே இல்லை; நிலவரி, தண்ணீர்த் தீர்வையை ஏற்றப் படவே இல்லை என்பதை நான் இங்கே அறுதியிட்டு உங்களுக் குச் சொல்வேன். ஆனால், சில நேரங்களில், இருக்கின்ற காரி யங்களுக்கு ஏதாவது ஊராட்சி மன்றங்களிலே இருக்கின்ற அவர்களுக்குச் சில சங்கடங்களுக்காக அவர்கள் லோக்கல் செஸ் சர் சார்ஜ் கூடக் கொடுக்கின்றபொழுது, அதை வசூல் செய்கின்ற ‘‘விங்’’ மட்டும்தான் இந்தத் துறைக்கு உரிய— அதை வசூல் செய்து வந்து நாங்கள் எடுத்துக் கொள்வதில்லை. அதை விட்டு விடுவோம்.

1993 மார்ச் 30] (திரு, எஸ். டி. சோமசுந்தரம்)

உங்களுக்கு இன்னும் சொல்லப்போனால், நான் சொல்ல மறந்து விட்டேன். வணிக வரித் துறை மூலமாகக் கிட்டத் தட்ட அதிகமான பணம் இந்தச் சென்னை மாநகராட்சிக்குக் கொடுக்கிறோம். மொத்தம் 100 கோடி ரூபாய், 110 கோடி வணிக வரியிலே வசூல் செய்து ஊராட்சி ஒன்றி யங்களுக்குத் தருகிறோம் என்பதை நான் முதலிலே சொல்ல மறந்து விட்டேன். அவைகளுக்குக் கொடுக்கிறோம்.

அதேபோல, ஜப்தி செய்கிறார்கள் என்று சொல்கிறார் கள். ஜப்தி செய்ய மாட்டார்கள். விவசாயினுடைய கருவி களில் முதலிலே உத்தரவு போட்டிருக்கிறது. விவசாயிகளிட மிருந்து விவசாயக் கருவிகளைச் செய்யமாட்டார்கள்; ஒரு ஜதை உழவு மாடு இருந்தால் செய்யமாட்டார்கள்; சிலபேர் தாலி என்று கூடச் சொன்னார்கள். அதையெல் லாம் எடுக்க மாட்டார்கள். திருமண மோதிரம், வீட்டுக் கதவு, சன்னல் இவைகளில் எதையும் செய்ய மாட்டார்கள் என்ற உறுதியை உங்களுக்குத் தரவும் கடமைப்பட்டிருக் கிறேன்.

பிற்பகல் 1-25

இங்கே நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி நம்மு டைய பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு நாங்கள் சொல்லவில்லை. மத்தியப் பேரரசுதான், எல்லா மாநிலங்களையும், 31 மாநிலங்களையும்-- அதாவது மாநில அந்தஸ்து பெற்றது; மாநில அந்தஸ்து பெறாதது என்று மொத்தம் 31 மாநிலங்கள் இருக்கின்றன; அந்த எல்லா மாநிலங்களையும் வைத்து, இந்தியப் பிரதமர் நடத் திய கூட்டத்தில், தமிழ்நாடுதான் நில உச்சவரம்பு சட்டத்தின்படி நிலத்தை ஒழுங்காக எடுத்து, அதை அனுப் பினார்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சரை அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். நாம் இங்கே மிகையாக எடுத்த நிலம் 1,88,120 ஏக்கர்; அதில் வழங்கியிருப்பது 1,47,684 ஏக்கர். மற்றவை வழக்கில் இருக்கிறது. அந்த வழக்குகளையும் சீக்கிரமாகக் கையாண்டு அதை முடிப்போம் என்பதை நான் உங்களுக்குத் தொவித் துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று; பினாமி நிலம் என்று சொன்னீர்கள். அந்த பினாமி இங்கே கொண்டு வந்து, அதை (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி 1.25 ஆகிறது உணவுத்துறை மானியக் கோரிக்கையையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஓட்டப் பந்தய வீரர்; ஆகவே இன்னும் கொஞ்சம் வேகமாக ஓடினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது வயதாகிவிட்டது; அதனால் என்னால் ஓட முடியவில்லை. அதேபோன்று, இங்கே மனுநீதித் திட்டம் இருக்கிறது. திங்கள்தோறும் மனுக்களைப் பெறுகின்ற திட்டம் இருக்கிறது. இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனித்தவர். முதலமைச்சர் வாரந்தோறும் அல்லது மாதத்திற்கு ஒருதரம் இங்கே தலைமைச் செயலகத்தில் பொது மக்களைப் பார்க்கிற போது, வருகிற மனுக்களையெல்லாம் பெறுவார்கள், அப்படி மனுக்களைப் பெறுகிறபோது, ஏன் இவர்கள் செலவு செய்து கொண்டு சென்னைக்கு வரவேண்டும்; அங்கேயே மனுக்களைப் பெறலாமே என்று எண்ணி, அதற்காக இன்றைக்கு எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், நிதிப் பற்றாக்குறை என்கிற விலங்கு என்று சொல்வார்களே, அந்த நிதிப் பற்றாக்குறை என்ற விலங்கு, முதலமைச்சர் அவர்களுடைய கையை போட்டுக்கட்டினாலும், அதை உடைத்து எறிந்துவிட்டு, சென்ற ஆண்டு-உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன், (மேசையைத் தட்டும் ஒலி) 22 மாவட்டங்களிலும் அதற்குத் தனியாக டெபுடி கலெக்டர் களைப் போட்டு, அவர்கள் பொது மக்களுடைய குறைகளை மட்டுமே வாங்க வேண்டும்; அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகச் செய்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை உங்களுக்கு நான் சொல்லிக். கொள்வேன். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, 2சி உரிமம் இருக்கிறது. இதனால் எல்லா மாவட்டங்களிலும் நாம் மரங்கள் வளர்ப்பதற்கு பட்டா கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு மரங்களினால் அரசுக்கு 36 இலட்சம் ரூபாய் வந்திருக்கிறது. போன அவையிலே நான் இங்கே சொல்கிற போது, எல்லாக் கிராமங்களிலும் 50, 50 மரங்களை வைக்க வேண்டுமென்று நான் தெரிவித்தேன். அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன் மூலமாக இன்றைக்கு, புதிதாக சென்ற ஆண்டிலிருந்து இந்த ஆண்டு இடைவெளியில் 4,68,422 மரங்கள் நட்டு இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நிலச் சீர்திருத்தம்; நிலச் சீர்திருத்தத்தை எடுக்கிறபோது, ஒன்று நான் சொல்ல மறந்துவிட்டேன். இங்கே சட்டத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்குச் செல்கிறபோது——இதுவரையிலே அவர்களுக்கு 15, 16

1993 மார்ச் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

நினைவூட்டுக் கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் சில குறைபாடுகளைச் சொன்னார்கள். அதன்படி இங்குள்ள அதிகாரிகளை அனுப்பி அங்கே பார்க்க வைத்திருக்கிறோம். விரைவிலே அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து, இங்கே நிறைவேற்றுகிற ஒரு வாய்ப்பினை உருவாக்குவோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதேபோன்று, வெள்ளம்; வெள்ள நிவாரணம் என்றாலே, இயற்கை இடர்பாடு என்றாலே 39 கோடிதான் மொத்தம். அந்த 39 கோடியில் 75 சதவிகிதம் மத்தியப் பேரரசு, 25 சதவிகிதம் மாநில அரசு—அந்த 39 கோடியைத் தாண்டி, நான் முதலிலேயே சொன்னபடி, நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் சென்ற ஆண்டிலே— கிடைத்தது 39 கோடிதான்; ஆனால் 106 கோடி இதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். ஒதுக்கியிருந்தால் மட்டுமல்ல; அதைச் செலவும் செய்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1.30

மற்றொன்றை நான் சொல்கிறபோது, பலரும் சொல்வார்கள். இன்றைக்கு இருக்கிற நிலை ஆணை— வருவாய்த் துறையினுடைய நிலை ஆணையில் என்ன இருக்கிறது என்றால், வெள்ளத்தால், புயலால், தீயினால் போன குடிசைகளுக்கு, 'ஹட்ஸ்' என்றுதான் ஆங்கிலத்தில் போட்டிருக்கிறார்கள்; அந்தக் குடிசைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று, அதிலே ஓட்டு வீடாக இருந்தால் கொடுக்கக் கூடாது; கல் ஓடுகள் போட்டிருந்தால் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அப்படியெல்லாம் இருந்தாலும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மற்ற இடங்களுக்கும் புரட்சித்தலைவி அவர்கள் செல்கிறபோது, அவர்களுக்கு தங்க மனசு என்று சொல்வார்கள். தங்க மோதிரம் என்றால் அது தங்கத்தினால் ஆனது. ஆனால் மனசு தங்கத்தினால் செய்ய முடியாது. தங்க மனசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ தங்க வீடு இருக்கிறதா என்று கேட்டால், தங்கத்தினால் எங்கே வீடு இருக்கிறது என்று குதர்க்கமாகப் பேசுவார்கள். தங்க வீடு என்றால் தங்குவதற்கு வீடு என்று பேசுவார்கள். அப்படிக் குதர்க்கம் பேசுகிறபோது, தங்க மனசு என்றால் எவ்வளவு குதர்க்கம் பேசுவார்கள். அப்படியிருக்கிறபோது 5 ஆயிரம் ரூபாய் 10 ஆயிரம் வீடுகளுக்கு 5 கோடி ரூபாயை இன்றைக்கு எல்லா முன்மாதிரிகளையும் முறியடித்து அதைக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக்கடமைப்பட்டிருக்கின்றேன். அதைச் சொல்லும்போது சொல்வார்கள்; அவர்கள் வீட்டுப் பணத்தைக் கொடுத்தார்களா என்று சொல்வார்கள். சொல்பவர்கள் சொல்லிக்கொண்டு

தான் இருப்பார்கள். கர்ணனும், துரியோதனனும் ஒரே காலத்தில்தான் இருந்தார்கள். ஆனால் கர்ணன்தான் கொடுத்தானேயொழிய, துரியோதனன் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முடிவு எடுக்கிறபோது பணம் வேண்டும் என்பது மட்டுமல்ல, சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறபோது—தேசிய சேமிப்புப் பத்திரம்—அதிலே நிறையப் பத்திரங்கள் வாங்க வேண்டும், நிறைய விற்க வேண்டும் என்பதற்காக, மலைத் தோட்டத்தைச் சார்ந்தவர்கள் வாங்கினால் அவர்களுக்கு 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்கின்ற ஒரு திட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எல்லா அதிகாரிகளும் தலைமையிடத்தில் தங்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அப்படித் தங்காமல் இருந்தால்-கலெக்டர் தங்காமல் இருந்தால் நாங்கள் பார்த்துக் கொள்வோம். ஆர்.டி.ஓ. தங்காமல் இருந்தால் கலெக்டர் பார்த்துக் கொள்ள வேண்டும். தாசில்தார் தங்காமல் இருந்தால் ஆர்.டி.ஓ. பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படித் தொடர் சங்கிலிபோல் இருக்கிறது. அதிகாரிகள் தலைமையிடத்தில் தங்கவில்லை என்றால் அங்கேயிருக்கிற மற்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஒரு எச்சரிக்கையாகவே இங்கே சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எவ்வளவோ நன்மைகள் செய்கிறபோது, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபொழுது 3 நாட்கள் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே சென்ற பொழுது, அங்கே அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், தங்களுடைய சொந்த சார்பிலும்-45 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய், ஏறக்குறைய பெட்ஷீட் 49 ஆயிரம், துண்டுகள் 49 ஆயிரம், சேலைகள் 20 ஆயிரம், வேட்டிகள் 20 ஆயிரம் ஏறக்குறைய மதிப்பு 45 இலட்சத்து 55 ஆயிரம் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சார்பிலேதான் வழங்கப்பட்டதே தவிர சொந்தச் செலவில் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழகத்தின் சார்பிலும், தன் சொந்த சார்பிலும் என்று தான் சொன்னார்கள்.

1993 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கு வயது குறைச்சல். அதனால் தான் பொறுக்க முடியாமல் சொல்கிறார். சொந்த சார்பிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் கொடுக்கப்பட்டது என்பதை நான் மிக ஜாக்கிரதையாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல வறட்சி நிவாரணம் — சென்ற ஆண்டு எவ்வளவோ வறட்சிகள் இருந்தன. அதைப் போக்க புரட்சித்தலைவி அவர்கள் முன்கூட்டியே எடுத்த நடவடிக்கையால் தண்ணீர்ப் பற்றாக்குறை என்ற தாக்குதலில் இருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றினார்கள். அதேபோல இன்றைக்குக் குடிநீர்ப் பற்றாக் குறை தாக்குதலில் இருந்து தமிழகத்தைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது, நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டும் வருகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல சேலை, வேட்டிகள் கொடுப்பதில் பல குறைகளைச் சொன்னார்கள். ஆனால் போன தடவை சொன்ன குறைக்கும், இந்தத் தடவை சொன்ன குறைக்கும் சற்று வித்தியாசம். போன தடவை தகுதி உள்ளவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் நான் அங்கே போகிற போதும், புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின்பேரில் தகுதி இல்லாதவர்களுக்கு யாருக்காவது கொடுத்திருந்தால்கூட, அந்த மாதிரி கொடுத்த அதிகாரிகள் மீது, அந்த அதிகாரிகளிடமிருந்து பணத்தை வசூல் செய்தும், தண்டிக்கவும் வேண்டும் என்றும் அவர்களிடத்திலே சொன்னேன். கடிதத்தின் மூலமாகவும் தெரிவித்தேன். அதுமட்டுமல்ல, யார் யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்ற பட்டியலையும் எனக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னேன். அப்படி இருக்கிறபோது தகுதி உடையவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தகுதி உடையவர்களில் சிலர் விடுபட்டு இருக்கலாம்.

பிற்பகல் 1-35

இந்த ஆண்டு கொடுக்கிறபோது பொங்கலுக்குக் கொடுக்கிற போது, 60 ஆயிரம் வேட்டி, 60 ஆயிரம் சேலை என்றாலும், இடையிலே மற்ற, முதல் அமைச்சர் தன்னுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வாங்கிக் கொடுப்பது மற்றும் புயல் வெள்ளத்தின் போது வாங்கிக் கொடுப்பது என்பதாலே சில பற்றாக்குறை ஏற்படுகிறது. அப்படிப் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, இன்றைக்கு இருக்கிற நம்முடைய கூட்டுறவு நிறுவனங்களிலே மட்டும் 36 ஆயிரம் சேலை தான் ஒரு வருடத்திற்கு நெய்ய முடியும். அதேபோல வேட்டி

90 ஆயிரம்தான் நெய்ய முடியும். ஆகவே புரட்சித் தலைவி அவர்கள் இப்பொழுதே உத்திரவு போட்டுவிட்டார்கள். அந்த உத்திரவுப்படி இப்பொழுதிருந்தே, அடுத்த வருடம் பொங்கலுக்கு இப்பொழுதே, முன்கூட்டியே நெய்ய வேண்டுமென்று நினைத்து, அடுத்த வருடம் பொங்கலுக்கு இப்பொழுதே வேட்டி சேலை எல்லாம் கூட்டுறவிலும் நீங்கள் நெய்ய வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே இந்தச் சங்கடங்கள் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கட்டிடங்களை எல்லாம் சொல்கிறபோது, எல்லாக் கட்டிடங்களையும் நான் சொல்லாமல் சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டுமென்றால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி சென்னை மாவட்டம், காயிதேமில்லத் மாவட்டம், பின்பு அங்கேயிருக்கிற சிதம்பரனார் மாவட்டம், திருவண்ணா மலை சம்புவராயர் மாவட்டம், இவைகளுக்கு எல்லாம் விரைவிலே கட்டிடங்களை கட்டிக் கொடுப்பதாக நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையை பொறுத்த வரையிலும் எவ்வளவு வசூல்செய்கிறோம் என்பதைக் குறிப்பாகச் சொல்லாவிட்டாலும், நில வரி மூலமாக 94 கோடி, நகர்ப்புற நிலவரி மூலமாக 52 கோடி, வேளாண்மை வரி மூலமாக 78 கோடி. 225 கோடி வருவாய்த் துறை மூலமாக வசூலாகிறது. வருவாய்த் துறை வசூல் செய்வது இல்லை என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பேசியிருக்கிறார்கள். அதிலே 225 கோடி ரூபாய் வசூல் செய்கிறோம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் நம்முடைய புரட்சித் தலைவி உத்திரவின் பேரில் இன்றைக்கு மலைப் பயிர்களுக்கு மட்டும் வரி போடுங்கள், வேளாண்மை வரி, மலைப்பயிர் இல்லாத இடங்களில் போட வேண்டா மென்று சொன்னார்கள். மலைப் பயிர் இல்லாத தென்னை மரங்களுக்கு எல்லாம் வரி போடலாம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அதற்கெல்லாம் போட வேண்டாம் என்று சொன்னதினாலே இன்றைக்கு 29,049 நபர்கள் இருக்கிறார்கள். இதிலே 4 ஆயிரம் பேர்கள்தான் வரி செலுத்தியிருக்கிறார்கள். மற்றவர்கள் இல்லாமல் போய் விடுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரு அறிவிப்பை நான் கொடுக்க இருக்கிறேன். அந்த அறிவிப்பு என்னவென்றால், இன்றைக்கு 4,97,312 பேர் குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ பேர் குத்தகைதாரர்களாக இல்லாமல் இருக்கிறார்கள். குத்தகைதாரர்கள் இல்லாமல் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்காக இன்றைக்கு ஒரு கமிட்டி போடுவதற்காக முதல் அமைச்சர் அவர்களிடத்திலே

அதிகாரம் வாங்கியிருக்கிறேன். இருக்கிற எல்லா வட்டங்களிலும் ஒரு கமிட்டி போடப்படும். அந்தக் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் ஒருவர் இருப்பார். குத்தகைதாரர் ஒருவர் இருப்பார். சமூகப் பணியாளர் மூன்று பேர் இருப்பார்கள். ஆக 5 பேரும் இந்தக் கமிட்டியிலே இருப்பார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒருவர் தலைமை தாங்குவார். அதிலே இருக்கிற வழக்குகளை, இருக்கிற ஆவணங்களை, டெபுடி தாசில்தார் கவனத்திலே வைத்துக்கொள்வார்கள். இவை எல்லாம் இன்றைக்கு செய்யப்படும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு திட்டம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். பெரிய திட்டம். இங்கே எல்லோரும் சொன்னது. நான் எவ்வளவோ அறிவிப்புகளைத் தெரிவித்தாலும், கடைசி அறிவிப்பாக அதைச் சொல்லிவிடுகிறேன். எல்லாக் கிராமங்களிலும், எல்லா மக்களும் இன்றைக்கு வீடு இல்லாமல் யாரும் இருக்கக்கூடாது. எப்படியாவது வீடு இருக்க வேண்டும், வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்பதற்காக மூன்று ஆண்டுகளில் கொடுக்க வேண்டுமென்று முதல் முறையாக இன்று $8\frac{1}{2}$ கோடி ரூபாய் அதற்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மற்ற அறிவிப்புகள் வருகிற போது பலர் மகிழ்ச்சி அடைவார்கள், பலர் கோபப்படுவார்கள், சிலபேர் சண்டைபோடுவார்கள், சண்டை போட்டாலும் யாருடன் சண்டை போடுவார்கள் என்றால்,ரொம்ப வேண்டியவர்களிடம்தான் சண்டை போடுவார்கள். பலர் என்னிடம் ச்ண்டை போடுவார்கள், கோபப்படுவார்கள், இருந்தாலும் நான் சிலவற்றை இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமைக்கேற்ப இங்கே சொல்லியிருக்கிறேன். மதுரை மாவட்டத்தில் இருக்கிற உசிலம்பட்டி, திருமங்கலம் இரண்டு வட்டங்களைப் பிரித்து, மூன்றாவது புதிய வட்டமாக பேரூரை தலைநகராகக் கொண்ட ஒரு வட்டம் அமைக்கப்படும். இதைச் சொல்கிற போது பல பேர் வலிய வந்து என்னிடத்திலே கோபப்படுவார்கள், சண்டை போடுவார்கள். அதே போல பொதுவாக

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு அமைச்சருடைய அந்த அறிவிப்பு, அது என்னுடைய தொகுதி என்கிற காரணத்தினால் அவருக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே வேறு யாரும் அதிலே கோபப்படமாட்டார்கள் என்பதற்காகச் சொன்னன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மற்றொன்று. புதிதாக உருவாக இருக்கிற விழுப்புரம் மாவட்டத்திலே சங்கராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு புதிய சங்கராபுரம் வட்டம் ஒன்று உருவாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல புதிதாக உருவாக இருக்கிற விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியைத் தலைநகராகக் கொண்ட புதிய கள்ளக்குறிச்சி கோட்டம் ஒன்று உருவாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற போது அதிலே கடலூரைத் தலைநகராகக் கொண்டு அமைகிற மாவட்டத்திற்கு தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் என்று பெயர் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொரு மாவட்டம் விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்டு அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நிதிநிலைக்கு ஏற்றவாறு திருச்சி மாவட்டமும் இரண்டாகப் பிரிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடைசியாக, மலைப் பகுதிகளில் 14,000 பேர், 15,000 பேர் என்று கிராம அதிகாரிகள் இருந்தாலும் அந்தக் கிராமப் பகுதிகளில் அவர்களுக்கு வீடு இல்லை என்பதற்காக அவர்களுக்கு வீடு கட்டுவதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் 244 கிராமங்களில் வீடு கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு என்னுடைய மானியக் கோரிக்கைகளில் கூடியவரையில் எல்லோருக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். பதில் சொல்ல முடியாவிட்டாலும் கூட எனக்குத் தெரிந்தவரையிலும் பதிலை இந்த நேரத்தில் நான் சொல்லியிருக்கிறேன். இதிலே நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால் கேளுங்கள். அதற்கு நான் பதில் தெரிவிக்கிறேன் என்று சொல்லி வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளில் கோரிய பணத்தைக் கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. கு. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே,......

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,...

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடு) திரு. தம்புசாமி, முதலில் திரு. தமிழரசன்தான் கேட்டார். எனவே அவரை முதலில் அனுமதிக்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் இருக்கிற பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஏராளமான போலிச் சான்றிதழ்கள் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் பெயராலே வழங்கப்பட்டு விடுகின்றன. அதிலும் கொண்டாரெட்டி மற்றும் காட்டுநாயக்கன் என்ற பெயராலே தான் அவை வழங்கப்படுகின்றன. கொண்டாரெட்டி என்ற சாதிச் சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரை ஆந்திரா மாநிலத்தில் தடை செய்திருக்கிறார்கள். எனவே கொண்டா ரெட்டி மற்றும் காட்டுநாயக்கன் என்ற பெயர்களில் சாதிச் சான்றிதழ் வழங்குவதை வருவாய்த்துறை தடை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு காரியம் தவறாக நடக்கும் என்பதற்காக, அதைச் சரிசெய்ய முடியவில்லை என்பதற்காக கொண்டாரெட்டி போன்ற உரிய தகுதி பெற்றவர்களுக்கு இருக்கிற உரிமையை இந்த அரசு ரத்து செய்யாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நல ஊழியர்கள் 45 நாட்களாகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் அவர்களுக்கு ஏதாவது ஒரு நன்மை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தார்கள். அவர்களுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதுவும் அறிவிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆகவே அதுகுறித்து அறிவிப்பார்களா என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நல உதவியாளர் களுக்கு என்னென்ன நன்மையை இந்த அரசு செய்தது என்பதைப் பற்றி எல்லாம் அன்றைக்கே இந்த அவையில் நான் தெரிவித்தேன். இன்றைக்கு நீண்ட ஒரு பட்டியலை வைத்துக்கொண்டிருக்கிறேன். அதை நான் படித்தால்**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையிலும் பதிலுரை வழங்கிய அமைச்சர்களிலேயே அதிகநேரம் எடுத்துக்கொண்டு பதிலுரை வழங்கியிருப்பது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்தான். ஏனென்றால் ஒரு பெரும் துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு அதற்கு பதிலுரை வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக நேரம் எடுத்துக்கொண்டு இருப்பது இயற்கையிலேயே தேவையான ஒன்று தான். எனவே தேவையான பல்வேறு விவரங்களைச் சொன்னீர்கள். ** என்பது அவைக்குறிப்பிலே இருந்தால் அது வேறு விதமாக இருக்கும். எனவே அது நீக்கப்படுகிறது

பிற்பகல் 1-45

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் படிக்கவில்லை. எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அதிலே ஒவ்வொரு வரிதான் படித்தேன். படிக்காமல் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறேன். கிராம உதவியாளர்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் மிக அனுதாபத்தோடு அதைக் கவனிக்கிறார்கள். முதலமைச்சரைப்பற்றி நான் சொல்கிற போது வாயளவில் நான் பேசவில்லை. உதட்டளவில் பேசவில்லை. தங்க மனம் அவர்களுக்கு என்றால் அது உள்ளத்திலிருந்து வருகிற வார்த்தை. உள்ள உள்ளத்து உணர்வுகளை நான் சொல்கிறேன். நான் வாயால் சொல்லவில்லை. அப்படி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் பல முறை உடனே முடியுங்கள், உடனே முடியுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அதை தலைமை செயலாளர் அவர்களிடத்திலே, நிதி செயலாளர் அவர்களிடத்திலே, வருவாய்த் துறை செயலாளர் அவர்களிடத்திலே, இந்த மூன்று பேர்களையும் கூப்பிட்டு பேசச் சொல்லியிருக்கிறேன். மூன்று பேர்களும் பேசியிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் பேசவில்லை. நான் இங்கே கோபுரத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் என்று யாரும் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நானும் அவர்களைப் பலமுறை கூப்பிட்டுப் பேசியிருக்கிறேன். இடைவெளியிலே பேசி இருக்கிறேன். மாவட்டந்தோறும் போய் இருக்கிறேன். இங்கே தலைமை செயலகத்திலே பேசியிருக்கிறேன். பேசி விரைவில் நல்ல முடிவை சொல்வோம் என்பதை அவர்களுடைய குறைகளுக்கு வேண்டியவைகளை நிவாரணம் செய்வோம் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவோம் என்று கூறுகிறார்கள். அதிலே ஏதாவது கருத்து வித்தியாசம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நிவாரணம் வழங்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் 45 நாட்களாக இடைவிடாமல் போராடுகிறார்கள். 45 நாட்களாகவே இடைவிடாமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள், சிறையிலே இருக்கிறார்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்தில் முதலமைச்சர் கருணைகூர்ந்து, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து இந்த நேரத்தில் அறிவிப்பது ஒரு சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்களும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் ஒரு முடிவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவை அறிவிக்க வேண்டுமென்றால் எப்படிப்பட்ட முடிவு? நாங்கள் எடுக்கிற முடிவை அறிவிப்பதா அல்லது அவர்கள் கொடுக்கிற முடிவை அறிவிப்பதா? ஆக இரண்டு பேரும் சேர்ந்து பேசி ஒரு முடிவெடுத்து அறிவிப்பதா? இரண்டு பேரும் சேர்ந்து முடிவெடுப்பதுதான் இதுவரைக்கும் உள்ள நியாயம். எனக்குத் தெரிந்த வரையிலும், இந்த அரசிலும் சரி, இதற்கு முன்னாலே இருந்த அரசும் சரி, ஆங்கில அரசு காலத்தும் சரி, சேர்ந்து முடிவெடுத்து அறிவிப்பதுதான் நான் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன். ஆனால் நான் மட்டும் எப்படி அறிவிக்கமுடியும். அதுவும் போராட்டத்தில் இருப்பவர்களை போராட்டத்தை நிறுத்திவிட்டு வந்தபிறகு கூப்பிட்டு பேசுவதுதான் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசு அப்படித்தான் செய்தது. ஆனால் இந்த அரசுதான், புரட்சித் தலைவி அரசுதான், போராட்டத்தில் இருக்கிறவர்கள் போராட்டத்தை விட்டுவிட்டு வரட்டும் அதற்குப் பிறகு பேசுகிறோம் என்று சொல்லாமல் போராட்டத்தில் இருக்கிறபோதுகூட கூப்பிட்டுப் பேசிய ஒரு அரசு இந்த அரசு தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர் (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, இல்லை, இல்லை, நீங்கள் அப்போதே கேட்டிருக்கிறீர்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் நான் வாய்ப்பு வழங்கவேண்டும் அல்லவா? உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சந்திரசேகர் முடிக்கட்டும். பிறகு வாய்ப்புத் தருகிறேன். ஏற்கனவே உங்களுக்கு விளக்கம் கேட்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கிற ஏழைமக்கள் அனைவரும் ஒரு வீடாவது வைத்திருக்கவேண்டும் என்று நம் இதயதெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்கு கிராமப்புறங்களிலே பல ஆண்டுகாலமாக ஏழைமக்கள் குடியிருந்த வீடுகளுக்கு வழங்காத காரணத்தினாலே இன்றைக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் அந்த வீடுகளை காலி செய்துவிடவேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் சொல்கிற நேரத்திலே அமைச்சர் அவர்கள் தற்காலிகமாக அதை நிறுத்துகின்ற ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏழைமக்கள் அனைவருமே வீடு பெறவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிற நேரத்திலே அந்த வீடுகளிலே இருப்பவர்களையும் இந்த பட்டியலிலே சேர்த்துக்கொள்ளப்பட்டு வருங்காலத்திலே அவர்களுடைய வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே விளக்கமாக சொல்கிறபோது, ஆக்கிரமிப்பு செய்தவர் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்' எவ்வளவு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு நிலத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்தேன. ஆனால் ஒவ்வொருவருடைய ஜாதகமும் கையிலே இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளைச் செய்திருப்பவர்கள் யார், எப்படிப்பட்டவர்கள், அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எந்த ஊரிலே இருக்கிறார்கள் என்பது ஒரு ஜாதகம். இரண்டாவது ஜாதகம் அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலம் எப்படிப்பட்டது அரசுக்கு அது தேவையான நிலமா அல்லது தேவை இல்லாத நிலமா என்பது. இந்த இரண்டு ஜாதகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒன்றாக வைத்துப் பார்க்கிறபோது அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தண்டத் தீர்வைப் பற்றி குறிப்பிடுகிறபோது அதைத் தொடர்ந்து போட வேண்டிய

1993 மார்ச் 30] [திரு. ந. சா. பழனிச்சாமி]

அவசியம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு வருவாய்த் துறையிலே இருக்கின்ற அனுபவங்கள் தெரியும். அந்த காலத்திலே எப்படி கிராம கணக்கப் பிள்ளைகள் விவசாயிகளுடைய காலி நில நம்பர்களை அவர்களே மனப்பாடமாகச் சொல்வார்களோ, அதைப்போல நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த வருவாய்த் துறைப் பிரச்சினையிலே மனப்பாடமாக வைத்திருப்பவர்கள். இந்தத் தண்டத் தீர்வையைப் பொறுத்த வரையிலே அநேகமாக தொடர்ந்து விவசாயிகள் உபயோகம் இல்லாத தண்ணீரையும், சில ஆற்றுப் பகுதிகளிலே இருந்து குழாய்கள் மூலம் மோட்டார் வைத்து தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கிற அந்த இடத்திற்கெல்லாம் தொடர்ந்து தண்டத் தீர்வை போட்டுக் கொண்டு வருகிறார்கள். அரசுகள், அதைத் தொடர்ந்து சில நேரம் தள்ளுபடி செய்து கொண்டும் வருகின்றன. எனவே, அந்தத் தண்டத் தீர்வை என்று இல்லாமல் ஒரு முறைக்கு இருமுறையோ அல்லது மூன்று மடங்காகவோ ஒரு தீர்வையை நிரந்தரமாக போட்டு, அதைக் கட்டச் சொன்னால்' விவசாயிகளும் கட்டி விடுவார்கள். வசதியாகவும் இருக்கும், வசூலும் ஆகும் என்று சொல்லி, அந்த முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''மாவட்ட நிர்வாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 203,83,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப் பெறவில்லை.

''நில வரித்துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 8,91,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் முன் மொழியப் பெறவில்லை.

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 57,52,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

1993 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பெறவில்லை.

''முத்திரைத் தாள்கள்—நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,88,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''பத்திரப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 20,98,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பெறவில்லை.

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 27,50,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை வெட்டுத். தீர்மானங்கள் முன் மொழியப் பெறவில்லை.

''எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 41,35,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். வெட்டுத் தீர்மானங்கள் முன் மொழியப் பெறவில்லை.

''இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் பற்றிய 45—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,43,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

மாண்புமிகு அவை முன்னவர்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் மிக அதிகமாக ஆகிவிட்டதன் காரணமாகவும், இன்று முடிக்கின்ற நிலைக்கு வந்து சேர்ந்திருப்பதன் காரணமாகவும், இன்று எடுத்துக் கொள்ளப்பட இருந்த பால் வழங்கு திட்டங்கள், கூட்டுறவு மற்றும் நுகர் பொருள் வழங்கல் மானியக் கோரிக்கைகளை நாளை எடுத்துக் கொள்ளலாம் என்றும், கல்வி, தமிழ் வளர்ச்சி-பண்பாடு ஆகியவற்றை 1-4—1993 காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும்—2 நாள் எடுத்துக் கொள்ளக் கூடிய கல்வியை ஒரே நாளிலே, நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம் என்றும், நாளை பால் வழங்கு திட்டங்கள், கூட்டுறவு, நுகர் பொருள் வழங்கல் என்ற முறையில் நாம் நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்துக் கொள்வது பொருத்தமாகவும், நலமாகவும் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழு முடிவின்படி இன்றையதினம் பால் வழங்கு திட்டங்கள், கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய காரணத்தால், அவற்றை முன் மொழிந்துவிட்டால், இன்றைக்கே எடுத்துக் கொண்டு, விவாதம் நாளை நடந்து அதன் பதிலுரையை வைத்துக் கொள்ளலாம். முன் மொழிவதை மட்டும் இன்றைக்கே வைத்துக்கொண்டால், இன்றைக்கே அதை எடுத்துக் கொண்டதாக வரும். அதைப்போலவே நாளைய தினம் கல்வி மானியத்தைக் கூட, இது முடிந்த பின்னால் முன் மொழிந்து விட்டால் ஏற்கெனவே நடைமுறைப்படுத்திய திட்டத்தின்படி நடந்ததாகவும் ஆகும். ஆகவே இன்று முன் மொழிந்துவிட்டால், விவாதத்தை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

(ஐ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

(ஓ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

(ஓ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பால் வழங்கு திட்டங்கள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,77,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

மானியக் கோரிக்கை எண் 23, கூட்டுறவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 73,71,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

என்று கோருகிறேன்.

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 857, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 73,71,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 34, நுகர்பொருள் வழங்கல். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'-நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 527,31,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மூன்னுரையாக மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தமிழிலே வைக்கப்பட்டுள்ள குறிப்புகளை* என்னுடைய முன்னுரையாக எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபின், பதிலுரை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 124—249ஆம் பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்துள்ள முன்னுரையைத் தொடர்ந்து, நாளைய தினம் விவாதம் இந்த மானியக் கோரிக்கைகள்மீது தொடரும். திரு. நா. சா. பழனிசாமி நாளைய தினம் முதலிலே பேசுவார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31—3—1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

128. 25—3—1988-ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறையின் அறிவிக்கை எண் II (2)/ஏஜி/2939/83-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 13—10—1992 ஆம் நாளிட்ட 622-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

129. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30—10—1990ஆம் நாளிட்ட 971-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

130. திரு. டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவராக நியமித்ததை குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 31-7-1992-ஆம் நாளிட்ட 490-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்துள்ள முன்னுரையைத் தொடர்ந்து, நாளைய தினம் விவாதம் இந்த மானியக் கோரிக்கைகள்மீது தொடரும். திரு. நா. சா. பழனிசாமி நாளைய தினம் முதலிலே பேசுவார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31—3—1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

128. 25—3—1988-ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறையின் அறிவிக்கை எண் II (2)/ஏஜி/2939/83-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 13—10—1992 ஆம் நாளிட்ட 622-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

129. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30—10—1990ஆம் நாளிட்ட 971-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

130. திரு. டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவராக நியமித்ததை குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 31-7-1992-ஆம் நாளிட்ட 490-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1993 மார்ச் 30]

131. திரு. கே. சந்திரசூடன், இ.ஆ.ப., அவர்களை குடிசைமாற்று வாரியத் தலைவராக நியமித்ததைக் குறித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 16-5-1991-ஆம் நாளிட்ட 826-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

132. 1990—91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

133. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

134. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

96. கோரிக்கை எண் 10—பால்பண்ணை வளர்ச்சித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண் 23—கூட்டுறவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

98. கோரிக்கை எண் 34—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94. (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

131. திரு. கே. சந்திரசூடன், இ.ஆ.ப., அவர்களை குடிசைமாற்று வாரியத் தலைவராக நியமித்ததைக் குறித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 16-5-1991-ஆம் நாளிட்ட 826-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

132. 1990—91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

133. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

134. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

96. கோரிக்கை எண் 10—பால்பண்ணை வளர்ச்சித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண் 23—கூட்டுறவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

98. கோரிக்கை எண் 34—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94. (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு-1

(121ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1993-94 ஆம் ஆண்டிற்கான பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.

கோரிக்கை எண் 10.

பால்பெருக்குத் துறை.

முன்னுரை :

பால்வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலாக நவீன பால்பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப் பட்டது. பால் வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத் தில் உள்ளதைப் போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப் படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குக் கொண்ட தாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல் மட்டத்தில் மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

குறிக்கோள்—

பால்வளத்துறையின் முக்கியமான குறிக்கோள்கள் :

(அ) நிலையாக, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்கு படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தி யாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள்;

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் நடவடிக்கைகளை பால் பண்ணை வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது:—

(அ) பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால் நடைகளுக்கு இலவசமாக கால் நடை மருத்துவ வசதி அளித்தல். செயற்கை முறை கருவூட்டல்

1993 மார்ச் 30]

நடத்துதல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால் நடை பராமரிப்புப் பயிற்சி அளித்தல் இவை அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும் பாலை விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் (Infra-tructure facilities) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், நுகர்வோர் நலனுக்காக பால் துகள் (பால் பவுடர்) உற்பத்தி ஆலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனை முறை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல் படுத்தப் பட்டு வருகிறது.

இவ்விணையம் பால் வளத் திட்டங்களை, தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 16 மாவட்டங்களில் செயல் படுத்தி வருகிறது ;

சென்னை—செங்கல்பட்டு,எம்.ஜி. ஆர்., தென்னாற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார் மதுரை, திண்டுக்கல்—அண்ணா, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மற்றும் புதுக்கோட்டை.

பால்வளத் திட்டங்கள், எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மாநிலத் திட்ட நிதியிலிருந்து நிறைவேற்றப்படுகின்றன.

சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதி திராவிடர் நலத் திட்டம் முதலியன சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1993 மார்ச் 30

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால் நடைகளுக்கு மருத்துவ வசதியும் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்பு குழுக்களும், 13 நடமாடும் கால் நடை மருந்தகங்களும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-Operation) காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், கன்னியா குமரி, நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய மாவட் டங்களில் இயங்கி வருகின்றன.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல் பதிவு செய்தல், அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டு றவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள் 1988 ஆகிய விதிகளை நடை முறைப்படுத்துதல் ஆகிய பணிகளை பால் பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தி யாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத் தினரும் வழங்கும் பாலைப் பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப் படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில்,பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் மருத்துவ வசதிக்குழுக் களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தி யாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. சங்க செயலாளர் களுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்க மும், தங்கள் சொந்த செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத் துள்ளது. இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றது.

1993 மார்ச் 30]

பால்வளத் துறையின் முன்னேற்றம் :

அரசு திட்ட நிதி உதவியுடனும், பிற சிறப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடனும், கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பால்வளத் துறை அடைந்துள்ளது:—

வரிசை எண்ணும் இனமும்.	31—12—1991 வரை செயலாக்கம்.	31-12-1992 வரை செயலாக்கம்.
(1)	(2)	(3)
1. முதன்மை சங்கங்களின் எண்ணிக்கை.	8,979	9,613
2. மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை.	17	17
3. உறுப்பினர்களின் எண்ணிக்கை.	24.06 லட்சம்	25.12 லட்சம்
4. பால் உற்பத்தி (சங்கங்கள் அளவில்)	14.31 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	14.65 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)
5. பால் கொள்முதல் (ஒன்றியங்கள் அளவில்)	11.09 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	11.67 லட்சம்) லிட்டர் (நாள் ஒன்றுக்கு)
6. சென்னை நகரத்தில் பால் விற்பனை.	6.82 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	7.32 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)
7. பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை	16	17
அவற்றின் திறன்.	15.87 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	17.04 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)
8. குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை	44	43
அவற்றின் திறன்.	7.63 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)	7.51 லட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு)
9. தானியங்கி பால் நிலையம்	135	150

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில்வளர்ச்சி:

1991-92ல் புதியதாக 675 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1992-93-ல் 475 கூடுதல் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 31—12—1992 வரை 397 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெண்களுக்காக 202 சங்கங்கள் தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

பால் கூட்டுறவு சங்கங்களின் முக்கிய புள்ளி விவரங்கள் :

தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கள்:

(அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்	9549
(ஆ) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ..	11
(இ) கூட்டுறவு பால் பண்ணைகள் ..	2
(ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் .	50
(உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் .	1
(ஊ) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள். ..	17
(எ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்) .	1

பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள்.

(1) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம் :

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்த ரூ. 7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தினை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி, ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதத்தை கடனாக வழங்கும். மீதம் 30 சதவீதத்தை மாநில அரசு மானியமாகவும், பங்கீட்டுத் தொகையாகவும் வழங்கும். இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

1. 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்,

1993 மார்ச் 30]

2. கூடுதலாக 73,000 கால்நடைகளைக் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

3. 651 கூட்டுறவு சங்கங்களுக்குக் கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

4. மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

5. தற்போதுள்ள திருநெல்வேலி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

6. நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனைசெய்தல். இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்குப் பயன்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு தற்போதைய 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

அரசு தன் பங்குத் தொகையான ரூ. 211.50 லட்சத்தில் 31—3—1992 வரை ரூ. 165.875 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன பங்குத் தொகையான ரூ. 493.50 லட்சத்தில் 31—3—1992 முடிய ரூ. 281.00 லட்சம் அந்நிறுவனத்தாரால் வழங்கப்பட்டுள்ளது.

காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்.

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், காமராஜர் மாவட்டத்தில் பால்பண்ணை அமைப்பதற்கு ரூ. 465.50 லட்சம் திட்ட மதிப்புடன் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் 70 சதவீதம் (ரூ. 325.85 லட்சங்கள்) தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும் 30 சதவீதம் (ரூ. 139.65 லட்சங்கள்) அரசு மான்யமாகவும் / பங்குத் தொகையாகவும் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. 25 சதவீத தொகையினை அரசு மார்ச் 1992 திங்கள் வரை வழங்கியுள்ளது.

புதிய திட்டங்கள்.

பால்பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு சூரிய வெப்ப கொதிகலன்கள் அமைத்தல்.

1992–93 ஆம் ஆண்டில், திருச்சி மற்றும் அம்பத்தூர் பால் பண்ணை, திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு சூரிய வெப்ப கொதிகலன்கள்

[1993 மார்ச் 30

அமைக்க ரூ. 10.00 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு எரிசக்தி நிறுவன ஆலோசனையின் பேரில் தமிழ் நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

1993–94-ம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நீதி உதவியுடன் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சி திட்டங்களை கன்னியாகுமரி, இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. 1993–94 இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 17.89 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கறவை மாடுகள் மானியத் திட்டம் :

ஆதிதிராவிட பழங்குடியினருக்காக, ஆதி திராவிடர் நலம், மற்றும் சிறப்பு மத்திய உதவியுடன் செயல்படும் இத்திட்டத் தின் கீழ் ஒரு கறவை மாட்டின் விலை ரூ. 3,200லிருந்து ரூ. 4,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது ஒரு கறவை மாடு வாங்க வழங்கப்பட்ட மான்யத் தொகை ரூ. 1,600-லிருந்து ரூ. 2,250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டம் அரசு உதவியுடனும் ஆதிதிராவிட நலத்துறை வரவுச் செலவுத் திட்டத்தின் கீழும் சிறப்பு மத்திய உதவியின் கீழும், தாட்கோ நிறுவனம் அளிக்கும் சலுகையின் கீழும் செயல்படுத் தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டு முதல் இத்திட்டம், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மூலம், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் (1992–93) இத்திட்டங்களில் கீழ்க்கண்ட வாறு இலக்கு விதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்.	இலக்கு எண்ணிக்கை. (கறவை மாடுகள்)	நிதி ஒதுக்கீடு. (ரூ. இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1.	ஆதிதிராவிடர் நலத் திட்டம்	8,000	180.00
2.	ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிருத்துவர்களாக மதம் மாறிய வர்கள்.	66	1.50
3.	தாட்கோ ..	10,000	225.00

1993 மார்ச் 30]

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்:

பால் பெருக்குத் திட்டத்தை மூன்று அடுக்கு 'ஆனந்த்' பாணியில் செயல்படுத்துவதற்காக, கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதும், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான (கட்டுப்படியான) விலையை அளிப்பதும் நகரங்களில் வாழ்கிற மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் விற்பதும் கொள்கையாகும்.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் தமது ஒன்றியங்களுக்காகத் தேவையான உறைவிந்து நிலையம், பொலிகாளை பேணல், ஆகிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின் கீழ், அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய மூன்று இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் கொள்திறனுடன் அம்பத்தூரிலும், நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் கொள்திறனுடன் மாதவரத்திலும், பால் பொருட்களான கோவா, ஐஸ்கிரிம் யோகர்ட் போன்றவைத் தயாரிக்க 12,000 லிட்டர் கொள்திறனுடன் அயனாவரத்திலும் இப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதின் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணையில் பால் துணைப் பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட் மற்றும் கோவா உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும் பால்துகள், நெய், வெண்ணெய், பாலாடை போன்ற பாற்பொருட்களையும் இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது. ஒன்றியங்களை ஒருங்கிணைத்து வழி நடத்தி அவற்றிற்கு தொழில் நுட்ப உதவிகளையும் இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் நிறுவுதல், பால் குளிரூட்டு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளையும் இணையம் Turn key அடிப்படையில் மேற்கொள்கிறது.

[1993 மார்ச் 30

மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால்.

(நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் லிட்டர்களில்)

வரிசை எண்.	மாவட்டம்.	1990-91	1991-92	1992-93 (டிசம்பர் 92 முடிய).
(1)	(2)	(3)	(4)	(5)
1	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	64	54	53
2	தென்னார்க்காடு	89	83	75
3	வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர்.	246	243	238
4	தர்மபுரி	81	76	76
5	சேலம்	175	182	199
6	பெரியார்	115	102	124
7	கோயம்புத்தூர்	89	85	87
8	நீலகிரி	25	26	27
9	திருச்சி	68	73	75
10	தஞ்சாவூர்	15	12	10
11	புதுக்கோட்டை	3	2	1
12	திண்டுக்கல்-அண்ணா ..	41	41	39
13	மதுரை	79	80	69
14	இராமநாதபுரம்	15	14	16
15	காமராஜர்	11	10	11
16	திருநெல்வேலி	38	43	55
17	கன்னியாகுமரி	10	11	11
	மொத்தம் ..	1,164	1,137	1,168

1993 மார்ச் 30]

பால் விலை :

(அ) கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான விலை).

பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும், கொள்முதல் விலை பால் உற்பத்தியாளர்களுக்கு அவ்வப்போது கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

காலம்.	எருமைப் பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு.	பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
15–8–1987 முதல் 14–10–1987 வரை	50.00	24·00
15–10–1987 முதல் 31–10–1987 வரை.	48.00	24.00
1–11–1987 முதல் 31–3–1988 வரை	48.00	23.00
1–4–1988 முதல் 2–11–1988 வரை	50.00	24.00
3–11–1988 முதல் 30–11–1990 வரை	58.00	28.00
1–12–1990 முதல் 14–5–1991 வரை	64.25	30.75
15–5–1971 முதல் 22–2–1992 வரை	67.15	32.30
23–2–1992 முதல் 30–4–1992 வரை	90.00	32.30
1–5–1992 முதல் இன்று வரை ..	90.00	36.15

(ஆ) விற்பனை விலை :

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும், பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதின் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும் விற்பனை விலையைக் கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றி அமைக்கப் பட்டது:—

	8-8-87 முதல்	1-11-87 முதல்.	16-11-88 முதல்.	25-1-1992 முதல். பாலிதின் பைகளில்	25-1-1992 முதல். தானியங்கி நிலையங்களில்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
பால் அட்டை	4.20	4.50	5.00	5.90	6.00
ரொக்கத்திற்கு.	4.30	4.60	5.20	6.10 (தரம் உயர் பால்).	6.00 (நிலைபடுத்திய பால்).

கால்நடைத் தீவன ஆலை.

கால்நடைத் தீவன உற்பத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன:—

1. செங்கை-எம்.ஜி.ஆர். ஒன்றியம் .. மாதவரம்.
2. பெரியார் ஒன்றியம் .. ஈரோடு
3. மதுரை ஒன்றியம் .. கப்பலூர்.

மேற்குறிப்பிட்டுள்ள ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறனும் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம் மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் ''பெல்லெட்'' (Pellet) மற்றும் '' மேஷ் '' (Mesh) வகைகள் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு, ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் இத்தீவனம் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேற்சொன்ன கால்நடைத் தீவன ஆலைகளில் 1992-93 ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் வருமாறு :—

இருப்பிடம்.	1992-93 டிசம்பர் 92 முடிய. உற்பத்தி. (டன்)	விற்பனை (டன்)
(1)	(2)	(3)
சென்னை மாதவரம் ..	8,463	8,390 (தொடக்க இருப்பு உள்பட)
ஈரோடு ..	15.435	15,553
கப்பலூர் ..	4,710	4,605
மொத்தம் ..	28,608	28,548

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பால் மற்றும் பால் பொட்ருகள் விற்பனை :

1992-93 ஆம் ஆண்டில் சென்னையில் நாளொன்றுக்கு 7.32 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 1991-92 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 6.82 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. 521 பால் விற்பனை நிலையங்கள், 51 பாலகங்கள் 150 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 96 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி. டேங்க) இவைகளின் மூலமாக வாடிக்கை நிறுவனங்களுக்கு மொத்த விற்பனையாகவும், தனி வாடிக்கையாளர்களுக்கு 1/2 லிட்டர், 1 லிட்டர் பாலிதின் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் பால் விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு 32 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

[1993 மார்ச் 30

பால் பொருட்கள் விற்பனை விவரம் பின்வருமாறு :—

இனங்கள்.	1990—91	1991—92	1992—93 (டிசம்பர் 1992 முடிய)
(1)	(2)	(3)	(4)
பால் நாளொன்றுக்கு சராசரி (லட்சம் லிட்டர்).	6.60	6.82	7.32
வெண்ணை (டன்னில்)	845	1,132	851
நெய் (டன்னில்)	129	226	169
பால் பொடி (டன்னில்)	138	46	3

இணையத்தின் மொத்த விற்பனை 1992—93-இல் டிசம்பர் 1992 முடிய ரூ. 129.49 கோடியாகும்.

பால் பெருக்குத் திட்டம்—1.

பால் பெருக்குத் திட்டம் முதல் கட்டமாக ஜூலை 1972 முதல் மார்ச் 1981 வரை செயல்படுத்தப்பட்டது. ரூ. 15.48 கோடி பால் பெருக்குத் திட்டம்—1-ன் கீழ் செலவிடப் பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம்—2.

பால் பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம்-2 துவங்கப்பட்டது. பால் பெருக்குத் திட்டம்2-ல் முன்பிருந்த 9 மாவட்டங்கள் தவிர, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் முடிவுற்ற நிலையில் 12 மாவட்டங்களில் பால் உபரிக் காலத்தில் நாளொன்றுக்கு 10.15 இலட்சம் லிட்டர் பால் 5,170 கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 8.19 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். ரூ. 35.66 கோடி இத்திட்டத் தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

1993 மார்ச் 30]

பால் பெருக்குத் திட்டம்-3.

ஆனந்த் பாணியில் ஒருங்கிணைந்த கூட்டுறவில் ஒரு நிலையான எதிர்கால வளர்ச்சியை உருவாக்கி, 13 மாவட்டங்களையும், நகர்புற பால் பண்ணைகளையும் உள்ளடக்கிய கருத்துரு ஒன்று ரூ. 68.19 கோடி மதிப்பீட்டில் தேசிய பால் வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அனுப்பியுள்ளது.

சேலம், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, தர்மபுரி மதுரை, கோயம்புத்தூர் வட ஆற்காடு—அம்பேத்கார், பெரியார் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டங்களின் திட்டத்திற்கும், தென் சென்னையில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைப்பதற்கும் அம்பத்தூர் பால் பண்ணையை நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டராக பதப்படுத்தும் திறனுக்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கும், தேசிய பால்வள வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரை தேசிய பால்வள வாரியம் இந்த 9 மாவட்டங்களுக்கும் இணையத்திற்கும் ரூ. 62.20 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது மற்றும் 4 மாவட்டங்களான நீலகிரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்—அண்ணா ஆகிய மாவட்டங்களின் கருத்துக்கள் தேசிய பால்வள வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.

உள்ளீட்டுப் பணி.

பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்.

1992—93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) இவ்விணையத்தில் நாளொன்றுக்கு 11.69 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியை பெருக்குவதற்காக 1992-93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) 384 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் துவக்கப்பட்டு, 13.58 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும். செயற்கை இனவிருத்தி செய்வதற்கு தேவையான உறைவிந்து குச்சிகள், கால்நடை தீவனங்கள், பசும்புல் உற்பத்திக்கான மானியம், வெக்கை மற்றும் கோமாரி நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டன. செயற்கை கருவூட்டலில் கிராம அளவிலான தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) 5,61,830 கறவை இனங்களுக்கு உறைவிந்து செலுத்தப்பட்டது.

[1993 மார்ச் 30

1992–93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நல்ல தேர்ச்சி பெற்ற கால் நடை மருத்துவர்கள் மூலம் 4,18,225 கால் நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர நேர அழைப்பிற்காக அவசரக் கால சிகிச்சை வழித்தடங்கள் செயல்படுத்தப்பட்டன 1992—93 ஆம் ஆண்டு 75 நடமாடும் கால்நடை சிகிச்சைத் தடங்களும், 36 அவசரகால சிகிச்சை தடங்களும் செயல்முறைப்படுத்தப்பட்டன.

உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி.

செயற்கை கருவூட்டலின் பயனாக 1992–93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) 65,563 அதிக வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன.

தமிழ் நாட்டில் உள்ள எருமை இனங்களின் உற்பத்தித் திறனை முர்ரா இன எருமைகளோடு கலப்பினம் செய்வதன் மூலம் உயர்த்தலாம். எனவே முர்ரா இன எருமைகளின் உறைவிந்து குச்சி தயாரிப்பதற்காக எருமை இன பொலி காளை நிலையம் 1986 ஆம் ஆண்டு ஈரோட்டில் நிறுவப் பட்டது. தற்போது 52 முர்ரா இன காளைகள் இந் நிலையத்தில் பராமரிக்கப்பட்டு எருமை இன விந்து சேகரிக்கப் படுகிறது. இந்நிலையத்தில் 1992–93 ஆம் ஆண்டு (டிசம்பர் 1992 முடிய) 2.56 இலட்சம் முர்ரா இன எருமை உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

உதக மண்டலத்திலுள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையில் 6.41 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

மரபுவழி வம்சத் திட்டம்.

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான பொலி காளைகள் தேர்ந்தெடுப்பதற்காக 1986 ஆம் ஆண்டு மரபு வழி வம்சத் திட்டம் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில், தாய்பசுவின் பால் உற்பத்தித் திறனுடன் மரபு வழி வம்சத் திட்டத்தின்கீழ் உள்ள பொலிகாளைகள் மூலம் பிறந்த கிடாரிக் கன்றுகளின் பால் உற்பத்தித் திறன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. தற்போது இத்திட்டம் தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் எருமை இனக் காளைகளுக்காக நடை முறைப்படுத்தப்படுகிறது. மதுரை, திண்டுக்கல்—அண்ணா, தஞ்சாவூர், வட ஆற்காடு—அம்பேத்தார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கலப்பினங்களுக்கான வம்சா வழித் திட்டம் விரிவு படுத்தப்பட்டு உள்ளது.

1993 மார்ச் 30]

சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம்.

தமிழ் நாட்டில் தென்னாற்காடு, வட ஆற்காடு—அம்பேத்கார், மதுரை, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் திண்டுக்கல்—அண்ணா ஆகிய மாவட்டங்களில் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால், கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

நான்கு மாத வயது முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள் குறுவிவசாயிகள் மற்றும் விவசாயக்கூலிகள் இத்திட்டத்தில் பயனாளிகளாகப் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு பயனாளியும் ஒரு கன்று வீதம் வளர்க்க திட்டத்தில் மானியம் தீவனமாக (தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால் தயாரிக்கப்பட்ட தீவனம்) அளிக்கப்படுகிறது.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை:

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, பால்கூட்டுறவு தணிக்கை வாரியம் நீக்கப்பட்டபின் 1987-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இத்துறையானது, பால் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தின் அனைத்து ஆரம்ப பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் ஒரு தலைமை இணையமான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கைச் செய்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தணிக்கை முன்னேற்றம்:

(அ) பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை.

1. 1991-92 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை.

மொத்தமுள்ள 9,062 சங்கங்களில், கணக்குப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்ற 8,337 சங்கங்களின் தணிக்கை முடிக்கப் பெற்றுள்ளது. மீதமுள்ள சங்கங்களின் புத்தகங்கள் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக விசாரணை அலுவலர், காவல் துறை மற்றும் நீதிமன்றங்களில் உள்ளதால் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளது.

2. 1992–93 ஆம் ஆண்டு தணிக்கை

1991–92 ஆம் ஆண்டுக்கு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்ட அனைத்து சங்கங்களிலும் 1992–93 ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை.

1. 1991–92 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை.

1991–92 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் முடிக்கப்பட்டு விட்டது.

2. 1992–93 ஆம் ஆண்டுக்கான தணிக்கை.

அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் 1992–93 ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது.

(இ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1987 ஆம் ஆண்டு வரைக்கான இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1988–89, 1989–90 1990–91 ஆண்டுகளுக்கான தணிக்கையினை பட்டய கணக்கர்களைக்கொண்டு முடிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1991–92 ஆம் ஆண்டு முதல் தணிக்கை தொடர்ந்து பால் தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களால் மேற்கொள்ளப்படும்.

3. அரசு வருவாய் வசூல்.

தணிக்கை மேற்கொள்ளப்படும் அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு அரசு வருவாய்க் கணக்கில் சேர்க்கப்பட்டு வருகிறது. 1992–93 ஆம் ஆண்டுக்கு நிதி நிலை அறிக்கையில் இவ்வினத்தில் வசூலிக்க மதிப்பிடப்பட்ட ரூ. 79.00 இலட்சத்தில் 31–12–1992 முடிய ரூ. 54.09 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு II

(121–ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கூட்டுறவுத் துறையின் 1993-94 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

1. முன்னுரை.

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் கடந்த எண்பது ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இது பல பிரிவுகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. தொடக்கத்திலிருந்தே இது கிராமப் பகுதிகளின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வியக்கம் வியக்கத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளதால், மாநிலப் பொருளாதாரத்தில் பல்வேறு பிரிவுகளான வேளாண்மை உற்பத்தி, பதப்படுத்துதல், பண்ணைகளில் இயந்திரமயமாக்குதல், கைத்தறி, பால் உற்பத்தி, கிராமியக் கைவினைப் பொருட்கள், ஊரகத் தொழில்கள் ஆகியவைகளின் வளர்ச்சியில் பங்கு கொள்கின்றது.

2. தற்போது அரசின் பல்வேறு துறைகளும் கூட்டுறவு இயக்கத்தில் பங்காற்றுகின்றன. இத்துறைத் தலைவர்கள் மற்றும் தொழிற் கழகங்களின் தலைவர்களுக்குப் பதிவாளரின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டு அதன் மூலம் அந்தந்தத் துறைகளில் கூட்டுறவு வளர்ச்சி பெற்றது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைத் தவிர இத்தகைய செயல்முறைப் பதிவாளர்கள் பதின்மூன்று பேர் உள்ளனர்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள், வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டுக் கடன், நகர்ப்புறக் கடன், வேளாண்மை பொருட்கள் விற்பனை மற்றும் பதப்படுத்துதல், வேளண்மை இடுபொருட்கள் விநியோகித்தல், தமிழ்நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களை நுகர்வோர் கூட்டுறவுகள் மூலமாகவும் பொது விநியோகத் திட்டம் மூலமாகவும் விநியோகித்தல் மற்றும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு செயலாற்றுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் ஆண்டு வியாபாரத் தொகை சுமார் 5,864 கோடி ரூபாய் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய எண்ணிக்கை விவரங்களும் அச்சகங்களின் ஆண்டு விற்பனையளவு விபரங்களும் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன :

வரிசை எண்.	சங்கங்களின் வகைகள்.	சங்கங்களின் எண்ணிக்கை.	ஆண்டு விற்பனை அளவு. (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)	(4)
1	தலைமை கூட்டுறவு நிறுவனங்கள்	6	2,10,732.59
2	மத்திய கூட்டுறவு வங்கிகள்	18	1,54,472.93
3	கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்	29	40,128.84
4	கூட்டுறவு அச்சகங்கள்	18	213.77
5	கூட்டுறவு பயிற்சி நிலையங்கள்	9	40.25
6	மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்	16	81.85
7	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்	1	18.19
8	தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள்	4,655	50,932.00
9	தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	112	22,371.26
10	கூட்டுறவு நகர வங்கிகள்	131	42,114.08

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11	தொடக்க நிலவள வங்கிகள்	181	3,133.09
12	பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள்	1,632	41,778.00
13	நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள்	42	660.80
14	தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்	660	17,072.89
15	மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலைகள்	3,095	742.79
16	கூட்டுறவு சிற்றுண்டிச் சாலைகள்	55	298.02
17	பழம் பதப்படுத்தும் கூட்டுறவுச் சங்கம்	1	..
18	நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள்	30	46.43
19	நிலக்குடியேற்ற கூட்டுறவுச் சங்கங்கள்	56	4.12
20	காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ..	196	785.68
21	உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்	15	104.84
22	தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்	196	295.88
23	ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்	3	313.55
24	இதர பல்வகை கூட்டுறவுச் சங்கங்கள்	45	21.17
	மொத்தம் ..	11,202	5,86,363.06 (அல்லது) 5,864 கோடி.

(i) பொது முன்னேற்றம் :

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகளான விவசாயக் கடன்களை வழங்குதல், வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல், உரங்கள் விநியோகித்தல், நுகர் பொருட்கள் விநியோகித்தல் போன்ற இனங்களில், 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டம் அடைந்த முன்னேற்றம் மற்றும் 1993-94 ஆம் ஆண்டிற்கான திட்டம் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்ணும் விவரமும்.	அலகு.	1992-93 ஆம் ஆண்டுக்கான திட்டம்.	ஏப்ரல் 1992 முதல் டிசம்பர் 1992 வரை அடைந்த முன்னேற்றம்.	1993-94 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல்.	ரூபாய் கோடியில்	300.00	259.65	310.00
2. நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல்.	,,	55.00	20.61	60.00
3. குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்களை வழங்கியதில் மொத்தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டவை.	சதவீதம்	68	63	69
4. நீண்ட கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல்.	ரூபாய் கோடியில்.	41.00	26.87	48.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
5. நகையீட்டுக் கடன்கள் வழங்குதல் ..	..	705.00	798.73	780.00
6. சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாரா பிரிவுக் கடன்கள் வழங்குதல்.	..	18.00	22.04	19.00
7. ஜிரசாயன உரங்கள் வழங்குதல் ..	..	120.00	168.73	135.00
8. வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்தல்.	..	325.00	198.97	350.00
9. கிடங்கு வசதியின் திரண்ட கொள்திறன்.	ஆயிரம் டன்களில்.	714.00	706.00	723.00
10. நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல்.	ரூபாய் கோடியில்.	1,300.00	920.26	1,400.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(i) வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு :

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான 1991-92 ஆம் ஆண்டிற்கான செலவு 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு மற்றும் 1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

திட்டங்களின் விவரம்.	1991-92 ஆம் ஆண்டிற்கான செலவு.	1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு.	1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் கோடியில்)		
அ. மாநில திட்டப் பணிகள் :				
(1) நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்.	0.0401	0.0031	0.0031	0.0031
(2) கடன் கூட்டுறவுச் சங்கங்கள்	4.2953	1.5610	0.6936	1.4287
(3) ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள்	0.1000	0.0860	0.5851	0.2861
(4) கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.	0.0200	0.0260	0.0509	0.0450

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(5) பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்.	0.9150	0.7898	1.1373	0.7899
	5.3704	2.4659	2.4700	2.5528
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும், தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவிபெறும் திட்டங்களும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், கிராமிய மின்வசதிக் கழகம்.	48.0229	1.3723	4.7944	3.8634
பெருமொத்தம் ..	53.3933	3.8382	7.2644	6.4162

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. கடன்— குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன் :

(i) அமைப்பு :

தமிழகத்தில் குறுகியகால மற்றும் நடுத்தரக் காலக் கடன் வழங்குதலுக்கான கூட்டுறவுக் கடன் அமைப்பானது மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மையைத் தவிர பிற காரியங்களுக்கு கடன் வழங்கும் சென்னை மத்திய கூட்டுறவு வங்கி நீங்கலாக) மற்றும் கிராம அளவில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்.

(ii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் :

மாநிலத்தில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டு நாபார்டு வெளியீட்டின்படி இவ் வங்கிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 71.86 இலட்சம் ஆகும். அதில் 13.83 இலட்சம் உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். 29.96 இலட்சம் உறுப்பினர்கள் சிறு விவசாயிகள் ஆவர். இவ்வங்கிகளில் ஏறக்குறைய 42 சதவீதம் உறுப்பினர்கள் சிறு விவசாயிகள் ஆவர். 71.86 இலட்சம் உறுப்பினர்களில் 14.88 இலட்சம் உறுப்பினர்கள் கடன் பெறுகிறார்கள். மொத்த உறுப்பினர்களில் இவர்கள் 20.7 சதவீதம் பேர்கள் ஆவார்கள். மேலும் 13.83 இலட்சம் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களில் 5.61 இலட்சம் உறுப்பினர்கள் கடன் பெறும் உறுப்பினர்கள். இவர்கள் 40.56 சதவீதம் பேர்கள் ஆவார்கள். அகில இந்திய கணக்கீட்டின்படி ஒரு தொடக்கக் கூட்டுறவு வங்கியின் சராசரி கடன் லேவாதேவி ரூ. 5.64 இலட்சம் ஆகும். தமிழகத்தில் உள்ள ஒரு தொடக்கக் கூட்டுறவு வங்கியின் சராசரி கடன் லேவாதேவி ரூபாய் 12.44 இலட்சமாகும்.

அவைகள் பயிர் சாகுபடி செலவிற்கான குறுகிய காலக் கடன்களையும், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை முதலிய வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. அவைகள் குத்தகை சாகுபடியாளர்களுக்கு பயிர்க் கடன்களையும் நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களுக்கு துணைந் தொழில்களுக்கான கடன்களையும் வழங்கி வருகின்றன. கடன்கள் தேவையின் அடிப்படையில் ரூ. 50,000 வரை (அதில் நபர் ஜாமீன் பேரில் 30,000 ரூபாய் வரை) வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களில் ரொக்கம் ஒரு பகுதியாகவும், உரம், விதை, பூச்சிக் கொல்லிகள் உட்பட்ட இடுபொருட்கள் ஒரு பகுதியாகவும் உள்ளன. குறுகிய காலப் பயிர் சாகுபடி கடன்கள் அறுவடை முடிவுற்ற பின்னர் மகசூல் தொகையிலிருந்து அதிகபட்சமாக

1993 மார்ச் 30]

15 மாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். துணைத் தொழில்களை மேற்கொள்ளுவதற்கான நடுத்தரக் காலக் கடன்கள் 3 முதல் 5 ஆண்டு காலத்திற்குள் முதலீட்டின் மூலமாக பெற்ற வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது வைப்பு நிதியைத் திரட்டுவதிலும், கடன் வழங்கலை பரவலாக்கி பன்முகப்படுத்துவதிலும் வெகுவாகத் தம்மை ஈடு படுத்திக் கொண்டுள்ளன. கிராம மக்களைக் கவரும் நோக்குடன் வைப்புத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் அளிக்கும் வட்டியை விட 1.5 விழுக்காடு கூடுதலாக வட்டி வழங்க அவை அனுமதிக்கப் பட்டுள்ளன.

(iii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள் :

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் எல்லைகளுக்குள் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். இந்தியாவில் மொத்தம் 353 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் 18 வங்கிகள் உள்ளன. மேலும் சில வங்கிகள் அமைக்கப்பட உள்ளன. இந்தியாவில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பங்கு மூலதனத்தில் 9.53 சதவீதமும், ஒதுக்கப்பட்ட நிதியில் 13.1 சதவீதமும், வைப்புத் தொகையில் 10.14 சதவீதமும் தமிழ்நாட்டில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கொண்டுள்ளன.

அவை தங்களது நிதி ஆதாரங்களைப் பங்கு மூலதனம், இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்டநிதிகள் (Reserve Fund), வைப்புத் தொகை (desposits) முதலியவற்றிலிருந்தும் மற்றும் தமிழ் நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒப்பளிக்கும் கடன் அளவு வரம்புகளிலிருந்து (Credit Limits) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிக்கின்றன. 31—12—1992 ஆம் நாளன்று தமிழக அரசு வழங்கியுள்ள ரூபாய் 19.55 கோடி உட்பட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மொத்த பங்கு மூலதனம் ரூ. 104.07 கோடியாகும். 31—12—1992-ன்படி, இவ்வங்கி களின் ஒதுக்கிய நிதிகள் ரூபாய் 113.04 கோடியும், வைப்புத் தொகை ரூபாய் 1,302.27 கோடியும் ஆகும். 31—12—1992-ன் படி, அவை வழங்கிய மொத்தக் கடன்கள் ரூபாய் 1,886.97 கோடியாகும். அவை அவற்றின் எல்லையில் செயல்படும் எல்லா வகையான கூட்டுறவுகளுக்கும் நிதி வசதி அளிக்கின்றன. கடன்தாரர்களின் தவணை தவறியக் கடன் தொகையினை திரும்பச் செலுத்தாமையால் பாதிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தவிர, இதர மத்திய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் இலாபத்தில் செயல்பட்டன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கு அவற்றின் சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வங்கியிலிருந்து வாங்கிய கடன்களிலிருந்தும் நிதி உதவி அளிக்கின்றன. மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு வழங்கப்படும் கடனில் மூன்றில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அது போன்றே தமிழகத்தில்வங்கியியல் பிரிவிலுள்ள மொத்த வைப்புத் தொகைகளில் ஐந்தில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் பெற்றுள்ளன.

சென்ற வரவு-செலவு கூட்டத் தொடரின் போது, புதியதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களுக்குப் புதிய மத்தியக் கூட்டுறவு வங்கிகள் துவங்குவது குறித்து குறிப்பிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது. இம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டதால் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர் மாவட்டங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983-ன்படி, உடைமைகளும் கடப்பாடுகளும் பிரிக்கப்படுவதில் உள்ள செயல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. புதியதாக அமைக்கப்பட்டுள்ள வங்கிகளின் வங்கியியல் பணிகள் ஏப்ரல்/மே மாதங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடத்திய பிறகு தொடங்கப்படும்.

காயிதேமில்லத்-நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்று நாகப்பட்டினத்திற்கு மாற்றப்படும். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி கொண்டிருந்த வைப்புத் தொகைகள் கூட்டுறவு வங்கியிலேயே வைக்கப்படும் பொருட்டு, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி தனது கிளை ஒன்றினை கும்பகோணத்தில் ஏற்படுத்தும்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஒரு புதிய வங்கி 8—1—1993 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு இடைக்கால நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வேலூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் உடைமைகளும் கடப்பாடுகளும் மாற்றப்படுவதற்கு வேண்டிய செயல்முறைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(IV) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி:

சென்னை நகரில் 1905 ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கியாக தொடங்கப்பட்ட இவ்வங்கி தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வங்கி

1993 மார்ச் 30]

வேளாண்மை மற்றும் வேளாண்மை சாரா்க் கடன் வழங்குவதில் பெரும் பங்கினை ஆற்றி வருகிறது. இவ்வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். இவ்வங்கி வேளாண்மைக்கான குறுகியக் காலக் கடன்கள் வேளாண்மை முதலீட்டிற்கான நடுத்தரக் காலக் கடன்கள் நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள் நெசவுத் தொழிலுக்கான நிதியுதவி மற்றும் உற்பத்தி அடமான கடன்கள் (Produce pledge loans) முதலியவற்றிற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான வங்கி வழங்கும் நிதியுதவியைப் பெற்று வழங்குகிறது. மேலும் உர வியாபாரம், பொது விற்பனை அத்தியாவசிய பொருட்கள் விநியோகம், சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகளுக்கான நடை முறை மூலதனம், காலக் கடன்கள் (Term Finance) போன்ற வற்றிற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கும் நிதி வசதி களுக்கு ஈடு செய்யும் ரொக்கக் கடன் (Cash credit limit) ஒப் பளிப்பு அளித்து வருகிறது. மேலும், மத்திய கூட்டுறவு வங்கி களின் பொது வங்கியியல் தேவைகளுக்கான (General Banking requirement) அவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அரசு பொறுப்பாட்சியர் கடன் பத்திரங்கள் (Govt. Trust securities) நிலை வைப்புத் தொகைகள் (Fixed Deposits) ஆகியவற்றின் பேரில் நடப்புக் கணக்கின் மீது அதிகப்பற்று வசதிக்கும் (Over draft) இவ்வங்கி வழிவகை செய்கிறது. இவ் வங்கி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட் டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து சாகுபடியாளர் இணையம் போன்ற பிற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரிடை யாக நிதி வசதி அளித்து வருகிறது. இவ்வங்கி, பண்ணை சாராப் பிரிவுக்கு கடன் உதவி வழங்குவதை எளிதாக்க ஒரு தொழில் நுட்ப உதவிப் பிரிவு ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோ-ஆப்டெக்ஸ், சாகோசர்வ் முதலி யன பெரிய அளவில் கிடங்கு கட்டுவதற்காக உலக வங்கி தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மூலமாக அளிக்கும் கடனுதவி முதன் முறையாக இவ்வங்கி மூலமாக அளிக்கப்படுகிறது. இவ்வங்கி மூன்றாவதாக உலக வங்கி கூட்டுறவு கிடங்கு வசதி திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தும் நிறுவனமாகவும் செயல்படுகிறது.

31—12—92 ஆம் நிலவரப்படி தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலதனம் ரூபாய் 5.83 கோடி (இதில் அரசின் மூலதனம் ரூபாய் 1.26 கோடி), வைப்புத் தொகை (Deposits) ரூபாய் 521.48 கோடி, ஒதுக்கப்பட்ட நிதி (Reserve Fund) ரூபாய் 31.77 கோடி ஆகும். இதன் மூலமும் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்தியத் தொழில் மேம்பாட்டு

[1993 மார்ச் 30

வங்கி (IBI) சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறும் மறுநிதி வசதியைக் கொண்டு இவ்வங்கி 31-12-92 ஆம் நாளன்று வழங்கிய கடன்களின் அளவு ரூபாய் 875 .50 கோடியாகும். இவ்வங்கி 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 12.63 கோடி அளவிற்கு நிகர லாபம் ஈட்டியுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிற்கு இவ்வங்கி சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்சமான 14 விழுக்காட்டளவிற்கு ஈவுத் தொகை வழங்கியுள்ளது. மேலும் 1991-92 ஆம் ஆண்டிற்கும் இதே அளவினை நிலைநிறுத்த எண்ணியுள்ளது.

(V) கடன் வழங்குதல்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் 1990-91, 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டுகளில் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின் வருமாறு :

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	குறுகிய கால பயிர் சாகுபடிக் கடன்கள்		துணைத் தொழில்களுக்கான நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள்.		வழங்கப்பட்ட மொத்த கடன்கள் (குறுகிய காலம் மற்றும் நடுத்தரக் காலம்)
	திட்டம்	முன்னேற்றம்.	திட்டம்	முன்னேற்றம்.	
1985—86	135.00	130.88	20.00	20.14	151.02
1986—87	160.00	162.45	20.00	25.32	187.77
1987—88	185.00	186.82	22.00	34.03	220.85
1988 89	215.00	205.04	30.00	40.14	245.18
1989—90	250.00	233,84	37.55	41.11	274.95
1990—91	260.00	243.98	40.00	40.02	284.00
1991—92	275.00	278.52	50.00	44.71	323.23
1992—93 (31-12-1992 வரை)	300.00	259.65	55.00	20.61	280.26

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் வேளாண்மைக் கடன்கள் வழங்கல் சீராக அதிகரித்து வருவதும், 1991–92 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் மிகவும் அதிகமென்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். அகில இந்திய அளவில் உள்ள இதைப் போன்ற நிறுவனங்கள் வழங்கிய கடன் தொகையில் தமிழ் நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகைகள் 12.27 சதவீதம் ஆகும். 1993-94 ஆம் ஆண்டுக்கான குறுகிய கால கடன் வழங்கலுக்கான குறியீடு 310 கோடி ரூபாயும், நடுத்தரக் காலக் கடனுக்கான குறியீடு 60 கோடி ரூபாயுமாகும்.

(VI) நில உடைமைதாரர்களைக் கூட்டுறவில் சேர்த்தல்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன. பொதுவாக, ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அதன் எல்லையிலுள்ள இரண்டு அல்லது மூன்று வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள மொத்த நில உடைமை விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 77.06 இலட்சம் ஆகும். சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 67.58 இலட்சமாகும். 31–12–1992 ஆம் நாள் வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 83.9 சதவீதத்தினரையும் சிறு மற்றும் குறு விவசாய குடும்பங்களில் 80.7 சதவீதத்தினரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுகளில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(VII) உடனடி கடன் வழங்கும் திட்டம் :

கடன் வழங்கல் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களை துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும் 1991-92 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் 31—12—1992 ஆம் நாள் வரை, 4, 203 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 31—12—1992 ஆம் நாள் வரை, 1.63 இலட்சம் கடன்தாரர்களுக்கு பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டு, அதில் 0.81 இலட்சம் பச்சை வண்ண அட்டை வைத்திருப்பவர்களுக்கு 38.53 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(VIII) சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்;

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நாபார்டு) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்த குறுகிய

[1993 மார்ச் 30

காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட்ட குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடனின் அளவும், 1992-93 ஆம் ஆண்டுக்கான திட்டமும் அதில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை எய்திய முன்னேற்றமும் பின்வருமாறு :—

வரிசை எண்ணும் விவரங்களும்.	ஆண்டு.	திட்டம் (விழுக்காட்டில்).	நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் கோடியில்.)	வழங்கப்பட்ட மொத்தக் கடனில் இதன் சதவீதம்
(1)	(2)	(3)	(4)	(5)
1 குறுகிய காலக் கடன்.	1991–92	66	170.64	61.3
	1992–93 (1992 டிசம்பர் 31 வரை.)	63	157.64	60.7
2 நடுத்தரக் காலக் கடன்கள்.	1991–92	95	41.41	92.6
	1992–93 (1992 டிசம்பர் 31 வரை.)	95	19.02	92.3

1993-94 ஆம் ஆண்டில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குறுகிய காலக் கடனில் 65 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 95 விழுக்காடும் வழங்கப்பட உள்ளது.

(IX) ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்:

வேளாண்மைத் தொழிலுக்கான குறுகிய காலக் கடன் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தர காலக் கடன் பெற்று பொருளாதார நிலையை மேம்படுத்த ஆதி திராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் நோக்கத்

துடன் அரசு 1981—82 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி உள்ளது. அரசு ஒவ்வொரு நபருக்கும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ள 110 இலட்ச ரூபாய் மானியத்தில் இதுவரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் 1.10 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு உள்ளனர். இத்திட்டத்தை தற்சமயம் மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1988—89 முதல் 1991—92 வரைக்கான காலத்தில் 65,092 ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாக்க மத்திய அரசு 65,092 இலட்ச ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. இவ்வாறு 31—3—1992 ஆம் நாள் வரை மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின்கீழ் 1.75 இலட்சம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் உதவி பெற்றுள்ளனர். 1992—93 ஆம் ஆண்டிலும் 20,000 ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு உதவி வழங்க 20.000 இலட்சம் ரூபாய் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டுக்கான மொத்த கடன் வழங்கும் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஆதி திராவிட மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் குறுகிய காலக் கடனில் 11.6 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 23 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1992—93 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 11 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 22 விழுக்காடும் கடன்கள் வழங்கத் திட்டமிட்டதில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை முறையே 10.4 விழுக்காடும், 26.8 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையின்படி 1993-94 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 12 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 23 விழுக்காடும் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(X) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்காக வணிக மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்துதல்:

வேளாண்மை ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்படி ரூபாய் 10 இலட்சம் கடன் லேவாதேவி எய்திடாத தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் பொருளாதாரத் தன்னிறைவு பெற ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் (i) தனது கடன் வழங்குதலை அதிகரித்தல் (ii) இலாபந் தரக்கூடிய இதர பணிகளை விரிவுபடுத்துதல், (iii) நிதி ஆதாரத்தி

[1993 மார்ச் 30

னைப் பெருக்குதல் (iv) தவணை தவறிய கடனைக் குறைத்து வரவு-செலவு அதிகரிப்பதன் மூலம் நடைமுறைச் செலவினத்தை ஈடுகட்ட ஒவ்வொரு ஆண்டும் இலாபம் ஈட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இதன் முதற் கட்டமாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதன் எல்லா அம்சங்கள் குறித்தும் மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1991 ஜனவரி திங்களில் நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்தும் நான்கு அலுவலர்களுக்கு இத்திட்டப் பயிற்சி மூன்று பகுதிகளாக வழங்கப்பட்டது. தொடர்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட இவ்வலுவலர்கள் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் வணிக மேம்பாட்டுத் திட்டத்தினை வகுத்துச் செயல்படுத்தும் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், செயற்படுத்துதல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான விரிவான வழிமுறைகள் கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முன்னேற்றத்தினைக் கண்காணிக்க மண்டல இணைப் பதிவாளர் தலைமையில் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போலவே, மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில், வணிக மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயற்படுத்த 409 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தெரிவு செய்யப்பட்டன. இதைப் போலவே 1992-93 ஆம் ஆண்டில் வணிக மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயற்படுத்த, 1,084 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டிற்கு முன்னர் 3,785 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

(XI) ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம்:

நடப்பு ஆண்டில் இந்திய அரசின் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்திப் பெருக்குத் திட்டம், மாநிலத்தில், நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் சங்கங்கள் நெற்பயிர் சாகுபடிக்காக பயிர்க் கடன்கள் அளிப்பது மட்டுமின்றி தேவையான இடுபொருட்களையும் வழங்கும். இத்திட்டம் அமுலாக்கப்பட்ட

1993 மார்ச் 30]

1988-89 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் அதில் எய்தப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு :—

ஆண்டு குறுகிய காலம்.	திட்டக் குறியீடு	அடைந்த முன்னேற்றம்
(1)	(2)	(3)
	(ரூபாய்	கோடியில்.)
1988-89	52.45	55.87
1989-90	63.10	69.30
1990-91	68.90	75.46
1991-92	85.26	86.49
1992-93 (31-12-1992 வரை).	102.94	105.07

1992-93 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு முழுவதையும் தற்போதே அடைந்துவிட்டதை இங்கே குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

(XII) எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டம் :

இத்திட்டம் கன்னியாகுமரி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான வங்கியின் மறுநிதி வசதியுடன் எண்ணெய் வித்துக்கள் பயிர்ச்சாகுபடி செய்ய கடன் வழங்கு வதே கூட்டுறவுகளின் தனித்தன்மை பங்காகும். 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 39.41 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிட்டதில் 43.60 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் 44.23 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிட்டுள்ளதில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 25.34 கோடி ரூபாய் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

(XIII) பயிர் ஈட்டுறுதித் திட்டம் :

1979 ஆம் ஆண்டு பயிர் ஈட்டுறுதித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டபோது இத்திட்டத்தில் முதலில் பங்கேற்ற மாநிலங்களுள் தமிழ்நாடு மாநிலம் ஒன்றாகும். இத்திட்டத் தின்கீழ் நெல் பயிர் மட்டுமே கொண்டுவரப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டு முதல் 1984-85 ஆண்டு வரையிலான காலத்தில் பிரிமியமாக ரூபாய் 22.28 இலட்சம் வசூலிக்கப் பட்டு, ஈட்டுத் தொகையாக ரூபாய் 25.62 இலட்சம் வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் விரிவான பயிர் ஈட்டுறுதி திட்டத்தினை மைய அரசு காரிப் 1985 பருவ காலம் முதல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் மைய அரசின் முகவரால் பொது காப்பீட்டுக் கழகத்தின் மூலம் மாநில அரசின் தீவிர ஒத்துழைப்புடன் செயலாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு வணிக மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு அறிவிக்கப்பட்ட பகுதிகளில் (Notified areas) வழங்கப்படும் குறுகிய காலப் பயிர்க் கடன்கள் முழுவதும் ஒரு விவசாயிக்கு ரூபாய் 10,000-க்கு மிகாமல் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. நெல் மற்றும் சிறு தானிய பயிர்களுக்கு பிரிமியத்தொகை ஈட்டுறுதி செய்யப் படும் தொகையில் இரு சதவீதமும் எண்ணெய் வித்துக் களுக்கு ஒரு சதவீதமும் வசூலிக்கப்படுகிறது. பெறப்படும் பிரிமியத் தொகையையும் வழங்கப்படும் ஈட்டுறுதித் தொகை யையும் மைய அரசும், மாநில அரசும் முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்கின்றன. ஆரம்ப காலம் தொட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே அளிக்கப் பட்டுள்ளது :

(ரூபாய் இலட்சங்களில்)

ஆண்டு.	விவசாயிகளின் எண்ணிக்கை.	பரப்பளவு (ஹெக்டேரில்).	ஈட்டுறுதி செய்த தொகை.	வசூலித்த பிரிமியத் தொகை.	வழங்கப்பட்ட ஈட்டுத் தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1985–86	106193	206027	3,689.00	69.08	81.03
1986–87	163874	228694	6,806.03	70.99	85.12
1987–88	221604	292506	7,900.32	132.76	122.67
1988–89	43444	79850	1,873.00	23.46	18.85*
1989–90	200011	297717	6,835.08	127.02	73.80
1990–91	247226	341935	8,074.75	146.66	248.80
1991–92	217438	315595	9,125.75	164.69	146.49

(*) இத்திட்டம் 1988–89–ஆம் ஆண்டில் காரிப் பருவத்தில் செயலாக்கப்படவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

ராபி 1992-93 பருவகாலம் முதல் புதுக்கோட்டை, மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் நெல் பயிருக்கு பயிர் அறுவடைப் பரிசோதனை பிர்கா அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது (ராபி 1992-93 பருவகாலத்தில்) கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயலாக்கத்தில் உள்ளது.

வரிசை எண். (1)	பயிர் (2)	அறிவிக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை. (3)	அறிவிக்கப்பட்ட பிர்காக்களின் எண்ணிக்கை (புதுக்கோட்டை மற்றும் பசும்பொன் மாவட்டம் மட்டும்) (15+6). (4)
1	நெல்	220	21
2	சோளம்	65	
3	கம்பு	54	
4	கேழ்வரகு	84	
5	நிலக்கடலை	138	
6	எள்	60	

(XIV) புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதி திட்டம் :

நடைமுறையில் உள்ள விரிவான பயிர் ஈட்டுறுதி திட்டத்துடன் புதிய திட்டத்தினை உருவாக்க பொது காப்பீடு கழகத்தை, திட்டம் தயாரிக்க மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டத்தை தெரிவு செய்து குறிப்பிட்ட சிறிய பகுதியில் அனைத்து விவசாயிகளுக்கும், அனைத்து இடையூறுகளுக்கும், அனைத்து பயிர்களுக்கும், அதற்குரிய பிரிமிய கட்டணம் (Actuarial) வசூலித்து இத்திட்டம் செயல்படுத்துவதாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

<u>இத்திட்டத்தின் சிறப்பியல்புகள் பின்வருமாறு :</u>

(1) இத்திட்டத்தின்கீழ் எல்லா விவசாயிகளும் தகுதியுடையவர்கள்.

(2) எந்தெந்தப் பயிர்களுக்கான முந்தைய விளைச்சல் விவரங்கள் கிடைக்கின்றனவோ மற்றும் எந்தப் பயிர்களுக்கு தேவையான எண்ணிக்கையில் அறுவடை பரிசோதனைகள் நடத்த முடியுமோ அவ்வாறான எல்லா பயிர்களுக்கும் இது பொருந்தும்.

(3) அதற்குரிய வீதத்தில் (Actuarial) பிரிமிய கட்டணம் இருக்கும்.

(4) பிரிமியத்திற்கு மானியம் எதுவும் கிடையாது.

(5) இத்திட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்கு காப்புறுதிக்கான வரையறை ரூ. 45,000 ஆகும்.

(6) மத்திய அரசும் மாநில அரசும் இழப்பீட்டுத் தொகையை 1:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

5—3—1993 அன்று புதுடில்லியில் வேளாண்மைக் கொள்கை தீர்மானம் மற்றும் முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம் ஆகியவற்றைப் பற்றி விவாதிக்க முதலமைச்சர்களின் மாநாட்டை மத்திய அரசு கூட்டியது. தமிழக அரசின் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டார். அம்மாநாட்டில் கொள்கை அளவில் முன்னோடி பயிர் ஈட்டுறுதி திட்டத்தினை ஏற்றுக்கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார் :—

(1) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான தற்போதைய மானியத் தொகையையும் அதனை மத்திய அரசும் மாநில அரசும் தற்போது பகிர்ந்து கொள்ளும் விகிதத்திலும் தொடரப்பட வேண்டும்.

(2) மத்திய அரசும் மாநில அரசும் இழப்பீட்டினைப் பகிர்ந்து கொள்ளும் தற்போதைய நிலையே தொடரப்பட வேண்டும்.

(3) விளைச்சல் மதிப்பீட்டிற்கு ஒரு கிராமத்தின் மூன்று அறுவடைப் பரிசோதனைகள் ஆதாரமாகக் கொள்ளப்பட வேண்டும்.

(4) ஈட்டுறுதியின் குறைந்த வரையறை ரூபாய் 25,000 மும் உணவுப் பயிர்களுடன் பணப் பயிர்களை உற்பத்தி செய்யும் ஒரு விவசாயிக்கு அதிக பட்சம் ரூபாய் 45,000 மும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

1993 மார்ச் 30]

(5) இத்திட்டத்தின் கீழ் ''கோரிக்கை எதுவும் இல்லை'' என்கிற விவசாயிக்கு ஊக்கத்தொகை வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. 1 சதவீதம் தள்ளுபடியாக தருவது மிகவும் குறைந்த ஊக்கத் தொகையாகும். இது அதிகரிக்கப்பட வேண்டும்.

(XV) நீண்ட காலக் கடன் அமைப்பு :

நீண்ட காலக் கடன் அமைப்பானது மாநில அளவில் தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி மற்றும் வட்டம், வட்டார அளவில் 181 தொடக்க நிலவள வங்கிகள் என இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். தொடக்க நிலவள வங்கிகள் திட்ட அடிப்படையில் சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி, தோட்டப் பயிர்கள் சாகுபடி மற்றும் கோழி வளர்ப்பு, பால்பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டி வாங்குதல், பட்டுப்புழு வளர்ப்பு முதலிய நானாவித இனங்களுக்கு கடன்கள் வழங்குகின்றன. மேலும், தொடக்க நிலவள வங்கிகள் அவற்றின் சாதாரண கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கிணறுகளை பழுதுபார்த்தல், நீர்க்குழாய்கள் அமைத்தல், டிராக்டர் விசை உழவு சாதனங்கள் வாங்குதல், நிலச்சீர்திருத்தம் முன் கடன்களை தீர்த்தல், நிலம் வாங்குதல், கால்நடை தொழுவம் அமைத்தல், பண்ணை வீடு அமைத்தல் முதலிய காரியங்களுக்கு கடன்கள் வழங்கு கின்றன. அக்கடன்களுக்கான திருப்பிச் செலுத்தும் காலம் 5 முதல் 15 ஆண்டுகள் வரை நீடிக்கிறது.

தொடக்க நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி நாபார்டு நிர்ணயித்துள்ள நெறிமுறைகளின்படி அதிலும் முக்கியமாக அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டினை தொடர்புறுத்தி நிர்ணயிக்கப்படுகிறது. 1—4—1991 ஆம் நாள் முதல் நாபார்டு கடன் வழங்கும் தகுதியை கீழ்க்கண்டபடி திருத்தி அமைத்துள்ளது:—

முந்தைய ஆண்டின் சூன் 30 ஆம் நாளன்று நிலவிய கடன் வசூல் விழுக்காடு	தொடக்க நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி
(1)	(2)
'அ' வகை 60 விழுக்காடும் மற்றும் அதற்கு மேலும்.	வரையறையற்றது.
'ஆ' வகை விழுக்காட்டிற்கு குறைவாக.	கடந்த ஆண்டு சூன் 30 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வசூலித்ததொகை (அல்லது) மார்ச் 31-ம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வழங்கிய கடன். (அல்லது)

முந்தைய 3 ஆண்டுகளில் வசூலித்த கடன் தொகை வழங்கப்பட்ட கடன் இவற்றில் எது அதிகமோ அந்த அளவு மறு நிதி பெற தகுதி பெறுகிறது.

இதனடிப்படையில் 1992-93-ம் ஆண்டில் 31 நிலவள வங்கிகள் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியையும் எஞ்சிய 151 நிலவள வங்கி வரையறுக்கப்பட்ட கடன் வழங்கும் தகுதியை பெற்றுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் மற்றும் 1990-91, 1991-92 மற்றும் 1992-93 (31—12—1992 வரை) ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீண்ட காலக் கடன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	குறியீடு.	எய்திய முன்னேற்றம்.
(1)	(2)	(3)
1985-86	20.00	24.19
1986-87	20.00	20.52
1987-88	26.00	30.60
1988-89	27.00	28.94
1989-90	30.00	25.97
1990-91	25.00	31.31
1991-92	32.00	41.71
1992-93 (31—12—1992 வரை)	41.00	26.87

1993-94 ஆம் ஆண்டில் 48 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1993 மார்ச் 30]

(XVI) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியும் அதன் செயல்பாடும்.

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பெறுகிறது. மத்திய மாநில அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கியும் அதன் பிரிவுகளும், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. நாபார்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய் கின்றன. சிறிய நீர்ப்பாசனம் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் அல்லாத திட்டத்தின்கீழ் நிதியுதவி செய்யும் நோக்கத்தோடு, பகுதி முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றை மாநில நிலவள வங்கி தீட்டி உள்ளது. 31—12—1992 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூ. 57.09 கோடி மற்றும் ரூ. 127.99 கோடியும் நிலுவையில் உள்ளது. 31—12—1992 அன்று வங்கியில் சொந்த நிதி ஆதாரம் ரூ. 70.90 கோடியாகும். ஒவ்வொரு சாதாரணக் கடனீட்டுப் பத்திரங் களுக்கான காலம் முடிவடையும் போது பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான, "கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி" (Debenture Redemption Fund) ஒன்றினை வங்கி பராமரித்து வருகிறது. இந்த நிதியில் 31—12—1992 தேதியில் ரூ. 24.54 கோடி உள்ளது.

பல்வேறு திட்டங்களில் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல் களை கண்காணிக்கவும் (Monitoring) திட்டத்தினால் விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள பயணக் கணிப்பாய்வு (Evaluation) செய்ய வும், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக்குழு ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நாள் வரை 288 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு விரிவாக்க பணியாக "நிலவளம்" என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. தொடக்க நிலவள வங்கி பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நாபார்டின் உதவியுடன் இளநிலை பணியாளர் பயிற்சித் திட்டம் ஒன்றினை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி நடத்தி வருகிறது.

(XVII) தொடக்க நிலவள வங்கிகளுக்கு கடன் வழங்குவதற் கான புதிய வழிகள் :

இதுகாறும் தொடக்க நிலவள வங்கிகள் நாபார்டு உதவியுடன் கூடிய தனித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்கள் மற்றும் பால் பண்ணை,

[1993 மார்ச் 30

ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை முதலிய பலதரப்பட்ட காரியங்களுக்கு கடன்கள் வழங்கி வந்தன. இருப்பினும் நிதி வசதி அளிப்பதில் இதர நிதி நிறுவனங்கள் அளவில் ஏற்பட்டுள்ள மாநில நிலையைக் கருத்தில் கொண்டு தொடக்க நிலவள வங்கிகள் கீழே விவரித்தபடி புதிய இனங்களுக்கும் நிதி வசதி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன :—

(1) பண்ணை சாராப் பிரிவுகட்கு கடன் வழங்கல் :—

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள மறு நிதி உதவித் திட்டத்தின்படி கிராம கைவினைஞர்கள், சிறு கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில் செய்பவர்கட்கு, பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டு முதல் நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதியுதவி, கிராம மக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்யவும் உதவுகிறது. நாபார்டினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கும் தகுதிக்கு நிர்ணயித்துள்ள வரன்முறைகளை தொடர்புறுத்தாமல் நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு மறுநிதி வசதி பெற்று கடன்கள் வழங்கலாம் என்பது சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ், தனிநபர் ஒருவருக்கு உச்ச பட்சமாக 50,000 ரூபாய் கடன் வழங்கலாம் என கடனளவு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், தொடக்க நிலவள வங்கிகள் டிசம்பர் 1992 திங்கள் வரை 2.39 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

(2) கிராமங்களில் வீடு கட்ட கடன் வழங்குதல் :

1989-90 ஆம் ஆண்டில் வரவு-செலவு கூட்டத் தொடரில் மக்களவையில் அறிவிக்கப்பட்ட தேசிய கொள்கைக்கு ஏற்ப, தேசிய வீட்டுவசதி வங்கியின் மறுநிதி உதவியுடன் கிராமப் புறங்களில் வீடுகள் கட்ட கடன்கள் வழங்க, தொடக்க நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு விவசாயி உச்ச கடன் பெறும் தகுதி ஒரு இலட்ச ரூபாயாகும். தமிழ்நாடு, கூட்டுறவு மாநில நிலவள வங்கி 1992-93-ஆம் ஆண்டுக்கு 195 இலட்ச ரூபாய் அளவிற்கு கடன் உதவி தரும்படி தேசிய வீட்டுவசதி வங்கிக்கு முன் மொழிவுகள் அனுப்பியுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்ட திட்ட முன் மொழிவுகள் ஏற்கப்பட்டு தேசிய வீட்டு வசதி வங்கியிடமிருந்து நிதி வசதி பெற்று பின்னர் தொடக்க நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கும்.

TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

(XVIII) நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி :

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான கடன் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வகை செய்யும் வகையில் கடன் வழங்கும் திட்டத்தில், சாதாரண திட்டத்தின் கீழ் 20 விழுக்காட்டு அளவிற்கும், திட்ட அடிப்படையில் 60 விழுக்காட்டு அளவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலம் மற்றும் 1990-91, 1991-92 மற்றும் 1992-93 ஆண்டுகளில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் விழுக்காடு குறித்த விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	வழங்கப் பட்ட மொத்தக் கடன்.	நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன்.	வழங்கிய மொத்தக் கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் கோடியில்)		
1985—86 ..	24.19	10.70	44.2
1986—87 ..	20.52	9.78	47.7
1987—88 ..	30.60	14.18	46.3
1988—89 ..	28.94	11.38	39.3
1989—90 ..	25.97	7.79	30.2
1990—91 ..	31.31	9.78	31.2
1991—92 ..	41.71	13.99	33.5
1992—93 ..	26.87	9.03	33.6

(டிசம்பர் 1992 திங்கள் வரை.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ள 265 கோடி ரூபாயில் நலிவுற்ற பிரிவினருக்கு 50.15 விழுக்காடான 132.92 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட வரைவின்படி 1993-94-ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயித்துள்ள குறியீடான 48 கோடி ரூபாயில் 48 விழுக்காடான 22.79 கோடி ரூபாய் அளவிற்கு நலிவுற்றப் பிரிவினருக்கு வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

(XIX) பொய்த்த கிணறுகள் நிதி :

கூட்டுறவு தொடக்க நிலவள வங்கிகளில் கடன் பெற்று தோண்டப்படும் கிணறுகளில் தண்ணீர் இன்றி பொய்த்துப் போய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கான பொய்த்த கிணறுகள் நிதி ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி நிர்வகித்து வருகிறது. திறந்த வெளியில் கிணறுகள், வடிமுனைக் குழாய் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள், ஆகியவைகளுக்கு பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவியளிக்க தற்போது பயிரிடப்படும் பரப்பு பயிர் விளைச்சல் பற்றிய நடைமுறையிலுள்ள விதி முறைகளை அரசு தளர்த்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு, பெரிய விவசாயிகட்கு முறையே 90 சதவீதமும், 75 சதவீதமும் அசல் மற்றும் வட்டி பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சிறு விவசாயிகட்கு அவர்களின் சொந்த உழைப்பாக அளித்த பங்கு நீங்கலாக, முழுத் தொகையும், மான்யமாக அளிக்கப்படுகிறது. 31—12—1992 வரை 3,195 பொய்த்த கிணறுகட்கு ரூ. 2.21 கோடி உதவி வழங்கப்பட்டது.

எல்லா மாநிலங்கட்கும் பொதுவான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டுத் திட்டம் ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மானியம் அளிப்பதில் பொதுவான நெறி முறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடனும், எல்லா மாநிலங்களும் கடைப்பிடிப்பதற்கான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி ஒன்றினை நாபார்டு அறிவித்துள்ளது. மேற்படி பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதி திட்டத்தினை 1-7-86 முதல் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தின்படி தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி, அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், நலிந்த விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகட்கு 100 சதவீதம் அளவிற்கே மானியம் வழங்கப்படும். இத் திட்டத்தின்படி கடன் தொகையில் அசல் பகுதிக்கான மானியத் தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். வட்டிப் பகுதியை பொறுத்த வரையில் நாபார்டு திட்டங்கள் தொடர்பாக கடன்களாக இருந்தால்

நாபார்டும், சம்பந்தப்பட்ட வங்கியும் சரிசமமான அளவிலும்' இதர சாதாரணத் திட்டம் பற்றியக் கடன்களாக இருந்தால்' முழு வட்டித் தொகையும் சம்பந்தப்பட்ட வங்கி தள்ளுபடி செய்து தன் சொந்த நிதியிலிருந்து ஏற்கும். இந்த திட்டத்தின் கீழ் 31—12—1992 வரை 26 பொய்த்த கிணறுகளுக்கு ரூபாய் 4.71 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டு உள்ளது.

XX) கடன்கள் வசூல் :

கூட்டுறவுகளை இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சனை, பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவையாகும். இது கூட்டுறவுக் கடன்களை தங்கு தடையின்றி வழங்குவதற்கு பெருந் தடையாக உள்ளது. தவணை தவறிய கடன் நிலுவை கேட்பில் 40 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் மத்திய கூட்டுறவு வங்கிகள் வசூல் செய்தாலொழிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச் சிக்கான தேசிய வங்கி மறுநிதி வசதி அளிக்காது. கூட்டுறவுகளில் பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவைக்கு முக்கிய கார ணம் கடன்தாரர்களுக்கிடையே கடனை திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லாமல் இருப்பதே ஆகும். கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்களில் பெரும்பாலானோர் வேண்டு மென்றே அவ்வாறு செய்பவர்களாவர். தவணை தவறிய நிலுவைகள் கடன் வாங்குவதை பாதிக்கின்றதைத் தடுக்கும் பொருட்டு, வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து கடனை வசூல் செய்வதை முனைப் பாக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

30—11—1992 நிலவரப்படி, வேண்டுமென்றே கடனைத் திரும்பச் செலுத்த தவறியவர்கள் பின்வரும் ஆறு வகையினர் எனக் கண்டறியப்பட்டு, அவ்வாறான இனங்களில் கடன் வசூலை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது:—

ஆறு வகையான கடன் செலுத்தத் தவறியவர்களின் நிலவரம்

வ. எண்.	கடனைத் திரும்பச் செலுத்த தவறியவர்களின் வகை	கண்டறியப் பட்ட இனங்கள்	அதற்கான தொகை (ரூ. இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1	பத்து ஏக்கரும் அதற்கு மேலும் நிலம் வைத்திருப்பவர்கள்	5,080	540.00
2	டிராக்டர்கள் வாங்கியவர்கள்	1,893	618.96
3	அடமானம் வைத்த நிலங்களை வேறொருவருக்கு உடமை மாற்றம் செய்தவர்கள்.	3,600	257.90
4	கடனை தவறான வழியில் பயன் படுத்தியவர்கள்.	12,357	829.13
5	ரூ. 10,000-த்திற்கு மேல் நிலுவையாக கடன் வைத்திருப்போர்கள்	20,234	2,431.41
6	பிற வகைகளில் வருமானம் உள்ள கடன் தாரர்கள்.	11,578	351.47
		54,742	5,028.87

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-97—22

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றை பொறுத்தமட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் தவணை தவறிய கடன் நிலவரம் பின்வருமாறு :—

நாளிது வரை.	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அளவில்.			தொடக்க நிலவள வங்கிகள் அளவில்.		
	கடன் நிலுவைத் தொகை.	தவணை தவறிய கடன் தொகை.	கேட்பில் தவணை தவறிய கடன் விழுக்காடு	கடன் நிலுவைத் தொகை.	தவணை தவறிய கடன் தொகை.	கேட்பில் தவணை தவறிய கடன் விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் கோடியில்).			
1987 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30-ஆம் நாள்.	420.53	147.23	33.7	147.58	41.82	42.3
1988 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்.	545.40	179.03	41.2	163.13	52.38	77.2
1989 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்.	710.58	227.50	36.3	175.93	64.34	78.3
1990 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்.	941.31	398.34	55.6	193.11	87.61	88.1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1991 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள்.	1019-85	404.63	43.7	196.39	66.27	54.[illegible]
1992ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள்.	1,114.32	444.08	41.4	211.79	65.90	64.3
1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்.	1,330.10	499.87	61.9	226.60	79.98	89.[illegible]

1993 மார்ச் 30]

(XXI) விவசாயிகளுக்கு போனஸ் திட்டம்.

கூட்டுறவுக் கடன்கள் குறைந்த அளவே வசூலாவது நாபார்டு நிறுவனத்திடமிருந்து மறு நிதியுதவி பெறுவதைப் பாதித்து வந்தது. கடன் வசூல் நிலையை மேம்படுத்துவதற்கென விவசாயிகளுக்கு போனஸ் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தியது. இத்திட்டத்தின்படி, 1—7—1991 அன்றுள்ளவாறான தவணை கடந்த அசல் தொகையை விவசாயிகள் திருப்பிச் செலுத்துவார்களானால், அவர்கள் செலுத்த வேண்டிய தவணை கடந்த வட்டியையும் அபராத வட்டியையும் அரசே செலுத்திட ஏற்றுக்கொள்ளும். இதற்காக ரூபாய் 55.73 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 4,48,327 கடன்தாரர்கள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தி இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். கூட்டுறவு வங்கிகள் இத் திட்டத்தின் மூலம் போனஸ் உட்பட 306.54 கோடி ரூபாய் வசூலித்துள்ளன.

(XXII) வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டம், 1990.

1990ஆம் ஆண்டில் வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்த போது, தங்கள் மாநிலங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களுக்குப் பொருந்தும் வகையில், இத் திட்டத்திற்கு இணையான திட்டங்களைத் தயாரிக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின்படி கோரும் தொகையில் 50 விழுக்காடு மத்திய அரசு மானியமாக வழங்கும். கடன் நிவாரணத் திட்டத்திற்கு உட்பட்ட மொத்த தொகையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை மாநில அரசு வழங்கும். மாநில அரசால் அளிக்கப்பட வேண்டிய இத்தொகை நாபார்டு நிறுவனத்தின் மூலம் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படும். இக்கடன் 10 சதவீத வட்டியுடன் மூன்று சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதாகும்.

31—3—1991-உடன் இத்திட்டம் முடிவு பெற்றவுடன், இத் திட்டத்தின்கீழ் பிரதம வங்கிகளால் அளிக்கப்பட்ட நிவாரணத் தொகையான 289.43 கோடி ரூபாய்க்குத் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியும், தேசீய வங்கிக்கு உரிமை கோரிக்கை அனுப்பி வைத்தன. அடுத்துச் சரி பார்த்து நீக்கப்பட்ட தகுதியில்லாத உரிமைக் கோரிக்கைகள் நீங்கலாக நிவாரணத்திற்குத் தகுதியான உரிமைக் கோரிக்கை தொகை 284.818 கோடி ரூபாய் ஆகும். இதில் 232.406 கோடி ரூபாய்

[1993 மார்ச் 30

பார்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டு விட்டது. நாளிது தேதியில் இத்திட்டத்தின்கீழ் 52.412 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்பட வேண்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1993–94 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்தின்கீழ் நிலுவைத் தொகைகளைத் தீர்வு செய்வதற்காக ரூ. 500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து மீதித் தொகையான ரூ. 52.412 கோடி விரைவில் அளிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

இத் தொகையினை திரும்ப அளித்ததில் ஏற்பட்ட கால தாமதத்தினால் தொடக்க வங்கிகள் 21 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி இழப்பு அடைந்து உள்ளன.

(XXIII) நகைக் கடன்கள் :

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால் நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பதரிதாகிய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றன. தற்போது 4,367 கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டில் 18.88 இலட்சம் நபர்களுக்கு 843.70 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1992–93 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் நாள் வரை இவ்வகைக் கடன்கள் 798.73 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டிற்கு 780 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவைகளைப் பயன் விளையத்தக்க வகையில் நிறைவு செய்து வருகின்றன. சவரன் ஒன்றிற்கு வழங்கப்படும் கடன் அளவு 2,200 ரூபாய் ஆகும். தனி நபர்களுக்கு அளிக்கப்படும் அதிகபட்ச கடன் அளவு 25,000 ரூபாய் ஆகும். கடன்தாரர்களிடமிருந்து ஆண்டிற்கு 18 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது.

(XXIV) சிறு வியாபாரிகளுக்கு குறிப்பாக பெண்களுக்கு தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் :

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவி புரிய அதிகபட்சமாக 500 ரூபாய் வரை ஒருவருக்கு தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் வழங்க மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்குத் தேவையடிப்படையில் சிறு கடன்கள் வழங்கல் என்ற சிறப்புத் திட்ட செயலாக்கம் குறித்து கூர்ந்து

1993 மார்ச் 30]

ஆராய ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், 31-12-92 வரை, மத்திய கூட்டுறவு வங்கிகள், 2,112 மகளிர் உறுப்பினர் களுக்கு 9.76 இலட்சம் ரூபாய் அளவிற்கு இவ்வகைக் கடன்களை வழங்கியுள்ளன.

(XXV) கூட்டுறவு நகர வங்கிகள் :

தமிழகத்தில் 131 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ் வங்கிகள் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த பகுதி களில் வசிக்கும் ஏழை நடுத்தர வர்க்க மக்களுக்கு வங்கியியல் வசதி மற்றும் நபர் மற்றும் சொத்து காப்பீட்டின் அடிப்படையில் கடன் வசதி ஆகிய வசதிகளை அளிக்கின்றன. மேலும் மிகச் சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள், நடுத்தர மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, வீட்டினை பழுது பார்த்தல் மற்றும் விரிவுபடுத்துதல், மிகச் சிறு வியாபாரம், குழந்தைகளுக்கான கல்விச் செலவு மற்றும் குடிசைத் தொழில்களை நிறுவுதல் ஆகிய காரியங்களுக்கு கடன் வசதியை வழங்கி வருகின்றன. தற் போதுள்ள 131 நகர கூட்டுறவு வங்கிகளில் 125 நகர கூட்டுறவு வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

இவ்வங்கிகள் நகர்ப்புற மற்றும் நகர்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு, 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 410.86 கோடி அள விற்கு குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்களை வழங்கி உள்ளன. 1991-92 ஆம் ஆண்டின் இறுதியில் இக் கூட்டுறவு நகர வங்கிகள் அளவில், ரூபாய் 437.50 கோடி அளவிற்கு வைப்புத் தொகை இருந்தது. இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறி முறைகளின்படி இவ்வங்கிகள் வழங்கும் மொத்த கடன் தொகையில் 60 சதவிகிதத்திற்கு குறையாமல் முன்னுரிமைக் காரியங்களுக்கான கடனாகவும் முன்னுரிமை காரியங்களுக்கு வழங்கும் கடன் தொகையில் 25 சதவிகிதத்திற்கு குறையாமல், நலிவுற்ற பிரிவினருக்கான கட னாகவும் இவ் வங்கிகள் வழங்க வேண்டும். இவ்வகையில் 1991-92-ம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை யான ரூ. 410.86 கோடியில், ரூபாய் 263.44 கோடி அளவிற்கு முன்னுரிமைக் காரியங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த கடன் தொகைக்கு 64 சதவிகிதமாகும். நலிவுற்ற பிரிவினருக்கு ரூ. 139.88 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட் டுள்ளது. இது முன்னுரிமை காரியங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைக்கு 53 சதவிகிதமாகும்.

1992-93 ஆம் ஆண்டிற்கான அரசின் வரவு-செலவு குறித்த கூட்டத் தொடரில், கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் 1 இலட் சம் நலிவுற்ற பிரிவினருக்கு தொழில் கடன் வழங்கப்படும் என் றும் அவ்வாறு கடன் வழங்குகையில், மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் சட்ட சபையில் அரசு அறிவித்த கொள்கை

யின் அடிப்படையில், கூட்டுறவு நகர வங்கிகள் 31-12-1992 உடன் முடிந்த காலத்தில், நலிவுற்ற பிரிவினைச் சேர்ந்த 94,627 நபர்களுக்கு ரூ. 51.05 கோடி அளவிற்கு கடன் வழங்கி உள்ளன. இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்தோரில், 38 சதவிகிதம் என்ற அளவில், 36,587 மகளிர் ரூ. 14.34 கோடி அளவிற்கு கடன் உதவி பெற்று பயன் அடைந்துள்ளனர். 1992-93-ல் ரூ. 18 கோடி அளவிற்கு வேளாண்மை சாரா கடன் வழங்க திட்டமிடப்பட்டது. ஆனால் 31-12-1992 வரையிலான வீத இலக்கான ரூ. 14 கோடிக்கு எதிராக ரூபாய் 18 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 19 கோடி அளவிற்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(XXVI) இடுபொருட்கள்.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுத் துறையில் இரசாயன உர விற்பனைக்கு மொத்த விற்பனையாளர்களாகச்செயல்பட்டு வருகின்றன. 4,326 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்படும் 5,678 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும், 101 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும், அங்கத்தினர்களுக்கு பயிர்க் கடனின் பொருட்பகுதியாகவும், அங்கத்தினர் மற்றும் அங்கத்தினரல்லாதவர்க்கு ரொக்கத்திற்கும் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டிற்கு 2.06 இலட்சம் என்.பி.கே. டன் அளவும், ரூ. 120 கோடி மதிப்புமுடைய இராசயன உரங்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 1992 ஏப்ரல் முதல் 1992 டிசம்பர் முடிய 2.19 இலட்சம் என்.பி.கே. டன் அளவும், 168.73 கோடி ரூபாய் மதிப்பும் உள்ள இராசயன உரம் வழங்கப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டிற்கு 3.5 இலட்சம் என்.பி.கே. டன் அளவிற்கு உரங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உர மான்யத் திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உர மான்யத் திட்டத்தில் 22 வகையான உரங்களுடன் நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் நான்கு வகை கலப்புரங்களும் வேளாண் துறையினரின் பரிந்துரைச் சீட்டின் அடிப்படையில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட்ட 24.981 கோடி ரூபாய் மானியத் தொகை முழுவதுமாக உபயோகப்படுத்தப்பட்டது.

1993 மார்ச் 30]

உர மான்யத் திட்டத்துடன், 5.2928 கோடி ரூபாய், நாகப் பட்டினம்-காயிதே மில்லத், தென்னாற்காடு, தஞ்சாவூர், செங்கை -எம்.ஜி.ஆர்., வடாற்காடு-அம்பேத்கார் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 1991 நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத் தால் சேதமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசால் வழங்கப்பட்டது. நிவாரணத்திற்காக உரம் கூட் டுறவு மூலம் வழங்கப்பட்டது. இதுவரை 2.3901 கோடி ரூபாய் உபயோகப்படுத்தப்பட்டு ரூ. 2.9027 கோடி ரூபாய் உபயோகப்படுத்தப்பட்டு ரூ. 2.9027 கோடி நிலுவையாக உள்ளது.

(XXVII) விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் வேளாண் இடு பொருட்கள் வழங்கல் :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற் பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் இதர இடு பொருட்கள், (விதைகள், பூச்சி மருந்துகள், வேளாண் இடு பொருட்கள்) வழங் குவதற்கும் மொத்த விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வரு கின்றன. 1992-93 ஆம் ஆண்டில் இந்த இடு பொருட் களை வழங்க நிர்ணயிக்கப்பட்ட 12 கோடி ரூபாய் இலக்கில் ஏப்ரல் 1992 முதல் டிசம்பர் 1992 வரை 10.22 கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப் பட்டுள்ளன. 1993-94-ல் ரூ. 13.25 கோடி அளவிற்கு இடு பொருட்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட உள்ளது.

மேற்கண்ட 3 நிறுவனங்கள் தவிர துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவை சங்கம் பூச்சி மருந்து உற்பத்தி அலகு ஒன்றையும், வேளாண் கருவிகள் தயாரிக்கும் அலகு ஒன்றையும் நடத்தி வருகிறது. 1992-93-ல் ஏப்ரல் 1992 முதல் டிசம்பர் 1992 வரையில் இந்நிறுவனம் ரூ. 183.00 இலட்சம் மதிப்பிற்கு பூச்சு மருந்துகளையும் ரூ. 24.14 இலட்சம் மதிப்பிற்கு வேளாண் கருவிகளையும் விநியோகித்துள்ளது.

3. கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி.

(1) கூட்டுறவு விற்பனை அமைப்பு :

தமிழகத்தில் தொடக்க நிலையில் உள்ள 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. அவற்றுள் தஞ்சாவூர், நாகப் பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ளவை தவிர மற்றவை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைந்து செயலாற்றுகின்றன. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு, திருவாரூரில்

உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்திற்கு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், உதக மண்டலத்திலும் செயல்படுகின்றன.

அனைவரும் அறியும் வகையில் ''டான்பெட்'' எனச்சுருக்க மாக அழைக்கப்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விவசாயிகளுக்கு, வேளாண் இடுபொருட்கள் வழங்குவதிலும் வேளாண் உற்பத்தி பொருட் களை விற்பனை செய்வதிலும் மாநில அளவில் தனித் தன்மை யுடன் வெகு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. விவசாயத்திற் குத்தேவையான இரசாயன உரங்களை மொத்த விற்பனையாள ராக இருந்து விநியோகம் செய்து வருகின்றது. தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள இதன் பதினான்கு மண்டல அலுவலகங்கள், விவசாயிகளுக்கு இணையம், தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூல மாக வழங்கப்படும் உரங்கள் சரிவர செயல்படுகின்றனவா என கண்காணிக்கின்றன, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மன்னார் குடியை அடுத்துள்ள பாமனியில் இதனுடைய உர ஆலை 1970 -ல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் நாளொன்றுக்கு சராசரி 120 டன்கள், என்.பி.கே. உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இணையம் அதனைத் தவிர தமிழ கத்தில் பத்து மையங்களில் கலப்பு உரங்களை தயாரித்து வருகின் றது, இணையம் வேளாண் விளைப்பொருட்களான மிளகாய், தனியா, உளுந்து ஆகிய பொருட்களை கொள்முதல் செய்கின்றது. தமிழகத்தில் விலை நிர்ணயம் செய்யப்படுவதில் இணையம் தேசியக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் ஏஜெண்ட் ஆக செயல்படுகிறது. மேலும் 1976 முதல் பூச்சி கொல்லி விநி யோகத்தில் மொத்த விற்பனையாளராக செயல்பட்டு வருகிறது. மாநில முழுவதிலும் இதற்கு சொந்தமாக 32 கிடங்குகளை 25100 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் பயன்படுத்தி வருகிறது. இத்துடன் 18150 மெ. டன் கொள்ளளவு கொண்ட 26 வாடகை கிடங்குகளையும் அமர்த்தி செயல்பட்டு வருகிறது,

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1250 மெ. டன் கொள்ளளவு உடைய குளிர்பதன கிடங்கு ஒன்றினை சென்னை யில் நிர்வகித்து வருகிறது.

கிடங்கின் கொள்திறனில் 59 விழுக்காடு மட்டுமே உபயோகித்து உள்ளநிலையில் 1991-92 ஆம் ஆண்டில் இணையம் ரூ. 10.00 இலட்சம் வருவாயினை ஈட்டியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் டிசம்பர் இறுதிவரை குளிர்பதன கிடங்கின் கொள்திறனில் 57 விழுக்காடு மட்டுமே உபயோகித் துள்ள நிலையில் ரூபாய் 8.58 இலட்சம் வருவாயினை ஈட்டி

1993 மார்ச் 30]

யுள்ளது. கிடங்கின் கொள்திறனை முழுமையாக உபயோகப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சென்னையை அடுத்த புறநகர் பகுதியில் கோயம்பேடு என்ற இடத்தில் இணையம் 2500 மெட்ரிக் டன் கொள்திறனுடைய கிடங்கினை ரூ 109.75 இலட்சம் செலவில் நிர்மானிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. மேலும் வெங்காயம் இருப்பு வைப்பதற்கான ஒவ்வொன்றும் 320 டன் கொள்திறன் கொண்ட மூன்று கிடங்குகள் திண்டுக்கல்–அண்ணா மாவட்டத்தில் ''எரியோடு'' என்ற கிராமத்தில் செயல்பட்டு வருகின்றன.

1992–93 இல் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மேற்கூறப்பட்ட வியாபார நடவடிக்கைகள் விவரம் வருமாறு :

விவரம்.	1992–93 சொள்ளளவு (மெ. டன்னில்).	(டிசம்பர் 1992 முடிய). மதிப்பு (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)
1. உரங்கள்	330549	127.96
2. பாமணி உரங்கள் உற்பத்தி	19082	6.26
3. பாமணி உரங்கள் விற்பனை	18151	8.15
4. டான்பெட் கலப்பு உரங்கள் விற்பனை.	967	0.25
5. வேளாண் விளைபொருட்கள் கொள்முதல்.	967	9.33
6. விதைகள் விநியோகம் ..	..	0.18
7. பூச்சிகொல்லி விநியோகம்	..	3.61
8. வேளாண் கருவிகள் ..	..	0.10
9. மண்ணெண்ணெய் விநியோகம்.	2·251 (கிலோ லிட்டர்)	0.56

[1993 மார்ச் 30

(ii) வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை.

மாநில முழுவதிலும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், அதனுடைய உறுப்பினர்களினுடைய விவசாய விளைபொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய உதவுகின்றன. விவசாய விளைபொருட்கள் விற்பனையில் 1992-93-க்கு ரூபாய் 325 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், டிசம்பர் 1992 முடிய 198.97 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் வேளாண் விளைபொருட்கள் விற்பனைச் குறியீடு ரூபாய் 350 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது.

(iii) விற்பனையுடன் இணைந்த கடன் வசதி.

உற்பத்தியாளருடைய விளைபொருட்களுக்கு நியாயமான வகையில் வருவாய் தரத்தக்க விலையை நிர்ணயம் செய்யவும் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் உறுப்பினராக சேர்க்கப்படுகின்றனர். விற்பனைச் சங்கங்கள் தங்கள் கொள்முதல் பணிகளை, கடன்தாரர்களின் பொருட்களை வாங்குவதன் மூலம் செய்து வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தனக்கு தேவையானவற்றை கொள்முதல் செய்வதால் விற்பனைச் சங்கத்தின் சேவையை பயன்படுத்திக் கொள்கின்றன. 1991-92-ல் வேளாண் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உற்பத்திக்கான கடன் தொகை ரூபாய் 25.07 இலட்சம் வசூல் செய்துள்ளது. இக்கடன் வசூல் 1992-93-ல் ரூபாய் 50 இலட்சமாகவும் 1993-94-ல் ரூபாய் 75 இலட்சமாகவும் உயர்த்தப்பட உள்ளது.

(iv) சரக்கீட்டுக் கடன்.

விவசாயிகளுக்கு அவர்களுடைய விளை பொருட்களை ஈடாக வைத்து கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் அளித்து வருகின்றன. அதனால் விவசாயிகள் தங்கள் விளை பொருள்களுக்கு பின்னர் நல்ல விலையைப் பெற முடியும். 1991-92 ஆம் ஆண்டில் சரக்கீட்டு கடனாக

1993 மார்ச் 30]

ரூபாய் 406.89 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபாய் 450 இலட்சம் மற்றும் ரூபாய் 500 இலட்சம் சரக்கீட்டுக் கடனாக கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(v) பதப்படுத்துதல்.

விவசாயிகளுக்கு பதப்படுத்தும் வசதிகளை குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பலவகையான பதப்படுத்தும் அலகுகளை நிறுவியுள்ளன. இந்த பதப்படுத்தும் அலகுகளை நிறுவ அவற்றிற்கு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் அரசிடமிருந்தும் பங்கு மூலதனமாகவும், கடனாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. தற்போது 38 அரிசி ஆலைகள், 19 பருத்தி அரவை ஆலைகள், 16 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 14 எண்ணெய் ஆலை தொகுப்பு, 3 பழம் பதப்படுத்தும் அலகுகள், காபி அரவை ஆலைகள், 1 காபி பதப்படுத்தப்படும் அலகு, 1 குளிர் பதன அலகு, 1 மரவள்ளிக் கிழங்கு ஆலை, 1 மஞ்சள் அரவை ஆலை, 4 மாவு ஆலைகள், 2 பருப்பு ஆலைகள், 2 சேமியா பதப்படுத்தும் அலகுகள், 2 விதை பதப்படுத்தும் அலகுகள், 1 புளி பதப்படுத்தப்படும் அலகு மற்றும் 1 சிகைக்காய் அரவை ஆலை ஆக 110 பதப்படுத்தப்படும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

(vi) கிடங்கு வசதி-கிராமிய மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்

கிராமங்களில் உற்பத்தியாகும் விளை பொருட்களை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்காக கிராம அளவிலும், நகர அளவிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கிடங்குகள் கட்டப்படுகின்றன. அரசு கிடங்குகள் கட்டத் தேவையான நிதியுதவியினை 45 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும் 50 சதவீதம் கடனாகவும் மீதியுள்ள 5 சதவீத நிதியினை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சொந்த நிதியிலிருந்தும் முதலீடு செய்து கிடங்குகள் கட்டப்படுகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் 50 கிராம கிடங்குகளும் 9 விற்பனைச் சங்க கிடங்குகளும் 12,400 மெட்ரிக் டன் கொள்ளளவில் கட்ட திட்டமிடப்பட்டிருந்தது. உலக வங்கியில் கிடங்கு கட்டுவதற்கான 4-வது திட்டம் செயல்படுத்தப்படாமல் தாமதமாகும் என்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட திட்டம் 1992-93-ல் செயல்படுத்துவது கைவிடப்பட்டது. தமிழ்நாட்டில் இன்றைய நிலவரப்படி 5,067 கிடங்குகள் 7.06 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும்

[1993 மார்ச் 30

3,128 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள 31 கிராமக் கிடங்குகள் பல்வேறு கட்டுமானப் பணி நிலைகளில் உள்ளன. 1992-93 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுறவுகளின் மூலம் செய்யக் கூடிய கிடங்கு கொள்திறன் அளவானது 7.09 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயரக் கூடிய நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உலக வங்கியின் 4-வது திட்டத்தின்கீழ் 1993-94 ஆம் ஆண்டில் 50 கிராம அளவிலான கிடங்குகளும் 5 விற்பனைச் சங்க அளவிலான கிடங்குகளும் 9,000 மெட்ரிக் டன் அளவில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து மேற்படி உலக வங்கியின் 4-வது திட்டத்தின்கீழ் நிதி உதவி குறித்து விபரமான அறிக்கை வரப் பெற்றதும் இத்திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும்.

4. நுகர்வோர் கூட்டுறவு.

(i) நுகர்வோர் கூட்டுறவு அமைப்பு.

தமிழ்நாட்டில் தற்பொழுது நுகர்வோர் கூட்டுறவு தொடக்க நிலையில் 3,755 தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகளுடன் (மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட) மாவட்ட நிலையில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுடனும், மாநில நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் கொண்டு செயற்படுகின்றது.

நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை அமைப்பான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் 1966 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளது. இறக்குமதி மூலமாகவும் மொத்தக் கொள்முதல் மூலமாகவும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை கிடைக்கச் செய்தலும், தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட மற்றும் தொடக்க நிலை நுகர்வோர் கூட்டுறவுகளின் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தலும், இந்த இணையத்தின் தலையாய நோக்கமாகும். சென்னையில் ''மண்டல விநியோக மையம்'' ஒன்றினை அது துவங்கியுள்ளது. 7,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி ஒன்றினைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பாட நூல்களை விநியோகிப்பதில் ஒருங்கிணைக்கும் முகவராக செயல்படுகிறது.

1993 மார்ச் 30]

இணையத்தின் செயல்பாடு குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சங்களில்)

ஆண்டு.	கொள்முதல்.	விற்பனை.	ஆண்டுக்கான நிகர நட்டம்.
(1)	(2)	(3)	(4)
1988–99	887.22	967 55	68 74
1989–90	481.65	541 41	66.75
1990–91	354.60	377.71	65.57
1991–92	189.76	224.70	34.70
1992–93 (1992 டிசம்பர் திங்கள் வரை)	76.02	87.00	10.21

தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியிடம் நிலுவையிலுள்ள பெருங்கடன் தொகையினை தீர்க்கும் வரையிலும் இணையத்தை சிறந்த வழியில் செயல்படுத்தவும் கீழ் குறித்த புனரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) கூடுதல் பங்குத் தொகை சேர்த்ததன் மூலமாகவும் தலைமைக் கூட்டுறவு வங்கி அளித்த வட்டிச் சலுகை மூலமாகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் நிலுவையிலிருந்த இணையத்தின் கடன் ரூ. 300 இலட்சத்திலிருந்து ரூ. 50 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுறவுக் கொள்முதல் குழு ஏற்படுத்தி அதன் மூலம் குறிப்பிட்ட வேளாண் பொருட்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை இணையம் மேற்கொண்டுள்ளது. இணையம் அதன் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், கூட்டுறவு அச்சகங்களுக்கு அச்சுத்தாள் விநியோகிப்பதற்காக காகித ஆலைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி உரிய ஏற்பாடுகள் செய்துள்ளது. அதிக அளவில் நுகர் பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

[1993 மார்ச் 30

(இ) பணியாளர்களின் செலவினைக் குறிக்கும் நோக்குடன் இணையத்தின் 63 உபரி பணியாளர்கள் பல்வேறு மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஈ) பிற மாநிலங்களில் கிடைக்கும் பருவகால வேளாண் பொருட்களை பெருத்த அளவில் கொள்முதல் செய்து, அதன் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க இணையம் ஏற்பாடு செய்து வருகிறது.

(ii) நுகர் பொருட்களின் சில்லறை விற்பனை :

1991–92-ஆம் ஆண்டில் எல்லா வகை நுகர்வோர் கூட்டுறவுகளும் செய்த நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை மதிப்பு ரூ. 1,267.35 கோடி ஆகும். 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,300 கோடி அளவிற்கும், 1993–94 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,400 கோடி அளவிற்கும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுகள் செய்யும் விற்பனையில் மூன்றில் ஒரு பங்கு தமிழ் நாட்டில்தான் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகள் நாட்டில் முதலிடத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு வருகின்றன.

(iii) பொது விநியோக திட்டம்—கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்தல் :

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யும் தலையாய பெரும் பணியினை கூட்டுறவு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. அவ்வாறான பணியில் 75 முதன்மைச் சங்கங்களும் 4,915 இணைப்புச் சங்கங்களும் 20,912 கூட்டுறவு நியாய விலைக் கடைகளும் ஈடுபட்டுள்ளன. ஏறக்குறைய 67 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் பாமாயில் போன்ற கட்டுப்பாட்டுப் பொருட்களை மாதந்தோறும் 125.29 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் விநியோகம் செய்து வருகின்றன. இந்த இணைப்புச் சங்கங்கள் 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 111 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 4,360 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள், 359 பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் 38 இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்களாகும். மொத்தமுள்ள 29,921 நியாய விலைக் கடைகளில் 3,547 கடைகள் நகர்ப்

புறத்திலும் 17,374 கடைகள் கிராமப்புறங்களிலும் உள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இந்த அளவுக்கு ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்த நிலையான சிறந்த கூட்டுறவு அமைப்பின் மூலம் பொது விநியோகத் திட்டம் செயல்படுகிறது.

(iv) சீர்படுத்தப்பட்ட பொது விநியோகத் திட்டம்

மத்திய அரசு, ஜனவரி 1992 முதல் வறட்சிக்கு இலக்கான பகுதிகள், பாலைவனப் பகுதிகள் மற்றும் பழங்குடியினர் வாழும் தொடர்பு கொள்ள இயலாத மலைவாழ் பகுதிகள் ஆகியவற்றை தெரிந்தெடுத்து சீர்படுத்தப்பட்ட பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தியது. தமிழ்நாட்டில் 56 வட்டாரங்கள் சீர்ப்படுத்தபட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வருகின்றன. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 10.43 இலட்சம் குடும்ப அட்டைகள் கொண்ட 50.60 இலட்சம் பேர் அடங்கியுள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழக்கமாக பொதுச் சேகரிப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையைவிட ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50 குறைவாக வழங்குகிறது. இருப்பினும் தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மத்திய அரசு வழங்கும் மேற்குறிப்பிட்ட குறைவான விலையை விட குறைவாகும். இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்படும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசு ஜூன் 1992 திங்களிலிருந்து மாதந்தோறும் 830 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்கிறது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் 830 மெட்ரிக் டன் அரிசி திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்படும் அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப் போதுமானதாக இல்லை. தற்போது செய்யப்படும் மாதாந்திர ஒதுக்கீடு தமிழ்நாட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 56 வட்டாரங்களில் 13 வட்டாரங்களில் உள்ள மற்றும் பழங்குடி மலைவாழ் பகுதியில் உள்ள மக்களுக்கு மட்டுமே விநியோகம் செய்யப்படுகிறது.

(v) பொது விநியோகத் திட்டத்தில் நகர்ப்புற நியாய விலை கடைகளை சீரமைத்தல்.

மாநகராட்சி மற்றும் நகராட்சி எல்லையிலுள்ள நியாய விலைக் கடைகள் சீரமைக்க பயன் விளைவிக்கத்தக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 3547 நகர்ப்புறக்கடைகள் 31 லட்சம் குடும்ப அட்டைதாரர்களின் தேவை

களை பூர்த்தி செய்து வருகின்றன. பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தும் நகர்ப்புறக் கடைகளை சீரமைக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :

1. எடைக் குறைவை நீக்குதல்.

2. நியாயவிலைக் கடைகளுக்கு தராசு வழங்குதல்.

3. புகார் தெரிவிக்க வேண்டிய அதிகாரியின் பெயர் தொலைபேசி எண் ஆகியவற்றை நியாய விலைக் கடையின் அறிவிப்புப் பலகையில் குறிப்பிடுதல்.

4. நியாயவிலைக் கடைகளில் உள்ள பணியிடங்களை நிரப்புதல்.

5. இருப்பில்லாத நிலையைத் தவிர்த்தல்.

6. தேவையான அளவுக்கு மண்ணெண்ணெய் பேரல்கள் இருப்பு வைத்துக்கொள்ளல்.

7. நியாயவிலைக் கடைகள் சுத்தமாகவும் பார்வையாகவும் வைத்துக்கொள்ளல்.

8. நியாயவிலைக் கடைகளுக்கு மின்வசதி அளித்தல்.

9. குடும்ப அட்டைதாரர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு பயிற்சியளித்தல்.

10. விற்பனையாளர்களுக்கு சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்குதல்.

11. அடிக்கடி பறக்கும் படைகள் மூலம் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்தல்.

12. சமூக விரோதிகளின் தொல்லைகளை நியாயவிலைக் கடைகளிலிருந்து நீக்குதல்.

13. விழிப்புக் குழுக்கள் அமைத்தல்.

(vi) விற்பனையாளருக்கு சம்பள உயர்வு :

1—6—1990-லிருந்து கிராம நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களின் மாத சம்பளத்தை ரூ. 250-லிருந்து ரூ. 350 ஆக அரசு உயர்த்தியது. மீண்டும் 1—3—1992-லிருந்து அவர்களின் மாத சம்பளத்தை ரூ. 350-லிருந்து ரூ. 500 க்கு உயர்த்தியுள்ளது. இவ்வாறு கிராம நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளருக்கு உயர்த்தி கொடுக்கப்பட்டுள்ள ரூ. 150 சம்பளத்தை தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக்கொள்கின்றன. இப்போது 1-3-1993-லிருந்து மேலும் ரூ. 100 கூட்டி அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 600 ஆக வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

(vii) வட்டார அளவிலான குழு:

பொது விநியோகத் திட்டத்தை மேலும் சிறப்பான முறையில் மேற்பார்வையிட அரசு 693 இளநிலை ஆய்வாளர் பணியிடங்களை வழங்கியுள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு செம்மையான, சரியான முறையில் எடை குறைவில்லாமல் பொது விநியோகத் திட்டம் செயலாக்கும் நியாய விலைக் கடைகளுக்கு கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்குவதைக் கண்காணிக்க வேண்டி வட்டார அளவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டார அளவுக் குழுவின் இளநிலை ஆய்வாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து கட்டுப்பாட்டுப் பொருட்களுடன் லாரியில் நியாய விலைக் கடை வரை பயணம் செய்வதால், நியாய விலைக் கடைகளுக்கு குறித்த எடையில் கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்கப்படுவதுடன் பெருமளவில் கட்டுப்பாட்டுப் பொருட்கள் கடத்தப்படுவது தவிர்க்கப்படுகிறது.

(viii) நடமாடும் நியாயவிலைக் கடைகள் நடத்த வேன்கள் வாங்க அரசு நிதியுதவி:

மலைவாழ் மக்களின் வசதிக்காக எளிதில் போய்ச் சேர முடியாத வெகு தொலைதூரத்திலுள்ள மலைப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் நடத்தும் கூட்டுறவு நிறுவனங்கள் நடமாடும் நியாயவிலைக் கடை நடத்த வேன்கள் வாங்க அரசு நிதியுதவி அளித்து வருகிறது. முந்தைய ஆண்டுகளில் வழங்கிய அரசு நிதியுதவியின் மூலம் இதுபோன்ற ஏற்கனவே 11 வேன்கள் நடமாடும் நியாய விலைக் கடைகளாக மலைப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் இதுபோன்ற மேலும் எட்டு வேன்கள் வாங்க ரூ. 32 லட்சம் நிதியுதவி வழங்கவுள்ளது. இதில் 50 சதவீதம் கடன், 5 சதவீதம் மானியமாகும்.

(ix) சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளின் தலையீடு:

''வெளிச்சந்தை விற்பனையில் தலையிட்டு'' (Market Intervention) பொதுவாக உபயோகப்படுத்தப்படும் நுகர்வோர் பொருட்களின் அதிகரிக்கும் சில்லறை விற்பனை விலையை கட்டுப்படுத்தும் பொருட்டு, பண்டிகை காலங்களில் 27 பொருட்களை நுகர்வோர் கூட்டுறவுகள் விற்பனை செய்

கின்றன. சென்ற ஆண்டு கிறிஸ்துமஸ் மற்றும் இவ்வாண்டு பொங்கல் பண்டிகைகளின் போது முக்கியமான இடங்களில 1,000 ''பண்டிகை குறைவு விலைக் கடைகள்'' திறக்கும்படி கூட்டுறவுகள் அறிவுறுத்தப்பட்டன.

மேற்கண்ட திட்டத்தைப் பற்றி விளம்பரம் செய்யும படியும், மேற்படி பண்டிகை காலங்களில் கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் வாங்கும் அனைத்து பொருட்களுக்கும் 2 சதவீதம் விலை குறைத்து விற்கவும் நுகர்வோர் கூட்டுறவுகள அறிவுறுத்தப்பட்டன.

வெளிச்சந்தையில் மேலும் தலையிடும் முகத்தான் அரிசி ஆலைகளை சொந்தமாகக் கொண்டுள்ள கூட்டுறவு நிறுவனங் கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து ஒட்டு மொத்தமாக நெல் கொள்முதல் செய்து, அரிசியாக்கி நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில், கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய அரசு தீர் மானித்திருந்தது. அதன்படி கூட்டுறவுகள் நடத்தும் அரிசி ஆலைகளால் அரவை செய்யப்பட்ட அரிசியை நுகர்வோர் கூட்டுறவுகள் நடத்தும் சில்லறை விற்பனை நிலையங்கள் மூல மாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு பயன்படும் வகையில் விற்பனை செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(x) சிறப்பங்காடிகள் மற்றும் சிறு சிறப்பங்காடிகள்:

மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலை கள், 34 பல்பொருள் சிறப்பங்காடிகளையும், 234 சிறு சிறப்பங் காடிகளையும் (நவீன சில்லறை விற்பனைக் கூடங்களும்) நடத்தி வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டத்தின் கீழ் பெரிய அளவு சில்லறை விற்பனை நிலையம் ஒன்றையும் சிறிய அளவு விற்பனை நிலையங்கள் மூன்றையும், அமைக்க மொத்தத்தில் 3.15 இலட்ச ரூபாய் நிதி உதவியாக வழங்கப் பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில், பெரிய அளவு சில்லறை விற்பனை நிலையம் ஒன்றையும், சிறிய அளவு சில்லறை விற் பனை நிலையம் ஒன்றையும் அமைத்திட 1.95 இலட்ச ரூபாய்க் கான கருத்துரு மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

(xi) சுயசேவைப் பிரிவு ஆரம்பித்தல்:

தேவைப்படும் நுகர்பொருட்களின் தரத்தை கண்டறிந் தும் அவற்றின் விலைகளை ஒப்பிட்டும் சரிபார்த்த பிறகு வாங்குவதை விரும்பும் நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்ய சுயசேவைப் பிரிவுகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் களின் வியாபாரத்தில், முன்னேற்றம் காண்பதற்காகவும், நுகர் வோர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் ஏற்படுத்தப்பட்ட

1993 மார்ச் 30]

நவீன உத்திகளில் ஒன்றாகும். இம்முயற்சிக்கு நல்ல ஆதரவு கிடைத்து அதனால் நுகர்வோர் கூட்டுறவுகளின் வியாபாரம் பெருகியுள்ளது. இப்போது 62 சுயசேவைப் பிரிவுகள் செயல் பட்டு வருகின்றன. சென்னை திருவல்லிக்கேணி நகரக் கூட் டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தேனாம்பேட்டையில் உள்ள புதிய காமதேனு சுயசேவை தென்னிந்திய விலேயே மிகப் பெரிய அளவில் சுமார் 6,000 சதுர பரப்பள வில் இயங்கும் சுயசேவைப் பிரிவாகும்.

5. தனி வகை கூட்டுறவு அமைப்புகள்:

நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சில சமுதாய பிரிவினரான தொழிலாளர்கள், சலவையாளர், முடிதிருத்துவோர், உப்புத் தொழிலாளர் மற்றும் மலைவாழ் இனத்தவரின் நலனுக்கென பிரத்யேகமாக சிலவகை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெற்று அதன்மூலம் தமது உறுப்பினர் களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. 18 கூட்டுறவு அச்சகங்கள் தமது உறுப்பினர் சங்கங்கள் மற்றும் பிற கூட்டுறவுச் சங்கங்களின் அச்சுப் பணிகளை ஏற்று நியாயமான விலையில் முடித்து வருகின்றன. பிற சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு கடன் அல்லது சேவையை அளித்து வருகின்றன. அரசு மானியம் அரசு பங்கு மூலதனம், கடன் மற்றும் துறைப் பணியாளர்களின் இலவச சேவை ஆகியவை இத்தனி வகை சங்கங்களுக்கு அளிக்கப் படுகின்றன.

(i) பழங்குடியினர் மேம்பாடு:

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 65,714 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. முதல் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. பெரும்பாலான பழங் குடியினரின் குடும்பங்கள் இச்சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பழங்குடியினரின் ஏழ்மையான பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, அரசு இச்சங்கங்களுக்கு தொடர்ந்து நிதியுதவி களைத் தாராளமாக வழங்கி வருகிறது. இச்சங்கங்கள் பயிரிடு தல் மற்றும் உற்பத்திக் காரியங்களுக்காகச் சலுகை வட்டியில் அதாவது ஆண்டுக்கு நான்கு சதவீதத்தில் 1984-85 வரை கடன் வழங்கின. தற்போது இச்சங்கங்கள் வட்டியில்லாக் கடன்கள் வழங்கி வருகின்றன. சங்கங்களுக்கான வட்டியை அரசு மானியமாக வழங்குகிறது. 1991-92ல் வட்டி மானியமாக ரூ. 33.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங் குடியினர் வளர்ச்சித் திட்டப் பகுதி மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டமில்லாத பகுதிகளுக்கு 1992-93

[1993 மார்ச் 30

ஆம் ஆண்டில் ரூ. 74.68 இலட்சம் நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 முதல் இச்சங்கங்கள் எய்திய முன்னேற்ற விவரம் வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு.	வழங்கிய கடன்.	வேளாண் பொருள் கொள் முதல்	வேளாண் இடு பொருள் வழங்குதல்.
(1)	(2)	(3)	(4)
1985-86	98.48	11.00	26.41
1986-87	120.26	14.27	29.20
1987-88	166.52	13.85	32.15
1988-89	228.29	16.48	35.66
1989-90	273.17	29.54	47.26
1990-91	321.00	30.89	50.97
1991-92	406.43	79.30	73.89
1992—93 (டிசம்பர் 1992 வரை)	222.26	47.00	54.49

ஆண்டு.	சிறுவனப் பொருள் கொள்முதல்.	நுகர்பொருள் விநியோகம்.
	(5)	(6)
1985-86	22.15	95.90
1986-87	34.15	104.39
1987-88	54.39	136.20
1988-89	45.05	167.43
1989-90	45.04	194.93
1990-91	50.16	239.34
1991-92	87.20	268.60
1992-93 .. (டிசம்பர் 1992 வரை).	43.37	204.62

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்.

நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சியை செயல்படுத்துவதெற்கென தேசீய கூட்டுறவு வளர்ச்சித் கழகம் ''ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்'' எனும் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமத் கைத்தொழில், கைவினைஞர் தொழில் போன்ற பண்ணைசாரா பிரிவுகள் முதலியவற்றில் பன்முகைப்படுத்தி பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தற்போது இந்தத் திட்டம் காமராஜர் மாவட்டத்தில் ரூ. 862 இலட்சம் முதலீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு இதுவரையில் ரூ. 552.06 இலட்சம் விடுவித்துள்ளது.

இத்திட்டத்தை தென்னாற்காடு மாவட்டத்திற்கு விரிவு படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 15 கோடி முதலீட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக அரசு இதுவரை ரூ. 218.722 இலட்சம் விடுவித்துள்ளது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ. 14.92 கோடி செலவில் 5 ஆண்டுகளில் செயல்படுத்த தர்மபுரி மாவட்டம் அரசால் தெரிவு செய்யப்பட்டது. இதற்கென கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அவரது அலுவலக முது நிலை அலுவலகக்குழு மூலம் ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கை மாநில அளவிலான குழுவால் 5—11—92 அன்று ஆய்வு செய்யப்பட்டது. திட்ட அறிக்கையில் ஒரு சில சிறிய மாற்றங்கள் செய்ய குழு ஆலோசனை கூறியது. குழு கூறிய மாற்றங்களைச் செய்த பிறகு திட்ட அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்வதற்காக பரிந்துரை செய்யப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த, திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான திட்டறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை இன்னும் பெறப்படவில்லை,

6. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

(i) கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரம் :

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டினை சீரிய நிலையில் கவனிக்கவும், பலதரப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காகவும், உறுப்பினர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி பயிற்சி அளித்தல் விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புவதற்காக 1914-ல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலான சங்கமாக அமைக்கப்பட்டது. அது தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி பயிற்சி, விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புதல் ஆகிய பணிகளையும் கண்காணிக்கிறது. அது ஆராய்ச்சி மற்றும் கல்விக்கும் பொறுப்பேற்றுள்ளது.

மாவட்ட அளவில் 16 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மேற்கூறிய பணிகளை செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் எல்லா தலைமை கூட்டுறவு நிறுவனங்கள், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிலையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. அதனுடைய நிதி அங்கத்தினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் சந்தா கட்டணங்கள், வெளியீடு விற்பனை மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி வசூல் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது. மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயல்பாட்டு எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் தவிர மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி என்ற இரண்டு நிதிகளை நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு உறுப்பினர் சங்கமும் தங்களது நிகர இலாபத் தொகையிலிருந்து முறையே 3 சதவீதமும், 2 சதவீதமும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு சந்தா செலுத்த வேண்டும். வசூல் தொகையில் 10 சதவீதத்தினை தங்களது செலவிற்காக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் வைத்துக்கொள்கின்றன. இந்த இரண்டு நிதிகளும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 90 மற்றும் 91-ன்படி அமைக்கப்பட்ட குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இக்குழுக்களுக்கு பதவி வழி தலைவராவார். (Ex Officer Preside: t)

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இதழ்கள் வெளியிட்டும், பொருட்காட்சிகள் நடத்தியும் சுவரொட்டிகள், படக்காட்சிகள் மற்றும் சினிமாப் படங்கள் மூலமும் கூட்டுறவுக் கொள்கைகளை பரப்பி இருகின்றன. இது உறுப்பினர் கல்வி திட்டமும்

1993 மார்ச் 30]

நடத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கூட்டுறவு வார விழாவினை நடத்தி கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடம் பரப்பி வருகின்றது.

(ii) கூட்டுறவுப் பயிற்சி ;

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, சேலம், காஞ்சீபுரம், வேலூர், திருநெல்வேலி, சாத்தூர் மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இள நிலையாளருக்கு பயிற்சி அளித்து வருகின்றன. இப் பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களில் பணியில் சேர விரும்புவோருக்கும் தேவையான 36 வாரங்கள் கால அளவிலான பொது அடிப்படைப் பயிற்சி அளித்து வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு அவர்கள் வேலைக்கு தொடர்புடைய மற்றும் தேவையான குறுகிய காலப் பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் வழிமுறைகளின்படி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி, கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியும், நடப்பாண்டு முதல் இந்தப் பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இவை தவிர, நேரடி நியமனம் செய்யப்பட்ட இளநிலை ஆய்வாளர்களுக்கும் மற்றும் சான்றளிக்கப்பட்ட இளநிலை ஆய்வாளர்களுக்கும் சென்னையில் உள்ள மத்திய கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இடைநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகச் சென்னையில் நடேசன் கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியும் மதுரையில் ஒரு கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

(iii) வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவுதல் :

தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழக III-ஆவது திட்டத்தின் கீழ் மாதவரத்தில் ரூ. 2.22 கோடி செலவில் ஒரு வேளாண்மை கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இது ஒரு ஆண்டுக் காலத்தில் முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பயிற்சி நிலையம் மத்திய வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் இணை அமைச்சரால் 17—11—1992 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தை உருவமைத்து, நிறுவி பயிற்சி திட்டங்களை செயல்முறைப்படுத்தும் பணியினை தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி செய்துள்ளது.

[1993 மார்ச் 30

(iv) **தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைத்தல் :**

தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைத்திட தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி கூட்டுறவுச் சங்கம் ஒன்று 12—2—1992 முதல் செயல்பட்டு வருகிறது. தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவு நிறுவனங்கள் இச் சங்கத்தில் உறுப்பினர்கள் ஆவார்கள். இந்த இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களையும் ஆரம்பித்து நடத்த ஆகும் மூலதனச் செலவு மற்றும் தொடராச் செலவினங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 150 இலட்சம் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. தொடரும் செலவினங்களுக்கு ரூ. 125 இலட்சத்திற்குக் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தொகையினை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கும் வட்டித் தொகையினைக் கொண்டு 2 தொழிற் பயிற்சி நிலையங்களையும் நடத்த வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இக்குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு கூட்டுறவுத் தொழில் பயிற்சி நிலையங்களும் 16—9—1992 முதல் செயல்படத் துவங்கியுள்ளன. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கலைகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது :—

(1) துணிவெட்டுதல் மற்றும் தையற்கலை.

(2) ஆடை தயாரிக்கும் கலை.

(3) கணிப்பொறி பயிற்சி.

மேற்படி பயிற்சிகளுக்குத் தேவையான உள்ளமைப்புகளாகிய கணிப்பொறி, தையல் இயந்திரம் மற்றும் தேவையான உபகரணங்கள் அனைத்தும் பெறப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பயிற்சியாளர்களுக்கு தங்குவதற்கு தங்கும் விடுதிகளும் குறுகிய காலத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நிலையங்களில் தேவைக்கு ஏற்றவாறு முதல்வர்கள், நிர்வாக அலுவலர்கள், கல்வி பயிற்றுவிக்கும் அலுவலர்கள், மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 மார்ச் 30]

7. பொது

(i) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் :

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு கட்டங்களில் முறையே 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் திங்களில் தேர்தல் நடத்த ஜூன் 1992-ல் அரசு ஆணை இட்டது. மேற்படி அரசாணைப்படி தேர்தல் பணிகள் துவக்கப்பட்டபோது உறுப்பினர்கள் சேர்க்கை, நீக்கம் மற்றும் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பல நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்படி நீதிப்பேராணை மனுக்களின் பேரில் சென்னை உயர்நீதிமன்றம் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெற இருந்த தேர்தலை ஒத்திவைக்குமாறு W.M.P. 14985/1992 மற்றும் W.P. No. 10375/1992-ல் அரசுக்கு 7—8—1992ல் உத்திரவிட்டது. மேலும், மேற்படி நீதிப் பேராணைகளின் தொகுப்பை நீதிபேராயத்தின் விசாரணைக்கு அனுப்பியது. இருந்தபோதிலும் நாளது தேதி வரையில் மேற்படி நீதிப் பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதிமன்ற ஈராயத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மேற்கண்டவாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணைகள் தவிர உச்சநீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப் பேராணை மனு எண் 758/91-ல் மனுதாரர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடை விண்ணப்பம் (ஐ.ஏ). 4/92 தாக்கல் செய்துள்ளதற்கு அரசு எதிர் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. தற்போது இவ்வழக்கிடை விண்ணப்பம் 4/92ஆம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது.

இச்சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் முடிவுற்ற பின்னரே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த இயலும்.

(ii) மாதிரி கூட்டுறவுச் சட்டம் :

கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையை உடனடியாக ஆராய்ந்து ஒரு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை உருவாக்க மைய அரசின் முன்னாள் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சௌத்ரி பிரஹாம் பிரகாஷ் அவர்கள் தலைமையிலான ஒரு குழுவை 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் மைய திட்டக்குழு அமைத்தது. இதற்கேற்ப இக்குழு ஒரு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை 1991ஆம் ஆண்டு மே திங்களில் தயாரித்தது. கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையை ஆராயுங்கால் குழு கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளது :—

[1993 மார்ச் 30

"அதிக அளவில் அரசு உதவி பெற்றதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி வேகமாக இருந்துள்ள அதே நேரத்தில் கூட்டுறவுச் சட்டங்கள் தடைக் கற்களாக உள்ள பல அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்ததால், கூட்டுறவு இயக்கத்தின் மேல் அரசின் பிடி வலுவாகவும் இறுக்கமாகவும் இருந்து வந்துள்ளது. இது கூட்டுறவுச் சங்கங்களை வழி நடத்தும் தலைமையைத் திறமையற்றதாக ஆக்கி, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே அக்கறையின்மையை ஏற்படுத்தியதோடு, அடிமட்டத்தில் தானாகவே செயல்படும் திறனையும் ஒடுக்கி விட்டது".

மேற்கண்ட கருத்தினையொட்டி மாதிரி சட்டத்தில் அணுகுமுறை.

"ஒருங்கிணைந்த கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தவும், கூட்டுறவு இயக்கத்திற்கே உரித்தான அதன் இயல்பான தன்மையை, மீண்டும் கொண்டுவரவும், கூட்டுறவு இணையங்கள் தங்களைச் சார்ந்த சங்கங்களுக்குப் பொறுப்பாக இருந்து அவைகளை பேணி வளர்க்கவும், கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் அரசின் கட்டுப்பாட்டைக் குறைப்பதற்கும், கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் ஊடுறுவுவதையும் தடுப்பதாகவும்", உள்ளது.

இந்தக் குழுவின் கணிப்புப்படி, "முன்மாதிரிச் சட்டம், தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களிலுள்ள காலனி ஆதிபத்திய அணுகுமுறையை நீக்கிவிட்டு, மக்களாட்சி தத்துவங்களின் படி சுயாட்சி நிறுவனங்கள் இயங்க வேண்டிய தேவையான நெறிமுறைகளுக்கு ஏற்ப உள்ளது."

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் தேதி நடந்த கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது மத்திய விவசாய அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் தற்போது உள்ள பல்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குப் பதிலாக இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் கொண்டு வர இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவித்தார்.

இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தின் நகல்கள் இம்மாநிலத்திலுள்ள எல்லா செயல்முறைப் பதிவாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, அவர்களுடன் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தில் உள்ள பல்வேறு நல்ல அம்சங்களைக் கண்டறியவும் தற்போதுள்ள மாநிலச் சட்டத்திலுள்ள குறைகளை மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினோடு ஒப்பிட்டுச் சுட்டிக்காட்டவும், சர்க்கரைத்துறை ஆணையர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், ஆல்துறை ஆணையர், கைத்தறித்துறை ஆணையர், தொழில் துறை ஆணையர் ஆகியோர் கொண்ட சிறு குழு ஒன்று அமைக்கப்

பட்டுள்ளது. அக்குழு 1—5—1993க்கு முன்னர் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வறிக்கை கிடைத்த பிறகு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை ஏற்றுக் கொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

(iii) முடிவுரை :

வேளாண்மைக் கடன் வழங்குதல், இடுபொருள் வழங்குதல் நுகர்வோர் பணிகள், வேளாண் விளைபொருள், விற்பனை மற்றும் விலைகளை நிலை நிறுத்துவதற்கென சந்தைத் தலையீட்டு முறை முதலியவை வாயிலாக மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குக் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும்பணி ஆற்றி வருகின்றன. எனவே, பொதுவாக மக்களுக்கும் குறிப்பாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும் கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை விரிவுபடுத்தும் நோக்குடன் அவற்றை வலுப்படுத்துவது தேவையான ஒன்றாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

இணைப்பு—III

(121-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

1. முன்னுரை :

இன்றியமையாப் பொருட்கள் பொது மக்களுக்குப் போது மான அளவிலும், நியாயமான விலையிலும் கிடைப்பதை உறுதி செய்வதே உணவுப் பொருள் வழங்கல் குறித்த அரசின் கொள்கை யாகும். ஆக்கப்பூர்வமான பொது விநியோக முறையைப் பரா மரிப்பதாலும், மக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளை கண்காணிப்பதா லும், 1955ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட் டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணை களை செயல்படுத்துவதாலும், மாநிலத்தில் நுகர்வோர் இயக் கம் பலம்பெற அதனை ஊக்குவிப்பதாலும், இக்கொள்கையை வெற்றிகரமாக அரசு செயல்படுத்தி வருகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் (குற்றப் புல னாய்வு) காவல் துறைத் துணைத் தலைவர் ஆகிய இரண்டு துறைத் தலைவர்களுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகிய இரு அரசு நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம், மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் ஆகியனவும் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

பின்வரும் பத்திகள் அரசு மேற்கண்ட கொள்கையை செயல் படுத்துவதற்கு உதவியாக உள்ள பல்வேறு கூறுகளைப் பற்றி விவரிக்கின்றன.

2. பொது விநியோக முறை :

1964ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டைகள் மூலம் இன்றி யமையாப் பொருட்களை விநியோகிக்கும் முறை தமிழ்நாட்டில் உள்ளது. 1966ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரை சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர்ப்பகுதி மற்றும் கோயம் புத்தூர் நகரம் மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் சட்டப்படி யான உணவுப் பங்கீட்டு முறை அமுல்படுத்தப்பட்டு வந்தது. 1975ஆம் ஆண்டு கணக்கெடுப்புக்குப் பின் மாநிலத்திலுள்ள

1993 ஏப்ரல் 30]

அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் போதுமான அளவிலும், நியாயமான விலையிலும் கிடைக்க வேண்டும் என்ற அரசின் கொள்கை நிறைவு பெற, பொது விநியோக முறை ஒரு முக்கிய சாதனமாகும். பொது மக்கள் சுலபமாகச் சென்று பெறக்கூடிய இடங்களில், வாங்க இயலக்கூடிய விலைகளில், ஏற்றுக் கொள்ளத்தக்கத் தரத்தில், சில இன்றியமையாப் பொருட்களை கிடைக்கச் செய்வதே பொது விநியோக முறையின் குறிக்கோளாகும். தற்போது பொது விநியோக முறையில் மாநிலத்தின் அனைத்து வருவாய் கிராமங்களிலும் உள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து குடும்பங்களுக்கும், குடும்ப அட்டைகள் மூலமாக அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை அரசு வழங்கி வருகிறது.

குடும்ப அட்டைகள் :

1982ஆம் ஆண்டு கணக்கெடுப்புக்குப் பின் மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. பின்னர் 1988ஆம் ஆண்டு பழைய குடும்ப அட்டைகளில் இருந்த பதிவுக் குறிப்புகளுடனேயே புதிதாக அட்டைகள் வழங்கப்பட்டன. இந்தக் குடும்ப அட்டைகள் 31-12-1992 வரை அமுலில் இருந்தன.

முன்பிருந்த குடும்ப அட்டைகளில் இருந்த பதிவுக் குறிப்புகள், குறிப்பாக குடும்ப வருமானம் போன்ற குடும்பத்தைப் பற்றிய தற்சமயத்திற்கான சரியான தகவல்களைத் தராததால், 1993 முதல் 1998ஆம் ஆண்டுகள் வரையிலான காலத்துக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டபோது, குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் சரியான வருமானத்தைத் தாங்களே முன்வந்து தரச் செய்யும் ஒரு திட்டம் மூலம் குடும்பத்தைப் பற்றிய சரியான விவரங்கள் பெறப்பட்டு களப்பணியாளர்களால் சரிபார்க்கப்பட்ட பின் அவை புதிய குடும்ப அட்டைகளில் பதிவு செய்யப்பட்டன. 1-1-1993 முதல் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த புதிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு இது வரை ஏறக்குறைய 120 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகளை வழங்கும்போது ஒவ்வொரு தெருவிலும் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, முன்பிருந்ததுபோல் அல்லாமல், அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள நியாய விலைக் கடைகளிலேயே அவை இணைக்கப்பட்டு 'இடத்திற்கான சேவை' என்ற ஒரு புதிய திட்டமொன்று புகுத்தப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 30

குடும்ப அட்டை இல்லாத குடும்பத்தினர் குடும்ப அட்டை பெற புதிய விண்ணப்பங்களை 1993 பிப்ரவரி மாதம் இறுதிவரை தரலாம் என அரசு அறிவித்தது. இந்த விண்ணப்பங்களை வெள்ளைத் தாள்களிலேயே எழுதி அனுப்பினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. மாநில முழுவதும் இத்தகைய 35 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும் வேலை ஏற்கெனவே துவக்கப்பட்டுவிட்டது. புதிய குடும்ப அட்டைகள் நான்கு அல்லது ஆறு மாதங்களில் வழங்கப் பட்டுவிடும்.

நியாயவிலைக் கடைகள்:

ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக்கடை யாவது இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்சமயம் மாநிலம் முழுவதுமாக 21,985 நியாவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20,912 கடைகளை கூட்டுறவுச் சங்கங்களும், மீதமுள்ள கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன.

பகுதிநேர நியாயவிலைக் கடைகள்:

இரண்டு நியாயவிலைக் கடைகளின் இடையேயுள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்கு மேல் இருந்தால் அங்கு பகுதி நேர நியாய விலைக் கடையினைத் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தக் கடைகளை நடத் துவதற்கான கட்டிடங்கள் வாடகையின்றி பெறப்பட வேண்டு மென ஆணையிடப்பட்டுள்ளது. முழுநேர நியாயவிலைக் கடை களில் உள்ள பணியாளர்களே இந்தப் பகுதிநேர நியாயவிலைக் கடைகளையும் கவனித்து வருவர். தற்போது இம்மாநிலத்தில் இதுபோன்ற 903 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

நடமாடும் நியாயவிலைக் கடைகள்:

நெடுந்தூரம் உள்ள மற்றும் மலைப்பாங்கான எளிதில் சென் றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு வட ஆற்காடு அம்பேத்கார், திண்டுக்கல் அண்ணா, திருநெல்வேலி கட்டபொம்மன், நீலகிரி, பெரியார் மற்றும் திருச்சி ராப்பள்ளி மாவட்டங்களில் 11 நடமாடும் நியாயவிலைக் கடை கள் இயங்கி வருகின்றன. மேலும், எட்டு நடமாடும் நியாய விலைக் கடைகள் கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

1993 மார்ச் 30]

கிராமக் கடைகள் அனைத்திலும் பகுதி நேர பட்டியல், எழுத்தர்/விற்பனையாளரே, மாதமொன்றுக்கு 100 ரூபாய் ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டனர். பின்னர் இந்த ஊதியம் மாதத்துக்கு 150 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

இந்த கிராமக் கடைகள் 500 மற்றும் அதற்கதிகமான மக்கட் தொகையுள்ள கிராமங்களில் திறக்கப்பட்டன. மக்கட் தொகை 100-க்கு மேலும், ஆனால், 500-க்கும் குறைவாக உள்ள கிராமங்களில் பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டன.

1977ஆம் ஆண்டிலிருந்து நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு சீராக உயர்ந்து வந்துள்ளது.

ஆண்டு.	கடைகளின் எண்ணிக்கை.
(1)	(2)
1977	8,576
1978	10,182
1979	17,002
1980	17,386
1981–82	17,536
1983	17,796
1984	20,458
1985	20,458
1986	21,035
1987	21,114
1988	21,141
1989	21,134
1990	21,935
1991	21,977
1992	21,985

கடைகளின் எண்ணிக்கை அவை இருக்கும் பகுதிகள், மற்றும் அவற்றை நடத்தும் நிறுவனங்கள்:

ஊரக மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள நியாயவிலைக் கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும்

[1993 மார்ச் 30

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் கடைகளின் விபரம் பின் வருமாறு :—

பகுதி.	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்.	கூட்டுறவுச் சங்கங்கள்.	சார்புமுறை பதிவாளர்கள்	மொத்தம்.
	நிறுவனம்.			
(1)	(2)	(3)	(4)	(5)
ஊரகம்	337	16,455	73	16,865
நகரம்	736	4,229	155	5,120
மொத்தம் ..	1,073	20,684	228	21,985

மாநிலத்தில் உள்ள நியாயவிலைக் கடைகள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை ஆகியவை கீழே உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன :—

குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை.	கடைகளின் எண்ணிக்கை.	திறன்* எண்ணிக்கை.	திறன்† சதவிகிதம்
(1)	(2)	(3)	(4)
1. 100க்குக் குறைவு	776	..	3
2. 101–200	2,270	3,046	13
3. 201–300	2,473	5,519	25
4. 301–400	2,426	7,945	36
5. 401–500	1,941	9,886	45
6. 501–600	1,784	11,670	53
7. 601–700	1,863	13,533	61
8. 701–800	1,805	15,338	69
9. 801–900	1,751	17,089	78
10. 901–1,000	1,551	18,640	85
11. 1,000க்கு மேல்	3,345	21,985	100
மொத்தம் ..	21,985		

*திறன் எண்ணிக்கை— Cumulative Total.

†திறன் சதவீதம்— Cumulative Percentage.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

சில்லறை விற்பனைக்கான விளிம்பு :

சில்லறை விற்பனையாளர்களான கூட்டுறவு சங்கங்கள் கடைகளை நடத்த உதவும் பொருட்டு அரசு பொது விநியோக முறையில் விநியோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களுக்கு கீழ்க்கண்டவாறு விளிம்பினை (Margin) அனுமதித்துள்ளது :—

பொருள்	விளிம்பு
அரிசி	ஒரு குவிண்டாலுக்கு 10 ரூபாய்
கோதுமை	ஒரு குவிண்டாலுக்கு 18 ரூபாய்
சர்க்கரை	ஒரு குவிண்டாலுக்கு 7.26 ரூபாய்
மண்ணெண்ணெய்	ஒரு கிலோ லிட்டருக்கு 305 ரூபாய்

இவற்றில் அரிசிக்கான விளிம்பு, குடும்ப அட்டைதாரர்களின் சில்லறை விலை உயர்த்தப்படாமல், அரசாலேயே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மற்றவை அட்டைதாரர்கள் வாங்கும் பொருட்களின் சில்லறை விலையில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை கோணிகள் கூட்டுறவு சங்கங்கள் அவற்றை விற்று தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அவர்களிடமே ஒப்புவிக்கப்படுகின்றன. தற்போதுள்ள சில்லறை விற்பனை விளிம்புகளின் மூலம் பெறப்படும் தொகையைக் கொண்டு ஒரு நியாய விலைக் கடையை வருமான இழப்பின்றி நடத்த குறைந்தது 800 குடும்ப அட்டைகளாவது அக்கடைக்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் குறைந்தது ஒரு கடையாவது இருக்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்திருப்பதால், பல கிராமக் கடைகளில் 800 அட்டைகளுக்கும் குறைவாகவே அட்டைகள் உள்ளன. மொத்தம் உள்ள 21,985 கடைகளில், 15,338 கடைகள் அதாவது 69 சதவீதம் இவ்வாறு இருப்பதால் அவை பொருளாதார அடிப்படையில் லாபகரமாக இயங்கவில்லை. இவை பெரும்பாலும் அடிப்படை கூட்டுறவு விவசாய வங்கிகளால் நடத்தப்படுகின்றன. எனவே இந்த வங்கிகளின் ஒட்டு மொத்த செயல் திறன் இதனால் பாதிக்கப்படுகிறது.

பொது விநியோகம் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் :

(1) அரிசி :

தமிழ் நாட்டின் முக்கிய உணவு அரிசியாகும். ஆகவே, பொது விநியோகத்தில் வழங்கப்படும் பொருட்களில் முக்கியமானது அரிசியாகும். பொது விநியோகத்திற்குத் தேவையான அரிசி கீழ்க்கண்ட முறைகளில் பெறப்படுகிறது:—

(அ) காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள்முதல் முறையில் விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்தல் ;

(ஆ) அரிசி ஆலையாளர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து வர்த்தக லெவி மூலம் கொள்முதல் ;

(இ) மத்திய அரசால் மாதந்தோறும் மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியை பெறுதல் ; மற்றும்

(ஈ) மேற்கூறிய முறைகளில் பெறப்படும் அரிசி பொது விநியோகத்திற்கு போதாவிட்டால் வெளிச் சந்தையில் வாங்குதல். இவை குறித்து கீழ்க்கண்ட பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

1.1. பொது விநியோக முறைக்கான அரிசியினைப் பெறும் வழிகள் :

(i) ஏகபோக கொள்முதல் :

அறுவடைக் காலங்களில், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்கள் முழுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர், உடையார்பாளையம், முசிறி, குளித்தலை, லால்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கி வட்டங்களிலும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நேரிடையாக நெல் கொள்முதல் செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் விவசாய விளை பொருள் உற்பத்தி செலவுகள் மற்றும் விலைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகள், மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் கருத்துக்கள் மற்றும் வேளாண்மை இடு பொருட்களான விதைகள், உரங்கள் போன்ற விலைகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான அனைத்தையும் கருத்தில் கொண்டு, மைய அரசு நெல்லுக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்கிறது. சென்ற ஆண்டுகளில் மைய அரசு நெல்லுக்கு நிர்ணயித்த கொள்முதல் விலைகள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	கொள்முதல் விலை. (குவிண்டாலுக்கு ரூபாய்.)		
	சாதாரணம்	சன்னம்	மிகச்சன்னம்
(1)	(2)	(3)	(4)
1981—82 ..	115	119	123
982—83 ..	122	126	130
1983—84 ..	132	136	140
1984—85 ..	137	141	145

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

(1)		(2)	(3)	(4)
1985–86	..	142	146	150
1986–87	..	146	150	154
1987–88	..	150	154	154
1988–89	..	160	170	180
1989–90	..	185	195	205
1990–91	..	205	215	225
1991–92	..	230	240	250
1992–93	..	270	280	290

மைய அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலைகளுக்கும் கூடுதலாக, ஏகபோக கொள்முதல் பகுதிகளில் விவசாயிகளுக்கு மாநில அரசு தற்சமயம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 35 ரூபாயை உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கி வருகிறது.

1–9–1992 முதல் அமுலுக்கு வந்த 1992–93 ஆம் ஆண்டுக்கான கொள்முதல் விலைகள் பின்வருமாறு :—

ரகம்.		கொள்முதல் விலை. (மைய அரசு)	விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை குவிண்டாலுக்கு (மாநில அரசு)	மொத்தம்.
(1)		(2)	(3)	(4)
			(ரூபாயில்)	
சாதாரணம்	..	270	35	305
சன்னம்	..	280	35	315
மிகச்சன்னம்	..	290	35	325

இது ஏகபோக கொள்முதல் பகுதிகளில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் கொடுக்கும் நெல்லுக்கு வழங்கப்படும் விலையாகும்.

[1993 மார்ச் 30

இந்த ஆண்டு ஏகபோகக் கொள்முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சொல்லப் போனால், குறுவை சாகுபடி 1-9-1992-லேயே ஆரம்பித்து விட்டது. அமோகக் கொள்முதல் காரணமாக 1992 ஆம் ஆண்டு சம்பாவிலும் குறுவையிலும் இதுவரை கண்டிராத அளவில் 18.35 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக சம்பாவிலும் குறுவையிலும் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு பின்வருமாறு :—

ஆண்டு.	சம்பா.		
	நேரடி கொள்முதல் நிலையம்.	லெவி.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(நெல் மெட்ரிக் டன்னில்).		
1982 ..	29,841	57,0,547	6,00,388
1983 ..	2,17,912	1,04,854	3,22,766
1984 ..	5,65,821	3,75,560	9,41,381
1985 ..	3,30,026	2,80,631	6,10,657
1986 ..	6,68,428	3,27,112	9,95,540
1987 ..	9,27,979	1,58,685	10,86,664
1988 ..	6,07,735	1,50,890	7,58,625
1989 ..	8,53,470	65,415	9,18,885
1990 ..	11,14,786	1,02,478	12,17,264
1991 ..	10.50,117	1,05,198	11,55,315
1992 ..	12,45,000	5,000 (29-1-1992 வரை)	12,50,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

ஆண்டு		குறுவை.			
		நேரடி கொள்முதல் நிலையம்.	லெவி.	மொத்தம்.	நிகர மொத்தம்.
		(5)	(6)	(7)	(8)
		(நெல் மெட்ரிக் டன்னில்.)			
1982	..	77,441	2,29,972	3,07,413	9,07,801
1983	..	1,33,331	7,621	1,40,952	4,63,718
1984	..	4,81,809	1,27,907	6,09,716	15,51,097
1985	..	3,39,669	85,454	4,25,123	10,35,760
1986	..	1,19,953	26,237	1,46,190	11,41,730
1987	..	75,884	8,288	84,172	11,70,836
1988	..	1,64,756	26,644	1,91,400	9,50,025
1989	..	1,20,328	29,913	1,50,241	10,69,126
1990	..	1,01,051	67,756	1,68,807	13,86,071
1991	..	1,99,019	17,791	2,16,810	13,72,125
1992	..	5,85,010	..	5,85,010	18,35,010

1993 சம்பா பருவத்திலும் ஏகபோக கொள்முதல் 16-12-1993 லிருந்து தொடரப்பட்டுள்ளது. இது 30-6-1993 வரை அமுலில் இருக்கும். 1993 சம்பா பருவத்துக்கான விளைச்சல் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பருவத்திற்கு 12 லட்சம் மெட்ரிக் டன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 17-3-1993 வரையில் 11.31 லட்சம் மெட்ரிக் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. குறித்த காலத்துக்கு முன்பே இந்த குறியீட்டை எட்டி விடலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

(ii) மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு :

ஒவ்வொரு மாதமும், பொது விநியோக முறை மூலம் வழங்குவதற்காக மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்கிறது. 1992 ஜனவரி மாதத்துக்கு 81,000 டன் அரிசியும் பிப்ரவரி

மாதத்துக்கு 60,000 டன் அரிசியும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 68,000 டன் அரிசியும், 1992 மே மாதத்துக்கு 70,000 டன் அரிசியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992 ஜூன் முதல் அக்டோபர் மாதம் வரை மாதமொன்றுக்கு 70,830 டன் அரிசி (830 டன் வலிவூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டப் பகுதிகளுக்கு சீராக வழங்கப்பட்டது). ஆனால் 1992 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கோ ஒதுக்கீடு மாதமொன்றுக்கு 63,830 டன்கள்தான். இவ்வாறு 1992 ஆம் ஆண்டு முழுமைக்குமாக இம்மாநிலத்துக்கு மத்திய அரசு மொத்தம் 8.28 லட்சம் டன் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து வழங்கியுள்ளது. 1991 ஆம் ஆண்டின் மொத்த ஒதுக்கீடு இதை விட அதிகமாக இருந்தது. அதாவது 9.20 லட்சம் டன் கடந்த பத்தாண்டுகளாக மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய மொத்த அரிசியின் விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.		ஒதுக்கீடு. (மெட்ரிக் டன்னில்.)
(1)		(2)
1982	..	70,000
1983	..	3,55,000
1984	..	3,00,000
1985	..	5,25,000
1986	..	7,05,000
1987	..	6,30,000
1988	..	7,30,000
1989	..	6,00,000
1990	..	7,36,800
1991	..	9.20,000
1992	..	8,28,810

1993 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 70,830 டன் ஒதுக்கப்பட்டது. ஆனால் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவோ மாதமொன்றுக்கு 70,800 டன்கள்தான். மாநிலத்தில் மக்களின் விருப்பம் பெருமளவு புழுங்கலரிசியாகவே இருந்தாலும் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி பெரும்பாலும் பச்சரிசியாகவே உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

(iii) வெளிச் சந்தையில் அரிசி வாங்குதல் :

1992 ஆம் ஆண்டின் அமோக ஏகபோக கொள்முதல் காரணமாக அரிசியின் இருப்பு நன்றாகவே இருந்தது. எனவே வெளிச் சந்தையில் அரிசி வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(iv) வர்த்தக லெவி :

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நெல்/அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் பகுதி 3-ன்படி உரிமம் பெற்ற அரவை முகவர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து அவர்களிடம் உள்ள இருப்பில் 50 சதவிகிதத்தை அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையில் லெவியாக பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது.

மொத்தக் கொள்முதலில் 6 சதவிகிதமே ஆன சிறிய அளவு அரிசியை வர்த்தக லெவி மூலம் பெற பெரும் அளவில் பணமும் நேரமும் விரயமாவதைக் கண்ட அரசு 29-1-1992 முதல் வர்த்தகர் லெவி முறையினை நிறுத்தி வைக்க முடிவெடுத்தது. மேலும் மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்வது இயலாத நிலையில் அரிசி இருப்புக் குறைவான மாவட்டங்களிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் வெளி அங்காடியில் அரிசி விலை உயர்ந்திருந்தது. லெவியினை நிறுத்தியதால் வெளி அங்காடி அரிசி விலை குறைந்துள்ளது. அதிலும் எப்போதும் பற்றாக்குறை மாவட்டங்களான தென்மாவட்டங்களில் அரிசி விலையின் குறைவு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

1.2. குடும்ப அட்டைக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் அளவு :

மாதந் தோறும் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவைப் பொறுத்து பொது விநியோகத்துக்குத் தேவைப்படும் அரிசியின் அளவு அமைகிறது. விநியோக அலகுகள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் அரிசியின் விநியோக அலகுகள் கீழ்க்கண்டவாறு :

ஆண்டு.	விநியோக அலகு (குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு.)
1981-82	20 கிலோ.
1982-83	20 கிலோ (31—1—1983 வரை).
1983–84	1,000 ரூபாய் மற்றும் அதற்குக் கீழான வருமானம் உள்ளவர்களுக்கு 20 கிலோ (1–2–1983 முதல் 31–5–1983 வரை) சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை 12 கிலோ, மற்ற இடங்களுக்கு 15 கிலோ (1–6–1983 முதல் 14–9–1984 வரை).

[1993 மார்ச் 30

1984-85	20 கிலோ+1 கிலோ இலவச அரிசி (15-9-1984 முதல் 31-10-1985 வரை).
1985-86	12 கிலோ (1-11-1983 முதல் 24-8-1986 வரை).
1986-87	12 கிலோ+3 கிலோ பச்சரிசி (1,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு 12 கிலோ பச்சரிசி (25-8-1986 முதல் 31-12-1989 வரை).
1987-88	ஷை
1988-89	ஷை
1989-90	அனைவருக்கும் 12 கிலோ (1-1-1990 முதல் 31-7-1990 வரை).
1990-91	12 கிலோ+5 கிலோ பச்சரிசி (விருப்பப் பட்டவர்களுக்கு) (1-8-1990 முதல் 31-10-1990 வரை).
1991-92	12 கிலோ+8 கிலோ பச்சரிசி (விருப்பப் பட்டவர்களுக்கு) (1-11-1992 முதல் 28-2-1992 வரை) அனைவருக்கும் 12 கிலோ (1-3-1992 முதல்).
1992-93	12 கிலோ மட்டும். அனைவருக்கும் 1993 பொங்கல் பண்டிகைக்காக மட்டும் 3 கிலோ அரிசி அதிகமாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தற்போது பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 4 கிலோ மற்றும் சிறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 2 கிலோ என்ற அலகுகளில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிற்கு மிகாமல் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் வழங்கத் தகுதியான 12 கிலோ அரிசியில், ஒரு பகுதி சாதாரண ரக அரிசியாகவும், மற்ற பகுதி சன்ன ரக அரிசியாகவும் வழங்கப்படுகிறது. இதே போல் ஒரு பகுதி புழுங்கல் அரிசியாகவும், மற்றொரு பகுதி பச்சரிசியாகவும் வழங்கப்படுகிறது. விநியோகிக்கப்படும் சாதாரண மற்றும் சன்ன ரக அரிசியின் விகிதமும், புழுங்கல் மற்றும் பச்சரிசியின் விகிதமும் நுகர்வோரது விருப்பம் மற்றும் இருப்பில் உள்ள அரிசியின் ரகத்தைப் பொறுத்தும் அமையும். குடும்ப

1993 மார்ச் 30]

அட்டைகளுக்கான அரிசி விநியோகம் தவிர மாதந்தோறும் 20,000 டன் அரிசி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

கடந்த 12 ஆண்டுகளாக அரிசியின் விநியோக அலகுகள் மற்றும் விநியோகிக்கப்பட்ட அளவு ஆகியவற்றை பார்க்கும் போது அவை ஒரே அளவாக இல்லாததைக் காணலாம். இவை கைவசமுள்ள அரிசியின் மொத்த இருப்பினைச் சார்ந்தே இருந்து வந்திருக்கின்றன. புழுங்கல் அரிசியின் இருப்பைவிட பச்சரிசி யின் இருப்பு அதிகரித்த சமயத்தில் இதில் ஒரு மாற்றம் செய்யப் பட்டது.

உதாரணமாக 1980 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில் அரிசி பெரியவர்களுக்கு ஒரு வாரத்துக்கு ஒரு கிலோ மற்றும் குழந்தைகளுக்கு ½ கிலோ என்ற அலகில் மாதம் ஒன்றுக்கு 20 கிலோவுக்கு மிகாமல் வழங்கப்பட்டு வந்துள்ளது. இப்போது பொது விநியோக முறையில் அரிசி பெற வருமான வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. 1983 ஆம் ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டு அதன் காரணமாக மாநிலத் தில் அரிசி உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. இவ்வாறு அரிசி இருப்பு குறைந்ததால் பொது விநியோகத்தில் அரிசி வழங்க வருமான வரம்பு நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதன் முறையாக 1–2–1983 முதல் மாதம் 1,000 ரூபாய் மற்றும் அதற்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு பொது விநி யோக முறையில் அரிசி வழங்கப்பட மாட்டாது என்றும் அவர்கள் தங்கள் தேவையினை வெளி அங்காடியில்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அரசு அறிவித்தது. இவ்வாறு வருமான வரம்பு நிர்ணயித்ததோடல்லாமல் அரசு ஒரு குடும்ப அட்டைக் கான மொத்த அரிசி அளவை 20 கிலோவிலிருந்து 12 கிலோவாக 1–6–1983 முதல் குறைத்தது. அவ்வாறு குறைக்கும் போது அரசு நகர்ப் பகுதிகளில் வாழும் மக்கள் இந்த 12 கிலோவையும் அரிசியாகவே பெற்றுக்கொள்ளலாம் என்றும் மாநிலத்தின் மற்ற இடங்களில் வாழும் மக்கள் 6 கிலோவை அரிசியாகவும், எஞ்சியவற்றை கோதுமையாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு அறிவித்தது. எனினும் 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அரிசியின் அளவு 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தப்பட்டது. ஆனால் 1984–85 ஆம் ஆண்டில் மற்றொரு வறட்சியினால் அரிசி இருப்பு குறைந்தபோது மீண்டும் இது 12 கிலோவாக குறைக்கப்பட்டது. எனினும் வருமான வரம்பு தொடரப்பட்டது. 1986-ல் அரிசி இருப்பு அதிகமாகியது. மேலும் பச்சரிசி தேக்கமடைந்தது. எனவே அரசு மாத வரு மானம் 1,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக உள்ள குடும்ப அட்டைதாரர்கள் தங்களது 12 கிலோவுடன் தேவையானால் 3 கிலோ பச்சரிசியும் அதிகமாக பெற்றுக்கொள்ளலாம் என ஆணையிட்டது. அரிசி இருப்பு சீரடைந்ததால் மாதம் 1,000

[1993 மார்ச் 30

ரூபாய்க்கு அதிகமாக வருமானம் உள்ளவர்களும் மாதமொன்றுக்கு 12 கிலோ பச்சரிசி மட்டும் பெற்றுக்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. இந்த முறை 1989-ஆம் ஆண்டின் இறுதி வரை தொடர்ந்து பொது விநியோக முறையினை சீரமைப்பதற்காக 1-1-1990 முதல் அரசு இந்த வருமான வரம்பினையும் பச்சரிசி மற்றும் புழுங்கலரிசி விநியோகம் குறித்த வரையறைகளையும் நீக்கி அனைவரும் 12 கிலோ அரிசி பெற்றுக் கொள்ளலாம் என அறிவித்தது.

1990 ஆம் ஆண்டு பச்சரிசி இருப்பு அதிகம் இருந்ததால் அரசு தேவைப்பட்டவர்களுக்கு கூடுதலாக 5 கிலோ அரிசி வழங்கலாமென தீர்மானித்தது. இது 1-8-1990 முதல் அமுலுக்கு வந்தது. அரிசி இருப்பு மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, 7—11—1990 முதல் தேவைப்படுவோர்க்கு வழங்கப்படும் அரிசியின் அளவு 8 கிலோவாக உயர்த்தப்பட்டது. இந்த அதிகப்படியான 5 கிலோ அரிசி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சமமாக வழங்கப்படவில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள நபர்கள் மற்றும் அவர்கள் பெறக்கூடிய அளவு ஆகியவற்றை கணக்கில் கொண்டே இது வழங்கப்பட்டது. எனவே இது 1 கிலோவிலிருந்து 5 கிலோ வரை குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே வழங்கப்பட்டது. இவ்வாறு தேவைப்பட்டவர்களுக்கு அதிகம் 8 கிலோ வழங்குவது 1992 பிப்ரவரி மாதம் வரை தொடரப்பட்டது. எனவே, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் அளவு அவ்வப்போது உள்ள கையிருப்பின் அடிப்படையிலும் அதில் எவ்வளவு பச்சரிசியாகவும், எவ்வளவு புழுங்கல் அரிசியாகவும் உள்ளது என்பதையொட்டியும் இருந்திருப்பதைக் காணலாம்.

தற்போது பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெரியவர்களுக்கு மாதமொன்றுக்கு 4 கிலோவும், குழந்தைகளுக்கு 2 கிலோவுமாக ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு 12 கிலோவுக்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகிறது.

1992 ஆம் ஆண்டு பொது விநியோக முறையில் அரிசியின் நுகர்வு 14.67 லட்சம் டன்னாகும். 1991 ஆம் ஆண்டு இந்த நுகர்வு 17.31 லட்சம் டன்கள். கடந்த பதினைந்து ஆண்டுகளில் அரிசியின் நுகர்வு பின்வருமாறு :

ஆண்டு.	நுகர்வு. (மெட்ரிக் டன்னில்)
(1)	(2)
1978	93,000
1979	1,49,173
1980	1,35,231

1981	..	..	6,71,320
1982	..	..	6,29,002
1983	..	..	6,75,027
1984	..	..	6,98,655
1985	..	..	11,04,777
1986	..	..	9,24,336
1987	..	..	11,87,276
1988	..	..	13,03,540
1989	..	..	14,56,849
1990	..	..	12,33,261
1991	..	..	17,31,657
1992	..	..	14,70,319

1.3. பொது விநியோக முறையில் வழங்கப்பட்டு வரும் அரிசியின் விற்பனை விலை :

தற்போது பொது விநியோகத்துக்குத் தேவையான அரிசி (1) காவிரி டெல்டா பகுதிகளில் ஏகபோக கொள்முதல் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரிடையாக கொள்முதல் செய்தல் மூலமும், மற்றும் (2) மத்திய அரசால் மாதந்தோறும் மைய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியைப் பெறுவதன் மூலமும் கிடைக்கிறது. மேற்கண்ட இரண்டு முறைகளிலும் பெறப்படும் அரிசியின் விலை வேறுபடுகிறது. ஆனால் பொது விநியோக முறையில் வழங்கப்படும்போது இந்த இரண்டு முறைகளில் பெறப்படும் அரிசிக்கும் ஒரே விற்பனை விலைதான் நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது (1-9-1992 முதல்) நெல் கொள்முதல் விலை பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

நெல் ரகங்கள்		சாதாரணம்	சன்னம்	மிகச்சன்னம்
(1)		(2)	(3)	(4)
கொள்முதல் விலை	..	270	280	290
ஊக்கத் தொகை	..	35	35	35
மொத்தம்	..	305	315	325

நெல் கொள்முதல் செய்யப்பட்ட பின் இது தமிழ்நாடு நுகர் பொருள் வணிபக் கழகம் நடத்தும் அரிசி ஆலைகள் மற்றும் முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைக்கப்படுகிறது. இதன் பின்னர் பொது விநியோக முறையில் நியாயவிலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்யுப்படுவதற்காக இந்த அரிசி நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. நெல்லை அரைப்பது, போக்குவரத்து, சேமித்து வைப்பது மற்றும் இதற்கான வட்டி தொகைகள் ஆகிய செலவுகள் நுகர் பொருள் வாணிபக் கழகத்தினாலேயே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட அனைத்தையும். கணக்கில் கொண்டால் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு ஆகும் அரிசியின் அடக்க விலை பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

நெல் ரகங்கள்.	சாதாரணம்.	சன்னம்.	மிகச்சன்னம்
(1)	(2)	(3)	(4)
அரிசியின் அடக்க விலை	534.04	550.00	565.05

மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசிக்கான விற்பனை விலையை மத்திய அரசு அவ்வப்போது அறிவித்து வருகிறது. தற்போதுள்ள விலைகள் 11-1-1993-லிருந்து அமுலுக்கு வந்தன. தற்போதைய விலையும் அதற்கு முன்பிருந்த விலையும் பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

	சாதாரணம்	சன்னம்	மிகச் சன்னம்
(1)	(2)	(3)	(4)
28-12-1991 முதல் ..	377	437	458
11-1-1993 முதல் ..	437	497	518
உயர்வு ..	60	60	60

மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசி மாநிலத்தில் சில இடங்களில் உள்ள இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகள் மூலமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து அரிசி எடுத்து அதனைத் தனது கிடங்குகளுக்கு எடுத்துவந்து பொது விநியோக முறையின் மூலம் வழங்குவதற்காக சேமித்து வைக்கிறது. போக்குவரத்து, சேமிப்பு மற்றும் வட்டிக்கான செலவு

1993 மார்ச் 30]

களைக் கருத்தில் கொண்டால், மத்திய தொகுப்பிலிருந்து பெறும் அரிசியின் அடக்க விலை, நுகர்பொருள் வாணிகப் கழகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

சாதாரணம்.	சன்னம்.	மிகச்சன்னம்
(1)	(2)	(3)
497	563	586

எனவே நேரடிக் கொள்முதல் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பெறப்படும் அரிசியின் குவிண்டால் ஒன்றுக்கான அடக்கவிலை, பொது விநியோக விலை ஆகியவை பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

	சாதாரணம்	சன்னம்	மிகச்சன்னம்
(1)	(2)	(3)	(4)
நேரடிக் கொள்முதல் அரிசியின் அடக்கவிலை	534.04	550.00	565.05
மத்திய தொகுப்பு அரிசி விலை ..	497.00	563.00	586.00
பொது விநியோக விலை	250.00	350.00	356.00 (1-3-1993 முதல்)
	225.00 (ஒ.ப.மே.தி.* பகுதிகளில் மட்டும்).		

சில்லரை வணிகத்தின் விளிம்பான குவிண்டாலுக்கு 10 ரூபாயை, அரசே ஏற்றுக்கொள்வதால் பொது விநியோக விற்பனை மூலமாக அரசுக்கு குவிண்டால் ஒன்றுக்கு கிடைக்கும் தொகை பின்வருமாறு :

(குவிண்டால்/ரூபாயில்)

	சாதாரணம்	சன்னம்	மிகச்சன்னம்
(1)	(2)	(3)	(4)
பொது விநியோகம் மூலம் கிடைக்கும் தொகை	240	340	043

*ஒ.ப.மே.தி.—ஒருங்கிணைந்த பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில்.

1.4. அரிசி விநியோகத்துக்கான மானியம் :

மேற்கண்ட விவரங்களின்படி அரிசி விநியோகத்தில் கணிசமான அளவு மானியம் உள்ளதை அறியலாம். இந்த மானியத்தின் அளவு அரிசியின் ரகம் மற்றும் அந்த அரிசி பெறப்படும் முறை ஆகியவற்றிற்குத் தகுந்தவாறு மாறுபடுகிறது. இந்த மானியத்தின் அளவு நேரடி கொள்முதல் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசியின் அளவு மற்றும் சாதாரணம், சன்னம் மற்றும் மிகச் சன்னரக அரிசியின் அளவு ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. மேலும், இது பொது விநியோக முறையில் அரிசியின் நுகர்வு அளவினையும் பொறுத்துள்ளது.

பொது விநியோகத்தில் அரிசியின் நுகர்வு குடும்ப அட்டைக்கு கொடுக்கப்படும் அளவு, மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசிக்கும் வெளி அங்காடி அரிசிக்கும் உள்ள விலை வித்தியாசம் ஆகியவற்றை பொறுத்ததாகும். இந்த இரண்டு விலைகளின் வித்தியாசம் குறையும் போது அரிசியின் நுகர்வு குறைகிறது.

உதாரணமாக 1978-79 முதல் 1980-81-ம் ஆண்டு வரை அரிசி நுகர்வு ஆண்டுக்கு ஒரு லட்சம் டன்தான் இருந்து வந்தது. ஆனால் 1991-92 ஆம் ஆண்டு மாதமொன்றுக்கு அரிசி நுகர்வு 1.5 இலட்சமாக உயர்ந்தது. 1992-93 ஆம் ஆண்டு மாதமொன்றுக்கு 1.3 லட்சம் டன்களாக நிலைத்தது.

அரிசியின் நுகர்வுக்கிணங்க இந்த அரிசி விற்பனையில் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்ய அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கும் மானியத் தொகையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

1980-81 ஆம் ஆண்டுக்கு அளிக்கப்பட்ட மொத்த மானியத் தொகை 1.81 கோடி ரூபாய்தான். ஆனால், 1991-92 ஆம் ஆண்டு இது 219.31 கோடி ரூபாயை எட்டியது. 1992-93 ஆம் ஆண்டு இது 380 கோடி ரூபாயை எட்டலாம்.

1.5. பொது விநியோக முறையில் வழங்கப்படும் மானிய விலையிலான அரிசியின் பொருளியல் :

அரிசிக்கு வழங்கப்படும் மானியம், பொது விநியோகத்தில் நிர்ணயிக்கப்படும் விற்பனை விலை மற்றும் இத்திட்டத்தில் அரிசியினை பெறப்படும் முறைகள், அரிசி ரகங்கள் ஆகியவற்றை பொறுத்துள்ளது என்பது முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது.

1993 மார்ச் 30]

தற்போது அரிசியின் மாத நுகர்வு சுமார் 1.3 லட்சம் டன் அல்லது ஆண்டு நுகர்வு சுமார் 15.60 லட்சம் டன் என்ற அளவில் நிலை பெற்றுள்ளது. தற்போதுள்ள முறைகளின்படி இந்த 15.60 லட்சம் டன் கீழ்க்கண்டவாறு பெறப்படுகிறது:

	த.நா.நு.பொ.வா கழகம் நேரடி கொள் முதல்	மத்திய தொகுப்பு அரிசி இ.உ கழகத்திலிருந்து பெறப்படுவது	மொத்தம்.
	(லட்சம் மெ. டன்களில்)		
சாதாரணம்	3.6	..	3.6
சன்னம்	2.5	1.5	4.0
மிகச் சன்னம்	2.0	6.0	8.0
மொத்தம்	8.1	7.5	15.6

மத்திய அரசு நிர்ணயிக்கும் விற்பனை விலையும் பொது விநியோகத்தில் நிர்ணயிக்கப்படும் அரிசியின் விற்பனை விலையும் மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் நெல்லுக்கு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையையே சார்ந்துள்ளது.

உணவு உற்பத்தியினை பெருக்கும் வகையில் உயர்ந்துவரும் வேளாண்மை இடுபொருட்களான உரம், பூச்சிமருந்து விதை போன்றவற்றின் செலவினை ஈடுகட்டும் வகையில் நியாயமான கொள்முதல் விலையை நிர்ணயிப்பது அவசியமாகிறது. மத்திய அரசு 1976–77ம் ஆண்டிலிருந்து 1987–88ஆம் ஆண்டு வரை, கொள்முதல் விலையை சிறிதளவு உயர்த்தியே நிர்ணயித்து வந்தது. ஆனால் 1988–89–ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த உயர்வு மிக அதிகமாகியது. 1978–79–ம் ஆண்டில் இருந்து 1987–88–ம் ஆண்டு வரையிலான ஒன்பது ஆண்டுகளில் சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலையின் உயர்வு மிகக் குறைவு அதாவது 65 ரூபாய்தான். ஆனால் 1990–91 முதல் 1992–93 வரையிலான இரண்டாண்டுகளில் மட்டுமே சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலையின் உயர்வு 65 ரூபாயாகும். (விவரம் முன்பக்கம் 7—8)

[1993 மார்ச் 30]

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மையத் தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஒதுக்கி வரும் அரிசியின் விலை ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்திருப்பதைக் காணலாம்.

ஆண்டு	சாதாரணம்	சன்னம்	மிகச் சன்னம்
	(குவின்டாலுக்கான ரூபாய்)		
1981–82	175 (1—10—1981 முதல்)	187	202
1982-83	188 (1—10—1982 முதல்)	200	215
1983-84	208 (16—1—1984 முதல்)	220	235
1984–85	,,	,,	,,
1985-86	217 (10—10—1985 முதல்)	229	244
1986-87	231 (1—2—1986 முதல்)	243	253
1986-87	239 (1—10—1986 முதல்)	251	266
1987-88	239 (1—10—1987 முதல்)	264	270
1988-89	244 (25—1—1989 முதல்)	300	325
1989-90	289 (25—6 1990 முதல்)	349	370
1990-91	,,	,,	,,
1991-92	377 (28—12—1991 முதல்)	437	458
1992-93	374 (11—1—1993 முதல்)	497	518

1977 முதல் 1987 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 89 பைசாக்கள் தான் உயர்ந்தது. ஆனால் 1991 ஆம் ஆண்டில் மட்டும் இந்த அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 88 பைசாக்கள் உயர்ந்தது.

1993 மார்ச் 30]

மீண்டும் 1993-ம் ஆண்டில் 11—1—1993 முதல் இதன் விலை 60 பைசாக்கள் அதிகமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்முதல் விலையிலும் மத்திய விற்பனை விலையிலும் ஏற்படும் உயர்வு பொது விநியோக அரிசியின் விலை உயர்வுக்கும் வழி வகுக்கிறது. 1976-77 முதல் 1989-90 வரையில் கொள்முதல் விலையிலும் மத்திய விற்பனை விலையிலும் ஏற்பட்ட உயர்வு சிறிதளவே இருந்தாலும் இந்த உயர்வினை மாநில அரசே ஏற்றுக் கொள்ள முடிந்ததாலும் இந்த கால கட்டத்தில் பொது விநியோக அரிசி விலை இரண்டு முறைதான் உயர்த்தப்பட்டது. 1990ம் ஆண்டுக்குப் பின் இந்த இரண்டு விலைகளிலும் ஏற்பட்ட உயர்வு அதிக அளவில் இருந்ததால் இதனை மாநில அரசு ஏற்க முடியவில்லை. எனவே, 1990 முதல் மாநில அரசு பொது விநியோக அரிசி விலையை அநேகமாக ஒவ்வொரு ஆண்டும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்:

ஆண்டு	சாதாரணம்	சன்னம்	மிகச் சன்னம்
		(கிலோவுக்கான ரூபாய்)	
1981—82	1.75	2.00	2.15
1982—83	1.75	2.00	2.15
1983—84	1.75	2.00	2.15
1984—85	1.75	2.00	2.15
1985—86	1.75	2.25 (1—11—1985 முதல்)	2.50
1986—87	1.75	2.25	2.50
1987—88	1.75	2.25	2.50
1988—89	1.75	2.25	2.50
1989—90	2.00	3.00 (1—3—90 முதல்)	3.50
1990—91	2.00	2.75 (1—10—90 முதல்)	3.25
	2.00	2.50 (1—12—90 முதல்)	3.50
1991—92	2.00	3.00 (25—1—92 முதல்	3.00
1992—93	2.75	3.75 (1—2—93 முதல் 28—2—93 வரை)	3.75
	2.50	3.50 (1—3—93 முதல்)	3.50

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-97— 28

[1993 மார்ச் 30

பொது விநியோக திட்ட அரிசி விலைக்கும், வெளி அங்காடி விலைக்கும் உள்ள வித்தியாசம் குறைவாகவும் இருக்கும்போது ஆண்டு நுகர்வும் குறைவாகவே இருப்பதை கீழேயுள்ள அட்டவணையில் காணலாம் :—

ஆண்டு	வெளி அங்காடி புழுங்கல் அரிசி விலை சாதாரணம்	பொது விநியோக விற்பனை	வித்தியாசம்	நுகர்வு லட்சம் மெட்ரிக் டன்னில்
(1)	(2)	(3)	(4)	(5)
1978	1.60	1.60	..	0.93
1979	1.65	1.60	0.05	1.49
1980	2.00	1.60	0.40	1.35
1981	2.90	1.75	1.15	6.71
1982	2.71	1.75	0.96	6.29
1983	3.71	1.75	1.96	6.75
1984	3.12	1.75	1.37	16.98
1985	3.38	1.75	1.63	11.04
1986	3.52	1.75	1.77	9.24
1987	3.75	1.75	2.00	11.87
1988	4.17	1.75	2.42	13.30
1989	4.54	2.00	2.54	14.57
1990	4.37	2.00	2.37	12.33
1991	4.90	2.00	2.90	17.31
1992	5.67	2.00	3.67	14.70

1978, 1979 மற்றும் 1980-ம் ஆண்டுகளுக்கான அரிசி நுகர்வு 0.93 லட்சம் டன் 1.49 லட்சம் டன் மற்றும் 1.35 லட்சம் டன்னாக இருந்தது. ஆனால் 1992-ம் ஆண்டின் டிசம்பர் மாத நுகர்வு மட்டும் 1.33 லட்சம் டன்களாகும். 1977-78 முதல் 1987-88வரையிலான பத்தாண்டுக் காலத்தில் ஆண்டு சராசரி நுகர்வு 5.63 லட்சம் டன்களாக இருந்தது. 1991-ம் ஆண்டு ஜுலை முதல் 1992-ம் ஆண்டு டிசம்பர் வரையிலான $1\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் 23.44 லட்சம் டன்னாக அதாவது ஆண்டுக்கு சராசரியாக 15.62 லட்சம் டன்னாக உயர்ந்தது, பொது விநியோக அரிசி விலைக்கும் வெளி அங்காடி அரிசி விலைக்கும் இடையே இருந்த பெரும் வித்தியாசமே இந்த அதிகப்படியான நுகர்வுகக ஒரு முக்கிய காரணமாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

இவ்வாறு பொது விநியோகத்தின் கீழ் அரிசி விலை குறைவும் அதிகப்படியான நுகர்வும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்துக்கு அரிசி வழங்கும் மானியம் அதிகமாகக் காரணமாகின்றன. 1978-79 ஆம் ஆண்டு அரசு 4.19 கோடி ரூபாயை மானியமாக வழங்கியது. ஆனால் பொது விநியோக விலைகள் 1-3-1993 முதல் உயர்த்தப்பட்டபின் அரசு 1992-93 ஆம் ஆண்டுக்கு 380 கோடி ரூபாய் மானியம் வழங்க வேண்டியுள்ளது.

பொது விநியோக அரிசி விலை உயர்த்தப்பட்ட போதும் கூட பிற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் தான் பொது விநியோக அரிசி விலை குறைவதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :

மாநிலங்களில் விற்பனை விலை (கிலோவிற்கு ரூபாய்)

ரகம்	மத்திய அரசின் விற்பனை விலை	தமிழ்நாடு	பாண்டிச்சேரி	ஆந்திர பிரதேசம் *
சாதாரணம்	4.37	2.50	4.55	3.50
சன்னம்	4.97	3.50	5.15	—
மிகச் சன்னம்	5.18	3.50	5.35	—

ரகம்	கேரளா	கர்நாடகம் **	மேற்கு வங்காளம்	
சாதாரணம்	4.64T	4.10	4.75	4.86
சன்னம்	5.24	4-15	5.75	5.55
மிகச் சன்னம்	5.46	4.15	5.75	5.76

* ஆண்டுக்கு ரூ 6400-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும்.

** ஆண்டுக்கு ரூ 6000க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும்.

*** மற்றவர்க்கு T 1-4-1993-ல் இருந்து.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்குவதில், தமிழகத்தில் தான் அரிசியின் விலை, இந்தியாவிலே ஏனைய மாநிலங்களைவிட குறைவு என்பதும், தமிழகத்தில் மட்டும் தான் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரே விலையில அரிசி வழங்கப்பட்டு வருகிறது என்பதும், இவாறு மிகக் குறைந்த விலையில் அனைவருக்கும் அரிசி வழங்குவதால், அரசு அளிக்கின்ற மான்ய தொகையும் பிற மாநிலங்களைவிட இங்குதான் அதிகம் என்பதும் புலனாகும் மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலையை, நெல் கொள்முதல் விலை, மைய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலை ஆகியவற்றையொட்டியே மாநில அரசு நிர்ணயிக்க நேரிடுகிறது என்பதும் புலப்படும். 1988-89 வரை இந்த விலைகள் சீராக ஏறி வந்துள்ளதும் அதன்பின் இவை அதிக அளவில் ஏறியுள்ளதும் தெளிவாகும். இதனால் முன்பிருந்ததைபோலல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் அரிசியின் விற்பனை விலையை மாற்ற வேண்டிய கட்டாயத்திற்கு அரசு உள்ளாகியிருப்பதும் புலப்படும்,

தவிரவும், பொது விநியோகத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் அளவு அவ்வப்போது உள்ள சூழ்நிலை, கையிருப்பிலுள்ள அரிசியின் அளவு, அதில் பச்சரிசி, புழுங்கல் அரிசி இவற்றிற்கிடையே உள்ள பாகுபாடு இவற்றையொட்டியே இருந்து வந்திருக்கின்றன என்பதும் தெளிவாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக, கையிருப்பு குறைந்த பொழுது, பொது விநியோகத்தின் திட்டத்தின்கீழ் அரிசி பெற வருமான வரம்பும் விதிக்கப்பட்டது என்பதும் தெரிய வரும். எனவே, பொதுவிநியோகத் திட்டத்தில் அரிசி வழங்குவது பற்றிய முடிவுகள் அவ்வப்போது உள்ள கையிருப்பு, நிதி நிலைமை ஆகியவற்றையொட்டியே இருக்க முடியும் என்பது வெளிப்படை.

<u>உணவு கடன் :</u>

சென்னையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கி மூலமாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் மற்றும் பொது விநியோக முறை மூலம் விநியோகம் ஆகியவற்றிற்காக மாநில அரசு கணக்குகள் வைத்துக்கொள்ள இந்திய ரிசர்வு வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இதற்குத் தேவையான உடன்படிக்கைகளை பாரத ஸ்டேட் வங்கியுடன் இந்த அரசு செய்து கொண்டுள்ளது.

1993 மார்ச் 30]

மேற்கண்ட உணவு கடன் தமிழ்நாடு அரசின் முகவரால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் செயற்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம் கீழ்க்கண்ட இரண்டு கணக்குகளை செயல்முறைப்படுத்துகிறது.

கணக்கு 1 தமிழ்நாட்டில் அரிசிக்கான ஆதரவு விலை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து அரிசி வாங்குதல் மற்றும் நெல் மற்றும் அரிசி லெவி.

கணக்கு 2 தமிழ்நாட்டில் ஏகபோக கொள்முதல் மற்றும் ஊக்கத் தொகை.

உணவு கணக்கிற்கான வட்டி விகிதம் 18.75 சதவிகிதம் ஆகும். இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியம் வழங்கப்படுவதை தீவிரமாகக் கண்காணிக்கிறது. மேலும் இந்த வங்கி வழங்கும் கடன் வசதிகள் வேறு எந்த வகையிலும் செலவிடப்படாமல் அது கண்காணித்து வருகிறது. தமிழ்நாடு அரசு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்துக்கு உரிய நேரத்தில் மானியம் வழங்காமல் அதன் மானியத் தொகை அதிகமாக சேர்ந்தால் அதனை ஒரு ஒழுங்கீனமாகக் கருதி இந்திய ரிசர்வ் வங்கி தான் வழங்க வேண்டிய கடனை வழங்காமல் நிறுத்தக்கூடும்.

(ii) <u>கோதுமை :</u>

கோதுமை தமிழக மக்களின் துணை நுகர்வு பொருளாக உள்ளது. கோதுமை இம்மாநிலத்தில் விளைவதில்லை. பொது விநியோக முறைக்குத் தேவைப்படும் முழு அளவும், மைய அரசின் ஒதுக்கீட்டிலிருந்தே வழங்கப்படுகிறது. கடந்த 1992-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 20,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வாறு அளவு குறைத்து வழங்கப்படுவதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு அட்டைக்கு 2 கிலோ வீதம் மட்டுமே வழங்கப்படுகிறது. முன்பமாதிரியே இம்மாநிலத்திற்கு மாதந்தோறும் 30,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப் பட்டு வருகிறது. 11-1-1993 முதல் பொது விநியோக முறைக்கு வழங்கப்படும் கோதுமை விலையை ஒரு குவிண்டாலுக்கு 280 ரூபாயிலிருந்து 330 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தி உள்ளது. இதேபோல் திருத்தி அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்ட பகுதிகள் அடங்கிய பொது விநியோக முறையில் வழங்கப்படும் கோதுமை விலையும் ஒரு குவிண்டாலுக்கு 230 ரூபாயிலிருந்து 280 ரூபாயாக 11-1-1993 முதல் உயர்த்தப் பட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசு விற்பனை விலையை உயர்த்தியதன் விளைவாக பொது விநியோக முறை, சில்லரை விற்பனை விலைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன :

1. 1-2-1993 முதல் பொது விநியோக முறை விற்பனை விலை (திருத்தி அமைக்கப்பட்ட பொது விநியோக முறை அமுலில் இல்லாத பகுதிகளில்)	ஒரு கிலோவிற்கு 3.50 ரூபாய்.
17-2-1993 முதல் திருத்தியமைக்கப் பட்ட பொது விநியோக முறை பகுதிகளில்.	ஒரு கிலோவிற்கு 3.05 ரூபாய்

கோதுமை பயன்படுத்துவதை மக்களிடையே பரப்புவதற்கு இம்மாநில அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதனால் இம்மாநில மக்கள் முக்கிய உணவுப் பொருளாக அரிசியையே சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும். மாநிலத்தின் மற்ற பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதமொன்றுக்கு 2 கிலோ கோதுமை வழங்கப்படுகிறது. ஆனால் சென்னை நகரத்தில் மட்டும் 3 கிலோ வழங்கப்படுகிறது.

(iii) சர்க்கரை

1986ஆம் ஆண்டு இம்மாநிலத்தின் மக்கள் தொகை 530 லட்சம். இதனை அடிப்படையாகக் கொண்டு நபர் ஒன்றுக்கு 425 கிராம் என்ற விகிதத்தில் இம்மாநிலத்திற்கு மத்திய அரசு சர்க்கரை ஒதுக்கீடு செய்கிறது. 1-2-1987 முதல் தமிழ் நாட்டிற்கு மாதந் தோறும் 22,554 டன் சர்க்கரை ஒதுக்கீடுசெய்யப்படுகிறது. 1991 ஆகஸ்டு மாதம் முதல் 5 விழுக்காடு உயர்வை கணக்கில் கொண்டு மத்திய அரசு கூடுதலாக தற்காலிக ஒதுக்கீடாக 1,125 டன்கள் சர்க்கரையை ஒதுக்கீடு செய்கிறது. ஆகமொத்தம் ஒரு மாதத்திற்கு 23,679 டன்கள் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப் படுகிறது. இருந்த போதிலும் 1991 மக்கள் தொகை கணக் கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 557 லட்சம் ஆகும். எனவே, மாநிலத்தின் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே பற்றாக்குறை உள்ளது. எனவே மத்திய அரசின் சர்க்கரை ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. இந்நிலையை சமாளிப்பதற்கு மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் சர்க்கரையை சீராக வழங்க வேண்டும் என்பதற் காக, இவ்வாறு நபர் ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு 500 கிராம் சர்க்கரை என்ற விகிதத்தில் உச்ச அளவாக ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றிற்கு 2 கிலோ என்று நிர்ணயித்து 1-10-1989 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நபர் ஒன்றிற்கு 500 கிராம் வீதத்தில் வழங்கத் தேவையான சர்க்கரை யின் மாதாந்திர அளவு 31,000 டன்களாகும். தற்போதைய ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஒவ்வொரு மாதமும் 7,321 டன்னாகும். எனவே, இவ்வாறாக மாதம் ஒன்றிற்கு வழங்கப்படும் லெவி

1993 மார்ச் 30]

சர்க்கரையை 23,679 டன்னிலிருந்து 31,000 டன்னாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

17-2-1993 முதல் பொது விநியோக முறை மூலமாக வழங்கப்படும் சர்க்கரையின்விலையைகிலோ ஒன்றுக்கு 6.90 ரூபாயிலிருந்து 8.30 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இது ஏறத்தாழ 17 சதவிகிதம் உயர்வாகும். 1992 அக்டோபரில் கொண்டாடப்பட்ட தீபாவளி திருநாளிற்கும், 1993 சனவரி மாதத்தில் கொண்டாடப்பட்ட பொங்கல் திருநாளிற்கும் கூடுதலாக 1 கிலோ சர்க்கரை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

(iv) மண்ணெண்ணெய்:

பொது விநியோக முறை மூலம் வழங்கப்பட்டு வரும் மற்றொரு இன்றியமையாப் பொருள் மண்ணெண்ணெய் ஆகும். 1993 பிப்ரவரி மாதத்தில் மத்திய அரசு புதியகொள்கை ஒன்றை அறிவித்துள்ளது. இதன்படி வெளிச் சந்தை விலையில் வழங்குவதற்காக தனியார் வியாபாரிகளுக்கு மண்ணெண்ணெய் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும். பொது விநியோக முறையில் மண்ணெண்ணெய் தொடர்ந்து வழங்கப்படும். அதேநேரத்தில் வெளிச்சந்தையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவது, எளிதாக வெவ்வேறு விலைகளில் எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும். அதாவது மண்ணெண்ணெய் வழங்குவதில் மத்திய அரசு இரட்டை விலை திட்டத்தை புகுத்தியுள்ளது.

2. மத்திய அரசு மாதந்தோறும் 70,176 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இம் மாநிலத்திற்கு சீராக ஒதுக்கீடு செய்கிறது. சுமாராக 69,300 கி.லி. மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப் படுகிறது. மாநிலத்தில் சுமார் 520 மொத்த வணிகர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், இந்தோ பர்மா பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய நான்கு எண்ணெய் கம்பெனிகள் மூலம் மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் சென்னை நகரத்திற்கும் மற்றும் மாவட்டங்களுக்கும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்ட வழங்கல் அலுவலர்கள் இதனை வட்ட வழங்கல் அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்கின்றனர். வட்ட வழங்கல் அலுவலர்கள் இதனை நியாய விலைக் கடைகளுக்கும் சில்லரைப் பதிவுச் சான்றிதழ்தாரர்களுக்கும் கைவண்டிக்காரர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் மற்றும் மீனவர் போன்றவர்களுக்கும், சம்பந்தப்பட்ட வட்ட மொத்த வணிகர்கள் மூலம் ஒதுக்கீடு செய்கின்றனர்.

இம்மாநிலத்தில் ஏறத்தாழ 2,856 கைவண்டிக்காரர்கள் உள்ளனர். இவர்களுக்கு சென்னை நகரில் நாளொன்றுக்கு 100 லிட்டர் வீதம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கும், மாவட்டங்களில் நாளொன்றுக்கு 50 லிட்டர் வீதம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குறிப்பிட்டப் பகுதிகளில், பொது விநியோக முறையில் இவர்கள் மண்ணெண்ணெய் விற்பனை செய்கிறார்கள். இக் கைவண்டிக்காரர்கள், குடும்ப அட்டைதாரர்களில் அதிகத் தேவையை பூர்த்தி செய்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளைத் தவிர 1,892 தனியார் சில்லரை வியாபாரிகளும் மண்ணெண்ணெய் விற்பனை செய்கிறார்கள். இவர்கள் 'சில்லரைப் பதிவு சான்றிதழ்தாரர்கள்' என அழைக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இவர்கள் மண்ணெண்ணெய் வழங்குகிறார்கள். 500 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் ஒவ்வொரு சில்லரை வியாபாரிக்கும் குடும்ப அட்டைகள் இணைக்கப் பட்டுள்ளன.

பொது விநியோக முறையில் வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் அளவு பின் வருமாறு :—

இடம்	அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு விற்பனை செய்யப்படும் அளவு.
சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புறம் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள்	10 லிட்டர்
ஏனைய நகராட்சிகள்	6 லிட்டர்
நகர பஞ்சாயத்து மற்றும் நகரியங்கள்	5 லிட்டர்
கிராமப்புறங்கள்	3 லிட்டர்
<u>நீலகிரி மாவட்டம் :</u>	
தலைமையிடம் நகராட்சிகள்	15 லிட்டர்
நகர பஞ்சாயத்துக்கள்	10 லிட்டர்
கிராமப் பஞ்சாயத்து	5 லிட்டர்
<u>கொடைக்கானல் மற்றும் ஏற்காடு வட்டங்கள் :</u>	
நகரப் பஞ்சாயத்து மற்றும் நகரியங்கள்	10 லிட்டர்
கிராமப் பஞ்சாயத்து	5 லிட்டர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 30]

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட உறுதி மொழியின் பேரில் 1992 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட வாறு மண்ணெண்ணெய் அளவை உயர்த்தி வழங்க சிறப்பு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

நகராட்சிப் பகுதிகள் :

காரைக்குடி,

விழுப்புரம், மாதம் ஒன்றிற்கு 10 லிட்டர்.

ஒசூர்,

கும்பகோணம்

3-1-1992 முதல் பொது விநியோக முறையில் மண்ணெண்ணெய் விற்பனை விலை லிட்டர் 1-க்கு 2.80 ரூபாய் ஆகும், இருந்த போதிலும் தொழிற்சாலை விலை 18-9-1992 முதல் 4.80 ரூபாயிலிருந்து 6.00 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படும் போக்குவரத்துத் தொகை 17-8-1992 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

தூரம்	தொகை
(1) 60 கி.மீட்டர் வரையிலுள்ள வட்ட சுற்று தூரம்	1 கி.மீட்டருக்கு ரூ. 32.
(2) 60 கி. மீட்டரிலிருந்து 150 கி.மீ. வரை உள்ள வட்ட சுற்று தூரம்	ரூ. 32+ரூ. 0.32 1 கி.லி. / 1 கி.மீ.
(3) 150 கி.மீட்டரிலிருந்து மேலுள்ள வட்ட சுற்றுத் தூரம்	முழு தூரத்துக்கும் ரூ. 0.35 கி. லிட்டர்/கி.மீ. என்ற ஒரே வீதத்தில்.

1992 நவம்பர் மாதத்தில் எதிர்பாராத மழை மற்றும் வெள்ளம் காரணமாக தென் மாவட்டங்களில் சில கிராமங்களில், கடற்கரை மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன. விளக்கு ஏற்றுதல் சமையல் ஆகியவற்றிற்குள்ள பாதிப்பை களைவதற்காக இம்மாநிலத்தின் கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு கூடுதலாக 6,939 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை 1992-ம் ஆண்டு டிசம்பரில் ஒதுக்கீடு செய்தது.

[1993 மார்ச் 30

இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதுமாக எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதில் இவ்வரசு உறுதி கொண்டுள்ளது.

(v) பாமோலின் :

மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக மத்திய அரசு பாமோலின் இறக்குமதி செய்கிறது. ஆனால் இவ்வாறு செய்யப்படும் ஒதுக்கீடு சீராக இல்லை. எனவே, பாமோலின் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்பொழுதெல்லாம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பாமோலின் விநியோகம் செய்யப்படுகிறது.

வழங்கப்படும் இடங்கள் :	தேவையான அளவு.
சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்கள் குடும்ப அட்டைக்கு 1 கிலோ விதத்தில்.	1,260
சென்னை நகரம் அதன் சுற்றுப் புறங்களில் மற்றும் மாவட்ட தலைநகரங்கள் குடும்ப அட்டைக்கு 1 கிலோ வீதத்தில்.	2,450
சென்னை நகரம் அதன் சுற்றுப்புறம் மற்றும் நகராட்சிகள் குடும்ப அட்டைக்கு 1 கிலோ என்ற வீதத்தில்.	3,450
சென்னை நகர் அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் நகரப் பகுதிகள் 1 கிலோ என்ற வீதத்தில் மற்றும் கிராமப் புறங்கள் $\frac{1}{2}$ கிலோ என்ற வீதத்தில்.	9,200
தமிழ் நாட்டிலுள்ள எல்லா குடும்பதாரர்களுக்கும் 1 கிலோ என்ற வீதத்தில்.	13,000

1992-93 ஆம் ஆண்டில் (1993 பிப்ரவரி மாதம் வரை) மைய அரசு 6,363 டன் பாமோலின் ஒதுக்கிடு செய்துள்ளது. பல நிலையங்களில், பல பகுதிகளை உள்ளடக்கி இவ்வெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது. குறிப்பாக வெளிச் சந்தை சமையல் எண்ணெயின் விலை அதிகமாக உள்ளபோது பொது விநியோக முறையில் பாமோலின் விநியோகிக்கப் படுவதை பொது மக்கள் வரவேற்கிறார்கள். கடலெண்ணெய் போன்ற சமையல் எண்ணெய்கள் வெளிச் சந்தையில் நியாயமான விலையில் கிடைப்பதால் இவ்வாண்டு பாமேலின் எண்ணெய் விநியோகம் மந்தமாக உள்ளது.

1993 மார்ச் 30]

1992-93-ல் ஏறத்தாழ 695 டன் பாமோலின் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு திட்டத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகள் சீராக இயங்கும் பொருட்டு கீழ்க் கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன :—

(1) அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது விநியோக அதிகாரிகளுடன் அடிக்கடிக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அக்கூட்டங்களில் தெரிவிக்கப்படும் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

(2) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு களிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் இன்றி யமையாப் பொருட்கள் முழுமையாகவும் எடை குறைவில்லா மலும் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்துப் பொருட்களும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் முன்னதாகவே எடையிடப்பட்டு தரப் படுத்தப்படுகின்றன.

(3) கிடங்குகளிலிருந்து பொருட்கள் நியாய விலைக் கடை களுக்கு கொண்டு வரும்போது வழியில் அவை திருடப் படுவதை தவிர்ப்பதற்காக கூட்டுறவுத் துறையினைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் லாரிகளுடன் செல்ல வேண்டுமென ஆணையிடப் பட்டுள்ளது.

(4) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து மேற்பார்வைக்கான தனியான குழுக்களை அமைப்பதன் மூலம் நியாய விலைக் கடைகளுக்கான மேற்பார்வை வலுப்படுத்தப் பட்டுள்ளது. இவர்களது மேற்பார்வையிடுதலை வலுப்படுத்தும் பொருட்டு கடைகள் இலகுவாகவும், குற்றச்சாட்டுகள் இல்லாமலும் நடப்பதற்கு இவர்களே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கள் சரியான எடையில் உள்ளனவா என அறிந்து கொள்வதற்காக நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் எடைபார்க்கும் டயல் எடை இயந்திரங் கள் வைக்கப்பட்டுள்ளன.

(5) அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அனைத்து பொருட்களும் இருப்பு இருக்க வேண்டும் என்பதற்காக முந்தைய மாதம் கூட்டம் நடத்தப்பட்டு பொருட்கள் முன்னதாகவே கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

(6) நியாய விலைக் கடை பணியாளர்கள் தவறுகளுக்கு உயர் அதிகாரிகளே பொறுப்பானவர்களாக்கப்பட்டுள்ளனர்.

[1993 மார்ச் 30

(7) நியாய விலைக் கடைகள் ஒழுங்காக நடைபெறாததால் பொதுமக்கள் படும் சிரமங்களை களையும்பொருட்டு ஒவ்வொரு கடையிலும் பொதுமக்களின் குற்றச்சாட்டுகளை தெரிவிக்க ஒரு புகார் பெட்டியும் புகார் புத்தகமும் வைக்கப் பட்டுள்ளன. இந்த குற்றச்சாட்டுகள் மேற்பார்வை அதிகாரி களால் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு அவைகளைக் களைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(8) சென்னை மாநகரத்தில் உள்ள 10 உணவு வழங்கும் துறை மண்டலங்களிலுள்ள குடும்ப அட்டை பிரிவுகளை முதலில் கணிப்பொறி அமைப்பின்கீழ் கொண்டுவர ஆணையிடப் பட்டுள்ளது. இது போலி குடும்ப அட்டைகளைக்களைவதுடன் ஒப்புவிப்புசான்றிதழ் வழங்குதல், விலாசத்தை திருத்துதல் மற்றும் குடும்ப அட்டைகளின் பெயர்களைச் சேர்த்தல்/நீக்குதல் போன்ற பணிகளை விரைவில் செய்ய உதவும்.

(9) சென்னை நகரில் வ.உ.சி. மண்டலத்தில் 15—12—91 முதல் ஒரு கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இந்த கட்டுப்பாட்டு அறைக்கு இணைக்கப்பட்ட தொலைபேசி எண் 58 34 84. 1992ஆம் ஆண்டு 180 குற்றச்சாட்டுகள் பெறப்பட்டன. 1993-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ந் தேதி வரை மொத்தமாக 10 குற்றச்சாட்டுகள் பெறப் பட்டுள்ளன. குற்றச்சாட்டுகள்மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(10) மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியாய விலைக் கடை வட்டம் மற்றும் மாவட்ட அளவில் பொது விநி யோகத்துக்கான விழிப்புப் பணிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. பத்திரிகையாளர்கள் மற்றும் தன்னார்வ நுகர் வோர் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் நியாய விலைக்கான விழிப்புப் பணிக்குழுக்களில் நியமிக்கப்பட்டு இக்குழுக்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் மாதத்துக்கு ஒரு முறையாவது கூடவேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாடு நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் சேர்ந்து நியாய விலைக் கடைகளின் விழிப்பணி குழு உறுப்பினர்களுக்கு நியாய விலைக்கடைகளை கவனத்துட னும் தீவிரத்துடனும் கண்காணிப்பதன்மூலம் எங்ஙனம் நுகர் வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அவர்களை திருப்தி அடையச் செய்யலாம் என்பது குறித்து பயிற்சி அளித்தது.

(11) நியாய விலைக்கடை பணியாளர்கள் மீதான குற்றச் சாட்டுகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்தி லும் மாவட்ட அளவில், மாவட்டவருவாய் அதிகாரி தலைமையில் ஒரு ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள நியாய விலைக்கடைகளில் ரௌடிகளின் தொல்லையைத் தவிர்க்கும்

பொருட்டு மாநகர காவல் துறை ஆணையாளரும், செங்கல் பட்டு மாவட்டம் (கிழக்கு) காவல்துறை கண்காணிப்பாளரும் உணவு வழங்குதுறை அதிகாரிகளுடன் அடிக்கடி கலந்துபேசி உரிய நடவடிக்கை எடுக்கிறார்கள்.

(12) 1992-ஆம் ஆண்டு 409.38 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன. மற்றும் 218.92 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. போலி குடும்ப அட்டைகளை பறிமுதல் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக 1992-ஆம் ஆண்டு 3.82 இலட்சம் போலி அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

<u>வலியூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டம்:</u>

மத்திய அரசின் கட்டளைகளுக்கிணங்க வலியூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதி போன்ற பகுதிகளில் 1—1—1992 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ள வட்டாரங்கள் மற்றும் அவற்றின் ஜனத்தொகை, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் இங்குள்ள நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை இணைப்பில் காணலாம். இப்பகுதி யில் குடும்ப அட்டைகள் பெறாதவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் கூடுதல் நியாய விலைக்கடைகள் திறக்கப்படுகின்றன. இவற்றுக்குத் தேவையான அனைத்து உள்ளமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1992-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மத்திய அரசு இப்பகுதிகளில் வழங்கப்படுவதற்காக கூடுதலாக மாதமொன்றுக்கு 830 டன் அரிசி சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் வழங்குகிறது. இத்திட்டத்தில் உணவுப் பொருட்கள் மத்திய விற்பனை விலையை விட குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் குறைவாக வழங்கப்படுகின்றன. மத்திய அரசு இடை நிகழ்வான செலவுக்காக குவிண்டால் ஒன்றுக்கு 25 ரூபாய் அனுமதித்தது. இப்பகுதிகளில் அரிசியின் சில்லறை விலை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

	சாதாரணம்.	சன்னம்	மிகச்சன்னம்.
	(கிலோவுக்கு ரூபாய்)		
	4.12	4.72	4.93
மாநில விலை	2.50	3.50	3.50

மாநில அரசின் பொது விநியோக விலைகள் மத்திய விலை களை விடக்குறைவாகவே உள்ளதால் அவையே இங்கும் பின்பற்ற படுகின்றன. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியில்

மட்டும் சாதாரண அரிசி கிலோவுக்கு ரூ. 2.25 என வழங்கப்பட்டு வருகிறது. ஒதுக்கும் குறைந்த அளவு அரிசியைக் கொண்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதியில் குடும்ப அட்டை ஒன்றுக்கு கூடுதலாக 4 கிலோ தான் வழங்கப்படுகிறது (ஊரகப் பகுதிகள் தவிர-வரிசை 1, தாள் 2 கணக்கெடுப்பு 1991).

3. தமிழ்நாட்டில் விலைவாசி நிலவரம் :

வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருள்களின் விலையை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதனால் இயல்பு மீறிய விலை ஏற்ற இறக்கம் ஏற்படும் போது சரியான நடவடிக்கை எடுக்க இயலும். அனைத்து இன்றியமையாப் பொருட்களின் வெளி அங்காடி விலைகள் குறித்த வாராந்திர அறிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று கணிப்பொறி தகவல் அமைப்பில் பாதுகாத்து வைத்து இன்றியமையாப் பொருட்களின் விலையில் இயல்பு மீறி ஏற்படுகிற ஏற்ற இறக்கம் கண்காணித்து வரப்படுகிறது.

1992-ம் ஆண்டு மாநிலம் தேவையான மழையினை தென்பகுதிகளில் பெற்றது. எனவே முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டில் விளைச்சல் பகுதி அதிகரித்ததுடன் உணவு பொருட்களின் விளைச்சலும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தது.

1992-ம் ஆண்டு நெல் விளைச்சல் பகுதி 18.73 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 22.93 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. இது 22.4 சதவீத அதிகரிப்பாகும். பொதுவாக அரிசி விலை டிசம்பர் மற்றும் சனவரி மாதங்களில் உயர்ந்தும் மார்ச் மாதத்தில் விலை குறைந்தும் இருக்கும். இதற்கு மாறாக 1992-ம் ஆண்டில் சன்ன மற்றும் மிகச்சன்ன அரிசியின் குறைந்த விலைக்காலம் மே மாதம் வரை நீடித்தது. அதாவது 1992-ம் ஆண்டு வழக்கமாக 3 மாத காலமே குறைந்திருக்கும். அரிசி விலை 5 மாதங்கள் குறைந்திருந்தது. 1992-ம் ஆண்டு சனவரி திங்களில் கிலோ ஒன்றுக்கு 6.00 ரூபாய் 6.16 ரூபாய், 6.53 ரூபாய் மற்றும் 6.94 ரூபாய் ஆக இருந்த சாதாரண ரக புழுங்கலரிசி, சாதாரண ரக பச்சரிசி, சன்னரக பச்சரிசி விலை அவ்வாண்டு மத்தியில் குறைந்தது. 1993-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் இவற்றின் விலை 5.73 ரூபாய். 6.50 ரூபாய், 6.34 ரூபாய் மற்றும் 6.94 ரூபாயாக இருந்தது.

இம்மாநிலத்தில் பயிறு வகைகளின் உற்பத்தி, இதன் தேவைகளை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை. எனவே பயிறு வகைகளில் விலை ஏற்ற இறக்கம் பெருமளவில் பயிறு உற்பத்தி செய்யும் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம்

1993 மார்ச் 30]

குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கும் பயிறு வகைகளின் அளவைப் பொறுத்தே உள்ளது. துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பை பொறுத்த வரையில் 1992-ம் ஆண்டு முழுவதும் விலை குறைந்தே இருந்தது. 1992-ம் ஆண்டு துவரம் பருப்பு. உளுத்தம்பருப்பு விலை 18.31 ரூபாயாகவும் 12.45 ரூபாயாகவும் விளங்கி வந்தது. அவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 17.89 ரூபாயாகவும் 11.82 ரூபாயாகவும் குறைந்தது. ஆனால் கடலைப்பருப்பு மற்றும் பச்சைப் பருப்பு விலைகள் 1992ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 10.32 ரூபாயாக வும் 13.10 ரூபாயாகவும் இருந்தது. அவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 12.26 ரூபாயாகவும் 13.72 ரூபாயாகவும் உயர்ந்தது. இதைப் போன்றே 1992-ம் ஆண்டில் புளி, தனியா மற்றும் சர்க்கரை விலையும் உயர்ந்தே இருந்தது.

1992-ம் ஆண்டில் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற சமையல் எண்ணெய் களின் விலைகள் கிலோவுக்கு 3.57 ரூபாயிலிருந்து 5.66 ரூபாய் வரை குறைந்திருந்தது. தமிழ்நாட்டில் வட மாநிலங்களிலும் சமையல் எண்ணெய் வித்துக்களின் அமோக விளைச்சலே இந்த குறைவுக்கு காரணமாகும். இனிவரும் மாதங் களில் சமையல் எண்ணெய் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. சமையல் எண்ணெயின் உற்பத்தியை பெருக்கும் வகையில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் முன் னணியில் உள்ள ஈரோட்டில் உள்ள மொத்த வணிகர்களுக்கு 1977 ஆம் ஆண்டில், பருப்புகள், சமையல் எண்ணெய் வித் துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் (சேமிப்பு) கட்டுப் பாட்டு ஆணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சேமிப்பு வரம்புகள் தளர்த்தப்பட்டுள்ளன.

1992-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிலோ 42.35 ரூபாயாக இருந்த மிளகாய் வற்றல் விலை டிசம்பர் மாதத்தில் 35.68 ரூபாயாக குறைந்தது. தமிழ்நாட்டிலும், நாட்டிலுள்ள மற்ற மிளகாய் உற்பத்தி மையங்களிலும் இருந்த அமோக விளைச் சலே இந்த விலைக் குறைவுக்கு காரணமாகும்.

1992-ம் ஆண்டில் முக்கிய காய்கறிகளின் மாநில சராசரி விற்பனை விலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டன. காய் கறிகளின் விளைபருவங்கள் மற்றும் விநியோகம் ஆகியவை அவற்றின் விலைகளை பாதிக்கின்றன.

[1993 மார்ச் 30

பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. 1992-ம் ஆண்டு அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களின் கூட்டுறவு மொத்த விற்பனை அங்காடிகள் விலைகள் ஏறிவருவதை தடுக்கும் பொருட்டு பருப்பு, மிளகாய், தனியா, கடுகு, மிளகு, வெல்லம், டீ போன்ற 27 பொருட்களை நேரடியாக விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் வாங்கி அவற்றை வெளி அங்காடியில் நிலவி வந்த விலைகளுக்கும் குறைவாக விற்றன.

வெளி அங்காடியில் நிலவி வரும் விலையை குறைக்கும் பொருட்டு அரசு அரிசி ஆலைகளை சொந்தமாக கொண்டுள்ள கூட்டுறவு சங்கங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து நெல்லை நேரடியாகப் பெற்று அரைத்து பெறப்படும் அரிசியை நுகர்வோருக்கு நியாய விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் சில்லறைக் கடைகள் மூலம் விநியோகிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

4. 1955-ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தை செயற்படுத்துதல்.

மத்திய அரசின் 1955-ம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருட்கள் தொடர்ந்து சீராக கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்காகவும், கள்ளச்சந்தை மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்காகவும் மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை பிறப்பித்துள்ளது. 1981-ம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டம், வழக்குகளை மொத்தமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும், உச்சபட்ச தண்டனை ஓராண்டு சிறைக்காவலாக இருந்ததை இரண்டாண்டுகளாக உயர்த்தவும் ஏதுவாக திருத்தப்பட்டது. இந்த திருத்தங்கள் 1—9—1982 முதல் 1981-ம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்களின் சிறப்பு வழிமுறைகள் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டன. இந்தச் சட்டத்தின் செல்லுபடிக்காலம் 31—8—1992 வரை அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கருத்தினைப் பெற்றபின் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தை நீட்டித்தது.

1955-ம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தின் கீழ் மாநில அரசு பல கட்டுப்பாட்டு ஆணைகளை வெளியிட்டுள்ளது. தற்போது அமுலில் இருக்கும் உணவுத் துறையினைச் சார்ந்த கட்டுப்பாட்டு ஆணைகள் பின்வருமாறு :

1. 1966-ம் ஆண்டின் மண்ணெண்ணெய் (வாணிபம் ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் விலை நிர்ணயம்). ஆணை.

1993 மார்ச் 30]

2. 1977-ம் ஆண்டின் பருப்புகள், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் (சேமிப்பு) ஆணை.

3. 1973-ம் ஆண்டின் தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வாணிபம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணை.

4. 1977-ம் ஆண்டின் தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு மற்றும் விலைகளை எழுதி வைத்தல் மற்றும் கணக்குகள் பராமரிப்பு) ஆணை.

5. 1977-ம் ஆண்டின் தமிழ்நாடு கட்டுப்பாட்டு பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை.

6. 1981-ம் ஆண்டின் தமிழ்நாடு சர்க்கரை (வாணிபம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணை.

7. 1982-ம் ஆண்டின் நெல் (இயக்கக் கட்டுப்பாட்டு) ஆணை.

8. 1982-ம் ஆண்டின் தமிழ்நாடு கட்டுப்பாட்டு பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் பொருட்களை வழங்குதலை முறைப்படுத்துதல்) ஆணை.

9. 1984-ம் ஆண்டின் நெல் மற்றும் அரிசி (லெவி மூலம் கொள்முதல்) ஆணை.

10. 1984-ம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் (வாணிபம் ஒழுங்குமுறைப் படுத்துதல்) ஆணை.

11. 1988-ம் ஆண்டின் சமையல் வாயு (விநியோகத்தை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் விநியோகம்) ஆணை.

12. 1990-ம் ஆண்டின் பெட்ரோல் மற்றும் டீசல் (விநியோகத்தில் ஒழுங்கீனங்களைக் களைதல்) ஆணை.

இந்த அனைத்து கட்டுப்பாட்டு ஆணைகளும் சுலபமாக உபயோகிக்கும் பொருட்டு ஒரு கைப்புத்தகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் ஆணைகள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியாளர்களால் செயல் படுத்தப்படுகிறது. இப்பணியினை செயல்படுத்த குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை பிரிவினர் உதவு

கின்றனர். இந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காவல்துறை தலைவரின் கட்டுப்பாட்டிலும் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் வனத்துறைக்கான குற்றப்புலனாய்வுக் காவல் துறைத் தலைவர் ஆகியோரின் கண்காணிப்பிலும் இயங்கி வருகின்றனர்.

29-1-1992 முதல் வர்த்தக லெவியினை நிறுத்திய பின்னர் ஏகபோகக் கொள்முதல் பகுதிகளில் கூடுதல் காவலர்களை நிய மிக்கவும் மாநில எல்லைப்புற சோதனைச் சாவடிகளை உறுதி படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 3 ஆயுதம் தாங்கிய சிறப்புக் காவல் படையினர் ஏகபோக கொள்முதல் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மாநிலங்களுக்கு இடையே கள்ளத்தனமாக நெல் மற்றும் அரிசி கடத்தப்படுவதை தடை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை ஊரகம், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் தேவையான அளவு ஆயுதம் தாங்கிய காவலர்களை அப்பகுதிகளுக்கு அனுப்புமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளனர். இது தவிர மாவட்டங்களிலுள்ள உணவு வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறையினர் ஒரு பிரிவினை வட்டங்களிலுள்ள எல்லைப்புற பகுதிகளுக்கு அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள பிரிவுகள் மற்ற மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. நிலை மையை உன்னிப்பாக கவனிக்கவும், தீவிர சோதனை செய் யவும், வழக்குகள் தொடரவும், கட்டுப்பாட்டு ஆணைகளை அமுல்படுத்தும் அமைப்பு விழிப்புடன் செயல்படுவதை உறுதி செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளார்கள். இப்பிரிவு தற்போது தகவல்கள் சேக ரித்தல், கலப்படக் குற்றங்களை கண்டுபிடித்தல் உணவுப் பொருட்களை கடத்துதலை தடுத்தல், பொருட்கள் பதுக் கப்படுவதைத் தடுத்தல் மற்றும் கள்ளச்சந்தையினை தடுத்தல் ஆகிய பொறுப்புகளை ஏற்றுள்ளது. இது தவிர மாவட்ட எல்லைகளில் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல் பொது விநியோகத்திற்கான பொருட்கள் நியாயவிலைக் கடை களிலிருந்து வெளிச் சந்தைகளுக்கு செல்வதைத் தடுத்தல், நீதி மன்றங்களில் உள்ள வழக்குகளை கவனித்தல், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் வெளியிடும் பறிமுதல் ஆணைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளையும் இவர்கள் மேற்கொள்கிறார்கள்.

1992-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுக் காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகள் மற்றும் வழக்கு தொடரப்பட்டவர்கள் குறித்த விவரங்கள் இணைப்பில் உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

1993 மார்ச் 30]

<u>கட்டுப்பாட்டு ஆணைகளுக்கு இவ்வாண்டு செய்யப்பட்ட திருத்தங்கள்.</u>

1984-ம் ஆண்டின் தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வாணிபம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணை, 1981-ம் ஆண்டின் தமிழ்நாடு சர்க்கரை கட்டுப்பாடு ஆணை மற்றும் 1975ம் ஆண்டின் தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வாணிபம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணை ஆகியவற்றின் மீதான உரிமக் கட்டணம், உரிமத்தை புதுப்பித்தல் கட்டணம் மற்றும் பிணை வைப்புத் தொகை ஆகியவை கடந்த பத்தாண்டுகளாக திருத்தியமைக்கப்படாமல் உள்ளன. இவற்றை சீர் செய்யவும், மேலும் இந்த ஆணைகளை செயல்படுத்த ஆகும் செலவுகளை கருத்தில் கொண்டும் இந்த கட்டணங்களையும் வைப்புத் தொகைகளையும் இந்த ஆணைகளின் தேவையான பகுதிகளை திருத்துவதன் மூலம் திருத்தியமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

காவிரி டெல்டா பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் முகவராகச் செயல்பட்டு நெல் கொள்முதல் செய்து வந்தாலும் மற்ற மொத்த வணிகர்கள் இப்பகுதிகளுக்கு நெல்லைக் கொண்டு வருவதைத் தடுக்கவும் மற்றும் நெல்லை எடுத்துச் செல்வதைத் தடுக்கவும் சட்டத்தில் வழி வகைகள் எவையும் இல்லை. 1984-ம் ஆண்டின் தமிழ்நாடு இன்றியமையாப்பண்டங்கள் (வாணிபம்ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணையின் மூன்றாம் விதியினை திருத்தியமைத்ததன் மூலம் இதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டன.

வர்த்தகர் லெவி முறை 20-1-1992 முதல் நிறுத்தி வைக்கப்பட்டதால் மாவட்டங்களிடையே அரிசி வரத்து அதிகரித்து அதனால் வெளி அங்காடியில் அரிசி விலை குறைந்தது. எனினும் மாவட்டங்களின் எல்லைப்பகுதிகளில் திருட்டுத்தனமாக நெல்/அரிசி கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுப்பதற்காக 1984 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி (லெவி மூலம் கொள்முதல்) ஆணையில் புதிய விதி 4 (ஏ) ஒன்று புகுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆணையின்படி மாநிலத்தை விட்டு நெல் அல்லது அரிசியை எடுத்துச் செல்ல விரும்பும் வணிகர்கள் தான் எடுத்து செல்லும் அதே அளவு அரிசியை அரசுக்கு லெவியாகச் செலுத்த வேண்டும்.

1973 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வாணிபம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) ஆணையின் கீழ் முன்பு முதல் குற்றத்துக்கு காப்புறுதியினை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ பறிமுதல் செய்தல் மற்றும் தொடர்ந்து செய்யப்பட்டு வரும் குற்றங்களுக்கு உரிமத்தை விலக்குதல்

ஆகிய இரண்டு தண்டனைகள்தான் விதிக்கமுடியும். இவ்வாறு செய்வதால் வணிகர்களில் சிலர் கடுமையான குற்றத்திற்கு காப்புறுதி பறிமுதல் போன்ற சிறிய தண்டனையும் மற்றும் சிறிய குற்றங்களுக்கு உரிமத்தை) விலக்குதல் போன்ற கடுமையான தண்டனையும் பெற வேண்டி வந்தது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மற்றொரு இடைப்பட்ட தண்டனை அதாவது சம்பந்தப்பட்ட பொருளின் மதிப்பில் ஐந்து மடங்கினை அபராதமாக விதிப்பதனை புகுத்தும் பொருட்டு விதி 23 திருத்தப்பட்டுள்ளது. இந்த தண்டனையை புகுத்துவதன் மூலம் வெவ்வேறு நிலையிலான குற்றங்களுக்கு வேறுவேறு தண்டனை வழங்கப்படுகிறது.

அரிசி மற்றும் கோதுமை இருப்பு வைத்திருப்பதை இலகுவாக்கும் வகையில் 1984 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வாணிபம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) ஆணை திருத்தப்பட்டுள்ளது. வர்த்தகர்களும் ஆலை அதிபர்களும் தேவையான அளவு பொருட்களை இருப்பு வைத்து அவை அங்காடியில் சுலபமாகக் கிடைப்பதற்கு வசதியாக மேற்கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டின் உணவு கலப்படத்தை தடுத்தல் சட்டம் :

1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தை மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை செயல்படுத்தி வருகிறது. இம்மாநிலத்தில் 7 உணவு பகுப்பாய்வு சோதனை கூடங்கள் இயங்கி வருகின்றன. 1992 ஆம் ஆண்டு 17,503 சட்டப்பூர்வ மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1220 மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த காலத்தில் 186 இனங்களில் குற்ற வழக்குகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 113 நபர்கள் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டனர். இச் சட்டத்தின்கீழ் இந்த காலத்தில் 1.43 லட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு பகுப்பாய்வு சோதனைக் கூடம் 1982 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இது அனைத்து உணவு தானியங்கள் கோதுமை பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை சோதனை செய்யக்கூடிய வகையில் அனைத்து வசதிகளையும் பெற்றுள்ளது. நுகர்வோர்க்கு நல்ல தரமான உணவு தானியங்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக கிடங்குகள், கொள்முதல் மற்றும் சேமிப்பு முனைகளில் சோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

1993 மார்ச் 30]

1977 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டுப்பாட்டுப் பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை :

உண்வு வழங்கல் துறையினைச் சேர்ந்த அதிகாரிகளும் அலுவலர்களும் கலப்படம் உள்ளதா என சோதனை செய்ய உணவுப் பொருட்களின் மாதிரிகளை எடுக்கிறார்கள். 1992 ஜனவரி மாதம் முதல் 1993 பிப்ரவரி மாதம் வரை சுமார் 242 மாதிரிகள் சோதனைக்காக எடுக்கப்பட்டன. அவற்றில் 210 மாதிரிகள் கலப்படமற்றவை. 21 இனங்களில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. இதில் 18 இனங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 3 இனங்களில் நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லாததால் அவை விடப்பட்டு விட்டன. 11 இனங்களில் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

எடைகள் மற்றும் அளவைகள் :

1976 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தரங்கள் நிர்ணய சட்டத்தையும், 1985 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தையும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை அமுல்படுத்தி வருகிறது. சட்டப்பூர்வ அளவைகள் கட்டுப்பாட்டாளர் தலைமையில் 21 தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இதர களப் பணியாளர்களும் உள்ளனர். 1992 ஆம் ஆண்டில் 1977 ஆம் ஆண்டின் எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 14,004 குற்ற வழக்குகளும் 1985 ஆம் ஆண்டின் எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 660 குற்ற வழக்குகளும் அனுமதிக்கப்பட்டன. இந்த காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் முறையே 38.10 லட்சம் ரூபாய் மற்றும் 16.11 லட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. இத்தகைய சட்டங்கள் செயல்படுத்துதல் தொடர்பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

5. நுகர்வோர் பாதுகாப்பு :

1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நுகர்வோர்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட விரிவான, முன்னேற்றமான சட்டங்களுள் ஒன்றாகும். இச்சட்டம் நுகர்வோர்களது குறைகளை எளிய விரைவான, செலவற்ற முறையில் களைவதற்கு வகை செய்ய இயற்றப்பட்டதாகும்.

[1993 மார்ச் 30

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட அமைப்புகளை இம்மாநில அரசு உருவாக்கியுள்ளது :

1. மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு.

2. மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம்

3. மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்கள்.

மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் அலுவல் சார்ந்த மற்றும் வணிகம் மற்றும் தொழில், நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள், சமூக சேவையில் ஈடுபட்டுள்ள மகளிர், சட்ட மன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற வாழ்வின் பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் அலுவலல் சாரா உறுப்பினர்களாக உள்ளனர். இது ஒரு ஆலோசனைக் குழுவாகும். மாநில உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் குழுவின் தலைவராவார். இம்மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு 12—1—1993 முதல் திருத்தியமைக்கப்பட்டு இக்குழுவின் முதல் கூட்டம் 2—3—1993 அன்று நடைபெற்றது. இக்குழுவின் பரிந்துர்ரகள் மீது மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள் ஆகியவைஓரளவுநீதித்துறைசார்ந்தஅமைப்புகள்ஆகும். நுகர்வோர் நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள், மைய மற்றும் மாநில அரசுகள் இந்த அமைப்புக்களில் தங்களது புகார்களை தாக்கல் செய்யலாம். பொருட்களது மதிப்பு அல்லது சேவைகளின் மதிப்பு, அல்லது நஷ்ட ஈடு கோரும் தொகை ஆகியவை ஒரு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால், அப்புகார்களை மாவட்ட அமைப்புகளில் தாக்கல் செய்யலாம். பொருட்களது மதிப்பு அல்லது சேவைகளின் மதிப்பு அல்லது நஷ்ட ஈடு கோரும் தொகை ஆகியவை ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலும் பத்து இலட்சம் ரூபாய்க்குள்ளும் இருந்தால், மாநில ஆணையத்தில் இப்புகார்களை தாக்கல் செய்யலாம். இப்புகார்களை பதிவு செய்ய எந்தக் கட்டணமும் இல்லை. நுகர்வோர் தங்களது குறைகளுக்காக வேண்டும் நிவர்த்தியைப் பொறுத்து பொருட்களின் குறைபாடுகளை நீக்கவும், அவைகளை மாற்றம் செய்து புதிய பொருட்கள் வழங்கவும் செலுத்திய தொகையை திரும்பப் பெறவும், அல்லது நஷ்ட ஈடு வழங்கவும் இந்த நுகர்வோர் நீதிமன்றங்கள் ஆணை பிறப்பிக்கும்.

மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இம்மாநில ஆணையத்திற்கு ஒரு பெண்

1993 மார்ச் 30]

உறுப்பினர் உள்பட இரண்டு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாநில ஆணையத்தின் பதிவாளர் ஒரு துறைத் தலைவராக நியமிக்கப்பட்டு அவருக்கு மாநில ஆணையம் மற்றும் மாவட்ட அமைப்புக்களின் செயல்பாடுகள் குறித்த கருத்துருக்களை நேரடியாக அரசுக்கு அனுப்பும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில ஆணையத்தின் தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதிக்கு அளிக்கப்படும் ஊதியம் இதர படிகள் மற்றும் ஏனைய இடை ஆதாயம் ஆகியவையும் இம்மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் போக்குவரத்துப் படியாக மாதந்தோறும் 1000 ரூபாயும் (2—9—1992 முதல்) பெறும் பொருட்டு 1988 ஆம் ஆண்டின் தமிழ் நாடு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

தேசிய ஆணையம் மற்றும் பல்வேறு மாநில ஆணையங்களின் தீர்ப்புக்களை வெளியிடும் ''நுகர்வோர் பாதுகாப்பு தீர்ப்புக்கள்'' மற்றும் ''நுகர்வோர் பாதுகாப்பு அறிக்கை'' ஆகிய இரண்டு பத்திரிகைகளை எல்லா மாவட்ட அமைப்புக்கள் மற்றும் மாநில ஆணையத்திற்கு வழங்கும் பொருட்டு மாநில ஆணையத்தின் பதிவாளருக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தின் இருபத்தியிரண்டு மாவட்டங்களிலும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்புக்கள் யாவும் தற்போது இயங்கி வருகின்றன. இந்த இருபத்தி யிரண்டு மாவட்டங்களில் சென்னை, சேலம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ். உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு நீதி மன்றங்களின் தலைவர்கள், அந்தந்த மாவட்டத்தின் நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்களுக்கும் தலைவராவார். ஏனைய பதினாறு மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதிகள், அந்தந்த மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்பிற்கு தலைவராக உள்ளனர். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ''விழுப்புரம்-வள்ளலார்'' மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்பினை ஏற்படுத்த 14—4—1993 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தஎல்லா மாவட்ட அமைப்புகளும் பகுதிநேர அமைப்புக்களாக செயல்படுகின்றன. 1991-ம் ஆண்டு ஆகஸ்டு 5-ஆம் தேதிய உச்ச நீதிமன்ற ஆணைகளுக்கு ஏற்ப, சென்னை மாவட்டத்தில் நுகர்வோர்களது புகார்களை மட்டும் விசாரிப்பதற்கென்று தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்ட ஒரு முழுநேர மாவட்ட அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பிற்கு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரை ''முழு நேர'' தலைவராக நியமிக்க நட

வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த சென்னை மாவட்ட அமைப்பிற்கு ,கூடுமானவரை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே இடவசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கேற்ப, ஒவ்வொரு மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்பும் வாரத்திற்கு குறைந்தது மூன்று நாட்களாவது கூட்டப்பட வேண்டும். இம்மாவட்ட அமைப்புக்களது தலைவர்களின் மதிப்பூதியம் ஒவ்வொரு அளவிற்கும் 150 ரூபாயாகவும், மாதத்திற்கு 750 ரூபாய்க்கு மிகாமலும் உள்ளது. இத்தகைய மாவட்ட அமைப்புக்கள் அடிக்கடி கூடும் பொருட்டும் இப்போது தீர்வு செய்யப்படும் வழக்குகளை விட அதிக அளவில் வழக்குகள் தீர்வு செய்யப்படுவதற்கும் வகை செய்யும் பொருட்டும் ,மாவட்ட அமைப்புக்களின் தலைவர்களது மதிப்பூதியத்தின் உச்சவரம்பை 750 ரூபாயிலிருந்து 2,100 ரூபாயாக உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனது 7—1—1993 நாளிட்ட தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் மாவட்ட நீதிபதிகள் தலைவர்களாகச் செயல்படும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகளின் பதிவு செய்யப்படும் வழக்குகளது எண்ணிக்கை ஆறு மாத காலத்திற்கு சீராக 150-க்கு மேல் இருந்தால், அந்தந்த மாவட்டங்களில் உயர்நீதிமன்ற அனுமதியின் பேரில், அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்குள்ளாக தனிப்பட்ட மாவட்ட அமைப்பினை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 9-ல் கூறியுள்ளபடி உருவாக்க வேண்டும் என்றும் ,அவ்வாறு 150 வழக்குகளுக்கு மிகாமல் பெறப்படும் மாவட்ட அமைப்புகளில் தற்போது செயல்பட்டுவரும் சிறப்பு நடைமுறையே 7—1—1993 முதல் ஒராண்டு காலத்திற்கு செயல்படலாம் என்றும், இந்த காலவரையறைக்குள் மாநில அரசுகள் தன்னியலான மாவட்ட அமைப்புகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அல்லது மத்திய அரசு அனுமதி அளித்தால் 2 அல்லது 3 மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு மாவட்ட அமைப்பினை உருவாக்கலாம் என்றும் ஆணையிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பின் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில ஆணையம் மற்றும் மாவட்ட அமைப்புக்களில் 1992-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆகிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு 17—10—1990 அன்று நடைபெற்ற தேசிய நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1986-ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தையும்

1993 மார்ச் 30]

1969-ம் ஆண்டின் ஏகாதிகார மற்றும் தடை வர்த்தக நடைமுறைச் சட்டத்தையும் திருத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கும் பொருட்டு ஒரு குழுவினை நியமித்தது. தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் அமைச்சர் இக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப் பட்டார். இக்குழு நான்கு கூட்டங்களை நடத்தி 22—1—1992 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் அறிக்கையின் பேரில் மத்திய அரசு மசோதா ஒன்றினை தயாரித்துள்ளது. இம் மசோதா பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப் பட உள்ளது.

நுகர்வோர் கல்வி:

பெரும்பாலான நுகர்வோர்கள் தங்களது உரிமைகளை அறியாதவர்களாக உள்ளனர். மாநில அரசு அவர்களை பயிற்றுவிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இம்மாநிலத்தின் 13,000 முதியோர் கல்வி மையங்களில் பயன்படும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒரு பாடம் ஒரு துணை நூலாக சேர்க்கப்பட்டுள்ளது. 5 மற்றும் 9-ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒரு பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. உணவுக் கலப்படம், மற்றும் அவற்றைக் கண்டுபிடித்தல் குறித்த ஒரு பாடத்தை வேதியியல் போதிக்கும் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு கேட்டுக் கொண்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பை எம்.பில். மற்றும் பி. எச்டி. போன்ற துறைகளில் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு ஒரு தலைப்பாக வைக்கும்படி இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் சிறப்பு அங்காடிகள் மற்றும் பல் பொருள் அங்காடிகள், மாவட்ட மற்றும் வட்ட அளவிலான உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலகங்கள், கல்வித் துறையின்கீழ் இயங்கும் நடமாடும் அறிவியல் வண்டிகள் ஆகியவற்றிற்கு கலப்படத்தைக் கண்டுபிடிக்க சிறிய கலப்பட ஆய்வுப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன. நுகர்வோர் நலன் குறித்து மத்திய அரசின் திரைப்படத்துறை வெளியிட்டுள்ள 'தி குருசேட்'' என்ற திரைப்படம் வாங்கப்பட்டு இம்மாவட்டங்களில் உள்ள திரையரங்குகளில் திரையிட அனுப்பப்பட்டுள்ளது. நுகர்வோர் நலன் குறித்த வீடியோ கேசட்டுகளும் வெளியிடப் பட்டுள்ளன. 1993-94-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கீழ்க் கண்ட இனங்களுக்காக 4.50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

[1993 மார்ச் 30

1. சிறிய திரைப்படம் ஒன்றினை வெளியிட ரூ. 2.75 இலட்சம்
2. ஒரு காலாண்டு பத்திரிக்கை வெளியிட ரூ. 0.60 ,,
3. தன்னியலாக செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி ரூ. 0.50 ,,
4. நுகர்வோர் பாதுகாப்பிற்கு 50 பயிற்சி முகாம்கள் நடத்துவதற்கும், அச்சடிப்பதற்கு தேவையான பொருட்களின் செலவிற்கும் ரூ. 0.50 ,,
5. அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு ரூ. 0.15 ,,

நுகர்வோர் பாதுகாப்பில் எடுக்கப்பட்டுள்ள மற்ற நடவடிக்கைகள்:

மத்திய அரசின் நிதி உதவியோடு, இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15ஆம் தேதி நடைபெறும் உலக நுகர்வோர் நாளில் மாநில அளவிலான ஒரு நுகர்வோர் கருத்தரங்கை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு நுகர்வோர் தினம் தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் கொண்டாடப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு மத்திய அரசு 40,000 ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. இம்மாநிலத்தில் 115 தன்னார்வ நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள் உள்ளன. இதில் சில நிறுவனங்கள் சீரிய முறையில் செயலாற்றுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் முயற்சிகளுக்கு இந்நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டுகின்றன. இதில் தகுதி வாய்ந்த நுகர்வோர் தொண்டு நிறுவனங்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதற்கு அரசு நிதி உதவி அளிக்கிறது. 1992-ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக, தன்னார்வ நுகர்வோர் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு 50,000 ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தன்னார்வமாக செயல்படும் தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்துவதற்காக 50,000 ரூபாய் வழங்கியுள்ளது. நுகர்வோர் நலனுக்கு சீரிய முறையில் பணியாற்றுபவர்களுக்கென மாநில அளவிலான ஒரு விருதினை உருவாக்கி, மாநில அரசு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கி வருகிறது. உணவுப் பொருள்வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் ஆணையாளர் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒரு காலாண்டு பத்திரிக்கையும் வெளியிடுகிறார்.

நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான செயல்களை முன்னிறுத்தி தன்னார்வமாகச் செயல்படும் முதன்மை நுகர்வோர் தொண்டு நிறுவனங்களுடன் கூட்டங்கள் நடத்தி, அவர்களது குறைகள், ஆலோசனைகள், பரிந்துரைகள் ஆகியவற்றின்

மீது மேல் நடவடிக்கைகள் எடுக்கும்படி அரசு செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு நிறுவனங்களின் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆகியோர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். அனைத்துத் துறைத் தலைவர்களும், அரசு நிறுவனங்களின் தலைவர்களும், நுகர்வோர் குறைகளைக் கேட்டறிந்து களையும் பொருட்டு அவர்களது அலுவலக த்தில் ஒரு ''நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவினை'' அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறையின் ஆணையாளர், தன்னார்வமாக செயல்படும் நுகர்வோர் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் காலாண்டுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தி, இக்கூட்டங்களில் அவர்களால் கூறப்படும் பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள்/அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் கவனத் திற்கு கொண்டு சென்று, அவற்றின் மீது மேல் நடவடிக்கை கள் எடுக்கிறார்.

இந்த 1992-93 நடப்பு நிதி ஆண்டில், தேசிய சேவை திட்டத்தின்கீழ் 2,500 மாணவத் தொண்டர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பின் அடிப்படை கொள்கைகள், நுகர்வோர்களது உரிமைகள் மற்றும் கடமைகள், நுகர்வோர் களது குறைகளை களையும் வழிமுறைகள் ஆகியவை குறித்து பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப் பயிற்சிகள் கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற் படுத்த உதவும். நுகர்வோர்களுக்கான செய்திகளை உள்ள டக்கிய சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு தன்னார்வமாக செயல்படும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்பு களுக்கு நுகர்வோர் நலனை பரப்பும் பொருட்டு வழங்கப் பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

நலன் பயக்கும் திட்டங்கள்:

அரசு நிறுவனமான நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் நோக்கம் கொள் முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவு தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அதற்கு தேவையான மூலதனம், நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை சேவைகள்

[1993 மார்ச் 30

ஆலோசனை உதவி போன்ற பணிகளை செய்தல்ஆகியவை ஆகும். 1972-ம் ஆண்டில் சுமார் 12 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த விற்பனை 1991–92 ஆம் ஆண்டில் சுமார் 1,255.29 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. 1992-93-ம் ஆண்டு முடிவில் இது 1287.96 கோடி ரூபாயை எட்டிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூல தனம் 30 கோடி ரூபாயாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 23.03 கோடி ரூபாயாகும்.

இக்கழகம் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தலைமையில் அவருக்குக்கீழ் உதவியாக பல அலுவலர்களுடன் செயலாற்றி வரு கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மண்டலமாக 22மண் டலங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் மாவட்ட வருவாய் அதிகாரி அல்லது துணை ஆட்சியாளர்கள் நிலையில் உள்ள 22 மண்டல அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. கழகத்தின் மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை 10,700-க்கும் மேலாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் நேரடி முகவராக இருந்து மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் மற்றும் அரிசி கொள்முதல் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி, நெல், கோதுமை, சர்க்கரை சில வேளை களில் பாமோலின் சமையல் எண்ணெய் மற்றும் வெளிச்சந்தையில் அரிசி கொள்முதல் ஆகிய பணியினை அரசின் ஆணைக்கேற்ப செயல்படுத்துகிறது.

மாபெரும் சமூக நலத்திட்டமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் போன்றவற்றை சத்துணவு மையங்களுக்கு நேரிடையாக வழங்கும் பொறுப்பானபணியினை செய்து வருகிறது. ஒவ்வொரு மாதமும் மேற்படி மதிய உணவு மையங்களுக்கு சுமார் 20,000 டன் அரிசியினையும் 3,000 டன் பருப்பு வகைகளையும் மற்றும் 250 டன் சமையல் எண்ணெயையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உப்பு கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் இரும்பு சத்துக்கொண்ட உப்பினை கழகம் பெற்று மதிய உணவு மையங் களுக்கு 1–1–1991 முதல் வழங்கி வருகிறது.

1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு திட்டத்தின்கீழ் குழந்தை நல மையங்களில் துவரம்பருப்பு விநியோகத்தில் 25 சதவீதம் சக்தி சோயாஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சோயாமாவு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பணியாளர் நலத்திட்டத்தின்கீழ் காவல்துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை பணியாளர்களுக்கும் அரசு ஆணைகளின்படி இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் கழகம் வழங்கி வருகிறது.

1993 மார்ச் 30]

மேலும் இக்கழகம் இன்றியமையாப் பொருட்களை இலங்கை அகதிகளுக்கும் வழங்கி வருகிறது. மானிய விலையில் ஒரு கிலோ அரிசி 57 பைசாக்கள் வீதமும் மற்றப் பொருட்கள் பொது விநியோக முறையில் வழங்கும் விலைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இது போன்று சமீபத்திலும் கர்நாடக மாநிலத்தில் காவிரி நதி நீர் பங்கீடு காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியால் தமிழகத்திற்கு வந்த தமிழர்களுக்கும் 57 பைசாவிற்கு அரிசி வழங்கப்பட்டது.

வணிக செயல்பாடுகள் சென்னை மாநகரமும் மற்றும் மாவட்டங்களில் 62 அமுதம் பல்பொருள் அங்காடிகள் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வங்காடிகளில் சராசரி மாத விற்பனை சுமார் 95 லட்சம் ரூபாய் முதல் 100 லட்சம் ரூபாயாகும். இதுவரை இல்லாத அளவிற்கு 1992-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் விற்பனை 110 இலட்சம் ரூபாயை எட்டியுள்ளது.

விவசாயிகளின் நலனைக் கருதி தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டங்களிலும் மற்றும் ஏகபோக கொள்முதல் பகுதிகளிலும் கொள்முதல் பணிக்கென 97 நேரடி கொள்முதல் நிலையங்களை கழகம் இவ்வாண்டு திறந்துள்ளது. நேரடி கொள்முதல் நிலையங்கள் வருடாவருடம் செயல்பட்டு வருவதால் பாதுகாக்கப்பட்ட சேமிப்பு வசதிகள் உலர்த்தும் தளம் அணுகு சாலை போன்ற எல்லா அடிப்படை வசதிகளுடனும் கூடிய நிரந்தர கட்டிடங்களை நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு கட்டும் பணியை கழகம் மேற்கொண்டுள்ளது. அதன்படி இது வரையிலும் 107 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 நேரடி கொள்முதல் நிலையங் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 1993-94 மற்றும் 1994—95 திட்ட ஆண்டுகளில் மேலும் 10 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 5.44 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் தமிழ்நாட்டில் 101 வட்டங்களில் 115 இடங்களில் இதுவரை கட்டியுள்ளது. தற்போது 130.33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,900 டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் 7 வட்டங்களில் 7 இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. 1993-94 மற்றும் 1994-95 திட்ட ஆண்டுகளில் 57 லட்சம் ரூபாய் செலவில் 3 சேமிப்புக் கிடங்குகளை கட்டலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது சொந்த கிடங்குகள் தவிர தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியவற்றிற்கு சொந்தமான கிடங்குகளில் இன்றியமையாப் பண்டங்களை சேமித்து வைக்கும் பொருட்டு வாடகைக்கு எடுத்துக் கொள்கிறது.

1993-94-ஆம் நிதி ஆண்டிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்காக நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கிடங்குகள் ஆகியவை கட்டுவதற்கான மொத்த செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு 4,21,000 டன் அரவை திறன் கொண்ட 19 நவீன அரிசி ஆலைகள் கழகத்திற்கு சொந்தமாக உள்ளன.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், எருக்கூர் மற்றும் போனக்குளம் ஆகிய இரண்டு இடங்களில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலையை நிறுவியுள்ளது.

7. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் 1957-ம் ஆண்டு நிறுவப்பட்டு 1958—59-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளைப்பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்பு கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது. சமீப காலங்களில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தனது வழக்கமான பணிகளிலிருந்து சற்று விலகி, சோயாமாவு, வறுக்கப்பட்ட கடலைப் பருப்பு ஆகியவற்றையும் சேமித்து வருகிறது. இது இந்த நிறுவனத்திற்கு அதிகப்படியான வருவாயினை சேகரித்து தருவதுடன் இந்நிறுவனத்தின் சேமிப்புத் திறனையும் அதிகரித்துள்ளது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை 800 லட்சம் ரூபாய் ஆகும். இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 730 லட்சம் ரூபாயாகும். இதில் 380.50 லட்சம் ரூபாய் மாநில அரசாலும், மீதமுள்ள 349.50 லட்சம் ரூபாய் மைய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தாலும் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களின் பங்குத் தொகை 50:50 என்ற விகிதத்தில் உள்ளது.

இக்கழகம் தற்போது மாநிலம் முழுவதும் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் உள்ள 66 மையங்களில் 6.12 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகளை அமைத்துள்ளது. இதில் 48.074 டன் கொள்ளளவு கொண்ட வாடகை கிடங்குகளும் அடங்கும்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கொள்திறன் சமீப மாதங்களில் அதிகரித்துள்ளது. 1992-ம் ஆண்டு, ஜனவரி திங்களில் 57 சதவீதமாக இருந்த கொள்திறன் 1993-ம் ஆண்டு ஜனவரி திங்களில் 86 சதவீதமாக உயர்ந்துள்ளது.

1993 மார்ச் 30]

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தனது வழக்கமான பணியிலிருந்து சற்று விலகி சேமிப்பு வசதிகள் வழங்குவது தவிர மக்கள் பயன்படுத்தும் இடங்களில் பூச்சி ஒழிப்பு மற்றும் கறையான் ஒழிப்புத் திட்டத்திலும் கவனம் செலுத்துகிறது. மக்கள் அதிகம் பயன்படுத்தும் உணவு விடுதிகள், திரைப்படக் கூடங்கள் தனியார் கிடங்குகள் மருத்துவமனை போன்ற இடங்களில் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிறுவனம் அறிவியல் ரீதியில் சரக்குகளை பாதுகாக்கும் முறைகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி மையம் ஒன்றை நடத்தி வருகிறது. இப்பயிற்சி மையத்தில் இந்நிறுவனத்தின் பணியாளர் மட்டுமின்றி, தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள், அண்டை மாநிலங்களை சேர்ந்த சேமிப்புகிடங்கு பணியாளர்கள் ஆகியோரும் பல்வகையான பயிற்சிகளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் கொள்திறன் மற்றும் வருவாயை அதிகப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS